# ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்

# Soul Saving Sermons

E.Z. செல்வநாயகம்

வெளியிடுவோர்
**உலக இலக்கிய பதிப்பகம்**
C/o. கிறிஸ்துவின் சபை
195, தாராபுரம் ரோடு
காங்கயம் - 638 701
இந்தியா

# Soul Saving Sermons

Author : E.Z. SELVANAYAGAM

Copy Right Reserved

Language : Tamil
Copies : 1000
First Printing : February '98

Typeset by :

**Print Shop**
291, West Masi Street,
Madurai - 1. Ph : 743981

Printed by :

**Konar Printers**
35/4-F, APK Road,
Madurai - 12. Ph : 670255

Published by :

**World Literature Publications**
C/o Church of Christ
195, Dharapuram Road
Kangayam - 638 701, India.
Ph : (04257) 20030

# Dedication

To

Rudy and Sharon Cain, USA
Charlie and Mary Dipalma, USA.
Choate and Betty Choate. USA.

for their many years of love and Service
for the Lord

and

for the encouragement and support extended
to Racheal and me in our efforts to spread the cause of Christ



E.Z. செல்வநாயகம்

# ஆசிரியரைப் பற்றி. . .

இந்தியத் திருநாட்டின் தென்கோடி மாநிலமான தமிழகத்திலுள்ள, ஈரோடு மாவட்டத்தின் தலைநகரமாகிய ஈரோடு நகரின் மேற்திசையில் 16 கி.மீ. தொலைவில் உள்ளது எல்லிஸ்பேட்டை என்னும் சிற்றூர். அங்கே வாழ்ந்த சான்றோன் சகரியா – கனகமணி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1931–ம் ஆண்டு பிறந்தார்.

தனது உயர்நிலைப்பள்ளிப் படிப்பை சேலம் மாநகரில் படித்து முடித்தவுடன், "ராயல் இந்திய கடற்படையில்" சேர்ந்து பொறுப்புள்ள பதவிகளில் பத்து ஆண்டுகாலம் பணிபுரிந்தார். தனது வாழ்க்கையில் ஏராளமாகச் சந்தித்த ஏற்ற இறக்கங்களில் பொறுமையோடு பங்கு பெற்று, உற்ற துணையாய் விளங்கி, சிறந்த ஊழியனாய்த் திகழ சகல ஒத்தாசைகளையும் மனமுவந்து தந்த ராஜமணி அம்மையாரை 1955–ம் ஆண்டு திருமணம் செய்தார். இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் உண்டு. மூத்தவர் இறைபணியிலும், மற்ற மூவரும் அரசுப் பணியிலும் உள்ளனர்.

கடற்படையிலிருந்து வந்த பின்னர், சமூக சேவையில் நாட்டம் கொண்டு அரசுத்துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் பெரும் பங்கு வகித்து, ஒடுக்கப்பட்டவர்களின் காவலனாய் விளங்கினார். தமிழக அரசு போக்குவரத்துத் துறையை அரசுடமையாக்கின போது, தான் தலைவராக இருந்த "ஈரோடு கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்க" பேருந்துகளை முதன் முதலில் அரசுக்குக் கொடுத்து, அன்றைய சேரன் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்குவதில் முன்னோடியாக இருந்தார்.

கடந்த 1969–ம் ஆண்டு முதல், இறைபணியில் முழுமையான ஈடுபாடு கொண்டு, நீலகிரியிலுள்ள கேத்தி மற்றும் சென்னையிலுள்ள கோட்டூர் இறையியல் கல்லூரிகளில்

வேதாகமத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றார். அதன் பிறகு, ஈரோடு பட்டணத்தை மையமாக வைத்து, ஊழியப் பணியை தமிழகமெங்கும் பரவலாகச் செய்தார். **ஈரோடு மணல்மேடு கிறிஸ்துவின் சபையின் முழுநேர ஊழியராகவும், "திருமறை ஆசான்" மாத இதழ் ஆசிரியராகவும், "தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டத்தின்" முதல்வராகவும், இந்திய** கிறிஸ்துவின் சபை முன்னணி சிந்தனையாளர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

புதிதான இடங்களுக்குச் சென்று, கூட்டங்களை ஒழுங்குபடுத்தி நற்செய்தி அறிவிப்பதில் இவருக்குப் பேரார்வம் இருந்தது. அதுபோக, **திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்குகளை** தமிழகத்தின் பெரும் பட்டணங்களில் வருடந்தோறும் நடத்தினார். இன்னும் **"கிறிஸ்தவ சிந்தனையாளர் கருத்தரங்குகள்"** ஒழுங்குபடுத்தி, மார்க்க முன்னோடிகளை ஒன்றுதிரட்டி, உண்மைக் கிறிஸ்தவத்தை உற்றுப் பார்க்கும்படி செய்தார். பொருளாதாரம், இவருடைய வாழ்க்கையில் தீராத பெரும் பிரச்சினையாக இருந்த போதும், தன்னுடைய சீரிய முயற்சிகளுக்கு அவை தடை போட ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இம்முயற்சியில் இறுதி மூச்சுவரை தளராமல் பாடுபட்டார். மரிப்பதற்கு சரியாக இரண்டு வாரங்களுக்கு முன், ஈரோட்டில் 26-1-1993 அன்று **"கிறிஸ்தவ சிந்தனையாளர் கருத்தரங்கை"** வெற்றிகரமாக நடத்தினார்.

அடுத்து, இலக்கியப் பணியில் இவருக்கிருந்த ஆர்வம். எழுத்துப் பணியின் மூலம் உண்மைச் சத்தியத்தை வலியுறுத்திச் சொல்ல முடியுமென்றும், குறைந்த செலவில் அநேக ஆத்துமாக்களை சந்திக்க முடியுமென்றும், உறுதியாக நம்பி, திட முயற்சியில் இறங்கினார். மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் **"திருமறைத் துணைவன்"** என்ற நூலை வெளியிட்டு அநேகர் பயனடையச் செய்தார். தொடர்ந்து, **"கிறிஸ்தவ பக்தி விருத்திப் பாடல்கள்"** என்னும் த்லைப்பில் இரண்டு முறை பாடல் புத்தகங்களை வெளியிட்டார்.

இத்துறையில் இவருக்கிருந்த தணியாத தாகத்தைக் கண்ணுற்ற பரலோகத்தின் தேவன் "திருமறை ஆசான்" என்னும் மாத இதழை தொடங்கி நடத்த சகோ. **J.C. சோட்** மூலம் உதவி செய்தார். இப்பத்திரிக்கையின் மூலம், தமிழ்க் கிறிஸ்தவ உலகில் ஒரு புரட்சியைச் செய்தார் என்று சொன்னால் மிகையாகது. கிறிஸ்தவ மாத இதழ் இப்படிப்பட்ட சத்தியங்களைக் கொண்டதாகத்தானிருக்க வேண்டுமென தனி இலக்கணம் வகுத்துக் கொடுத்தார். அவரின் இந்த வேறுபட்ட அணுகுமுறைக்கு மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்தது. மாதம் ஆயிரம் பிரதிகளாகத் தொடங்கப்பட்ட இவ்விதழ் படிப்படியாக உயர்ந்து, இன்று மாதம் நான்காயிரம் பிரதிகளாக வெளிவருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும், இந்தியாவின் பல மாநிலங்களுக்கும், உலகின் சில நாடுகளுக்கும் செல்கிறது.

இச்சகோதரன் நற்செய்திக்குக் கீழ்படிந்த நாள் முதல் கொண்டு, உபதேசத்தில் உறுதிகாட்டி, கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையாகிய "கிறிஸ்துவின் சபைக்காக" இறுதி வரை பாடுபட்டு 9-2-1993 அன்று பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

# அணிந்துரை

**டாக்டர். பீட்டர் சாலமோன்**
கல்வித் துறைத் தலைவர்
தேசிய வேதாகமக் கல்லூரி, சென்னை - 600 082.

*"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்"* *(நீதி. 25:11)*

காலம் சென்ற சகோ. E.Z. செல்வநாயகம் அவர்களின் எழுச்சிமிகு கட்டுரைப் பொழிவினை, தமிழ் நல்லுலகிற்கு முன்மொழிவதை எனக்குக் கிடைத்த பேரருளாக எண்ணுகிறேன்.

எழுபதுகளில் நான் சென்னை வேதாகமக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, சகோ. E.Z.S. அவர்கள் வேத கல்வியில் சிறப்புப் பட்டப் பயிற்சிக்காக கல்லூரியில் வந்து சேர்ந்தார். முதல் அறிமுகமே அவருக்கும் எனக்கும் ஒரு ஆத்மார்த்த பந்தத்தை உருவாக்கியது. எங்கள் நட்பு ஆரோக்கியமான விமர்சனங்களைக் கொண்டதாக இருந்தது.

கடவுள் இல்லையென்று முழங்கி வந்த ஈரோட்டுப் பெரியார் இராமசாமி அவர்களின் மறைவுக்கு முன், அவர் வீட்டுக்கு எதிரில் நற்செய்திக் கூட்டத்தில் பேசும்படி சகோ. E.Z.S, என்னை 1972-ல் ஈரோடு அழைத்துச் சென்றார். எனது ஊழியப் பயணத்தில் இது மறக்க முடியாத வரலாற்றுத் திருப்புமுனை. அதற்கு அடுத்த பத்து ஆண்டுகள் சகோதரர் அவர்கள் நடத்திய கூட்டங்களில் கலந்து கொள்ளவும், அவரது குடும்பத்தாரோடு நன்கு பழகவும் வாய்ப்புக் கிட்டியது.

சகோ. E.Z.S நெடுநாள் வாழ்ந்திருக்க வேண்டியவர். ஆனால், தன்னுடைய வாழ்நாள் குறைவு என்பதை அறிந்தோ என்னவோ, ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே, "போய் சொல்வதை விட எழுதிக் கற்பிக்கலாம்" என்ற எண்ணத்தோடு 1980களில் தன்னை எழுத்துப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டார். அது மிகவும் நல்லதாய்ப் போயிற்று!

கிறிஸ்து சபைப் பணியில், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தை தமிழ் இலக்கியமாக்கியவர் சகோ. E.Z. செல்வநாயகம் என்றால் அது மிகையாகாது. மண்ணின் மைந்தருக்கு ஏற்றவாறு செய்திகளை வடிவமைத்துக் கொடுத்தார். இன்றைக்குங்கூட, புற்றீசல்கள் போல, கிறிஸ்தவ எழுத்துப் பணிகள் தோன்றி மறைந்து விடுகின்றன. ஏனெனில், அவை தமிழன் ஒப்புக்கொள்ள முடியாத குற்றுயிர் தமிழில் வெளிவருவது தான். அது போன்ற பத்திரிக்கைகள் அல்லது புத்தகங்கள் ஒருமுறை படித்த பிறகு காப்பாற்றப்படுவதுமில்லை, அடுத்த

தலைமுறையைச் சென்றடைவதுமில்லை. ஆனால், சகோதரர் அவர்களின் "திருமறை ஆசான்" தனித்து நின்று முத்திரை பதிக்கிறது.

கடந்த இருபது நூற்றாண்டுகளாக, பொதுவாக இந்திய கிறிஸ்தவம் முரண்பாடாக, இந்திய மக்களுக்கு ஏதாவது செய்திருக்குமானால், அது கிறிஸ்துவின் மார்க்கம், அந்தந்த மொழி பேசும் மக்களுக்கு, அவர்கள் மொழி மற்றும் கலாச்சார வழக்கில் சொல்லாமற் போனது தான். ஏனெனில், இங்கு மொழியும், சமயமும் ஒன்றாக எண்ணப்படுகிறது.

ஒருவர் என்னைப் பார்த்து, நீங்கள் கிறிஸ்தவர் என்று சொன்னார். தன்னையோ தமிழர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். அதாவது, தான் ஒரு இந்து என்பதை, தன் மொழி வழியாக அவர் பார்க்கிறார். அதாவது, நான் கிறிஸ்தவனாக இருப்பது, தமிழ்க் கலாச்சாரத்துக்கு எதிரானதாக அவர் எண்ணுகிறார். ஏனெனில், நமது வெளியீடுகள், பதிப்புகள், அன்றாட பேச்சுக்கள் அனைத்திலும் ஆங்கில கலாச்சாரமும், சமஸ்கிருத ஆட்சியும் உள்ளதே அதற்குக் காரணம். ஆகவே, நல்ல தமிழில் எழுதவும், பேசவும் முயலாமற் போனால், நம்முடைய முயற்சிகள் சொற்ப வெற்றியையே நம்பியிருக்க வேண்டி.யிருக்கும்!

உங்களுக்கு நன்றாகத் தெரியும், "சுவிசேஷம் சொல்லப்பட வேண்டிய ஒன்று." மொழியில்லாமல் எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, மொழியில் சொல்லப்படும் செய்தி பிரயோஜனமுள்ளதாக இருக்க வேண்டுமானால், அது அவர்களுடைய கலாச்சாரத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

எண்பதுகளில், கிறிஸ்துவின் சபை மூலம் தமிழ் உலகிற்கு இந்த மாற்றத்தைச் செய்தவர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள். இன்றைய தமிழ் நாட்டில், கிறிஸ்துவின் சபை பதிப்புத் துறையில், மறைந்த E.Z.S அவர்களின் ஆரம்பகால "திருமறைத் துணைவன்" அதையொட்டி வந்த "திருமறை ஆசான்" தவிர வேறு சிறந்த மாத இதழ்கள் இல்லையென்றே கூறிவிடலாம். சிறந்த மொழித்திறன், எளிய வாக்கிய அமைப்பு, பிழையின்றி அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவைகளுக்கு EZS அவர்கள் 20ஆம் நூற்றாண்டின் திருப்பு முனை எனலாம்.

தந்தையின் தரமிக்க தலைப்புரைகளை புத்தக வடிவமாக்கிய பாசமிகு தம்பி E.Z.S. ராஜநாயகம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

*"எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" (ஏசா. 60:1)*

15.1.1998
சென்னை

அறிவர் **பீட்டர் சாலமோன்.**

# தொகுப்புரை

"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்" என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவரும் இக்கட்டுரைகள், 'திருமறை ஆசான்' மாத இதழின் "ஆசிரியர் உரை" பகுதியில் 1988ஆம் ஆண்டு துவக்கம் முதல் 1993ஆம் ஆண்டு ஆரம்பம் வரை ஏற்கனவே வெளிவந்தவை.

'திருமறை ஆசான்' இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. EZ செல்வநாயகம் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்த பொழுது, பெரும் எண்ணிக்கையிலான தேவதாசர்கள் வந்திருந்தனர். அப்பொழுது, மரித்துபோன பத்திரிக்கை ஆசிரியருக்கு கர்த்தரிடத்திலிருந்த ஆழமான நம்பிக்கையையும், இயேசுக் கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையில் அவருக்கிருந்த வலுவான பிடிப்பையும், கிறிஸ்துவின் சுத்தமான நற்செய்தி தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் பரம்ப வேண்டுமென்பதில் அவருக்கிருந்த அபாரமான ஈடுபாட்டையும், உயிரோட்டமுள்ள அவருடைய எழுத்துக்கள் தமிழ்க் கிறிஸ்தவ உலகில் ஏற்படுத்திய பெரும் தாக்கத்தையும் வெகுவாக அறிந்திருந்த ஊழியப் பெருமக்கள் அநேகர், அவரின் கட்டுரைகளைத் தொகுத்துப் புத்தகமாக்கினால் அதிக நன்மை தரும் என்ற தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்தினர்.

மரியாதைக்குரிய ஊழியர்கள் மற்றும் எண்ணிறைந்த வாசகர்கள் ஆகியோரின் விருப்பத்தை நிறைவேற்ற தேவன் இப்பொழுது இரக்கங் காட்டியுள்ளார். தேவாதி தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஏராளமான நன்றிகளை ஏறெடுக்கிறேன். ஒருவேளை, வருடங்கள் ஐந்து உருண்டோடி யிருந்தாலும் இப்புத்தகத்திற்கான தேவை இன்னும் முடிந்துபோகவில்லை யென்றே நம்புகிறேன்.

தமிழக் கிறிஸ்தவ உலகம், பல விநோதமான நோய்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, நிலைகுலைந்து போய். செய்வதறியாமல் திகைத்து, சாவைநோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருப்பதை மெய்க்கிறிஸ்தவத்தில் நாட்டம் கொண்டுள்ள உண்மை விசுவாசிகள் அனைவரும் ஒருமனதோடு ஒத்துக்கொள்வர். ஐயோ, உன்னத மார்க்கமான கிறிஸ்தவம், இப்படி அழிவின் பாதையில் வெகுவேகமாகப் போய்க்கொண்டிருக்கிறதே இதைத் தடுத்து நிறுத்தி, நிலைமையைச் சீர்செய்ய எந்தவொரு முயற்சியுமே இல்லையா என்ற அங்கலாய்ப்பு மத உலகில் ஓங்கி ஒலித்த போதுதான் "திருமறை ஆசான்" மாத இதழ்தொடங்கப்பட்டு, அழிவிற்கு அணைபோடும் ஓர் அரிய முயற்சியாய் இக்கட்டுரைகள் எழுதப்பட்டு வெளிவந்தன.

பீடிக்கப்பட்டிருக்கும் நோய்களுக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் மருந்துகள் அனைத்தும் பாங்கோடும், பயத்தோடும், கருத்தோடும், அக்கறை யோடும் தயாரிக்கப்பட்டவை. ஆம், இயேசுக் கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின் படி பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட சுத்தமான, கலப்படமற்ற தேவ ஞானத்தின்படியான வேதவசனங்கள் மாத்திரம் இதிலே கலவைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. மாந்த அறிவின்படியான கலவைகள் எதுவுமே இதில் துளியும் சேர்க்கப்படவில்லை. ஆகவே, பரிசுத்த எழுத்துகளின் துணைகொண்டு, ஆத்தும பாரத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கும் இம்மருந்துகளை கவனமாக உட்கொண்டால் நோய் நீங்கி, ஆத்தும சுகம் பெற்று, ஆன்மீக வாழ்வில் மறுமலர்ச்சி பெறும் வாய்ப்பு மிக அதிகம்.

புதிய ஏற்பாட்டு உபதேசங்களடங்கிய இக்கட்டுரைத் தொகுப்புகளை புத்தக வடிவில் கொண்டுவர அடியேன் ஆசைப்பட்ட பொழுது, இப்பணியை பொருளாதார ரீதியாகத் தாங்கும்படி, என் உடன்பிறந்த சகோதரிகள் செல்வமணி – குணசேகரன், ஏசடியாள் – குமார் மற்றும் சகோதரன் ஏசையன் – பிருந்தா ஆகியோர் முன்வந்தனர். இவர்களின் ஒத்துழைப்பு கிடைத்திராவிட்டால் பயன்தரும் இந்நூலை உங்களுக்கு என்னால் கொடுத்திருக்க முடியாது. இவர்களுக்கு, என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அடியேனின் இலக்கியப் பணியில், தொடர்ந்து என்னை வெகுவாக ஊக்குவித்துவரும் சகோ. **J.C. சோட்** அவர்களுக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இந்திய மக்களின் ஆன்மீகத் தேவைகள் முறையாகச் சந்திக்கப்பட, இச்சகோதரன் அரும் பாடுபட்டு வருவதை அனைவரும் அறிவர். பரலோகத்தின் தேவன் இவரை மென்மேலும் பெலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக!

இறுதியாக, சிறப்புமிக்க இந்நூலைப் படிக்கும் சிலாக்கியம் பெற்றிருக்கும் நீங்கள் யாவரும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை முழுமையாக அறிந்து, அதற்கு மாத்திரம் உங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்து, ஆத்தும இரட்சிப்படைந்து, ஒன்றான மெய்ச்சபையில் சேர்க்கப்பட்டு, ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற்று, கிறிஸ்துவுக்குள் பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறேன். தேவகிருபை உங்களோடிருப்பதாக! ஆமென்.

**9-2-98** கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின்

காங்கேயம் விரிவாக்கப்பணியில்

**S. *ராஜநாயகம்***

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்க எண் |
|---|---|
| சமய ஒற்றுமை சாத்தியமே! | 1 |
| உண்மைக் கிறிஸ்தவம் — பிளவுபடாதது | 9 |
| கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு | 15 |
| கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்! | 23 |
| உன்னை நீயே எண்ணிப்பார்! | 27 |
| நீங்களே தீர்ப்பளியுங்கள் | 32 |
| 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்? | 38 |
| கள்ளனும், கள்ள உபதேசங்களும் | 46 |
| கைகளோ ஏசாவின் கைகள்; சத்தமோ யாக்கோபின் சத்தம் | 50 |
| யூதாஸ் காரியோத் | 54 |
| இயேசு அழுகிறார் | 62 |
| கிறிஸ்துவின் சபை என்றால் என்ன? | 68 |
| இயேசு கிறிஸ்து கட்டிய சபை ஒன்று மட்டுமே | 79 |
| மேகங்கள் சூரியனை மறைக்க முடியாது; சாத்தானால் கிறிஸ்துவின் சபையை மறைக்க முடியாது | 82 |
| மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா? | 87 |
| நாங்கள் என்ன செய்ய வேண்டும்? | 91 |
| ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி? | 97 |
| சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் | 101 |
| நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? | 106 |

இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும் 112

சவுல் என்கிற பவுல் 122

ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை
இழந்து விடும் அபாயம் உண்டா? 126

வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரைச் சேவித்தல் 132

முயற்சியின் சிகரம் 137

நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? 141

எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம்
இரட்சிக்கப்படுவார்களா? 149

வைத்தியனே, முதலில் உன்னை குணமாக்கிக் கொள்! 154

என்னுடைய திட்டமா? தேவ சித்தமா? 158

ஊழியர்கள் சிந்தனைக்கு! 162

அப்போஸ்தலப் பட்டம் 167

கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்? 173

கொத்தி எருப்போடுவோம் வாரீர்! 177

மனிதர்களே, நமக்கு இந்தத் தொழி லினால்
நல்ல பிழைப்பு உண்டா யிருக்கிறது என்று அறிவீர்கள்! 182

ஏன் முடியவில்லை? 186

மௌன பாவம் 189

கிறிஸ்தவ ஈகை 193

கிறிஸ்தவம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? 199

இன்னும் எத்தனை காலம் . . .? 204

மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள் 208

கிறிஸ்தவ நோயாளிகள் மருந்து சாப்பிடலாமா? 220

கேடு சூழ்ந்த குடும்பம் 223

# சமய ஒற்றுமை சாத்தியமே!

மக்களை நல்வழிப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு பல சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் சமயச் சண்டைகள் பெருகினவே தவிர, வேறே பெரிய நன்மைகள் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற நிலைக்கு சமயங்கள் இடையூறாகவே இருக்கின்றன.

ஆனால் அவ்வப்பொழுது சமய ஒற்றுமை வேண்டும் என்று மேடை போட்டுப் பேசுகிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், குழு அமைக்கிறார்கள் பயன் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒற்றுமை ஏற்படுவதற்கு எந்த அடிப்படையை ஆதாரமாகக் கொள்வது என்பதைத் தீர்மானிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். வேரை வெட்டியெறியாமல் கிளைகளை நறுக்குகிறார்கள்.

## சமய ஒற்றுமை ஏற்பட சில யோசனைகள் :

முதலாவது உலகமெங்கும் வாழுகிற அனைவருக்கும் ஒரே கடவுள் தான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சீரியா நாட்டவர்கள் ஒவ்வொரு இடத்துக்கும் ஒவ்வொரு கடவுள் இருக்கிறதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதாவது சமவெளிப் பிரதேசத்துக்கு ஒரு கடவுள், மலைப்பாங்கான இடங்களுக்கு வேறொரு கடவுள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள் (1 ராஜா 20 : 28) நம்முடைய தமிழ்நாட்டிலே கூட ஒவ்வொரு இலாக்காவுக்கும் ஒரு கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள். ஆக்க ஒரு கடவுள், அழிக்க வேறொரு கடவுள்; காப்பதற்கு ஒரு கடவுள், கல்விக்கு, செல்வத்துக்கு என்று பல கடவுள்கள் இருப்பதாக எண்ணி அவர்களை பூஜித்து வருகிறார்கள். கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் பவுல் அப்போஸ்தலன் கண்ட காட்சி என்ன? பல விக்கிரகங்கள்! ஆகவே அதை விக்கிரகங்கள் நிறைந்த பட்டணம் என்று வர்ணிக்கிறார். (அப். 17 : 16) ஆனால் இஸ்ரவேல் நாட்டு மக்கள் மட்டும் தங்கள் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று நம்பியிருந்தார்கள். (உபா 6 : 4) இந்த ஒரே கடவுள் கொள்கையை இயேசுவும் அவருடைய சீஷர்களும் போதித்தார்கள். (மாற்கு 12 : 29, 30; I கொரி 8 : 6; எபே 4 : 6).

அந்த ஒரே கடவுள் கொள்கை சிந்திக்கிற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறது. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத் தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்'' (அப் 17 :26) என்கிற வசனத்தில் அது பலமாய் நிரூபிக்கப்படுகிறது. மனிதன், என்ன உணவைச் சாப்பிட்டாலும், எந்த சீதோஷ்ண நிலையில் வாழ்ந்தாலும், எந்த நிறத்தவனாயிருந்தாலும், எம்மொழி பேசுபவனாக இருந்தாலும் அவர்களுடைய இரத்தம் சிவப்பாகவும், மற்ற விலங்குகள், பறவைகள் நீர்வாழ் உயிர்கள் ஆகியவைகளின் இரத்தத்திலிருந்து வேறுபட்டும் இருக்கிறதை நாம் காண்கிறோம். பல கடவுள்கள் மனிதனையும், உலகத்தையும் படைத்திருந்தால் வெவ்வேறு விதமான நிறத்திலும் தன்மையிலும் இருந்திருக்கும். ஆகவே "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற கொள்கையை அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டால் ஒழிய சமய ஒற்றுமை ஏற்பட முடியாது.

## உலக மக்கள் அனைவரும் ஒரே உபதேசத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்

ஒரே கடவுளை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறிக் கொண்டு தங்கள் மனம் போல் கொள்கைகளை வகுத்துக் கொண்டு ஒருவரோ டொருவர் இணக்கமில்லாமலும், முரண்பட்டும் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி பிரிவினை உண்டாக்குகிறார்கள். அப்படிப்பட்ட சுயநலமிகளையும் கள்ள போதகங்களையும் அடையாளம் கண்டு கொண்டு சத்தியத்தைத் தேடி வாசித்து அதில் நிலை நிற்க வேண்டும். எபிரேய நிருப ஆசிரியர் (I தெச 5 :21 அப். 17 : 17) பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றினார் என்கிறார் (எபி 1:1,2) அதன் கருத்தைச் சிந்திப்போம். தேவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவைக்கு ஏற்ப பரிசுத்த ஆவியினால், பரிசுத்த மனிதரை ஏவி, தேவனுடைய திட்டத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார். (II பேதுரு 1 : 21) ஆனால் இப்பொழுது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பேசுகிறார். "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னது என்றும், உபதேசிக்க வேண்டியது இன்னது என்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.

அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்" என்கிறார் இயேசு. அதாவது இயேசு கிறிஸ்துவின் போதனை தேவனுடைய போதனையே.

அவர் இவ்வுலகுக்கு வந்த வேலை முடிந்த பின்பு பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவினிடத்திற்குச் சென்று அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். அப்படிச் செல்லுவதற்கு முன்பு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, அதிகாரம் கொடுத்தார். (மாற்கு 16 : 15,16) அவர்களுடைய போதனைகளை இயேசு அங்கீகரிக்கும் வகையில், "உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான். உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான்" என்கிறார். (லூக் 10 : 16) மேலும் அப்போஸ்தலர்கள், பேச வேண்டியவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்த அவர் சத்திய ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தார் (யோவான் 16 :7). "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.

பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள். அதனால் அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என் றேன்" (யோவான் 16 : 13-15) அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு, "ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல்; தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவ வசனந்தான்" என்கிறார். (I தெச 2 : 13).

மேலும், பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுக்கு எழுதும் போது, வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது என்கிறார். (II தீமோ 3:16). ஆகவே உபதேசங்கள் அப்போஸ்தலர்களாலும், பரிசுத்த ஆவியாலும், இயேசு கிறிஸ்து வினாலும்

போதிக்கப்பட்டிருந்தாலும் அதன் "மூலம்" தேவனே, எனவே பரிசுத்த வேதாகமம் கூறுகிற அனைத்து உபதேசங்களும் மெய்யான ஜீவனுள்ள தேவன் மனுக்குலம் அனைத்துக்கும் கொடுத்தவைகள். அவை களையன்றி வேறே உபதேசம் கிடையாது என்கிற எண்ணம் விசுவாசி களுக்கு ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

### மார்க்க விஷயத்தில் யாருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதில் ஒரு தெளிவு வேண்டும்.

ஒரு சிலர் என்னுடைய மனச் சாட்சியே எனக்கு வழிகாட்டி, அதன் படி தான் செய்வேன் என்பர். இன்னும் சிலர் பெற்றோர்களின் முடிவு தான் சரி என்பர். வேறு சிலர் சமுதாயம், அதன் கட்டுப்பாடு இவைகள் முக்கியம் என்பர். இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தால் சமய ஒற்றுமை நிலவுவது எங்ஙனம்? ஒற்றுமை வேண்டும் என்றால் ஒரு பொது அதிகாரத்தை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அந்தப் பொது அதிகாரம் எதுவாக இருக்கமுடியும்? இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு சீஷர்களிடம் "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார். (மத் 28 : 18) அதை பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலன் பவுல் மூலமாக ஆமோதிக்கிறார். "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழா னோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் என்கிறார். (பிலி 2 : 9 - 11) பேதுரு இதைக் குறித்து "தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமை யானது நமக்குத் தந்தருளினது என்கிறார். (II பேது 1 -3) இப்படியிருக்க ஒருவன் தான் விரும்புகிறதையே விசுவாசிப்பேன் என்று அடம் பிடித்தால் பிரிவினை தவிர்க்கமுடியாதது ஆகிவிடுமே. மாத்திரை இனிப்பாக இருந்தால் தான் சாப்பிடுவேன் என்று முரண்டு பிடிக்கிற குழந்தையைப் போல் நாம் இருக்கக் கூடாதே. ஆகவே மார்க்க சம்பந்தமான விஷயங்களில் இயேசு கிறிஸ்துவே சகல அதிகார முடையவர் என்றும் தனிமனிதருக்கோ உயர் மட்டக் குழுக்களுக்கோ இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தில் தலையிட உரிமை கிடையாது என்றும் உணராத வரை சமய ஒற்றுமை என்பது சாத்தியமில்லை.

**இன்னும் ஒரு சிலர் பழைய ஏற்பாடும் தேவனால் கொடுக்கப் பட்டது தானே. அதையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுவர்.**

இது எபிரேய நிருபத்துக்கு முரண்பாடானது. பழைய ஏற்பாட்டில் தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாகப் பேசினார். இப்பொழுது (கடைசிக் காலத்தில்) தமது குமாரன் மூலமாகவும் அவருடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும் பேசுகிறார் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். இதோ, இன்னும் கூட சில ஆதாரங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசேயருக்கு எழுதும்போது "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவில் இராதபடி எடுத்து, சிலுவையின் மேல் ஆணி அடித்து முடிவுக்கு கொண்டு வந்தார் என்று கூறுகிறார். (கொலோ 2:14) மேலும் எபிரேய நிருப ஆசிரியர் "புதிய உடன் படிக்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக பழைய உடன்படிக்கை அப்புறப்படுத்தப்பட்டது என்கிறார் (எபி 9 : 15 - 17, 7 : 18, 10 : 9).

இயேசு கிறிஸ்துவினுடைய மரணம், தடுப்புச் சுவராக நின்ற பழைய பிரமாணத்தைத் தகர்த்துப் போட்டு யூதர்களையும் புறவினத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்குள் ஒப்புரவாக்கினது. (எபே 2 : 14 - 16) அப்படியிருக்கும் போது ஒருவன் பழைய பிரமாணம் முழுவதையுமோ அல்லது அதில் ஏதாவது ஒரு பகுதியையோ கைக்கொள்ள வேண்டும் என்று விரும்பினால் அவன் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தவன் ஆவான். (கலா 5:4) ஆகவே நாம் சமய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் உபதேசிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

**பொதுவான இரட்சிப்பை அடைவது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.**

அப்போஸ்தலனாகிய யூதா என்பவர் நம்முடைய பொதுவான இரட்சிப்பைக் குறித்துச் சொல்லும்போது "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக" (யூதா 3) என்கிறார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை ஆளுக்கொரு விதமாய் வெளிப்படுத்தவில்லை. மார்க்கப் பிரிவினை வாதிகள் இரட்சிப்பைப் பற்றிப் பலவிதமாய்ப் போதிக்கிறார்கள். அது வேதாகமத்துக்கு புறம்பானது. ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்கமாட்டான் என்று யோவான் 3:5ல்

வாசிக்கிறோம். மேலும் இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை என்று வர்ணிக்கப்படும் மாற்கு 16 : 15, 16 கூறுவதாவது . . "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". அதாவது சுவிசேஷம் அனைத்து நாடுகளிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் மக்கள் ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிய விரும்பினால் அவர்கள் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்க வேண்டும். அது எப்படி என்பதை அப்போஸ்தலர்கள் பின்னர் பல இடங்களில் விளக்கிச் சொல்லுகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகோஸ்தே பண்டிகை நாளில் எருசலேமில் கூடியிருந்த மக்கள் அப்போஸ்தலரைப் பார்த்து . . . நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு அளிக்கப்பட்ட பதில் நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2 : 37,38) சுவிசேஷகன் பிலிப் சமாரியா பகுதியில் பிரசங்கித்தார். வசனத்தை ஏற்றுக் கொண்ட ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். (குழந்தைகள் அல்ல) (அப். 8 : 5, 12) சத்தியத்தை ஏற்றுக் கொண்ட எத்தியோப்பிய மந்திரி கேட்ட கேள்வி : "இதோ தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தடை என்ன? (அப். 8 : 36) பதில்: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" என்று கூறப்பட்டது. தொடர்ந்து வாசித்தால் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் என்று பார்க்கிறோம் (அப். 2 : 37, 38) பிலிப்பு பட்டணத்துச் சிறை அதிகாரி சத்தியத்தைக் கேட்டு அவனும் அவனுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப். 16 : 33) மூன்று நாள் இரவும் பகலும் உபவாசித்துக் கொண்டிருந்த பின்னர் பவுலாக மாறிய சவுலுக்குச் சொல்லப்பட்டதென்ன? "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப். 22 : 16).

ஆக மேற் சொன்ன அனைவருக்கும் இரட்சிப்பு ஒரே விதமான முறையில் தான் வந்தது. இன்றைக்கும் அதே இரட்சிப்பின் திட்டம் தான் தேவனால் அங்கீகரிக்கப்படும், எல்லாக் காலத்திலும், எல்லா மனிதருக்கும் இது ஒன்றே வழி (ரோமர் 3 : 23, 24; 6 : 3) மக்கள் சுவிசேஷ உரையைக் கேட்டனர், விசுவாசித்தனர். மனந்திரும்பினர், அறிக்கை செய்தனர், ஞானஸ்நானம் பெற்றனர். சுலபமான முறை; குழப்பத்திற்கு இடமே யில்லை. எத்தனை பேர் வசனத்தை ஏற்றுக் கொண்டார்களோ அத்தனை பேரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். (அப் 2 : 41)

அதனுடைய பலன்களை கலா 3 : 26, 27ல் வாசிக்கிறோம். "நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே", என்றுள்ளது. இது தான் பொதுவான இரட்சிப்பு. எல்லாருக்கும் ஒரே சுவிசேஷம், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று. இந்த நிலையை எல்லாரும் ஏற்றுக் கொண்டால் தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

உலகம் முழுவதும் ஒரே விதமான சபை அமைப்பு. உண்மையாகவே ஒற்றுமை வேண்டுமானால் மார்க்கப் பிரிவினைகள் என்ற தடுப்புச் சுவர்கள் இடித்தெரியப்பட வேண்டும். அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கங்களாக இணைக்கப்பட வேண்டும். அது எப்படி சாத்தியமாகும்? அதை எப்படி ஒழுங்குபடுத்த முடியும்? யார் அதற்கு ஆளுநராக இருப்பது? அதில் அங்கம் வகிப்பது எப்படி? இந்தப் பிரச்சனைகளுக்கு மனித ஞானத்தைக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அது முடியாதுதான். ஆனால் தேவனாலே எல்லாம் கூடும். நமக்கு வேண்டியதெல்லாம் பணிவும் நேர்மையும் தான். இயேசு சொன்னார். "நான் என் சபையைக் கட்டுவேன்" என்றார் (மத் 16 : 18) அப்படியே தன் சுய இரத்தத்தைச் சிந்தி அதைச் சம்பாதித்தார் (அப் 20 : 28) அவர் தான் அதற்குத் தலைவர் (கொலோ 1 : 18) அவர் தான் அதன் இரட்சகர் (எபே 5 : 23) சபையே கிறிஸ்துவின் மணவாட்டி (எபே 5 : 22 - 32) இவ்வளவு இருந்தும் அதைக் கிறிஸ்துவின் சபை என்று அழைக்க முன் வரமாட்டோம் என்கிறோமே (ரோமர் 16 : 16) இது என்னுடைய சபை, இது உன்னுடைய சபை, இது யோவான் சபை, இது பேதுரு சபை என்று யார் யார் பேரிலே அழைக்கிறோமோ இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து சபை ஒன்று தான் அது கிறிஸ்துவின் சபை என்று ஏற்றுக் கொள்ளாதவரை சமய ஒற்றுமைக்கு வாய்ப்பே கிடையாது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையில் நிலவிய ஒற்றுமையின் மையைக் கண்டித்து வேதனையோடு கேட்ட கேள்விகளை ஜெபத்துடன் வாசியுங்கள். "உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படி சொல்கிறேன்.

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்களா? (I கொரி 1 : 12, 13) எபேசியர் நிருபத்தின் 4-ம் அதிகாரம் சொல்லுகிற. ஏழு ஒன்றுகளைக் கவனியுங்கள். 1. ஒரே நம்பிக்கை 2. ஒரே சரீரம் (சபை) 3. ஒரே ஆவி 4. ஒரே கர்த்தர் 5. ஒரே விசுவாசம் 6. ஒரே ஞானஸ்நானம் (தெளிப்பது ஞானஸ்நானமல்ல) 7. ஒரே தேவன். சகோதரர்களே, இவைகளையெல்லாம் சிந்தியாமலும் நடைமுறைப்படுத்த மனமில்லாமலும் வெறுமனே ஒற்றுமை! ஒற்றுமை! என்று கூறுவது ஊரை ஏமாற்றுவதற்குத் தான். உருப்படியாக ஒன்றும் நடைபெறாது தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் கனம் பண்ணி இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவருடைய உபதேசச் சட்டங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து இயேசுவின் இறுதி ஜெபத்தை நடைமுறைப்படுத்த தேவன் நம்மை வழி நடத்துவாராக!

## கிறிஸ்துவின் சபையில் இருக்கும் ஆசீர்வாதங்கள்

1. ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோம. 3:1-2 I யோவா 1:7)
2. பாவமன்னிப்பு (கொலோ 1:13,14)
3. பிதாவோடும், கிறிஸ்துவோடும், விசுவாசிகளோடும் ஆவிக்குரிய ஐக்கியம் I கொரி. 12:13, எபே. 5:23.
4. புதிய ஜீவன் (II கொரி. 5:17)
5. எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (எபே. 1:3)
6. பரிசுத்த ஆவியின் வரம் (கலா. 5:25, I கொரி. 3:16, எபே. 1:13, 14)
7. உயிர்த்தெழுதலுக்கான உறுதிமொழி ( I தெச. 4:16, 18, ரோம. 8:11).
8. பரலோகத்திற்கான உறுதிமொழி (யோவா. 14:1-3, ரோம. 6:22).

# உண்மைக் கிறிஸ்தவம் — பிளவுபடாதது

"கார் ஒன்று இந்தப் பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர். பதில் வரவில்லை. மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன. காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா? இது இளைஞன் ஒருவனின் கேள்விக் கணைகள். "அதெல்லாம் இல்லை, கார் அவ்வளவு தான்" சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்.

"என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் எப்படிச் சொல்லுவது?" எத்தனையோ ரகமான கார் கள் வருகின்றன, போகின்றன. என்ன கார் என்று சொன்னால் தானே சரியாகப் பதில் தரமுடியும்? "இது இளைஞனின் சமாதான விளக்கம்".

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத் தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும் ஒரே மாதிரி யாகத்தான் இருந்தன. அந்த நாட்களில் கார் என்றால் போதும், மக்கள் புரிந்து கொள்வார்கள். இன்று அப்படியல்ல; தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புதுரகமான கார்களை உற்பத்தி செய்து மார்க் கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை. அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்ப் பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன். அவருக்கு கொஞ்சம் வருத்தம். அதைக் காட்டிக் கொள்ளாமல் அதுசரி ஐயா, எந்த ஐக்கியம் என்றுதான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை, அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை. (எபே 4:4) கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்ப் படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் (அப் 11 : 26.)

ஆனால் அந்த நிலைமை மாறி வீதிக்கொரு சபை, ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்துவிட்டது. ஆகவேதான் அந்த மனிதர் கோபப்பட்டுக் கொண்டார். அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று. ஏனெனில் நாம் இந்த பிரிவினை வாதத்தை உருவாக்க வில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினைவாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்வீக சொத்தாக பெற்றுக் கொண்டிருக் கிறோம். விரும்புகிறோமோ, இல்லையோ நாம் தோன்றுவதற்கு முன்னரே பல சபைகள் என்ற நிலை நன்குவேர்விட்டு தழைத்து நிற்கிறது. அதன் நிழலில் நாம் அண்டிக் கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்றுக் கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டு பிடிப்போம். ஏனெனில் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத் தப்பட்டிருக்கிறதே. (I தெச 5 : 21; யோவான் 5 :39)

இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். (அப் 2:47) எந்த சபையில்? சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று (அப் 8:3ல்) வாசிக்கிறோம். எந்த சபையை? எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று வேதம் குறிப்பிடும்போது ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று கொள்ளவேண்டும். இயேசு என் சபையைக் கட்டுவேன் என்று ஒருமையில் தான் சொன்னார் (மத் 16 : 18.) அதாவது நான் "கிறிஸ்தவத்தை ஸ்தாபிப்பேன்" என்றார். இயேசு சபையில் அன்பு கூர்ந்து ...... தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் "என்று வாசிக் கிறோம் (எபே 5:25-27) வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்ட வர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக இஸ்ரவேலரை "சபை" என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில் தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். (அப் 7:38) சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது,

ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள். (அப் 8 : 1-3.) சபை என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது. சபை என்பது தேவனுடைய ஆவிக்குரிய மாளிகை. அது ஜீவனுள்ள கற்களால் ஆனது I பேதுரு 2:5 ஆகவே சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும் அப்போஸ்தலன் பவுல் அப் 20 : 28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்தத்தை விலைக் கிரயமாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார். ஆகவே யார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் சபை யில் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட அழைக்கப்பட்ட இரட்சிக்கப் பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே. இப்படி தேவன் அழைக்கப் பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துகுட்படுத்தியிருக்கிறார் (கொலோ 1:13) (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். (யோவா 3:3-5) சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். (கொலே 1 :18).

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங் களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (I கொரி 12 : 13) வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் - இராஜ்ஜி யத்தின் பிள்ளைகளாகிறார்தள் என்று பொருள். எந்தச் சபை என்ற பிரச்னைக்கே இடம் இல்லை. ஏனெனில் வேதாகமத்தில் சபை என்பது ஒன்றுதான். ஆனால் இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுத்திருப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னா பின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப் பார்ப்போம்.

### 1. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் :- I தீமோ 4 : 1

விசுவாசம் என்பதை ஆங்கிலவேதாகமம் "The faith" என்று குறிப்பிடுகிறது. அப் 6 : 7, 13 : 8, 14 : 22 கலா 1 : 23. அதாவது விசுவாசம் என்பது ஒருமை. (எபே 4 : 5)

## 2. சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள் :- கலா 1 : 7

சுவிசேஷப்புரட்டு அபாயகரமானது. ஏனெனில் சுவிசேஷமே கிறிஸ்தவத்தின் இதயம். இதயத்துக்குக் கேடுவந்தால் சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், வானத்தில் இருந்துவந்த தேவதூதனானாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. (கலா 1 : 8-9.) ஏனெனில் கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

## 3. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்:- II தீமோ 4 : 3

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துக்கு எதிர்த்திசையில் இயங்கும் தன்மையுள்ளது. (கலா 5 : 17.) ஆகவே தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுக்குப் பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப் புவார். II தெச 2:10-12.

இப்படியாக மனிதர்கள் தூயக்கிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைப்படுத்தி கட்டுக் கதைகளை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

## 4. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினை களையும் இடறல்களையும் உண்டாக்குவார்கள் :-

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு "சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டுவிலக வேண்டும்" என்று புத்தி சொல்லுகிறார். (ரோமர் 16 : 17.) அப்போஸ்தலன் யோவான் கூட கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனையுடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவ னோ பிதாவையும் குமாரனையும் உடையவன் ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். II யோ 9 -11இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூய உபதேசத்தை உதறித் தள்ளிவிட்டு தங்கள் மனம்போல் நடக்கின்றனர்.

**5. முதலாம் நூற்றாண்டுச் சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர்:-**

பவுல் கொரிந்து சபையாருக்கு கருத்து ஒருமித்தவர்களாகவும் பிரிவினையற்றவர்களாகவும் ஒருமனமும் ஒரு சிந்தனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்; (I கொரி 1 :10) ஆனால் பிரிவினைமார்க்கம் உருவானதே இங்கேதான் என்று எண்ணும்படி நான் அப்பெல்லோவைச் சேர்ந்தவன் நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர். (I கொரி 1 : 12) இந்தப் பிரிவினை வாதம், இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டது. யோவான் (17:20, 21) அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப் பாட்டைக் காத்து கொள்ளவேண்டும் என்று உருக்கமாய் வேண்டுகோள் விடுக்கிறார். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார். எபே 4:3-7. அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப் பட்டிருக்கிறது.

**6. இறுதியாக சபையை விட்டே விலகினார்கள் :-**

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதரையே கடித்த கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன். கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக் கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினர். அப் 20 : 28 - 30.

எபேசு பட்டணத்து மூப்பர்கள் தங்களையும், தங்களிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்த மந்தையாகிய சபையையும் கண்காணிக்கும்படி எச்சரிக்கப் படுகின்றனர். இந்த மந்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. இந்த மூப்பர்கள் எபேசுப் பட்டணத்தில் இருந்த சபையை, மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பதுபோல் காக்க வேண்டும், என்று அறிவுரை கூறுகிறார். ஏனெனில் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். (அப் 20 : 29,30) என்று எச்சரித்திருந்தார். எப்படி ஓநாய்களால் மந்தை சிதறடிக்கப்படுமோ அவ்வாறு கள்ளப் போதகர்களால் சபையும் சிதறடிக் கப்படும். இந்த சண்டாளர்கள் கிறிஸ்து தம் விலை மதியாத இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த

சபையை சின்னா பின்னப்படுத்தி கிறிஸ்துவின் சபையைக் கூறுபோட்டு மகிழ்ந்தனர்.

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவதுபோல் அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச் செடி, பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் இந்த பிரிவினை மார்க்கங்களையும் குழுமங்களையும் கிறிஸ்துவின் சபைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இது குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத் தான் நினைவூட்டுகிறது. ஆனால் சபை வரலாற்றைப் படிக்கும்போது கிறிஸ்தவத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும். அந்த ஒரே விசுவாசம் மீட்கப்பட்டு, விலகிப் போனதற்கு முன்பு இருந்த நிலைமைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.
2. தடம்புரண்டு கிடக்கிற சுவிசேஷம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.
3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.
4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்பட வேண்டும்.
5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்.
6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை (Unity; Not Union) உருவாக்க வேண்டும்.
7. அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்கவேண்டும்.

சுருங்கக் கூறின் முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச் சபை மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய நம்முடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒன்றாயிருந்து, வேதம் விளம்புவதை விவரித்துக் கூறுவோம் வேதம் விளம்பாதவைகளுக்கு உடன்படவேமாட்டோம்.

# கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு

சீயோன் மலை மீது கட்டப்பட்டுள்ள எருசலேமில் உள்ள ஒரு எளிய இரண்டு அடுக்கு மாடியின் உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்க்கிறதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அங்கே நீங்கள் காண்பது என்ன? பதிமூன்று மனிதர்கள் அங்கே அமர்ந்திருக் கிறார்கள். அதில் ஒருவர் குரு மற்ற பன்னிரண்டு சீடர்கள் அல்லது தொண்டர்கள். குருவானவர் முகத்தில் என்றுமே இல்லாத ஒரு வித சோகம். ஏனெனில் தனக்கு மிகவும் நெருக்கமான தன்னால் நேசிக்கப் பட்ட ஒரு நண்பனே இந்த இரவிலே தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான். தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படுவது உறுதி என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் மரணத்துக்கோ, வேறே ஒரு சிறு தண்டனை அடைவதற்குரிய ஒரு குற்றமும் செய்யவில்லை. என்றாலும் அடுத்த நாள் மாலைக்குள் அவர் மரணத்தை ருசி பார்ப்பது உறுதி. சரீரத்தில் ஏற்படும் வேதனையின் உச்சக் கட்டத்தை அனுபவிக்கப் போகிறார் என்பது திண்ணம் அதை நினைத்துப் பார்த்து உள்ளத்தில் வேதனைப் பெரு மூச்சோடு பிதாவை நோக்கி மன்றாட மண்டியிடுகிறார்.

முதலாவது அவர் தம்முடைய நிலையைக் குறித்து மன்றாடுகிறார். பிதா தனக்கு ஒப்படைத்த பணியினை வெற்றிகரமாக முடித்து விட்டு தான் வந்த நோக்கத்தை நிறைவு செய்துவிட்டபடியால் ஆரம்பத்தில் அவருக்கு இருந்த மகிமையை திரும்பவும் தர வேண்டுமென்று இறைஞ்சு கிறார். (யோவான் 17 : 1 - 5) அதன் பின்னர் அவரோடு கூட அமர்ந் திருந்த பன்னிரண்டு சீடர்களுக்காக மன்றாடுகிறார். (யோவான் 17 : 6 - 9) அவர்கள் உலகத்துக்குள்ளே அனுப்பப்படும்போது அவர்களோடே இருந்து சத்தியத்தை எடுத்துச் சொல்ல அவர்களை பலப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

தனக்காகவும், தன்னோடு உண்டு உறங்கி, தன்னோடு கூடப் பணியாற்றிய சீடர்களுக்காகவும் மன்றாடினதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மரணம் அவரைத் துரத்திக் கொண்டு வரும் அந்த பயங்கரமான சூழ்நிலையில் உனக்காகவும், எனக்காகவும் கவலைப்பட்டு மன்றாடுகிறாரே அது நமக்கு ஆச்சரியமாக இல்லையா? ஏன் அப்படிக் கவலைப்பட்டார்? அவர் நம்மீது கொண்டிருந்த கரிசனையினால் அல்லவா? சொல்லப்போனால் அந்த அன்புதானே அவரைப்

பூலோகத்துக்கு கொண்டு வந்தது. மரண பயம் ஒருவருடைய நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் வேளையில் அவர் யாரைக் குறித்துக் கவலைப்படுவார்? தாம் நேசிக்கிற மனைவி பிள்ளைகள் நண்பர்களைத் தானே ஆனால் நம்முடைய அருமை இரட்சகர், பாவிகளின் நண்பன் நாம் இன்னும் பாவிகளாக, தேவனுக்குச் சத்துருக்களாக இருந்த போதே அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். நண்பனே, அந்த மாசற்ற, தூய அன்புக்குக் கைமாறாக நாம் என்ன செய்கிறோம்? நேசிப்பதற்கு அருகதையற்ற நிலையில் பாவத்தில் உழன்று கொண்டிருந்த நம்மை நினைத்து மரிக்கும் தருவாயில் மறவாமல் நமக்காக மன்றாடி தம்முடைய அன்பை, கரிசனையை வெளிக்காட்டினாரே அதற்கு நானும் நீங்களும் என்ன செய்யப் போகிறோம்?

நம்மை நேசிக்கிற ஒருவர் மரிக்கும் தருவாயில் ஒரு காரியத்தை நம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நன்றியுள்ளவர்களானால் அதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டாமா? அவர் அவ்வளவு வேதனைக்கு மத்தியில் நம்மீது காட்டின பரிவை அலட்சியம் செய்வது சரியா? தயவு செய்து அவர் நமக்காக மன்றாடின காரியங்களைக் கவனியுங்கள். அந்த எளிய மேன்மாடியில் உள்ள மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த தேவாட்டுக் குட்டியின் வேதனை நிறைந்த மன்றாட்டை உற்றுக் கேளுங்கள்.

"நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்வதுமல்லாமல் இவர் களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்கிறார்" (யோவான் 17:20–22) அதாவது அப்போஸ் தலர்களுடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளான அனைத்து பேரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார். உலகத்தின் எந்த மூலை முடுக்குகளில் பட்டி, தொட்டிகளில் இயேசுவை இரட்கராக ஏற்றுக் கொண்ட மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். "அவர் மன்றாடுகிற ஒருமைப்பாடு எப்படியிருக்க வேண்டும்?" பல காலகட்டங் களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இந்த ஒருமைப்பாட்டைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர். சிலர், செயல், எண்ணம் ஆகியவைகள் ஒன்றாயிருக்க வேண்டும் என்றனர். வேறு சிலர், இயேசு இரட்சிக்கிறார் மற்றபடி அவரவர் வழிகளிலே நாம் நிற்போம் இதில் மட்டும் நாம் ஒரு மனம் உள்ளவர்களாக இருந்தால் போதும் என்றனர். வேறு சிலர்

ஒருவருடைய விசுவாசமும் வாழ்க்கையும் எப்படியிருந்த போதிலும் மனிதகுலம் யாவும் படைப்பில் ஒன்று தான் என்றனர். இப்படி பல மாதிரியாக கருத்துக் கூறும் மனிதர்களை விட்டுவிட்டு, நாம் மறுபடியும் அந்த எளிய மேல்மாடிக்கு நேராக நம் கண்களை ஏறெடுத்து, காதுகளைத் தீட்டி, நம்முடைய அருமை இரட்சகர் இந்த ஒருமைப்பாடு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார் என்று கவனிப்போம். "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்" என்கிறாரே! மறுபடியும் கவனமாய்க் கேளுங்கள்: அவரும் பிதாவும் எப்படி ஒன்றாயிருக்கிறார்களோ அப்படி உலகெங்கிலும் உள்ள விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் என்பது தான் அவர் மன்றாட்டு "தேவனும் இயேசும் எப்படி ஒன்றாயிருக்கிறார்கள்" தேவனும் இயேசுவும் தெய்வீகத் தன்மையில் ஒன்றாக இருக்கிறார்கள். இயேசு பிதாவினுடைய சித்தத்துக்கு மாறாக எதையும் செய்யாமல், பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன் என்கிறார். தேவன் எதைப் பேசச் சொன்னாரோ அதையே பேசினார். சுருங்கக் கூறின் இயேசுவின் உணவே பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவது தான் என்கிறார் (யோவான் 4 : 34) தேவன், என்ன செய்யப்பட வேண்டும் என்று விரும்பினாரோ அதை நிறைவேற்றி வைப்பதுதான் இயேசுவின் பணி யெகோவா தேவன் எதைச் சொன்னாரோ அதையே இயேசுவும் சொல்கிறார். யெகோவா என்ன நினைக்கிறாரோ அதையே இயேசுவும் நினைக்கிறார். அவர்கள் இருவரும் வாக்கிலும், சிந்தனையிலும், செயலிலும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுள் எவ்வித வேறுபாடும் இல்லை. இதை "தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" என்று வர்ணிக்கிறார் பவுல் (கொலோ 2 : 9).

மேல் அறையில் இயேசு ஜெபித்த உருக்கமான ஜெபத்துக்கும் தற்காலத்தில் வாழுகின்ற கிறிஸ்தவ மக்களிடையே காணப்படுகிற ஒற்றுமையின்மை மற்றும் முரண்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள்: தம்மைப் போலவும், பிதாவைப் போலவும் ஒன்றாக இருக்க விசுவாசிகள் அனைவருக்கும் ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மரணத்தைச் சந்தித்த வேளையிலும் பிதாவிடம் மன்றாடினார். ஆனால் இங்கே விசுவாசிகள் பல கூறுகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் இணக்கமில்லாமல் செயல்படுவதோடு மட்டுமில்லாமல் முரண்பாடாகவும் செயல்படுகின்ற கொடுமையை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவருடைய உருக்கமான ஜெபம் கேட்கப்படாமலும், அவருடைய மரண வாக்குமூலம் மதிக்கப்படாமலும் இருக்கிற நிலையைக் காணும் ஒரு உண்மை கிறிஸ்தவன் துக்கப்படாமல் இருக்கமுடியாது.

அந்த ஒருமைப்பாட்டை அவ்வளவு வலியுறுத்தி உருக்கத்தோடு மன்றாடின காரணத்தை அவர் வாய்மொழியாகவே கேளுங்கள். அவரை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருந்தால்தான் பிதா தான் அவரை அனுப்பினார். என்றும், அவரே தானாக வந்து தனக்கு ஒரு உயர்ந்த நிலையைத் தேடவில்லை என்றும், உலகமக்கள் நம்புவர் என்கிறார். ஆம், சகோதரர்களே, இது உண்மை. அனைத்து விசுவாசிகளும் ஒன்றாக இருந்தால் தான் உலக மக்கள் இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஏதுவுண்டாகும். இப்பொழுது காண்கிற நிலை முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை இகழ்ந்தும், பழித்துக் கூறியும் விரோதிகளைப் போல் நடந்து கொள்கிறோமே. விசுவாசிகளிடம் காணப்படுகிற இந்த இழிநிலைக்கு நாம் செலுத்தி வருகிற அபராதம் மிக மிக அதிகம், பல கோடி ஆத்துமாக்கள், ஒரு ஆத்துமாவே உலகத்திலுள்ள அனைத்தையும் காட்டிலும் விலையுயர்ந்தது என்று வேதம் குறிப்பிடுகிறது. நம்முடைய பிரிவினை வாதமோ பலகோடி மக்கள் கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தடையாயிருக்கிறது. ஏனெனில் நம்முடைய ஒற்றுமை யின்மை உலகறிந்த உண்மை. நாங்களும் கிறிஸ்துவைத் தான் பின்பற்று கிறோம் என்று வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் தங்கள் செயல் களால் மறுதலிக்கிறார்கள். உலகம் இதை உற்று கவனித்துவிட்டு சொல் லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத கிறிஸ்தவம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒதுங்கி ஓடுகிறார்கள்.

நான் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பெற்ற அநேகமாயிரம் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாததற்காக பல காரணங்களைச் சொன் னாலும், கிறிஸ்தவர்களுடைய ஒற்றுமையின்மை, முரண்பாடான உப தேசங்கள், ஆகிய காரணங்களைச் சாக்காக சொல்பவர்களே மிக மிக அதிகம். எனக்கு மிகவும் கவலை தரும் விஷயம் என்னவென்றால் எத்தனையோ காரணங்கள் இருந்தாலும் பிரிவினை வாதம் தான் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உலகம் ஏற்றுக் கொள் ளாததற்கு பெருந்தடையாக இருக்கிறது என்பதுதான். ஆனால் என்ன ஆச்சரியம் அப்படிப்பட்ட பயங்கர விளைவுகளை உண்டாக்குகிற பிரி வினை வாதத்தைப் போதிக்கிற போதகர்கள் கணிசமான மக்கள் கூட்டத்தை தங்கள் நயவசனப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் வஞ்சித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கூறு போட்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் எல்லோரும் அவரை உண்மையாகவே நேசிக்கிறதாக இருந்தால் இந்த இழிநிலையைக் களைந்தெறிவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? சாவு நிச்சயம் என்று திட்டவட்டமாக அறிந்த கர்த்தர் கடைசி நிமிஷத்தில் முகம்

குப்புற விழுந்து பிதாவே, நீரும் நானும் ஒன்றாயிருப்பது போல என்னை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபித்ததை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தோமானால் இந்தப் பிரிவினை வாதத்தை எதிர்த்துப் போராடாமலிருப்போமா!

ஒரு வேளை இந்த ஐக்கியம் சாத்தியமில்லை என்று நினைக்கிறோமா? அப்படி நினைக்கலாகாது. ஒரு நல்ல கிறிஸ்தவன் ஒரு விஷயத்தை அணுகும்போது அவனுடைய அனுபவத்தையோ, வாதத் திறமையோ கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விசுவாசத்தையே அடிப் படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். மாவீரன் கோலியாத்தை வீழ்த்திய சிறு தாவீதை எண்ணிப் பாருங்கள்.

## நாம் மறுபடியும் ஒன்றாயிருப்பது சாத்தியமே

விசுவாசிகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தேவசித்தம். இயேசு அதற்காக ஜெபித்தார். ஆகவே அது நிச்சயம் நடக்கும். தேவன் செயல்படுத்த முடியாத ஒன்றைக் குறித்து கட்டளை கொடுப்பார் என்றால் சிலுவை விருதாகி விடுமே! நாம் இரட்சிக்கப்படும்படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் மரிக்க அனுமதித்துவிட்டு, கடைப் பிடிக்க முடியாத ஒன்றைக் கட்டளையாகக் கொடுப்பாரானால் அவர் நோக்கத்தை அவரே தகர்த்தெறிகிறார். அதாவது சிலுவையை விருதா வாக்குறார் என்றல்லவா பொருள்படும்.

மனிதனுக்கு ஏற்படுகிற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் வேதாகமத்தில் தீர்வு உண்டு. அப்படியானால் கிறிஸ்து மன்றாடி ஜெபித்த ஒருமைப்பாடு சீர்குலைந்து கிடப்பதையும் சரி செய்ய வழி இருக்குமே! பிரிவினை வாதம் இன்று நேற்று முளைத்த பிரச்சனை அல்ல இது ஒரு பழைய நோய். முதல் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாகிய கொரிந்து பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலன் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கி தூய எளிய சுவிசேஷத்தைப் பிரகடனம் பண்ணினார். அதைக் கேட்டு விசுவாசித்த பல கொரிந்தியர்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர் (அப் 18 : 8) இவ்விதமாய் அங்கே ஓர் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் வேறு இடத்துக்கு சுவிசேஷம் அறிவிக்கச் சென்று விட்டார். கொஞ்ச நாட்கள் கழிந்தன அங்கே கொஞ்சம் குழப்பம் என்று பவலடியாருக்குத் தகவல்வந்தது அவைகளில் பிரதானமானது பிரிவினை அவர்கள் ஒன்றாயிருந்த சபையைப்பிளந்து கூறுபோட்டு ஒவ்வொரு கூறுக்கும் ஒரு பெரிய புள்ளியின் பெயரைச்சூட்டி, நான் அவரைச் சார்ந்தவன், நான் இவரைச் சார்ந்தவன் என்று பிரிந்து செயல்பட்டனர் (1கொரி 1 : 10) இதைக் கேட்டு மனமுடைந்த பவுலடியார் அவர்களுக்கு

ஒரு அறிவுரைக் கடிதம் எழுதினார். இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் பவுல் அந்தப் பிரிவினையை அங்கீகரிக்கவில்லை. மாறாகக் கண்டித்தார், கொஞ்சம் மனவேறுபாடு இருந்தால் பிரிந்து செயல்படுவது ஒன்றும் தவறில்லை என்ற மாதிரி பூசிமெழுகவில்லை தனக்குத் தெரிந்த மொழியில் மனதை உருக்கக்கூடிய வார்த்தைகளைப் உபயோகித்து எழுதினதாவது: நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேச வேண்டும் என்று புத்தி சொல்லுகிறேன் என்கிறார் (1கொரி 1 : 10) ஆனால் இன்றைக்குச் சில பேர் எல்லோரும் ஒரே காரியத்தைப் பேசுவது கூடாத காரியம் என்று வாதிடுகின்றனர் நாம் எல்லாரும் ஒன்றாயிருப் பதும் ஆகக்கூடிய காரியம் அல்ல என்கின்றனர். அன்றைய உலகின் பெரிய நகரங்களில் ஒன்று என்று கருதப்பட்டதும் அநேகமாயிரம் விசுவாசிகளைக் கொண்டதுமான அந்த சபைக்கு (அந்த சபையில் சுமார் 60,000 அங்கத்தினர்கள் இருந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது) நீங்கள் நேசிக்கிற நீங்கள் பின்பற்றுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டளையிட்டுச் சொல்லுகிறதாவது! நீங்கள் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்" என்கிறார். இது மனுஷருடைய ஆலோசனையில்லை பரிசுத்த ஆவியான வரின் கட்டளை.

ஆனால் கொரிந்து பட்டணத்து சபை பல கூறுகளாகப் பிரிந்து நின்று செயல்பட்டது புதியவர் ஒருவர் கொரிந்து பட்டணத்துக்குப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம் அவர் அங்குள்ள ஒரு விசுவாசியைப் பார்த்து, நீங்கள், ஒரு விசுவாசியா? அதற்கு ஆம் என்று பதில் வந்தால் மீண்டும் ஒரு கேள்வி தொடரும்: நீங்கள் யாரைப் பின்பற்றுகிற விசுவாசி? அதற்கு அவர் நான் அப்போல்லாவைச் சேர்ந்தவன் அல்லது கேபாவைச் சேர்ந்தவன் அல்லது பவுலைச் சேர்ந்தவன் என்றே பதில் வரும்.

பவுலடியார் இந்த நிலைமையைக் கேட்டு கொரிந்து சபையாரைக் கடிந்துகொண்டு,"கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா, உங்களுக்காகச் சிலுவையில் மரித்தார்? பவுல் பெயராலா ஞானாஸ்நானம் பெற்றீர்கள்?" என்று சாடுகிறார். பவுல் ஏன் அவ்வளவு கடுமையாக பிரிவினை வாதிகளைக் கடிந்து கொள்கிறார்? ஒருமைப்பாட்டை உருவாக்க முடியாது என்று நினைத்துக் கொண்டு அவர்களைக் குறை கூறாமல் விட்டிருக் கலாமே ஏன் அப்படி விடவில்லை? அவர்களுடைய பின்னணி வித்தி யாசமானது அவர்கள் சிந்தனையோட்டம் வித்தியாசமானது. ஆகவே: அவரவர்கள் விருப்பப்படி விசுவாசிகள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று அவர் ஏன் விட்டுவிடவில்லை?

**பவுல் பிரிவினையைக் கண்டிப்பதற்கு ஏவப்பட்டதற்கான காரணத்தை விளக்குகிறார்.**

நீங்கள் இன்னும் மாம்ச சிந்தையுள்ளவர்களாக இருக்கிறீர்கள் (1கொரி 3 : 3) மாம்ச சிந்தை என்றால் உலகியல் கோட்பாடு அதாவது உலகுக்கு அடுத்த காரியங்களில் நாட்டம் ஆவிக்குரிய சிந்தனைக்கு விரோதமான போக்கு கொரிந்து சபையில் உள்ள விசுவாசிகள் மாமிச சிந்தையுடையவர்கள். தேவநீதிக்குப் பயப்பட்டு நடக்கிறவர்கள் அல்ல, அவர்களுக்குள்ளே பொறாமையும், விரோதங்களும் பிரிவினைகளும், காணப்பட்டது. (1 கொரி 3 : 3-6) ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவன் என்கிறான். இன்னொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்கிறான். எங்கே. விசுவாசிகள் தங்களை வித்தியாசமான பெயர்களால் அழைத்துக் கொண்டு நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் என்று சொல்கிறார்களோ அங்கே ஆவியின் சிந்தையோ நீதியோ இருக்க முடியாது. மாம்ச சிந்தை, உலகியல் ஈடுபாடுகள் இவைகள் தான் இருக்கும்.

கர்த்தரை விசுவாசிக்கிற மக்கள் பவுல் அப்போஸ்தலன் மூலமாய் பேசுகிற பரிசுத்த ஆவிக்குச் செவி கொடுக்கவேண்டும். இரண்டு விசுவாசி களோ அல்லது இரண்டு லட்சம் விசுவாசிகளோ எண்ணிக்கையைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் மத்தியில் பிரிவினை காணப்பட்டால் அங்கே பாவம் சம்பந்தப்பட்டிருக்கிறது. அங்கே மாமிச சிந்தை ஆதிக்கம் செலுத்துகிறது. பாவம் ஒருவர் மீதோ அல்லது அவரை எதிர்க்கிற இன்னொருவர் மீதோ இருக்கலாம் அல்லது இருவர் பேரிலும் கூட இருக்கலாம். ஆனால் பாவம் இருப்பது நிச்சயம்.

**இந்த பாவத்தை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?**

விசுவாசிகளுக்கிடையே பிரிவினை ஏற்படுவதற்கு மூலகாரணம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுவதாகும். ஆகையால் பிரிவினை நோய் அகற்றப்பட வேண்டுமானால் வேதாகமத்தில் பரிசுத்த மனிதர்கள் பரி சுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதி வைத்திருக்கிற உபதேசச் சட்டங் களுக்கு மிஞ்சி மாந்த அறிவைக் கலப்படம் செய்துவிடாமல் விழிப்பாக இருக்க வேண்டும். கொரிந்து சபையில் விசேஷித்த வரம் பெற்ற விசுவாசிகள் கூட இருந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் கூட சபைக்கு ஏதாவது செய்தி சொல்லுவார்களானால் அது எழுதப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இசைவாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்கிறார். தற்காலத்தில் அநேக பிரசங்கிமார்கள் எழும்பி நான் வரம் பெற்றவன். பரிசுத்த ஆவியானவரோடு எனக்கு நேரடித் தொடர்பு இருக்கிறது. அவர் எனக்கு அவ்வப்பொழுது காரியங்களை வெளிப்படுத்துகிறார் என்றும் இன்னும் கற்பனை செய்து பார்க்க முடியாத சங்கதிகளையும், உபதேசங்களையும் முன்னுக்குப் பின் முரணாகச்

சொல்லுகிறார்கள்; அவர்கள் தங்கள் கூற்றை மெய்ப்பிப்பதற்காக சில அற்புத அடையாளங்களையும் செய்வதாக விளம்பரப்படுத்துகிறார்கள். இது ஆவியானவருடைய அங்கீகாரம் பெற்றதா? விசுவாசிகளையெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென உருக்கமாய் வேண்டிக் கொண்ட ஆவியானவர் இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக காரியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பாரா? அப்படியானால் (வெளி 22 : 18, 19) என்ன பொருள்? கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது என்கிறாரே யாக்கோபு பூரணப்பிரமாணம் என்கிறாரே: யாக் 1 :25. ஒருவன் எவ்வளவு பெரிய மனிதனாக - வானத்திலிருந்து வந்த தூதனாக இருந்தாலும் சரி, வித்தியாசமான போதனைகளைக் கொண்டு வருவானானால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அப்போஸ்தலன் பவுலும், யோவானும் நம்மை எச்சரிக்கிறதைக் கேளுங்கள். (கலா 1 : 6 - 9; II யோவான் 9, 11).

நாம் எழுதப்பட்டிருக்கிற வார்த்தையின்படி நடந்தால் ஒருவருக்கொருவர் பெருமை பாராட்டமாட்டோம். இது ஓர் அற்புதமான உண்மை. நம் அனைவருக்கும் வேதம் கூறுகிற அறிவுரை. பவுலும் அப்பொல்லோவும் இதற்கு சிறந்த முன் மாதிரிகள் எங்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் பவுல். (I கொரி 4 : 6) நானும் நீங்களும் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நாமும் அதைப் பின்பற்றுவோம். எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை தெளிந்த மனதோடு வாசித்து, நம்முடைய பாரம்பரியமோ, சுற்றுப்புற சூழல்களோ நம்மை மோசம் போக்கிவிட அனுமதியாமல் ஒரே காரியத்தை நம்புவோம் ஒரே காரியத்தைப் பேசுவோம். ஏனெனில் சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலனாயிருக்கிறது. அது முதல் நூற்றாண்டில் அநேக ஆத்துமாக்களை இரட்சித்து அன்றைய நாகரீக உலகம் அனைத்திலும் பரவிக் கிரியை செய்தது என்றால் இன்றைக்கு மட்டும் ஏன் முடியாது? புதிய வெளிப்பாட்டுக்கும், விதவிதமான கொள்கைக் குழப்பங்களுக்கும் அவசியம் ஏன்? சிந்திப்பீர்! இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் வேதாகமம் ஒன்றையே பின்பற்ற வேண்டும். எழுதப்பட்டிருக்கிற வசனத்தின் வெளிச்சத்தில் நாம் நடந்தால் வேற்றுமைக்கு இடம் ஏது? அதைத் தானே பேதுருவும் வற்புறுத்துகிறார். "ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்" (I பேது 4:11) ஆகவே நண்பர்களே! மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிப்பவர்களை நிராகரித்து விட்டு வேதாகமம் பேசுகிற இடத்திலே பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்திலே நாமும் மௌனமாக இருப்போம். அதுவே ஒற்றுமைக்கு ஒரே வழி.

# கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்!

"நீங்களோ 'ரபீ' என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரர்களா யிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லா திருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக் கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒரு வரே உங்களுக்குக் குருவாக இருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக் கிறவன். உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" என்று இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்கு அறிவுரை கூறினார். (மத் 23:8-11).

ஆனால் நாம் இன்று காண்பது என்ன? இயேசுவானவர் எவை களை வேண்டாம் என்று தடை விதித்தாரோ அவைகளை நாங்களும் அவரைப் பின்பற்றுகிறோம் என்று கூறுகிற மக்களே அவைகளை மீறிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறதைப் பார்க்கிறோம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அவரை வாழ்க்கையால் மறுதலிக்கிற இந்த மனிதர்கள் அது பற்றி வருத்தப்படவாவது செய்கிறார் களா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது.

யூத மார்க்கத்தில் உயர்வு தாழ்வுகள், ஒழுங்கு முறைகள், வகுப்பு வித்தியாசங்கள் இருந்தன. ஆசாரியர், லேவியர், சாதாரண மக்கள் என்ற பாகுபாடுகள் இருந்தன. அதே போன்று மனிதர்களால் தோற்றுவிக்கப் பட்ட சமயங்களிலும் ஆசாரியத்துவ முறை (குருக்கள்) சாதாரண மக்கள் என்ற பாகுபாடு நிலவுகிறது.

மனிதர்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும் ஆசைப்படுகிற இயல்புகளை உடையவர்கள். தங்களுடனே வாழும் சக மனிதர்களிட மிருந்து மாலை மரியாதைகளை எதிர்பார்க்கின்றனர். அது நமக்குப் புரிகிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற கூட்டத்தாரும், கிறிஸ்து வேண்டாம் என்று தள்ளின இவ்வேற்றுமை உணர்வுகளை ஊக்குவிக்கும் முறைகளைக் கூசாமல் பின்பற்றி, உலகப் பிரகாரமாக ஒரு தலைவர், ஒரு தலைமை ஸ்தலம், குருமார்களுக் குள்ளேயே ஏற்றத்தாழ்வு போன்றவைகளை உண்டாக்கி தலைவராயிருப்

பவர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் பணிந்து நடக்குமாறு செய்து திருப்தியடைகின்றனர். இவைகள் மனிதர்களைப் பிரித்துவைத்து, சமத்துவ உணர்வைக் கொல்லுகின்றன. வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒருவரை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பித்துக் காட்டுகின்றன.

இயேசுபெருமான் தானே முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி, மக்களுக்கு வகுத்தருளியுள்ள முழு நிறைவான நலம் பயக்கும் சமத்துவக் கோட்பாட்டிற்கும், மனிதத் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஒரு மனிதனை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பிக்கிற சமய சித்தாந்தக் கோட்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பு நோக்கிப் பாருங்கள். இயேசுவின் சிந்தனையோட்டத்திற்கும், குறிக்கோள் இலக்கணத்திற்கும் இவைகள் எல்லாம் எவ்வளவு முரணானவைகள் என்பது எளிதில் நமக்கு விளங்கும்.

கிறிஸ்தவ சமுதாயம் என்பது ஒரு குடும்பம். அதிலே அடிமைகளும் ஆண்டான்களும் இல்லை. சிறப்பு வணக்கத்துக்குரியவர்களும் இல்லை. மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்தி ஆளுவதற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை. கடவுளின் நேரடி அன்பின் கீழும், பராமரிப்பின் கீழும் எல்லா மனிதர்களும் சம உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம்.

கடவுள் முன்னிலையில் ஒருவர் மற்றவர்களை விடப் பெரியவர் அல்லர். கடவுளின் கிருபை, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பெறுவதிலும் மனிதர்கள் ஒருவரைவிட மற்றொருவர் சிறப்புச் சலுகை பெற்றவர் அல்லர். கிறிஸ்தவ உறவு முறையிலும் ஒருவர் மற்றவரைவிட பெரியவராக இருக்க இடமில்லை; இருக்க விரும்பவும் கூடாது. ஊழியம் செய்வதில் வேண்டுமானால் ஒருவர் மற்றவரைவிட அதிகமாக ஊழியம் செய்யலாம்; ஊழியத்திலே ஒருவர் பெரியவராக இருக்கலாம்.

எல்லோரும் மூத்த சகோதரராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம். அவர் மூலமாய் பிதாவினிடத்தில் சேருவதற்கு எல்லா மனிதருக்கும் சம உரிமை உண்டு. இயேசு கிறிஸ்துவே நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியமாயிருக்கிறவர்' (எபி 3 : 1) அவருக்குக் கீழ் எல்லோரும் சம அந்தஸ்து உள்ள ஆசாரியர்களே. (1 பேதுரு 2 : 9: 5:1) எந்த மனிதனுக்கும் தன் சகோதரனுக்கும் கடவுளின் சிங்காசனத்துக்கும் மத்தியில் நின்று தன் சகோதரனுக்கு ஒர் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருவதற்கோ அல்லது அதனை மறுப்பதற்கோ அதிகாரமும் இல்லை; உரிமையுமில்லை. ஆவிக்குரிய எல்லா வாய்ப்புகளும் ஆசீர்வாதங்களும் குடும்பத்தலைவரின் அதிகாரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும், அவர் அளவிலேயே அவருக்குத் திறந்துவிடப்பட்டுள்ள 'புதியதும் உயிருள்ளது

மான வழியின் மூலம் அவரிடம் செல்வதற்கு கட்டுப்பாடில்லாத உரிமையுண்டு'. (எபி 10 : 19-23).

கிறிஸ்துவுக்குள்ளான தன் சகோதரர்களுக்கும், கடவுளின் சிங்காசனத்திற்கும் இடையில் எந்த ஒரு மனிதனும் தன்னை நிறுத்திக் கொண்டு தன் மூலமாக கடவுளிடம் தன் சகோதரர்களுக்கு நன்மை பெற்றுத் தர முயல்வது இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு முரணானது. கடவுளின் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ரக மனிதர்கள் தங்களைத் தாங்களே மொத்த ஏஜண்டுகளாக நியமித்துக் கொள்வது எவ்வளவு நாகரீகமற்ற செயல்! கிறிஸ்து தமது அனைத்துச் சகோதரர்களும் பெற்று அனுபவிக்குமாறு தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி அருளிச் செய்துள்ள விலை மதிப்பிட முடியாத உரிமைகளையும், வாய்ப்புகளையும் இடைத்தரகர் போன்ற இந்தப் போலி மனிதர்கள் தம் கையில் எடுத்துக்கொண்டு விலை கூறுவதற்கும், விநியோகிப்பதற்கும் அனுமதிப்பது எவ்வளவு அறியாமை!

'நீங்கள் எல்லோரும் சகோதரர்களே'. இதுவே கிறிஸ்து நமக்கு அளித்துள்ள உரிமைப் பத்திரம்: இக்கிறிஸ்தவ ஜனநாயகம் எல்லா விதத்திலும் காப்பாற்றப்பட வேண்டும். சகோதரர்களுக்குள்ளே உயர்வு, தாழ்வு, வேற்றுமைகளைக் கற்பிக்கும் எந்த முயற்சியும் தகர்த்தெறியப் படவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் ஒரே தலைவராகிய கிறிஸ்து வழங்கின பொருள் செறிந்ததும், முழுமையும், எளிமையும் நிறைந்த உரிமைகள், வாய்ப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். இயேசுவே வேண்டாம் என்று ஒதுக்கிய ஆசாரியத்துவ முறையைப் புகுத்தி மெய்க் கிறிஸ்துவத்தின் தூய்மையை மாசுபடுத்தும் எவ்வித முயற்சியையும் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்தால் அன்றோ ஒரு சில சகோதரர்களை 'ரபீ' என்றும் 'பிதா' என்றும் 'போதகர்' என்றும் அழைக்குமாறு கட்டாயப்படுத்துகிறார்கள். இவர்களில் பெரியவர்களாயிருப்பவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பதிலாக தங்களுக்கு ஊழியம் செய்ய மற்றவர்களை நிர்பந்திக்கிறார்கள்.

இத் தொடர் கொடுமைகளை எதிர்த்துக் கொதித்தெழுந்த சில நல்லவர்களின் முயற்சியால் இக் கோணலாட்சி முறைகள் அவ்வப் பொழுது சென்றபின் மீண்டும் சாத்தான் அவர்களை வஞ்சித்து விடுவான். அந்தப் பழைய கோணலாட்சி வேறு ரூபத்தில் துளிர்விடும். மீண்டும் குழப்பம். புதிய பெயரில் ஆதிக்கம் வளரும். கள்ளப் போதகங்கள் உள் நுழையும்.

சகோதரர்களே! இருபதாம் நூற்றாண்டு பல சாதனைகளைச் செய்து புகழ் பெற்று விளங்குகிறது. மார்க்க விஷயத்திலும் ஒரு நல்ல முயற்சியை

நாம் ஏன் தொடங்கக்கூடாது? நாம் செய்யவேண்டியது அப்படியொன்றும் பெரிய புரட்சியில்லை; புதுமையுமில்லை: ஏற்கனவே பலர் நமக்கு முன்னோடிகளாக நடந்து காட்டிய பாதையில் நடைபோட வேண்டியது தான். 'மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்த பெரோயா பட்டணத்தாரைப் போல' (அப் 17 : 11) வேதாகமத்தைக் கவனமாய் ஜெப சிந்தனையுடன் படித்து கிறிஸ்துவின் போதனைகளைக் கீறாமல், கிழியாமல், கூட்டாமல், குறைக்காமல் பின்பற்றுவோம்! எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, எவ்வளவு உயர்மட்டக் குழுவாயிருந்தாலும் சரி, வேதாகம அடிப்படை, ஆதாரம், அங்கீகாரம் இல்லாமல் போடும் எந்தத் தீர்மானத்தையும், உத்தரவுகளையும் புறக்கணிப்போம்.

நினைவிருக்கட்டும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் உள்ள ஒரே தலைவர் இயேசுகிறிஸ்து. மத் 28:18. அவர் இயற்றிய சட்டங்களை, அவர் போதித்த உயர் நெறிகளை, மாற்றவும், கூட்டவும் குறைக்கவும் எந்த ஒரு மனிதனுக்கும், குழுவுக்கும் அதிகாரமும், உரிமையுமில்லை.

## ஞானஸ்நானத்தின் நோக்கம்

| | |
|---|---|
| 1. பாவங்கள் கழுவப்பட | (அப். 2:38, 22:16) |
| 2. கிறிஸ்துவுக்குள்ளாக | (கலா. 3:27) |
| 3. கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள | (கலா. 3:27) |
| 4. சபைக்குள்ளாக | (அப். 2:47, I கொரி. 12:13) |
| 5. புதிய ஜீவனை துவங்க | (ரோம 6: 3-5) |
| 6. பழைய மனுஷனை களைந்துபோட | (ரோம. 6:3-5) |
| 7. இரட்சிக்கப்பட | (1 பேது. 3:21) |
| 8. பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற | (அப். 2:38, ரோம. 8:9, 11) |
| 9. கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்பந்தப்பட | (ரோம 5:9) |
| 10. எல்லா நீதியையும் நிறைவேற்ற | (மத். 3:15) |

# உன்னை நீயே எண்ணிப்பார்!

தேவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களைக் காட்டிலும் மனிதனே மிகச் சிறந்தவன். அவனைப் படைப்பின் சிகரம் என்றே கூறலாம். ஏனெனில் அவன் தேவ சாயலிலே படைக்கப்பட்டவன். அவனைப் படைக்கும் போது வேறு எந்தப் படைப்புக்கும் செல விட்டிராத சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. அண்டசராசரங்கள் அனைத்தையும் வாய்ச் சொல்லால் படைத்தவர், மனிதனை மட்டும் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார் (ஆதி 2:7). மேலும் படைக்கப் பட்ட அனைத்து உயிர்களையும் ஆண்டு அனுபவிக்கும் அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுத்தார். (ஆதி 1 : 26 - 28).

ஆனால், ஆதி மனிதன் இந்த உண்மைகளை தெரிந்தோ, தெரியாமலோ அசட்டை செய்து, தடம் மாறிக் கெட்டுப் போனான். தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட சிறப்பு நிலையை எண்ணிப் பார்க்கத் தவறியதால், மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இப்பொழுதும் கூட மனிதன் விரும்பினால் தேவ சாயலில் வளர்ந்து ஆசீர்வாதத்தின் உச்சிக்குப் போகலாம். அல்லது பாவத்தின் பலனாகிய படு பாதாளத்தை அடையலாம். இந்தப் பேருண் மையை உணர்ந்து கொள்ளாமல் மனித இனம் இன்றைக்கு அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பரிதாப நிலையை அவனுக்கு எடுத்துக்கூறி எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் அது அதிகமல்ல.

ஆனால் நிலைமை என்ன? வரவர மனித இனம் தன்மேன்மை யையும் சிறப்பு நிலையையும் பற்றிய மதிப்பீட்டில் தொடர்ந்து தவறுகள் செய்வதாகவே தெரிகிறது. ஒருபுறம், மனிதனுடைய ஆற்றலையும் வேலை செய்யும் திறனையும், பெருகி வரும் இயந்திர சாதனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, மனிதனின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் எடை போடுகி றார்கள். ஒரு சிறந்த அறிவியல் நூலை பழைய பேப்பர் காரனிடம் போட்டால் அதன் உயர்வை அவன் அறியமாட்டான். எடைக்குரிய காசு தான் கொடுப்பான். அது போன்றுதான் இதுவும்.

மற்றொருபுறம் வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினால் ஏற்படும் கண்டுபிடிப்புகள், சாதனைகள் ஆகியவைகளை மனதில் கொண்டு,

'மனிதனால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று இறுமாந்து, கடவுளே இல்லை. அதைப் பற்றிய சிந்தனையெல்லாம் வீணர்களின் பொழுதுபோக்கு, மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி மண்ணுலகை விண்ணுலகு ஆக்கலாம். மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நிலை நாட்டலாம் என்று பேசி, மனிதன் மேல் தேவைக்கும் அதிகமான நம்பிக்கை வைத்து அவனைக் கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு மேற்சொன்ன இரண்டு சிந்தனையோட்டங்களுமே அபாயகரமானவை; உண்மைக்குப் புறம்பானவை என்பது விளங்கும்.

அப்படியானால் மனிதனுடைய உண்மை நிலை தான் என்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே. ஒரு பொருளை உருவாக்கியவருக்குத் தான் அதனுடைய உண்மையான மதிப்பும், உயர்வும் மிக நன்றாகத் தெரியும். ஆகவே மனிதனைப் படைத்துப் பராமரித்து பாதுகாத்து வருகிறவர். மனிதனின் உண்மையான தன்மையையும், நிலையையும் பற்றி என்ன கூறுகிறார் என்று கீழ் வரும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்துச் சிந்திப்போம்.

மனிதனுடைய உண்மையான நிலையை விளக்குவதற்கும், அவனுக்கு நம்பிக்கையூட்டி அவனை உற்சாகப்படுத்துவதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்தில் சஞ்சரித்த நாட்களில் இரண்டு முறைகளைப் பயன்படுத்தினார், ஒன்று உபதேசம்: தனக்குக் கிடைத்த வாய்ப்பு, அனைத்தையும், மாந்தருக்கும் படைத்தவராகிய தேவனுக்கும் உள்ள உறவின் இரகசியத்தை எளிய உவமைகளைக் கொண்டு பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறினார். தான் சொல்லுகிற அனைத்தும் உண்மை என்பதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக மனிதரால் செய்யமுடியாத பலவிதமான அற்புத அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் செய்து உறுதிப்படுத்தினார். (யோ 20; 30, 31).

இன்னொன்று : மனிதர்கள் பாவம் செய்யாமல் வாழமுடியும். அப்படிப்பட்ட வாழ்க்கை முறையால்தான் தேவனைப் பிரியப்படுத்த முடியும் என்று அவருடைய தூய்மையான வாழ்க்கை மூலம் வழி காட்டினார்.

மேலும் கிறிஸ்து மனுக்குலத்தின் மீது அபரிதமான அன்பு காட்டினார். (மத் 9 : 36; 14 :14 மாற்கு 1 : 41) ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து மன உருக்கமும், ஏழை எளிய மக்கள் மீது பரிவும் பாசமும் கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகிறது. அந்நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் மக்களை வஞ்சித்து, தங்களுடைய வாழ்க்கை வசதிக்காக, சுய

நலத்துக்காக பாமர மக்களைப் பலிக் கடாக்களாக்கி, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். 'ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கு இல்லையடி' என்ற பாணியில் தாங்கள் உபதேசிக்கிறதை அவர்கள் கடைப்பிடிக்காமல் போலித்தனமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். (மத் 23 : 1 - 2).

மனிதனுடைய உண்மையான மதிப்பை அறிந்திருந்த இயேசுவுக்கு, இது மிகுந்த மனவேதனையைத் தந்தது. வாழ்க்கைப் பெருஞ்சுமையால் தள்ளாடி, கூனிக் குறுகிப் போய் புழுவாய் நெளிந்து கொண்டிருந்த மக்களையும், நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு துன்பத்தில் உழன்று கொண்டிருந்த மக்களையும் அவர் பார்த்தபொழுது, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்கள் கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் கூறி அரவணைத்துக் கொண்டார். அவர்களையும் தேவன் நேசிக்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்த பல விதத்திலும் முயன்றார்.

உலகத்தில் அற்பமாக எண்ணப்படுகிற பறவை இனங்களில் அடைக்கலான் குருவியும் ஒன்று. அப்படிப்பட்ட எளிய உயிர்கள் கூட ஆண்டவருடைய பராமரிப்புக்குத் தப்புவதில்லை. அப்படியிருக்கும் போது, அவருடைய படைப்பின் சிகரமான மனிதனைப் பற்றி அக்கறைப்படமாட்டார் என்று நினைத்து, நம்பிக்கை இழந்து சோர்ந்து போவது எவ்வளவு அறியாமை! மனிதனுடைய உயிர் இருக்கட்டும், அவனுடைய முடிகளில் ஒன்றுகூட அவருடைய உத்தரவு இல்லாமல் கீழே விழாது. ஆகவே மனிதனின் சிறப்பு நிலையைக் குலைத்துப் போடும் எந்த இழி செயலுக்கும் ஆளாகக் கூடாது. அதற்கு விலையாக உன் உடலையே அர்ப்பணிக்க நேர்ந்தாலும் அஞ்சக்கூடாது என்று தைரியம் கொடுக்கிறார். (லூக் 12 : 4 - 7).

மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் படும் பிரயாசமும், அனுகும் முறையும் தேவையில்லாதது. காலையில் பூத்து, மாலையில் வாடிப் போகும் மலர்கள் காடுகளிலும், மலைகளிலும் யாருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இன்றி, கண்ணைக் கவரும் வண்ணங்களில் ஜொலிக்கின்றன. மிகவும் ஆடம்பரப் பிரியரும், வசதிகள் பல படைத்தவருமாகிய சாலமோன் என்னும் அரசனே கூட அவ்வித வண்ணக் கலவை ஆடைகளை அணிந்திருக்கமாட்டான். அப்படியிருக்கும் போது தான் படைத்தவற்றில் சிறந்தவனாகிய மனிதனுக்கு ஏன் செய்யமாட்டார்? அதேபோல் உணவு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் பறவைகளை ஒப்பிட்டுக் காட்டினார். அவைகள் விதைப்பதும் இல்லை. அறுக்கிறதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை. ஆனால் எங்காவது பறவையினம் பட்டினியால் மாண்டு போயிற்று என்ற செய்தி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படியிருக்க, மனிதன் உடைக்காகவும்,

உணவுக்காகவும் தன் ஆத்துமாவை அடகு வைத்து நீதி நேர்மை, அன்பு, இரக்கம் ஆகிய நற்பண்புகளை விற்று, அழிந்து போகிற இந்த உடலைப் பேண வேண்டுமா? என்று கேட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

தேவன் வகுத்துத் தந்திருக்கிற பிரமாணங்களில் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப் பிடித்து வாழ்; அப்பொழுது நீ விரும்புகிற அனைத்தையும் தருவார் என்று ஆன்மாவுக்கும், இறை வழிபாட்டுக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். (மத் 6 : 22-23).

பாதை தடுமாறி எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் அழிவை நோக்கித் துரித பயணம் போய்க் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் மீது தேவன் எவ்வளவு கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை விளக்க ஒரே அதிகாரத்தில் மூன்று உவமைகளைக் கூறி விளக்குகிறார். காணாமற் போன ஆடு, காணாமற் போன வெள்ளிக் காசு, காணாமற் போன மகன் ஆகிய மூன்று உவமைகளிலும், ஒரே ஒரு பாவியின் மனந் திரும்புதல் பரலோகத்தில் எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய காரியம் என்பதை விளக்கி, தேவன் மானிடர் மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பைச் சுட்டிக் காட்டுகிறார். (லூக் 15)

பெரும்பான்மையான மனிதர்களுக்கு, தாங்கள் சரீரமும், ஆன்மாவும் உடைய சிறப்பு ஜீவன்கள் என்கிற காரியம் விளங்குவதில்லை. விளங்கினாலும் அதை அவ்வளவு முக்கியமான விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை. சரீரத்தின் அழிந்து போகிற தன்மையையும், ஆன்மாவின் நிரந்தரமான தன்மையையும் விளக்குவதற்குப் பின்வருமாறு கூறுகிறார். "ஆத்துமாவைக் கொல்ல வல்லவராயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுபவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்து மாவையும் சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10 : 28). மேலும் ஆன்மாவோடு ஒப்பிடும்போது சரீரம் மிக அற்பம். ஆகவே அதனைப் பேணிக் காப்பதற்கு பெரும் பிரயாசம் எடுத்துக் கொண்டு, அதனுடைய விருப்பத்துக்கு அடிமையாகிவிடக் கூடாது என்று விளக்குவதற்கு 'ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல என்கிறார். (லூக் 12 : 15) ஆனால் நடைமுறை தலைகீழாக இருக்கிறது. நிலையற்றதும், அழிந்து போகக் கூடியதுமான யாக்கையைப் பேணிக்கொண்டு, என்றென்றும் நிலைத்து நிற்கிறதான ஆன்மாவை அசட்டை செய்கிற எவ்வளவு மதியீனம்! ஆன்மாவை அசட்டை செய்கிறது எவ்வளவு மதியீனம்! அரிசியைக் குப்பையில் கொட்டிவிட்டு, உமியைப் பத்திரப்படுத்துகிறவனைப் பார்த்து எள்ளி நகையாடுகிறோம். ஆத்துமாவை அடகு வைப்பதற்கு நாம் வெட்கப் படுவதேயில்லை. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து "மதிகேடனே!"

என்று வேதம் விளிக்கிறது. (லூக் 12 : 20). மேலும் இயேசு இப்படிப் பட்டவர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? தன் ஜீவனுக்கு ஈடாக அவன் என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16 : 26).

மேற்சொன்ன காரியங்கள் அனைத்தும் சிந்தித்துப் பார்க்கும் போது, மனிதன் தன்னைப் படைத்த கடவுளை மறந்து, புறக்கணித்து விட்டு, தன் சொந்த வழி நடந்து நிம்மதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடையவும், நித்திய ஜீவனைப் பெறவும் இயலாது. படைத்தவரை மதித்துக் கனம் பண்ணி, அவர் வகுத்துத் தந்துள்ள பிரமாணங்களைப் பற்றிக் கொண்டு அதன்படி வாழ்ந்து வந்தால், இம்மையில் சமாதானமும், மகிழ்ச்சியும் கிட்டும். மறுமையிலும் கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் பாக்கியமும், என்றென்றும் கவலையில்லாத, துன்பம் கலவாத மகிழ்ச்சியான வாழ்வும் வாழலாம் என்ற உண்மை தெளிவாகிறது.

நண்பனே, சகோதரியே! இப்பொழுது நம்முடைய தீர்மானம் என்ன? கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு முழு மனதுடன் கீழ்ப்படிந்து, நீதியாகவும், நேர்மையாகவும், பண்புடனும், அன்புடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்து அவர் நமக்காக வைத்திருக்கும் ஆனந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள இன்றே உறுதி செய்து கொள்ள தேவன் நம்மை ஏவுவாராக!

## கிறிஸ்துவின் மக்கள்

கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட்டவர்கள்

கர்த்தரால் வாங்கப்பட்டவர்கள்

தேவனிடத்தில் ஒப்புரவாக்கப்பட்டவர்கள்

கிறிஸ்துவினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்

மீட்கப்பட்டவர்களின் சங்கம்

# நீங்களே தீர்ப்பளியுங்கள்

தற்காலத்தில் செய்தித்தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது"கட்சியில் பிளவு" கட்சியை உடைக்கக் கோடிக்கணக் கான பணம் கைமாறியது" என்பன போன்ற செய்திகள் தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர் முறையை பயன்படுத்தி, இயேசுகிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (மத் 16 : 18) தம் சரீரமாகிய சபையை சின்னாபின்னப்படுத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறான். அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங் களையும், நபர்களையும் கொண்டே இந்தக் கைங்கரியத்தை இலாவகமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும், சிதைத்தும், நீட்டியும், குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்பமுண்டாக்குகிறார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்கிறோம், நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது. அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறு வதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றவும், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற் கைச் சட்டத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

1. தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மட்டுமே அற்புதமாகப் படைத்தார். ஆனால் அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட்பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கப்பட்டதா? இல்லை தானே! அதேபோல்தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிராமல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

2. பரிசுத்த வேதாகமம் அற்புதமாய் எழுதப்பட்டது, பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினார்கள். (II பேது 1 : 21.) தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள்; தீர்க்கதரிசனம் உரைத் தார்கள். (அப் 2 :4) ஆனால் பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப் பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஏனெனில் தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்திகள் அனைத் தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. (வெளி 22: 18-19; யாக் 1 : 25.) இப்பொழுது நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள் முழுமையாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட்செய்திகளை மக்களுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலர் தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப் பாடுகளை கொடுக்கிறார் என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவ வாக்கு என்னும் சாயத்தைப் பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒருநாள் ஒரு நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் நரிக்கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்குக் கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவது இத்தனை கொம்புகள் எப்படிக் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அனுபவப்பட்ட (?) ஒருவர் நரிப்பல்லுக்குப் பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறான் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப்பார்த்து விட்டு நைசாக நழுவிவிட்டான். இந்தப் புதிய வெளிப்பாட்டுக்காரர்களைப் பார்த்தால் அவனுடைய ஞாபகம் தான் வருகிறது. இவைகளையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே, குறைக்காதே என்றும் (வெளி 22:18,19) வானத்திலிருந்து வந்த தூதனாயினும் சரி, அவன் சபிக்கப்பட்டவன் என்று ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறாரோ? (கலா 1 : 6 - 9).

3. வனாந்தர யாத்திரையின் போது நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னாவை ஆகாரமாகப் புசித்து வந்தார்கள். யாத் 16 : 35. ஆனால் அவர்கள் கானான் தேசத்துக்கு வந்து விவசாயம் செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்றுவிட்டது (யோசுவா 5 : 12) அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறா வடிவில் வந்தார். (யோவான் 1 : 32–34) அவர் தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர்

என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும், ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும் இறங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது விவேக மாகாது.

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத் தத்தங்கள் எனக்கும் மற்றும் இந்நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ்தவர் களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதாகமத்தில் உள்ள அனைத்து உண்மைகளை எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் (யோவா 16 : 13) அவர்களுக்குக் கட்டு வதற்கான அதிகாரமும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரமும் கூட உண்டு. (மத் 18 : 18) தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார் (1 கொரி 12:28) அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்தி பாரங்கள் (எபே 2:20), அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங்களா? இல்லையே. அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப் பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக்கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினி மயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே (அப். 2:3). அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காகக் கொடுத்தார் (மாற்கு 16:20) நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாகக் கூடாது.

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே அது எப்படி?

சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.

II தெசா 2:9-12ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங் களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள் ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் என்று கூறுகிறது. மேலும் வெளி 13:13-ல் 'அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள் என்று கூறுகிறது. மத் 7:22ல் கூட இக் கள்ளத்

தீர்க்கதரிசிகள்' 'உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் 'அக்கிரமச் செய்கைக்காரரே' என்று பட்டம் சூட்டி விரட்டித் துரத்தி விடுவார் என்றும் வாசிக்கிறோம். (II கொரி 11 : 13 - 15) வசனப் பகுதியில் அப்படிப்பட்டவர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களா யிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே, ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்கிறது.

அப்படியானால் அசலையும் போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது? சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. I யோவான் 4 : 1ல் பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றி யிருப்பதனால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று 'சோதித்தறியுங்கள்' என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்தவழி. ஆறாம் வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர்கள் என்றும், தாங்கள் எழுதிவைத்துள்ளவைகள் தேவனுடைய வசனங்கள் என்றும் தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவி கொடுக்கிறான் எனவே இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமாகவும் இல்லை.

அப் 2 : 6, 8-ல் பேசப்படுகிற அந்நிய மொழிகள் உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட மொழி என்று தெரிகிறது. அதை பவுலும் உறுதி செய்கிறார் (I கொரி 14 : 10) ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை என்ற பெயரில் தத்துபித்து என்று உளறிக்கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக்கொண்டு, கூச்சல் போடுகின்றனர் I கொரி 14 : 19-ல் அந்நிய பாஷைகளைப் பேசுவதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுவது சிறந்தது என்று பவுல் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில் பெருமை பாராட்டுகிறார்கள். 1 யோவான் 4 : 6-ன்படி அவர்கள் வஞ்சக ஆவியி

னால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே.

அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே.

அப் 3:2-ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன் யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவியிலேயே முடவன். அவனைப் பேதுருவும், யோவானும், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுகமாக்கினார்கள். அவனும் நடந்து குதித்துக் குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்கால தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா? என்று மக்கள் புரிந்து கொள்ள முடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிசுகளைப் போல் ஆட்டம் போட்டு, கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து வருகிறார்கள். அப்போஸ்தலர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை. (அப். 4 : 16) என்பதை வாசித்துப் பார்த்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும், அப்போஸ்தலர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள் அப் 5 : 6, ஆனால் தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகமடைந்தவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள்; சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல்பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். பல கூட்டங்களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன்; எனக்கு இன்னும் சுகம் கிடைக்கவில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப் பார்த்து, "உனக்கு விசுவாசம் இல்லை, அதனால் சுகம் கிடைக்கவில்லை" என்று பழிபோட்டு விடுவார்கள் அல்லது மெல்லத்தான் சுகம் ஆகும் என்று மழுப்புவார்கள். எங்கள் பாஸ்டருக்கு ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அது வரையிலும் நீ உபவாசம் இருந்து ஜெபம் பண்ணு; சுகம் கிடைத்தால் எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில் கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம் (யோவான் 11 : 39-44). நாங்கள் அப்போஸ்தலர்களைவிட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை, என்று வீராப்புப் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல

மரித்தவர்களை எழுப்புவார்களா? (அப் 20 : 10, 12) கொடிய விஷ ஜந்து தீண்டினாலும் மரிக்காமல் இருப்பார்களா? (அப் 28:3-6) நீர் மேல் நடப்பார்களா? (மத் 14 : 29) மாட்டார்கள். ஏனெனில் அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில் அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறி விட்டது (மாற்கு 16 : 20) இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதை உறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அப்படிப் பட்ட மக்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்றமன்று; அந்த பொல்லாத பிசாசு-தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு அவர்களுடைய கருத்தைக் குருடாக்கிவிட்டான். (II கொரி 4 : 4) அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக் கொள்ளுங்கள் (எபே 1 : 19).

## சபை அல்லாதது

1. சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல.
   (எபே. 3:10,11, ஏசா. 2:1-4)

2. சபை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமானதல்ல
   (மாற் 16:15, 16, மத். 28:18-20)

3. சபை சமூக நிலையை உயர்த்துவதற்கான ஸ்தாபனமல்ல
   (மத். 25:31-46)

4. சபை மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடம் அல்ல
   (அப். 5:11)

5. சபை ஒரு மார்க்க பிரிவினைக் கூட்டமல்ல
   (அப். 20:29, 30, I தீமோ. 4:1-3)

6. சபை தனக்கு சொந்த நியாயப் பிரமாணத்தை அளிக்கக் கூடியதல்ல
   (யாக் 4:12)

# 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்?

பலவிதக் கொள்கைகளும், சித்தாந்தங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொள்கிற இந்த நாட்களில், எவ்விதமான அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்ளாமல் வேதம் கூறுகிற படி 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வது நியாயமான காரியம். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதற்கு நாம் ஏனோ தயங்குகிறோம்.

ஒரு வேளை இன்றைக்குக் கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து நிற்கும் சூழ்நிலையில்'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வது சாத்தியமாக இருக்குமா என்று யோசிக்கிறோமா? பல பாதைகள் ஒன்றையொன்று குறுக்கிட்டு பல பக்கங்களில் பிரிந்து நிற்கும்போது, எத்திசையில் செல்வது என்று தடுமாறுகிற ஒரு வழிப் போக்கனுக்கு எல்லாமே நல்ல பாதை போன்று தான் தோன்றும். போதாதற்கு ஒவ்வொரு பாதையிலும் சிலர் நின்று கொண்டு, "இங்கே வாருங்கள்", "அதோ அதுதான் நேர்வழி" என்று கத்தி அழைத்தால் இன்னும் குழப்பமே ஏற்படும்.

அது போன்ற ஒரு நிலை தான் இன்றைக்குக் கடவுளைத் தேடுகிற மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சிலர் வெறுப்படைந்து, இவைகளில் எதுவுமே சரியில்லை என்று முடிவுக்கு வந்து கடவுளைத் தேடுவதற்கே மனமில்லாமல் ஒதுங்கிக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் "எல்லாமே சரிதான்" என்று எல்லாவற்றிற்கும் தலையசைத்துக் கொண்டு, எந்தவிதமான நோக்கமும், கொள்கையும், குறிக்கோளும் இல்லாமல் காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். வேறு சிலர் நான் எல்லா சபைகளுக்கும் சென்று அவர்களுடைய போதனைகள், ஆராதனை ஒழுங்குகள் அனைத்தையும் கவனிப்பேன், பிறகு எது என் மனதுக்குப் பிடிக்கிறதோ அதில் நான் சேர்ந்து கொள்வேன் என்கின்றனர். எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் இந்த முறை பெரும்பான்மை யோருக்குச் சரி என்று தோன்றலாம்.

ஆனால் நமக்கு இருக்கிற இந்தக் குறுகிய வாழ்நாளில் "நாளொரு கொள்கையும், பொழுதொரு சபையுமாக உதயமாகிக் கொண்டிருக்கிற

அனைத்துச் சபைகளின் உபதேசங்களையும் கோட்பாடுகளையும் சோதித்துப் பார்ப்பது என்பது ஆகிற காரியமா? இப்படிப்பட்டவர்கள் தாங்கள் சந்திக்கிற ஏதாவது ஒரு குழுவினரின் தொழுகைமுறை, மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டு விட்டார்களானால், அப்புறம் அதிலேயே மூழ்கி அதுவே தேவன் தனக்குக் காட்டின சபை என்று கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டு வேறு எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுவார்கள். அவர்களுடைய உபதேசங்கள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்தால் தவறு என்று சுட்டிக் காட்ட முற்பட்டால் கூட அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குத் தங்கள் மனதைக் கல்லாக்கிக் கொள்வார்கள். இது தான் இன்றைக்கு மக்கள் மத்தியில் காணப்படும் பக்தி நிலை, இந்த மனப்பான்மை உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவாது. கிளிஜோஸ்ய முறையில் மெய்யான மார்க்கத்தைக் கண்டு கொள்ள முடியாது. வேதாகமம் கூறுகிறவைகளைப் படித்துப்புரிந்து கொண்டால் தான் சத்திய மார்க்கத்தை அறிந்து கொள்ளமுடியும்.

இது விஷயத்தில் இயேசுவின் அன்பான அழைப்பைக் கேளுங்கள். "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" (மத் 11 : 28, 29) இந்த அழைப்பில் உள்ள உருக்கத்தையும், கரிசனையையும் கவனியுங்கள். வைக்கோல் போருக்குள் கிடக்கிற ஊசியைத் தேடுவது போன்று ஏராளமான மார்க்க பேத முதலாளிகளின் வார்த்தைகளைக் கேட்டுக் குழப்பமடைவதை விட்டு விட்டு "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறேன்" (யோவான் 14 : 6) என்று கூறும் இயேசுவிடம் நேரடியாகச் செல்வது நன்மை தரும். அவர் ஒருவரே உண்மையானவரும், நீதிபரரும் ஆவார். அவருக்குச் சீடர்களாக விரும்பும் அனைவரும் அவரிடம் நேராக வந்து அவரிடத்தில் கற்றுக் கொள்வது சிறந்தது.

இப்படி நாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று நமக்கு இன்னொரு சந்தேகம் எழும்புகிறது. தேவனுடைய வசனத்தின் மூலமாக நான் இயேசுவினிடத்தில் வந்து உண்மை வழியைக் கற்றுக்கொள்ள முடியுமா? எல்லா கூட்டத்தாருமே வேதத்தின் வெளிச்சத்தில் நடப்பதாகத் தானே கூறிக் கொள்கிறார்கள்? ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்கிறார்களே! எவ்வளவோ கற்றறிந்த மேதைகள் எல்லாம் புரிந்து கொள்ள முடியாத தேவ இரகசியங்களைப்

பேதையாகிய நான் புரிந்து கொள்ள முடியுமா? நான் செல்லுகிற பாதை தான் சரி என்று நான் எதை வைத்து உறுதி செய்வது?

நண்பர்களே, நாம் நினைத்துப் பயப்படுகிற அளவுக்கு விஷயம் அவ்வளவு கடினமானதல்ல. ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரியம் கல்வியறிவினால் தீர்மானம் செய்யப்படும் விஷயம் அல்ல, அல்லது மனித அறிவினாலும், திறமையினாலும் முடிவெடுக்கும் விஷயமும் அல்ல. இது விசுவாசத்தையும் மனப்பக்கு வத்தையும் பொறுத்த விஷயம் காற்றையும், கடலின் அலைகளையும் கண்டு பயப்பட்ட பேதுருவின் விசுவாசத்தைப் போன்ற விசுவாசத்தின் மூலமாக அல்ல, (மத் 14) நம்மைப் பெயர் சொல்லி அழைத்த கர்த்தரின் வல்லமையின் பேரிலும், கைவிடாத தன்மையின் பேரிலும் சார்ந்திருக்கும் விசுவாசம், அவரையும் அவருடைய வழிகளையும் உண்மையாய்த் தேடுகிற ஆத்துமாவை அழியவிடார். ஞானிகளுக்கும், கல்விமான் களுக்கும் தான் கர்த்தர் தம்மை வெளிப்படுத்துவார் என்று எண்ணி மயங்கக் கூடாது. (மத் 11 : 25; I கொரி 1:26) ஆவியில் எளிமையுள்ள வர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும், நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்களுக்கும், அவருடைய சித்தத்தைச் செய்கிறவர்களுக்கும், அவருடைய சத்தத்துக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிகிறவர்களுக்கும் கூட செவி கொடுக்கிறார். (மத் 5 : 3- 6; யோவான் 7 : 17 : 10 : 4, 27) இந்த அர்த்தத்தில் தான் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை அழைத்து அவர் களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். அவருடைய நுகத்தை ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள்ள அழைக்கிறார். ஒரு மனிதன் சரியான வழியைக் கண்டு கொள்வதற்கு இது தான் சிறந்த வழி. உங்களுடைய நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து அவரிடத்தில் கற்றுக் கொள்ள முயலுங்கள்.

கல்வியறிவும், திறமையும் அவசியம். அதை வைத்துக் கொண்டு ஆன்மீக காரியங்களில் ஒருவன் மற்றொரு மனிதனுக்கு உதவவே முடியாது என்று நான் வாதிடுவதாக நினைக்க வேண்டாம். ஒரு மனிதன் தன் சக மனிதனுக்குச் செய்யக் கூடிய உண்மையான உதவி கர்த்தருடைய வசனத்துக்கு அவனை வழி நடத்தி, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவ சித்தம் என்ன என்பதைக் கற்றுக் கொடுப்பதாகும்.

ஒவ்வொருவரும் இவ்விதமாய் வழி நடத்தப்படுவார்களானால், இன்றைக்கு செழித்து வளர்ந்து கொண்டிருக்கிற பல சபைகள் என்ற பெயரில் இயங்கி வரும் போலி ஸ்தாபனங்கள் நிலைகுலைந்து அழிந்து போவது திண்ணம். தங்களுடைய வார்த்தை ஜாலங்களால் படித்தவர் களையும் பாமர மக்களையும் ஒரு சேர மயக்கித் தவறான பாதையில்

நடத்திச் செல்லும் மார்க்க பேத முதலாளிகள், தத்துவம் பேசும் வேதாந்திகள், வரம் பெற்ற மகான்கள், சத்தியத்தைச் சுற்றித் தங்கள் சித்தாந்த வலைகளைப் பின்னி பேதைகளை ஈர்க்கிற கலையில் கை தேர்ந்தவர்கள் ஆகியோர் தங்களுடைய போலி சரக்குகளுக்கு மார்க்கெட் இல்லாமல் தடுமாறுவார்கள். உண்மை ஓங்கும், ஒற்றுமை வளரும்.

ஒவ்வொரு மனிதனும் தாங்களாகவே தங்கள் வேதாகமத்தை வாசிக்க முற்பட்டால் ஆளுக்கொரு விதமான அபிப்பிராயம் தோன்றி மேலும் பிரிவினைகளும் குழப்பங்களும் அதிகம் ஆகும் என்று ஒரு சாரார் வாதிடக் கூடும். ஆனால் அது தேவையற்ற பயம், தேவனுடைய வார்த்தையை விட்டு விலகியும், கூட்டியும், குறைத்தும் மாந்த அறிவைப் பயன்படுத்தித் தவறுதலாக வியாக்கியானம் செய்வதால் தான் பிரிவினை உண்டாகிறதேயொழிய தேவனுடைய வசனத்தை வாசித்து தியானிப் பதினால் அல்ல.

மேலும் பிரிவினைகளும், குழப்பங்களும் முளைத்து செழித்து வளர்வது எப்பொழுது என்றால் விசுவாசிகள் என்பவர்கள் தங்கள் போதகர்களையும் குருமார்களையும் கண்மூடித்தனமாய் பின்பற்று வதினாலும் பரிசுத்த வேதாகமத்தைப் பகுத்துப் படிக்காததினாலும் தான். விசுவாசிகள் திறந்த மனதுடன் இயேசுவிடம் வந்து கற்றுக் கொள்வார் களானால் சத்தியத்தைப் பற்றி ஒருமித்த கருத்து ஏற்பட்டு ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு ஒத்த மனமுடையவர்களாய் ஒன்றாக இருப்பார்கள்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும், மார்க்கங்களிலும் சில உண்மை கள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் மெய்க் கிறிஸ்தவ மார்க்கமே அனைத்து உண்மைகளையும் உடையதாக இருக் கிறது என்பதை நாம் அச்சடித்துக் கூறுகிறோம். "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்கிறார் பவுல் (கொலோ 2 : 3). ஆகவே ஒரு கிறிஸ்தவன் வேதாகமத்தை எடுத்து அனுதினமும் வாசித்து காரியங்கள் இப்படியிருக் கிறதா என்று ஆய்ந்து பார்க்கிற மனப்பக்குவம் அடைய வேண்டும். அப்பொழுது சத்தியம் அவனை விடுதலையாக்கும் (யோவான் 8:32). அப்பொழுது மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குச் சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதில்லை அவன் எந்த ஒரு மனிதனையும் 'ரபீ' என்று அழைக்க வேண்டியதில்லை. பூலோகத்தில் "தந்தை" என்ற பட்டம் உள்ளவர்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை, கிறிஸ்து ஒருவரே குருவும் ஆசானுமாக இருக்கிறார். தேவனே பிதாவாக இருக்கிறார். (மத் 23 : 8 -10) மத உலகத்தை அடிமை கொண்டிருக்கும்

மனிதப் பாரம்பரியங்களும், கொள்கை கோட்பாடுகளும் அவனை அனுகுவதில்லை. இந்த அடைமொழிகளை உதறித் தள்ளி விடுகிற தேவனுடைய பிள்ளைகள் வேதாகமத்தைத் திறந்த மனதுடன், மாந்த அறிவினால் பின்னப்பட்ட அனைத்துத் தவறான உபதேசங்களையும் அறுத்துக் கொண்டு புதிய சிந்தையோடு கிறிஸ்துவின் தூய உபதேசத் தைப் பருகி மகிழ்கிறார்கள். எதுவும் எழுதப்படாத - மாந்த அறிவால் கறைப்படாத சுத்தமான இதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக் கிறார்கள். தேவன் கட்டாத இடத்தில் கட்டும் சித்து விளையாட்டுக் காரர்கள் கட்டுத்திட்டங்கள் என்ற மூலாம் பூசி, தங்கள் கள்ள போதகங்களை இதமாக உள் நுழைத்து தந்திரமாய்ப் பிடிக்க வகை தேடும் பொல்லாதவர்களின் சூழ்ச்சி வலைக்குச் சிக்கமாட்டார்கள். அவர்களுடைய இச்சகப் பேச்சில் மயங்கி, அறிவிழந்து, பேதைகளாக மாட்டார்கள். மஞ்சள் கண்ணாடி அணிந்தவர்களைப் போல தேவனுடைய செம்மையும், எளிமையுமான வசனங்களுக்கு விதவிதமான அர்த்தங்களைக் கற்பனை செய்து தங்கள் எண்ணங்களையும் சிந்தனையோட்டங்களையும் களங்கப்படுத்திக் கொள்ளமாட்டார்கள். இந்தக் கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு கொலோசே பட்டணத்து விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் அறிவுரை கூறுவதை வாசியுங்கள்.

## "ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடி இதைச் சொல்லுகிறேன்"

"ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர் மேலே கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக! லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத் தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல". (கொலோ 2 : 4, 6 - 8).

### பிரச்சனையின் உண்மைநிலை

ஒருவன், மார்க்க சம்பந்தமான விஷயங்களில் தனக்கு இஷ்ட மானதைத் தெரிந்து கொள்ளலாம். அது அவரவருடைய ருசிக்கும், அபிப்பிராயத்துக்கும் அடுத்த காரியம் என்ற நிலையிருந்தால் நாம் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஒருவன் தனக்கு விருப்பமான ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு

அதை உண்மையாய்க் கடைபிடித்து வந்தால் அதனால் கிடைக்கும் நன்மைகள் போதும். ஆனால், "மனுஷனுக்குச்செம்மையாய்த்தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவோ மரண வழிகள்" என்று ஞானி சாலமோனும், (நீதி 14 :12) "கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தான் அறிவேன்" என்று தீர்க்கன் எரேமியாவும் (எரே 10 : 23) சொல்லுகிறார்களே! அதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

பெரும்பான்மையான மக்கள் எம்மதமும் சம்மதம். ஒருவன் ஏற்றுக் கொண்ட கொள்கையில் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அது போதும் என்றும் சுயதிருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் மேற் காட்டிய தேவ வசனங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, மார்க்க சம்பந்தமான காரியத்தில் மனிதனுடைய தத்துவங்கள் சித்தாந்தங்கள் எல்லாம் சரிப்பட்டு வராது என்பதற்கு மற்றும் ஒரு நிரூபணம். அந்த நாட்களில் "அநேகர் இயேசுவினிடத்தில் வந்து நாங்கள் உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமே, அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோமே என்று சொல்லுவார்கள். உங்களை ஒருக்காலும் அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்" என்று கூறுவேன் என்கிறார் (மத் 7 : 22, 23) மேலும் அவர் "நான் செல்லிய இந்த வசனங்களைக் கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ' (போதகர்களும், மதத்தலைவர்களும் கட்டளை யிட்டவைகளை அல்ல) "அவன் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் செய்யாமல் இருக்கிறவன் எவனோ அவன்தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவேன்" மத் 7 : 21-27 என்று தன் தீர்ப்பை வழங்குகிறார்.

ஆகையால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு மனிதனோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட மதச்சட்டங்களோ, சித்தாந்தங்களோ (பார்வைக்கு அவைகள் எவ்வளவு நல்லவைகளாகவும், நடைமுறைக்குப் பொருத்தமாக இருப்பினும் சரி) நியாயத்தீர்ப்பு நாளிலே செல்லுபடி ஆகாது - கிறிஸ்து சொன்ன வசனத்தின்படியோ நியாயந் தீர்க்கப்படுவோம். (யோவான் 12 : 48) ஆகையால் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்கிற எவனும் தனக்குப் பெரும் நஷ்டத்தையும், சொல்லி முடியாத இழப்பையும் அடைவது நிச்சயம்.

## அப்படியானால் நாம் எப்படி அடைமொழிகள் ஏதும் இல்லாத கிறிஸ்தவனாகலாம்?

இதை வாசிக்கும் எவராவது கிறிஸ்தவர் ஆக விரும்பினால், தேவனுடைய பிள்ளையாக கிறிஸ்துவின் தொண்டனாக ஆவதற்கு

அப்போஸ்தலர் காலத்தில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளைச் செய்தல் அவசியம். (அப் 2-ம் அதிகாரம் 36-41) ஆகிய வசனங்களில் அதற்குரிய வழி முறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்து விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள் "பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெருவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்து கொள்ளுங்கள் என்று புத்தி சொன்னான்.

அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிற வழி முறைகள் தவறே. சரியான வழி மட்டும் அல்ல. மிகவும் எளிமையானவைகளும் கூட, இது கர்த்தருடைய வழி, இதனுடைய சுலபமான மாதிரியைப் பின்பற்றுங்கள். அப்போஸ்தலர்களுடைய நேரடிப் பார்வையில் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பாக மக்கள் இவ்வாறாகத்தான் கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். அதே போல ஒரு மனிதன் இந்த விசுவாச உபதேசச் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் போது 'கிறிஸ்தவன்', என்றில்லாமல் வேறொன்றாகவோ, அல்லது 'கிறிஸ்துவின் சபை' என்றில்லாமல் வேறொரு மனிதரால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ சிக்கிக்கொள்வது கிடையாது. அதன் பிறகு அவர் பரிபூரணத்தை நோக்கி நடை போடலாம். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலையும், கடினமான ஆகாரத்தையும் உண்டு கிறிஸ்துவைப் போல வளருவான். (I பேதுரு 2 : 1-3; (II பேதுரு 3 : 18).

அப்போஸ்தலர்களின் நடபடிப் புஸ்தகத்தில் இந்த காரியங்களைக் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் யாருக்கேனும் குழப்பம் இருந்தால் ஒரு நல்ல ஒத்த வாக்கிய அகராதியை (Concordance) எடுத்து திருமுழுக்கு என்ற தலைப்பில் உள்ள அனைத்து வசனங்களையும் வாசித்து சீர்தூக்கிப் பார்க்கக் கடவன். எவ்விதமான கருத்துக்களையும் முன்கூட்டியே தன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாமல் வேதம் சொல்லுகிறதை மாத்திரம்

ஏற்றுக் கொள்ள விரும்பும் பக்குவமுள்ள மனங்களில் தேவ வசனம் சரியான தெளிவைக் கொடுக்கும். திருமுழுக்கு என்பது தண்ணீரில் முழுகி எழுவதையே குறிக்கும் என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி அறியலாம். தேவ வசனம் சொல்லுவதை நம்பி, ஏற்றுக் கொண்டு அதற்கே கீழ்ப்படிவோம்.

சபை சம்பந்தப்பட்ட விஷயத்திலும் அதே நிலை தான். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது ஒரு சபை தான். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப் பட்டதுபோல ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.

"ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் எல்லா ருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும், எல் லோரோடும், உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர். (எபே 4 : 4-6.")

அப்போஸ்தலர் காலத்தில் கர்த்தர் எப்படி இரட்சிக்கப்பட்டவர்களைச் இந்த ஒரே சபைக்குள் சேர்த்துக் கொண்டாரோ அப்படியே இப்பவும் செய்வார். (அப் 2 : 42) மார்க்க சம்பந்தமான எல்லா விஷயத்தைக் குறித்தும் வேதம் தெளிவான முறையில் பேசுகிறது. ஆகவே மனிதர்கள் அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நின்று கொண்டு, தேவன் ஒருவருக்கு மட்டுமே கீழ்ப்படிகிறவர்களாகவும், அவருடைய வசனத்தின் அடிப்படையில் காரியங்களைச் செய்து, மாந்த அறிவு சடங்காச்சாரம்; பாரம்பரியம் ஆகியவைகளுக்குச் செவி கொடுக்காமல் கிறிஸ்துவின் மென்மையானதும் இலகுவானதும் ஆன நுகத்தை மாத்திரம் ஏற்றுக் கொண்டு நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கச் செய்வோமாக! இது ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப் பட்டிருக்கிற சிலாக்கியமும், அழைப்புமாகும், சிந்திப்பீர், செயல்படுவீர்!

## இரட்சிப்பின் படிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்விப்படுதல் | - | ரோம. 10:17, லூக். 8:18 |
| 2. | விசுவாசித்தல் | - | மாற். 16:16, அப். 8:37 |
| 3. | மனந்திரும்புதல் | - | அப். 2:38, அப். 3:20 |
| 4. | அறிக்கையிடுதல் | - | மத். 10:32, ரோம. 10:10 |
| 5. | ஞானஸ்நானம் | - | அப். 2:38, அப். 22:16 |

# கள்ளனும், கள்ள உபதேசங்களும்

தற்காலத்தில் மக்கள் எல்லாவற்றையும் நேர் வழியைவிட குறுக்கு வழியில் எளிதில் அடைய முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். படிக்காமலே பாஸ், உழைக்காமலே ஊதியம், தகுதியில்லாமல் பதவி இப்படி எத்தனையோ . . . வர வர விதைக்காமலே அறுவடை செய்ய முடியும் என்று சொன்னால்கூட அதையும் நம்பி ஏற்றுக் கொள்வார்கள் போல் தெரிகிறது.

இம்மாதிரியான சிந்தனையோட்டம் மார்க்கவிஷயத்தையும் விட்டு வைக்கவில்லை. மனந்திரும்பாமலேயே இரட்சிப்பு, கர்த்தருடைய சித்தம் செய்யாமலே மோட்சப் பிரவேசம் சாத்தியமா? என்பன போன்ற சிந்தனைகள் மக்கள் மனதிலே நெளிகின்றன. இதை மோப்பம் பிடித்துக் கொண்ட சில பேர் வழிகள் அவைகளை நாங்கள் பெற்றுத் தருகிறோம். அதற்கு நாங்கள்தான் மொத்த விநியோக உரிமையாளர் என்று உத்தரவாதம் அளித்து அவர்களுக்கு ஒரு போலி திருப்தியை ஏற்படுத்தி விட்டு அதற்கு ஈடாக இழிவான ஆதாயங்களைப் பெற்று சௌகரியமான வாழ்க்கை நடத்தி உலா வருகின்றனர். அவர்கள் வசதியாக வாழ்வதைப் பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை இல்லை. ஆனால் அதனால் விளையும் விபரீதங்களை எண்ணும் போது துக்கப்படாமல் இருக்க முடியாது.

பொதுவாகவே மனந்திரும்பின வாழ்க்கையை மேற்கொள்ள முடியாதவர்களும், ஆன்மீக விஷயங்களில் அக்கறையற்றவர்களும் இப்படிப்பட்ட பேர்வழிகளின் அரைகுறைப் போதனைகளைக் கேட்டு விட்டு தேவ வசனத்தை மேலும் அசட்டை செய்கிற நிலைமை உருவாகிறது.

உதாரணமாக, ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியம் என்ற காரியத்தை விளக்குவதற்கு நாம் தேவ வசனங்களை ஆதாரமாக எடுத்து வைக்கும் பொழுது இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் எந்த ஞானஸ்நானம் பெற்றான்? அவனை இன்று நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று ஆண்டவர் ஏற்றுக்கொள்ளவில்லையா? என்று எதிர்கேள்வி போட்டு விட்டு நம்முடைய பதிலுக்குக்கூடக் காத்திராமல் விருட்டென்று எழுந்து சென்றுவிடுவர். மேற்படி நபர்கள் சம்பந்தப் பட்டவர்களிடமிருந்து ஏதாவது ஒரு வகை ஆதாயத்தை எதிர்ப்பார்த்து

முகஸ்துதிக்காக எதையாவது சொல்லி வைத்திருப்பார்கள். அதை அவர்கள் குரங்குப் பிடியாக பிடித்துக் கொண்டு நாம் எடுத்து வைக்கிற எந்த நியாயத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்கள்.

அந்த நபருடைய விசுவாசக் கப்பலை கவிழ்த்தது எது? இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும். கள்ளன் ஞானஸ்நானம் இல்லாமலே இரட்சிக்கப்பட்டதுபோலே நாமும் ஞானஸ்நானம் இன்றி இரட்சிப் படையலாம் என்பது தவறான உபதேசம் தான். இயேசுகிறிஸ்து விரும்பினால் யாரையும், எப்படியும் இரட்சிக்க முடியும் என்பதில் நமக்கு ஒன்றும் சந்தேகம் கிடையாது. சொல்லப்போனால் விசுவாசம் இல்லாதவரைக்கூட அவரால் இரட்சிக்கமுடியும். மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலும், மாற்கு இரண்டாம் அதிகாரத்திலும் திமிர்வாத நோயாளி ஒருவனுடைய பாவங்களை மன்னித்த சம்பவம் ஒன்றை வாசிக்கிறோம் (மத். 9 : 2; மாற். 2 : 1-5). அந்த நோயாளிக்கு விசுவாசம் இருந்ததா? இல்லையா? தெரியவில்லை.ஆனால் கொண்டுவந்தவர்களுடைய விசுவாசத்தைப் பாராட்டி நோயாளியின் பாவத்தை மன்னித்ததாக வசனங்கள் கூறுகின்றன. அப்படியானால் ஒருவருக்காக மற்றவர் விசுவாசித்தால் கூடப் போதும் என்று சொல்லலாமா? சிந்தியுங்கள்.

மாற்கு 16 : 16. மற்றும் எபி 11 : 6. ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். இரட்சிக்கப்படுவதற்கு ஒவ்வொருவரிடத்திலும் விசுவாசம் காணப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் திமிர்வாதக் காரனிடத்தில் விசுவாசம் இருந்ததோ இல்லையோ அவனை இரட்சித்திருக்கிறார். அந்த சம்பவத்தை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு நான் விசுவாசிக்கமாட்டேன். ஆனால் நான் இரட்சிப்பு அடைய வேண்டும் என்று வாதிட முடியுமா? கூறப்பட்டுள்ள சம்பவங்களைத் தொகுத்து அதன் முடிவான கருத்து என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

## கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்து மரித்தான் :

கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்து மரித்தான். இயேசு மரிக்கும் வரையில் அந்த உடன்படிக்கை அமுலில் இருந்தது. புதிய ஏற்பாடு அமுலுக்கு வருவதற்கு இயேசு மரித்தாகவேண்டும். அதைப் பற்றிய விளக்கத்தை எபி 9 : 15-17. வசனப்பகுதியில் பார்க்கலாம். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவை என்ற கட்டளையை இயேசு உயிரோடெழுந்த பிறகு தான் கொடுத்தார். (மத் 28 : 18 -20; மாற்கு 16 : 15,16; அப் 2 : 38). ஆகவே பழைய உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்த கள்ளனுடைய இரட்சிப்பு, புதிய உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நமக்குப் பொருந்தாது. நாம் இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றாலே இரட்சிப்படைய முடியும்.

சரி, இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்கிறீர்களே அதை நான் சிறு குழந்தையாக இருக்கும்போதே பெற்றுக்கொண்டேன். பின்னர் அதை உறுதி செய்து (Confirmation) திடப்படுத்துதலும் பெற்றிருக்கிறேன் என்று வாதம் செய்வர். தர்மசங்கடமான நிலை, பிசாசு என்னென்ன மாதிரியான தடைக் கற்களை வழி நெடுக வைத்திருக்கிறான், 'பாருங்கள் மாற்கு 16 : 15, 16-ல் 'விசுவாசித்து' என்று கூறி அப் 2. 38-ல் 'மனந் திரும்பி' என்பதையும் சேர்க்கப்பட்டிருப்பதை நீங்களே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசித்துப்பாருங்கள்.

ஒரு கேள்வி? சிறு குழந்தைக்கு பரலோகத்தின் இரகசியங்களைச் சொல்லி விசுவாசிக்க வைக்க முடியுமா? அதற்குத்தானே திடப்படுத்துதல் என்று ஓர் விளக்கம் வருகிறது. முன்னொரு காலத்தில் நமது நாட்டில் பால்ய விவாகம் என்ற ஒரு முறை இருந்தது. அதையே தவறு என்று சட்டம் இயற்றித் தடுத்து விட்டனர். நாம் இன்னும் அதே போன்ற கஷ்டத்தை ஆன்மீக வாழ்வில் விளைவிக்கும் குழந்தை ஞானஸ்நானத்தை இன்னும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு எங்கே முன் உதாரணம்? எங்கே பொருள்? முன் உதாரணமும் இல்லாமல் அர்த்தமும் இல்லாத ஒன்றை வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ளுகிற நாம் இன்னும் செய்து கொண்டிருக்கலாமா? தவறு செய்து கொண்டிருந்தோம். அதைப் பற்றித் தேவனுக்கு வருத்தம் இல்லை. ஆனால் தவறு என்று தெரிந்த பிறகு விட்டுவிடாமல் சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டிருப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா? (அப் 17 : 30.)

ஒரு வேளை குழந்தைகள் கிறிஸ்தவத்தை மறுதலித்து விடக்கூடாது. ஆகவே அவர்களை குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்குவிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் பிள்ளைப் பாசமும், கிறிஸ்தவப் பற்றும் தேவ சித்தத்துக்கு எதிராகச் செயல்படும்படி உங்களை ஏவுகிறதைக் கவனிக்கவில்லையா? எது முக்கியம்? தேவனுக்குக் கீழ்படிவதா; நம்முடைய பாரம்பரிய வைராக்கியமா? (I சாமு 15 : 22, 23. ஏசாயா 66 : 2; மத் 15 : 8, 9.)

அதையும் தாண்டி வருவோமானால் இன்னும் ஒரு பாராங்கல். தெளித்தலும், ஊற்றுதலும் கூட ஞானஸ்நானம் தான்; முழுகித்தான் ஆக வேண்டும் என்று கட்டாயம் இல்லை என்பர். தெளித்தல் என்ற முறை வேதாகமம் எங்கும் தேடி வாசித்தாலும் இல்லவே இல்லை. ஆனால் இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து, கொடுக்கப்பட்ட அனைத்து ஞானஸ்நானமும் முழுக்கு என்று தான் வேதாகமம் கூறுகிறது. இருந்த போதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் அந்தத் தவறைத் திருத்திக் கொள்ள விரும்பாத ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் திருமுழுக்குப்

பெற்று விட்டோம் என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அறியாமை, நிர்விசாரம் என்னும் ஆயுதங்களை பிசாசு எவ்வளவு திறமையாக பயன்படுத்துகிறான் என்று நினைக்கும் போது அவனுடைய ஆற்றலை வியக்காமல் இருக்கமுடியாது.

1. மூல மொழியாகிய கிரேக்கத்தில் (Baptizo) (பாப்டிஸோ) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அகராதியில் அதன் அர்த்தம் மூழ்கடித்தல், அமிழ்த்துதல் என்று கொள்ளலாம்.

2. யோவான் தண்ணீர் மிகுதியாயிருந்த இடத்தில் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். (யோவான் 3 : 23.)

3. ஞானஸ்நானம் - அடக்கம் (ரோமர் 6 : 3–5.)

4. மறு ஜென்ம முழுக்கு. (தீத்து 3 : 5.)

இப்படி எத்தனையோ தவறான உபதேசங்கள் மெல்ல மெல்ல முதலாம் நூற்றாண்டு மெய்க் கிறிஸ்தவத்துக்குள் நுழைந்து கிறிஸ்த வத்தின் தூய்மையைக் கெடுத்து மனிதர்களால் தோற்றுவிக்கப் பட்ட பல்வேறு மதங்களில் இதுவும் ஒன்று என்ற நிலைக்குத் தாழ்த்திவிட்டது.

நண்பர்களே! எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று பவுல் கூறிய அறிவுரையை, (I தெச 5 : 21) மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த பெரோயா பட்டணத்தாரைப் பின்பற்றி (அப் 17:11) நாமும் ஆரோக்கிய மான உபதேசத்தை ஏற்றுக்கொண்டு தவறுகளைக் களைந்தெறிவோம். இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. சத்துருவாகிய சாத்தான், மிகத் தந்திரமும் அனுபவமும் உள்ள எதிரி, நம்மை பல விதத்திலும் ஏமாற்றி வஞ்சித்து விடுகிறான் என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆகவே எப்பொழுது நாம் உண்மையைத் தெரிந்துகொண்டு அவரிடத்திற்கு திரும்பி வந்தாலும் நேசக்கரம் நீட்டி நம்மை ஏற்றுக்கொள்வார்.

அப்போஸ்தலர்களுடைய உபதேசங்களை மட்டுமே கைக்கொண்டு, மனித ஞானத்தால் கறைப்பட்டிருக்கிற கிறிஸ்தவத்தைத் தூய்மைப் படுத்து வோம். வேதம் விளம்பினதை விவரித்துச் சொல்வோம். வேதம் விளம் பாததற்கு உடன்படவே மாட்டோம் என்று தூள் உரைத்து ஒன்று படுவோம்.

# கைகளோ ஏசாவின் கைகள்;
# சத்தமோ யாக்கோபின் சத்தம்

தற்காலத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் பக்தி பரவசம் ஏற்பட்டு விட்டதோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் நற்செய்தி கூட்டங்கள் வீதிக்கு வீதி தெருப் பிரசங்கங்கள் ஆலயங்கள் தோறும் மக்கள் வெள்ளம், வானொலிகளில் நாள்தோறும் பல்வேறு கூட்டத்தினரின் செய்திகள் இப்படி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் பாராட்டத்தக்க நல்ல அம்சங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவைகளால் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு நன்மைகள் ஏற்பட்டு வருகிறதா? மற்ற மதத்தினர் அஞ்ஞான இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் அந்த மக்கள் நம்முடைய பக்திமுறை களைப் பற்றி என்ன அபிப்பிராயப்படுகின்றனர். மதமாற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் கூறுகிற உண்மையென்ன? அப்படி மதம் மாற்றப் பட்டவர்கள் உண்மையிலேயே மனம் மாற்றம் பெற்றிருக்கிறார்களா? என்று சிந்திக்கத் தலைப்பட்டால் நாம் விரும்புகிற அளவுக்கு திருப்திகரமான பதில் கிடைக்காது; பாவக் கறைகள் நீங்கி இரட்சிக்கப் பட்டுவிட்டோம் என்று சுயதிருப்திப்பட்டுக் கொள்ளும் நம் கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையை வினயத்தோடும் வியப்போடும் கூர்ந்து கவனித்துப் பார்க்கும் மனிதன், வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இருக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்ற நற்பண்ப ,களைத் துருவித் தேடிப் பார்த்தும் காணமுடியாமல் ஏமாற்றத்தோடும், வெறுப்போடும் திரும்பச் செல்ல வேண்டிய நிலை தான் உள்ளது". "மாயக்காரராகிய வேதபாதகரே! பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! ஒருவனைஉங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள்மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்". (மத். 23 : 15.)

ஆம், சகோதரர்களே! எங்கும் எதிலும் போலித்தனம் பரவி விட்டதைக் காணும்போது நமக்கே மிகுந்த மனவேதனை ஏற்படுகிறது என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எப்படியிருக்கும்? வஞ்சகப் பிசாசின் சூது மதியால் பிதாவாகிய தேவனோடு மானிடர் கொண்டிருக்க

வேண்டிய நல்லுறவை இழந்து பாவத்திலும், துக்கத்திலும், கண்ணீரிலும் சிக்கித் த்ங்களுடைய வாழ்க்கையில் நிம்மதியிழந்து அவதியுறும் மக்களின் துயர் துடைத்துக் கரையேற்றுவதற்கென்றே இவ்வுலகுக்கு வந்தார். லூக்கா 19 : 10. விண்ணுலகில் தேவனுக்கு சமமாக சகல சிறப்புகளையும் பெற்றிருந்தும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு ஏழையின் வயிற்றிலே பிறந்து, தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். (பிலி 2 : 6 - 8) இன்னல்கள் பலபட்டு இன்னுயிரைக் கொடுத்து இவ்வுலக மக்களை இரட்சிக்க வேண்டும் என்றே உதித்த இயேசு பெருமான் மனம் வேதனை யடைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

வாரினால் அடித்தார்கள் வாய் திறக்கவில்லை, தலையிலே குட்டி முகத்திலே துப்பி ஏளன சிரிப்புச் சிரித்தனர் எரிச்சலடையவில்லை. தாகத்தால் நாவறண்டு தண்ணீர் கேட்டார். கசப்புக் கலந்த காடியைக் கொடுத்தார்கள். கடுமொழி ஒன்றும் கூறிடவில்லை. பொன் மகுடம் சூட்டவேண்டிய தலையில் முள்முடி, முட்கள் அழுத்தியதால் குருதி கொட்டுகிறது குமுறி எழவில்லை. பாரச்சிலுவையைச் சுமக்க முடியாமல் கால்கள் பின்னுகின்றன காரணம் கேட்கவில்லை. நன்மை செய்ய வராகச் சுற்றித் திரிந்தவரின் கால்களிலும் கரங்களிலும் ஆணிகள் நா அசைத்தார், சபிக்கவல்ல பிதாவினிடத்தில் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்டு மன்றாட.

தன்னைச் சித்திரவதை செய்த மக்களின் அறியாமையை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடுகிற இம்மகான் பரிசேயரையும், வேதபார கரையும் பார்த்து 'குருட்டு வழிகாட்டிகள்' என்கிறார். 'வெள்ளை அடிக்கப் பட்ட கல்லறை' என்கிறார். சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே என்கிறார். அப்பப்பா! எவ்வளவு கடுமை! ஏன் அவர்கள் மீது மாத்திரம் ஆண்டவருக்கு அவ்வளவு கோபம் சொல்லப் போனால் மற்ற பிரிவைச் சேர்ந்த யூதர்களைக் காட்டிலும் இவர்கள் நியாயப் பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள். நியாயப் பிரமாணத்தின்படி மிகவும் கவனமாக நடப்பவர்கள், இருந்தும் அவர்களையே குறிவைத்துத் தாக்குகிறாரே!

சமுதாயத்தின் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் இந்த பெரிய மனிதர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் ஆளானால் தன் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிந்தும், சமயம் கிடைத்த போதெல்லாம் சாட்டையடி கொடுப்பது போல சாடுகிறார். ஏன்? ஏன்? ஏனெனில் அவர்களுடைய தவறுகளை அவர்கள் உணர மறுத்து, போலி பக்தியில் மோகங் கொண்டு, தேவனுடைய ஆலோசனைகளையும் அறிந்து கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தார்கள். வெளிவேஷத்தில் பிரியப் பட்டார்கள். வெளியிலே பார்ப்பவர்களுக்கு பக்திமான்களைப் போலவும்,

கடவுளின் உண்மைத் தொண்டர்களைப் போலவும், மாயமான தாழ்மையுடன் பாசாங்கு செய்தார்கள். ஆனால் எல்லா விதமான அக்கிரமங்களையும் கூசாமல் நடப்பித்துக் கொண்டு தேவனுடைய ஆலோசனைக்குச் செவி கொடாமல் தங்களுடைய செல்வாக்கையும், செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதில் கவனமுள்ளவர்களாக இருந்தார்கள். இவைகளே அவருடைய ஆத்திரத்துக் காரணம் இயேசு கிறிஸ்துவின் இனிய பண்புகளுக்கும் இரக்க சுபாவத்துக்கும் முற்றிலும் முரண்பாடான முறையில் அத்திமரம் ஒன்றைச் சபிப்பதை மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். (மத் 21 : 18 -32, மாற்கு 11 : 12-14) ஏன் அதைச் சபித்தார்? என்னுடைய பசியைப் போக்குவதற்கு பயனில்லாத மரம் நாசமாகட்டும் என்று சபித்திருப்பாரா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. பிசாசினால் வனாந்திரத்திலே சோதிக்கப்பட்ட நேரத்தில் நாற்பது நாள் இரவு பகல் பட்டினியைச் சகித்துக்கொண்டு 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று தெளிவாய்க் கூறினவர், சமாரிய நாட்டுச் சீகார் என்னும் சிற்றூரில் வயிற்றுக்குத் தேவையான உணவைவிட என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் சிறந்த உணவு என்று கூறி பசியை மறந்து தெய்வத்திருப்பணியில் ஈடுபட்டவர் (யோவான் 4 : 31) கேவலம் தனக்குப் பயன்தராதது அழிந்தொழியட்டும் என்ற கீழ்த்தரமான வாழ்க்கை நெறியாளர்களுடைய நிலைக்குத் தாழ்ந்து விடுவாரா? சர்வ நிச்சயமாக இருக்கவே இருக்காது.

பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் சாத்வீகத்துக்கும் உறைவிடமான நமது கர்த்தர் ' எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் ஆத்திரமடைந்து சபித்திருப்பாரா? கற்பனை செய்து பார்க்க முடியாத குற்றச்சாட்டு. பின்னர் என்னதான் காரணமாக இருக்கமுடியும்? தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது செழித்து வளர்ந்து பசுமையாகத் தோற்றமளித்த அந்த அத்திமரம், மரங்களின் சிறப்பு நிலையாகிய கனி கொடுக்கும் நிலையில் இல்லாததுதான் அவருக்கு ஆத்திரம் உண்டாக்கிய காரியம் தோற்றம் ஒன்று; நிலைமை வேறு; சொல் ஒன்று; செயல் வேறு. இதுதான் இரட்சகரின் கோபத்துக்கு காரணம் குற்றங்கள் குறைகள் இருப்பது மனித இயல்புதான். அது ஆண்டவருக்குத் தெரியாததல்ல. இல்லாத ஒன்றை இருக்கிறமாதிரி காட்டுகிற போலித்தனத்தையே கர்த்தர் வெறுக்கிறார்.

தேவனுடைய உன்னதமான நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற மக்களே! நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன் பலனை

மறுதலிக்கிறவர்களாக இருக்கிறோமோ? அல்லது நாம் இந்த உலகத்துக்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்கிறோமோ? தயவு செய்து சிந்தித்துப் பார்ப்போம். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர், இரக்க முள்ளவர், பொறுமையுள்ளவர் என்பது மெய்தான். அதே நேரத்தில் நீதியுள்ளவர், பாரபட்சமில்லாதவர், எரிச்சலுள்ளவர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. நம்மீது இரக்கமும் அன்பும் கொண்ட காரணத்தினால் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்துக்குத் தந்தருளினார். (யோவான் 3 : 16) நம்முடைய பலவீனங்களைப் புரிந்து கொண்டதினால் தான் நாம் அன்றாடம் செய்து வருகிற பலவிதமான தீச்செயல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டுவருகிறார். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு எல்லையும் ஒரு முடிவும் உண்டு என்பதை மறந்துவிடலாமா?

நம்மைக் காட்டிலும் சடங்காச்சாரங்களில் அதிக கவனம் செலுத்திக் கொண்டு, தங்கள் சுய நீதியில் பெருமை கொண்டு வாழ்ந்த பரிசேயர்களையே விட்டு வைக்காமலும் தயவு தாட்சண்யம் காட்டாமலும் சாடி, "மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்" என்று சூடான அறிவுரை கூறுகிறார். எவ்வளவுதான் உறுதியுள்ளதாக இருந்தாலும் என்னதான் பசுமையான தோற்றமுள்ளதாக, இலைகள் நிறைந்ததாக காட்சியளித்த போதிலும், மரத்தின் தலையாய நிலை கனி கொடுப்பதுதான். அதுபோல ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு பக்தி முயற்சிக் காரியங்களில் ஈடுபாடு கொண்டு, என்ன தான் ஆசீர்வாதங்களையும், வரங்களையும் பெற்றிருந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகளைத் தராத வரையில் அவனுடைய ஆசீர்வாதம் நிறைவு பெற்றதாகாது. தேவன் அங்கீகரிக்கும் வாழ்வை ஒருவன் விரும்பினால் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற கனிகளாகிய, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவைகளைப் பெற்றிருக்க வேண்டும். சரியான அடிப்படையின் மேல் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை கட்டுகிற எவரும் மேற்சொன்ன கனிகளைப் பெற்றே ஆகவேண்டும் இவைகள் நம்மிடத்தில் காணப்படவில்லையென்றால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதோ கோளாறுகள் இருக்கின்றன என்று பொருள். தயவு செய்து கொத்தி எருப்போடுவோம் தண்ணீர் பாய்ச்சுவோம் தேவன் விளையச் செய்வார்.

# யூதாஸ் காரியோத்

யூதாஸ் காரியோத் என்பவன் இயேசு கிறிஸ்து தெரிந்து கொண்ட பன்னிருவரில் ஒருவன். இவன் மோவாப் தேசத்தில் உள்ள காரியோத் என்னும் ஊரைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

யூதாஸ் காரியோத் என்றால் நம் நினைவுக்கு வருவது துரோகம். ஏனெனில், குற்றமில்லாத நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எதிரிகளுக்கு காட்டிக் கொடுத்து மோசம் செய்தான். ஆனாலும் அவனுடைய நடத்தையை நியாயப்படுத்தும் வகையில் சில வாதங்களை முன் வைத்து வழக்காடுவோரும் உண்டு.

அப்படி அவர்கள் எடுத்து வைக்கிற வாதங்களுக்கு வேதாகமம் ஒப்புதல் அளிக்கிறதா என்று பார்ப்போம். முதலாவதாக "மனுஷ குமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" என்று வேதாகமம் கூறுகிறது. அப்படியானால் யூதாஸ் காட்டிக் கொடுக்க வில்லையென்றாலும் இயேசுவின் மரணம் நிச்சயிக்கப்பட்ட ஒன்று. அவர் மரிக்காமல் இருந்திருந்தால் நமக்குப் பாவ மன்னிப்புக் கிடைத்திருக்காதே. அப்படியிருக்க, யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்தது தேவ சித்தத்திற்கு இசைவானதே என்பர்.

அந்த வாதத்தை நாம் ஏற்றுக் கொள்வது விவேகமான காரியமாகத் தோன்றவில்லை. ஒரு சமயம் குடிசைகள் நிறைந்த பகுதி ஒன்றில் தீ வைத்து விட்டான் ஒரு பொல்லாதவன். தீபற்றியெரிந்து எல்லாக் குடிசைகளுக்கும் பரவினது. அங்கு வாழ்ந்த ஏழை மக்கள் திடீரென்று ஏற்பட்ட விபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவதி அவதியாக குழந்தை குட்டிகளை தூக்கிக் கொண்டு உயிர் தப்பி ஓடுகையில் பலவித துன்பங்களையும் வேதனைகளையும் அடைந்தனர்; உடமைகளை இழந்தனர்; சில பேர் கருகி மாண்டனர். அவர்களுடைய பரிதாப நிலையைக் கண்டு இரங்கி, அரசு அவர்களுக்கு எளிதில் தீ பிடிக்காத மாடி வீடுகளை கட்டிக் கொடுத்து ஆறுதல் அளித்தனர்.

இந்தச் செய்தியை கேள்விப்பட்ட அந்த பொல்லாதவன் மக்களிடம் வந்து "நான் தீ வைத்ததினால் தானே உங்களுக்கெல்லாம் மாடி வீடுகள் கிடைத்தன. எனக்கு நன்றி சொல்லுங்கள். என்னை கௌரவிக்கும் வகையில் எனக்கு ஒரு சிலை வையுங்கள் என்று சொன்னால் அந்த

மக்களுக்கு எவ்வளவு ஆத்திரம் வரும்! மாடி வீடு கிடைத்தது மகிழ்ச்சி தான். அதற்கு இத்தனை அவதிகளும், உயிரிழப்புகளும் தேவையா? அதற்குக் காரணமாயிருந்த உன்னைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்ய வேண்டும். சிலை வைக்கவா சொல்லுகிறாய்? என்று சீறி விழுவார்கள் அல்லவா?

அது போல நாம் பாவ மன்னிப்புப் பெற வேண்டும் என்பதற்காகத் தான் யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் என்று வாதிடுவதும் முறையானதாகாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங் களைக் கழுவ அவசியம் என்பது உண்மை. ஆனால் அதற்கு எத்தனை யோ கௌரவமான வழிகள் உண்டே. அதெப்படி? அவர் இப்படி மரிப்பார், இப்படி வதைகள் உண்டாயிருக்கும், என்று நடைபெற்ற அனைத்துக் காரியங்களும் முன்னுரைக்கப்பட்ட வேத வாக்கியங்களின் படி தானே நடந்திருக்கிறது என்று தங்கள் வாதத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்டுவார். அதற்கு இயேசுவே பதில் கூறுகிறார். . . . **ஆனாலும் காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ! அவன் பிறவாதிருந்தால் நலமாக இருந்திருக்கும்"**, என்று அவனுக்குக் கிடைக்கும் பலனைக் குறித்து எச்சரித்திருக்கிறார். தன்னைச் சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தவர்களையும், கொலை செய்தவர்களையும் மன்னிக்கும்படி பிதாவினிடம் வேண்டிக் கொண்டவர். யூதாஸ் விஷயத்தில் 'ஐயோ' போடுகிறார் என்றால் அதற்கு என்ன பொருள்? யூதாஸ் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்பது தானே!

இரண்டாவதாக : அவன் இயேசு கிறிஸ்துவுக்கும், மற்ற சீடர்களுக்கும் நிதி மந்திரியாக இருந்தான் (யோவான் 13 : 29) ஆகவே அவர்களுக்குத் தேவைப்படும் உணவு மற்றும் இதர தேவைகளுக்கான நிதி ஆதாரம் திரட்ட வேண்டிய பொறுப்பு அவனுக்கு இருந்தது. ஆகவே கிடைக்கிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிதி சேகரிக்க வேண்டியிருந்தது என்பர்.

தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கு தகாத முறையில் நிதி திரட்டுகிற விவகாரம் "பளிச்" என்று விளங்கும். சமுதாயம் அங்கீகரித்துள்ள தீமைகளில் இது முக்கியமானது. விலைவாசி விற்கிற நிலையில் அப்படியெல்லாம் செய்யாமல் போனால் குடும்பம் நடத்த முடியுமா? என்று சமாதானப் படுத்திக் கொள்கிறோம். பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதிலிருந்து வாழ்க்கையின் பல்வேறு காரியங் களுக்கும் நாம் லஞ்சம் கொடுத்துப் பழகிவிட்டதால் அது நமக்கு ஒரு பிரச்சனையாகவே தோன்றுவதில்லை.

ஆனால், கர்த்தர் ஒழுக்க சீலர், தவறான வழியில் பொருள் ஈட்டி சொகுசான வாழ்க்கை வாழ்வதை ஒரு போதும் அங்கீகரித்திருக்க

மாட்டார். நாட்டின் சட்ட திட்டங்களை மதிக்கும் சிறந்த பிரஜை. வாழ்க்கையை அனுபவிக்க அவர் இந்த உலகத்துக்கு வரவில்லை. தற்காலத்தில், வரம் பெற்ற ஊழியர்கள் என்று தங்களை விளம்பரப் படுத்திக் கொண்டு அலைகிற 'கனமுள்ள' ஊழியர்களைக் கூட்டங்களுக்கு அழைத்தால் பல நிபந்தனைகளை விதிப்பார்கள். பயணம் செய்வதற்கு ரயிலாக இருந்தால் முதல் வகுப்பாக இருக்க வேண்டும். ரோடு மார்க்கம் என்றால் 'குளு, குளு' கார் தான் வேண்டும் என்பர். "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்று சிறு பிள்ளைகள் சொல்வார்கள். அதைப்போன்று அந்தக் 'கனமான' ஊழியர் வருவதற்கு முன்பு அட்வான்ஸாக ஒரு நபர் வந்து, அவர் விரும்பிச் சாப்பிடுகிற உணவு வகைகள் இவை, இவை, பிடிக்கிறவைகள், பிடிக்காதவைகள், படுக்கையை விட்டு எழும் போது என்ன? சிற்றுண்டிக்கு என்ன? உணவுக்கு முந்தி என்ன? உணவுக்குப் பிந்தி என்ன என்று ஒரு நீண்டபட்டியலே கொடுத்துவிடுவார். படுப்பதற்கு 'குளு, குளு' அறைகள் இல்லாமல் முடியாது என்பர்.

ஆனால் நம்முடைய இயேசு கிறிஸ்து "நன்மை செய்பவராக சுற்றித் திரிந்தார் (அப்.10 : 38) "மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை (லூக் 9 : 58) அவரைத் தூங்குவதற்குக் கூட விடாமல் எப்போதும் மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தொந்தரவு கொடுத்த படியால் பயணங்கள் போது சற்றே கண்ணயர்வார். அப்பொழுதும் ஏதாவது பிரச்சனை என்று எழுப்பி விட்டுவிடுவார்கள் (மாற்கு 4 : 38 மத் 8 : 24, 25; லூக் 8 : 23, 24).

உணவு விஷயத்திலும் அப்படித் தான், வேளாவேளைக்கு உண்ணவோ தாகத்துக்குத் தண்ணீர் குடிப்பதோ அவருக்கு முக்கியமல்ல. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே என் ஆகாரம் என்று (யோவான் 4 : 34) ஆத்தும பாரத்துடன் தன் ஊழியத்தை நிறைவேற்றினார். அப்படிப் பட்டவர் தகாத முறையில் பொருள் ஈட்டி, உல்லாச வாழ்க்கை வாழவேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? மேலும் அவருக்கு ஏதாவது தேவை என்றால் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வசதிகள் செய்து தர நிறையப் பேர் இருந்தனர். (லூக் 22 : 7 - 12) தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்த யோவன்னாள். (லூக் 8 : 3) போன்றவர்கள் அதில் முக்கியமானவர்கள். ஆகையால் யூதாஸ் தவறான முறையில் பணம் ஈட்டி, அதில் அவர் உல்லாச வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எண்ணியிருப்பாரா?

மூன்றாவதாக, "குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்து விட்டேன் என்று அழுது புலம்பி, பணத்தையும் தூக்கி எறிந்து விட்டு, கடைசியில் நான்று கொண்டு செத்துப் போனான்" என்று

வாசிக்கிறோம். (மத் 27 : 3, 4) ஒருவேளை அவன் இப்படி நினைத்திருக்கலாம், நமக்குச் செலவுக்குப் பணம் வேண்டும். கொடுக்கிற உள்ளம் கொண்டவர்கள் கூட பணத்தின் அருமை தெரியாமல் அதை வீண் பண்ணி விடுகிறார்கள். (யோவான் 12 : 1- 5) இயேசுவைப் பிடிப்பதற்கு ஆலோசனை சங்கத்தார் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலவு செய்வார்கள் போல் தெரிகிறது. அவர்கள் நிச்சயமாக அதில் வெற்றி பெறப் போவதில்லை. முன்பு அவர்கள் அப்படிச் செய்ய நினைத்த போது இயேசு திடீரென்று மறைந்துவிட்டார். (யோவான் 8 : 59). அதுபோல இப்பவும், எப்பவும் செய்ய அவருக்கு வல்லமையுண்டு. ஆகையால், நாம் போய் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறேன் என்று அவர்களுக்குச் சொல்வோம். உடனே அவர்கள் ஆசைப்பட்டு ஏதாவது பணம் கொடுப்பார்கள். அதை நாம் வாங்கிக் கொள்ளலாம். அவர்கள் பிடிக்கப் போகிற சமயத்தில் அவர் மறைந்து விடுவார். நமக்குப் பணம் மிச்சம். அவரும் பிடிபடமாட்டார் என்று எண்ணி ஒரு வேளை அவன் காட்டிக் கொடுக்கச் சம்மதித்திருப்பான். மற்றபடி இயேசு கிறிஸ்து மேல் அவனுக்கு என்ன கோபம் இருந்திருக்க முடியும்? காட்டிக் கொடுக்கிற போது கூட "சிநேகிதனே" என்று அழைத்தாரே (மத் 26 : 50). ஆகவே, கஜானாவுக்குப் பணம் வேண்டும் என்பதுதான் அவன் எண்ணமாயிருந்திருக்க வேண்டும். மற்றபடி அவரைக் காட்டிக் கொடுத்து, கொலைக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று அவன் சிறிதும் நினைத்திருக்கமாட்டான் என்று வாதிடுவர். இந்த வாதம் கேட்பதற்குக் கொஞ்சம் நியாயம் போலத் தென்படுகிறது.

ஆனால், யூதாஸின் குணாதிசயங்களையும், சிந்தனையோட்டங்களையும் பற்றி வேதாகமம் கூறுகிற கருத்துக்களைக் கூர்ந்து நோக்கும் போது இந்த வாதமும் கூட ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எஜமான விசுவாசமோ அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற பாரமோ அவனுக்கு ஒரு போதும் இருக்கவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த பலவீனங்களைப் பிசாசு சரியாய் பயன்படுத்திக் கொண்டான். தான் செய்கிற காரியத்தின் விளைவுகள் எங்கு போய் முடியும் என்று சிந்தித்துப் பார்க்க முடியாதபடி அவனுடைய கருத்துக் கண்களைக் குருடாக்கிப் போட்டான். (II கொரி 4:4) சுருங்கச் சொன்னால் அவன் சாத்தானின் கைப்பாவையாகிவிட்டான்.

மேலும், இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் பட்டியலை நீங்கள் கவனித்துப் பார்த்தால் எப்போதும் அவன் பெயர் கடைசிதான் அது மட்டுமல்ல, ஏதாவது ஒரு கெட்ட அடைமொழியோடு தான் சொல்லப் பட்டிருக்கும் (மத் 10 : 4); மாற்கு 3 : 19; யோவான் 12 : 4; 18 : 5 ஆகிய

வசனங்கள் அவனைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்' என்று குறிப்பிடுகின்றன. எதையும் ஆய்ந்து பார்த்து ஒழுங்குப்படுத்தி வரிசைப்படுத்தி, பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி எழுதும் வைத்தியர் லூக்கா, அவனை"துரோகி" என்று குறிப்பிடுகிறார் (லூக் 6 : 16).

இயேசுவின் மேல் அன்பும், அவருடைய வார்த்தைகளின் ஆழமான, தெளிவான கருத்துக்களைச் சிந்தித்துப் பார்க்கக் கூடிய இயல்புள்ளவனாக இருந்திருந்தால்,"**காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ! அவன் பிறவா திருந்தானானால் நலமாக இருந்திருக்கும்** என்று எச்சரித்த பொழுதே அவன் கருத்தாய் சிந்தித்துப் பார்த்து திருந்தியிருப்பான். ஆனால் அவன் அதை சட்டை செய்ததாகவே தெரியவில்லை. ஏனெனில் அவன் **கேட்டின் மகன்.** (யோவான் 17 : 12) அவன் ஒரு பிசாசு (யோவான் 6 : 70) அவன் ஒரு போதும் கர்த்தரை முழு மனதோடு நேசிக்கவும், அவருடைய கருத்தையும் செயல்பாடுகளையும் மதிக்கவும் இல்லை.

மரியாள் தைலம் பூசின காரியத்தில் கூட அவன் முறுமுறுக்கிறான் யோவான் (12:4,5) அப்படிப்பட்டவர்களைக் குறித்து, அப்போஸ்தலனாகிய பவுல் "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல" என்கிறார் ரோமர் 8 : 96) கிறிஸ்தவர்களே! நம்மில் எத்தனை பேர் யூதாஸ் போன்றவர்களாக இருக்கிறோம்.

மேலும் அவன் கபட நாடகம் ஆடுவதில் கை தேர்ந்தவன் என்று தோன்றுகிறது."உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்' என்று இயேசு கூறியதைக் கேட்டு மற்ற சீடர்கள் மிகவும் துக்கமடைந்து நானோ? நானோ? என்று ஒவ்வொருவரும் பதைப்புடன் கேட்டு தாங்கள் அல்ல என்று உறுதி செய்யத் துடிக்கிறார்கள். ஆனால், அவரைக் காட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தை அரங்கேற்ற சமயம் பார்த்துக் கொண்டிருந்த யூதாஸ், மட்டும் தன் உணர்ச்சிகளை சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு, ஏதும் அறியாதவனைப் போல, ரபீ! நானோ? என்று நாக் கூசாமல் கேட்டுத் தன் மன அழுத்தத்தையும், நடிப்புத் திறமையையும் காட்டுகிறான்.

மற்ற சீடர்கள் கேட்ட பொழுது, தெளிவாகச் சொல்லாத இயேசு, இவன் கேட்டதும் நறுக்கென்று "நீ சொன்னபடி தான்" என்று அவன் முகமூடியைக் கிழித்துப் போட்டார். வேறொருவனாக இருந்திருந்தால் "நம் குட்டு" வெளியாகிவிட்டது' என்று அவர் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து, மன்னிப்புக் கேட்டிருப்பான். ஆனால் அந்தக் கல் நெஞ்சன் அதைக் கேட்டு திடுக்கிட்ட மாதிரியோ, வருத்தப்பட்ட மாதிரியோ, தான் செய்யப்போகிற துரோக வேலையைக் கைவிட்டு விட்ட மாதிரியோ தெரியவில்லை.

அவன் எந்தப் பாவத்தையும் கூசாமல் செய்யக் கூடிய கொடியவன் என்பதற்கு இன்னொரு சம்பவத்தைக் கூடச் சுட்டிக் காட்டலாம்.

அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட இராத்திரியில் இயேசு முத்தமிடவந்த அவனைப் பார்த்து, "யூதாஸே முத்தத்தினாலேயா மனுஷ குமார னைக் காட்டி கொடுக்கிறாய்?" (லூக் 22:48) என்று உள்ளமுருகக் கேட்கிறார். மத்தேயு இந்த நிகழ்ச்சியை வர்ணிக்கும் போது "சிநேகிதனே" என்று இயேசு கூறினதாக எழுதுகிறார் (மத் 26 : 50) இப்படிப்பட்ட குணக் குன்றை, அன்பின் அவதாரத்தை, மன்னிக்கும் மாண்புடையவரை கூட இருந்தே காட்டிக் கொடுக்க ஒருவன் துணிவானானால் அவனுடைய இதயம் கல்லைவிடக் கடினமானதாகத் தான் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் உண்டா?

மேலும், அவன் காட்டிக் கொடுக்கத் தேர்ந்தெடுத்த முறை, அந்தப் பொல்லாதவனுடைய சூதுமதிக்கு மேலும் மெருகு ஊட்டுகிறது. முத்தம், பொதுவாகவே ஒரு அன்பின் சின்னமாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக் கிறது. குழந்தைகளுக்குத் தாய் தன் பாசத்தின் முத்திரையாக முத்தம் பொழிந்து தன் அன்பை வெளிப்படுத்துகிறாள். மேலும் நம்மை நேசிக் கிறவர்கள் தங்கள் அன்பின் அடையாளங்களாக முத்தம் கொடுத்து மகிழ் கிறார்கள். கணவன் - மனைவி, காதலன்- காதலி ஆகியோர் தங்கள் அன்பின் ஆழத்தை முத்தங்களின் வழியாகத் தெரியப்படுத்துகிறார்கள் என்பதை அறியாதார் உண்டோ?

ஆனால் இந்தக் பாதகன் அதை ஒரு சதியின் சின்னமாக மாற்றிப் போட்டானே! இவைகளையெல்லாம் சரியாகக் கணித்துத் தான் லூக்கா இவனை "துரோகி" என்று வர்ணித்திருக்கிறார். (லூக் 6 : 16)

இவனுடைய பசப்புத் தனத்துக்கு இன்னும் ஓர் எடுத்துக்காட்டு. யோவான் 12 : 3-6 வசனப்பகுதியைக் கவனியுங்கள். மரியாள் தன் ஆழ்ந்த அன்புக்கும், அவர் மீது கொண்டிருந்த பக்திக்கும் அடையாளமாக சுமார் முந்நூறு பணத்துக்கு விலை போகக் கூடிய ஒரு வாசனைத் தைலத்தை அவர் பாதத்தில் ஊற்றித் தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைக்கிறாள். அதைப் பார்த்த யூதாஸின் மனம் பதைக்கிறது. பணம் பாழாகிறதே என்பது தான் அவனுடைய உண்மையான கவலை. ஆனால் அப்படிச் சொன்னால் பணம் தான் பெரிதா? அந்த அம்மாளின் அன்பின் ஆழத்தை உன்னால் உணர முடியவில்லையா? என்று கேள்வி எழலாம். தனக்குள்ள பண ஆசையை மக்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள் என்று உணர்ந்து கொண்டு தான் ஏதோ ஏழை, எளிய மக்களின் மேல் ரொம்பக் கரிசனையுள்ளவன் போல் பாசாங்கு செய்து கொண்டு "இந்த தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்றுத் தரித்திரருக்கு கொடாமல்

போனதென்ன?" என்று பசப்புகிறான். இருதயங்களின் நினைவுகளை அறிகிற பரிசுத்த ஆவியானவருக்கா தெரியாது? "அவன் தரித்திரத்தைக் குறித்து அப்படிச் சொல்லாமல் அவன் திருடனாயிருந்தபடியாலும் பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும் இப்படிச் சொன்னான்" என்று யோவான் மூலமாக இவன் எண்ணங்களை தோலுரித்துக் காட்டுகிறார். (யோ 12:6).

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர்" (I தீமோ 6 : 10) என்பது எவ்வளவு உண்மை! பணத்தின் மேல் யூதாசுக்கு இருந்த மோகம் அவனை எந்த அளவு இழிநிலைக்கு இழுத்துச் சென்றிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். உலக இரட்சகர் இயேசுவைக் கேவலம் ஒரு அடிமையின் விலைக் கிரயத்துக்கு சமமாக்கிவிட்டான். (யாத் 21:32) சொல்வதைக் கேளுங்கள். "அந்த மாடு ஒரு அடிமையானவனை யாவது, ஒரு அடிமைப் பெண்ணையாவது முட்டினால் அதற்கு உடையவன் அவைகளுடைய எஜமானனுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக் கொடுக்கக் கடவன்". அந்தக் கணக்குப்படி பார்த்தால், யூதாஸ் ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுக்குக் காட்டிக் கொடுக்க உடன் பட்டதினால் அவரை ஒரு அடிமைக்குச் சமமாக்கி விட்டான்.

இப்படிப் பலவிதமான துரோகச் செயலும், பிசாசின் தன்மைகளுக்கு ஒப்பான பண்புகளும் நிறைந்த யூதாஸ் காரியோத் "தனக்கு நியமிக்கப் பட்ட இடத்துக்குச் சென்றதற்கும்" (அப் 1 : 24) சங்கீதப் புஸ்தகத்தில் "அவனுடைய வாசஸ்தலம் பாழாகக் கடவது. ஒருவனும் அதில் வாசம் பண்ணாதிருப்பானாக என்றும், அவனுடைய கண் காணிப்பை வேறொருவன் பெறக் கடவன் என்றும் எழுதியிருக்கிற படி (சங் 69 : 25, 109 : 8) ஆனதிற்கும் எவரும் வருந்தி வக்காலத்து வாங்க வேண்டிய தில்லை. அது முற்றிலும் நியாயமே. பவுல் அப்போஸ்தலன் கூட அதே கருத்தை (II கொரி 7 : 10ல் கூறுகிறார். லௌகிக துக்கம் மரணத்தையே கொண்டு வரும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு வேண்டாம்.

## அருமைச் சகோதரனே, சகோதரியே!

இயேசு கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களை மனதில் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து நடக்காமல், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன் பெலனை மறுதலித்த யூதாஸைப் போல், கிறிஸ்தவத்தால் ஏற்பட்ட சரீர நன்மைகள், கிடைத்த பதவி சுகம் ஆகியவற்றைத் துய்த்துக் கொண்டு, கிறிஸ்துவின் அடியார்கள் போன்று நாடகமாடிக் கொண்டு மக்கள் மத்தியில் உலா வந்து கொண்டிருப் போமானால், பிசாசு தன்னுடைய காரியத்தை சாதித்துக் கொள்ள

நம்மைப் பயன்படுத்துவதற்கு, நம்மை அறியாமலே இடம் கொடுத்து விடுவோம். அவன் அவனுடைய காரியத்தைச் சாதித்துக் கொண்டு திருப்தி அடைந்துவிடமாட்டான். நம்மையும் சீரழித்து, சிறுமைப்படுத்தி முடிவில் நீங்காப் பழிச் சொல்லையும், கேவலமான மரணத்தையும் பரிசாகக் கொடுத்துவிடுவான். ஆகவே, 1) அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக இருப்போம். 2) விழிப்புடன் இருப்போம். 3)பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். 4) மரண பரியந்தம் உண்மை யுள்ளவர்களாக இருப்போம்.

## கிறிஸ்துவின் சபையில் இருக்கும் ஆசீர்வாதங்கள்

1. ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோம. 3:1-2 I யோவா 1:7)
2. பாவமன்னிப்பு (கொலோ 1:13,14)
3. பிதாவோடும், கிறிஸ்துவோடும், விசுவாசிகளோடும் ஆவிக்குரிய ஐக்கியம் I கொரி. 12:13, எபே. 5:23.
4. புதிய ஜீவன் (II கொரி. 5:17)
5. எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (எபே. 1:3)
6. பரிசுத்த ஆவியின் வரம் (கலா. 5:25, I கொரி. 3:16, எபே. 1:13, 14)
7. உயிர்த்தெழுதலுக்கான உறுதிமொழி ( I தெச. 4:16, 18, ரோம. 8:11).
8. பரலோகத்திற்கான உறுதிமொழி (யோவா. 14:1-3, ரோம. 6:22).

# இயேசு அழுகிறார்

தற்காலத்தில் அரசியல், சமுதாய, சமயங்களில் கொள்கை பலத்துக்கு மக்கள் கூட்டமே அளவுகோல் என்றொரு புதிய நடைமுறை அமுலாகி விட்டது. வேடிக்கை காட்டியும், ஆடியும், பாடியும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும், எப்படியோ மக்கள் கூட்டத்தைத் திரட்டிக் காட்ட வேண்டும். அதற்கு எந்த யுக்தியை வேண்டுமானாலும் கையாளலாம். பிறகு அதற்குத் தங்களுக்குத் தேவையான முத்திரைகள் குத்தி, "எங்கள் கட்சியின் செல்வாக்கைப் பாரீர்! "எங்கள் இன மக்களின் எழுச்சி காணீர்", "எங்கள் சமயநெறிகளைப் பின்பற்றுகிற பக்த கோடிகளின் எண்ணிக்கை காணீர்!" என்ற நாளேடுகளில் முழுபக்க விளம்பரங்கள், நாற்சந்திகள் தோறும் பெரும் செலவில் பல வண்ணங்களில் விளம்பர போர்டுகள் கட் அவுட் ஊர் முழுவதும் தோரணங்கள் வீதிகள் தோறும் ஒலி பெருக்கிகளின் ஓலங்கள் மூலம் தங்கள்பின்னால் ஒரு மாபெரும் மக்கள் சக்தி இருப்பதாகக் கூறி அரசாங்கத்தை மிரட்டுகின்றனர். அப்பாவி மக்களை நம்ப வைத்து குறிப்பிட்ட சிலர் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

சமீப காலத்தில் இந்த வியாதி கிறிஸ்தவ மார்க்கத்தையும் தொற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஒரு உலகப் பிரசங்கியர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே நான் கண்டதையும், கேட்டதையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பு கிறேன்.

அந்தக்கூட்டம் நகரின் பிரபலமான சபைப் பிரிவுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நடத்தினதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டத்தைப் பற்றி பிரபல தமிழ், ஆங்கில நாளேடுகளில் முழு பக்க விளம்பரங்கள் வாரக் கணக்கில் வெளிப்பட்டிருந்தன. நகர் முழுவதும் மற்றும் சுமார் 30 கி.மீ வட்டத்தில் உள்ள பட்டி தொட்டிகளிலும் பலவண்ணச் சுவரொட்டிகள் - நகரின் நுழைவாயிலில் அரசியல் தலைவர்களுக்கு வைக்கப்படுகிற அளவுக்கு கட் அவுட். அதுபோக லட்சக் கணக்கில் கைப்பிரதிகள் வீதிகள் தோறும் ஆட்டோவில் அறிவிப்புகள்.

பல இலட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற இந்தக் கூட்டத்திற்கு வண்ண விளக்குகள், ஆயிரக்கணக்கில் செலவிட்டு

ஆளுயர மேடை, வீடியோ கவரேஜ் என்று ஏதேதோ புதுமைகள், மைதானத்தைச் சுற்றிலும் ஏராளமான கடைகள் அவைகளில் 'பிரபலங்கள்' எழுதியதாகச் சொல்லப்படுகிற நூல்கள், அவர் பாடிய கேஸட்டுகள், அன்னாருடைய உருவம் பொறித்த பேட்ஜ்கள், ஸ்டிக்கர்கள், பைபிள்கள்கூட இருந்ததாக ஞாபகம், வியாதி தீர்க்கும் எண்ணெய் வியாபாரம் விற்கிறவர்கள், வாங்குபவர்களுடைய பேரங்கள், போதாதற்கு சுண்டல், பாப்கார்ன், குழந்தைகளுக்கு பலூன் வகைகள் என்று ஏறக்குறைய ஒரு தேர்த்திரு விழாவைப் போன்ற சந்தடி.

அங்கே அமைக்கப்பட்டிருந்த ஆளுயர மேடையில் சமயக்குரவர்கள் மட்டுமல்ல அரசு உயர் அதிகாரிகள் (அவர்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களா என்று தெரியவில்லை). நகர்ப் பிரமுகர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருந்தனர்.

இதையெல்லாம் பார்த்த ஒரு கிராம சபை விசுவாசிக்கு ஒரே ஆனந்தம். எவ்வளவு திரளான கூட்டம், எத்தனை பேர் சத்தியத்தைக் கேட்க திரண்டு வந்திருக்கிறார்கள். கடைசிகாலத்தில் எல்லா மக்களும் கிறிஸ்துவை அண்டிக் கொள்வார்கள் என்பது எவ்வளவு உண்மை என்று புளகாங்கிதம் அடைந்து நின்றார். ஆனால் அங்கே வந்திருந்த பக்த கோடிகள் சத்தியத்தை கேட்கிறதற்காக அங்கே வரவில்லை. தங்கள் கட்சித் தலைவர், அரசு அதிகாரிகள் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கும்பொழுது நாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் போனால் மரியாதையாக இருக்காதே, மேலும் என்னதான் செய்கிறார்கள், பேசுகிறார்கள், ஆள் எப்படியிருப்பார்? எந்த மாதிரி உடை அணிந்திருப்பார் என்றும் அவர்கள் விளம்பரப்படுத்தின மாதிரி வியாதிகள் நீங்குதா? பேய்கள் ஒடுகிறதா? என்று வேடிக்கை பார்க்கிறதுக்கும் தான் வந்திருக்கிறார்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியாது, பாவம்!

கும்பகோணத்தில் மகாமகத்தின் போது கூடிய கூட்டத்தையும் அங்கு பக்தகோடிகள் மிதிபட்டுச் செத்ததையும் அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

சற்றே நகர்ந்து அங்கே நின்று கொண்டிருந்த சில பெரியவர்களிடம் கூட்டத்தின் சிறப்பைப் பற்றி விசாரித்தேன், "இப்படிப்பட்ட கூட்டங் களைப் போட்டு நம்முடைய ஒற்றுமையையும் வலிமையையும் புறஜாதி மக்களுக்குக் காட்ட வேண்டும். ஏனெனில் சமீப காலத்தில் கிறிஸ்தவ மார்க்கம் சுக்கு நூறாக உடைந்து சிதறி, புற மதஸ்தர்கள் மத்தியில் ஒரு

கேலிப் பொருளாகிவிட்டது என்றும், ஆகவே நமக்குள் இருக்கிற வேற்றுமை உணர்வுகளை மறக்க முடியாவிட்டாலும், ஒரு சில நாளைக்காவது மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னால் நாங்கள் ஒற்றுமையாகத் தான் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்ள இது பயன்படும்'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி விட்டு அவருடைய அறியாமை யை எண்ணி வேதனைப்பட்டேன். ஏனெனில் அவர் வெளியிட்ட கருத்து சிந்திக்க வேண்டிய விஷயம். உலகத்து மக்களை திருப்திப்படுத்துவது தான் கிறிஸ்தவ மார்க்கத்தின் தலையாய நோக்கமா? அல்லது பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதும், மகிமைப்படுத்துவதுமா? "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாக விரும்பினார்கள்'' என்று பரிசுத்த ஆவியானவர் யோவான் மூலமாக உரைத்ததை நினைத்துக் கொண்டேன். (யோவான்12: 43).

சுவிசேஷப் பிரகடனம் செய்யப்படுவதின் தலையாய நோக்கம்; மக்கள் மத்தியில் மண்டிக்கிடக்கும் பாவங்களையும், அதனால் விளையும் கேடுகளையும் அதற்குப் பரிகாரமாக தேவன் செய்திருக்கிற ஏற்பாட் டையும் அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டி மனந்திரும்ப வேண்டும்; இல்லாவிட்டால் மடிந்து போவீர்கள் என்று எச்சரிக்க வேண்டும். அதை யோவான் ஸ்நானகனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்களும், சுவிசேஷப் பிரகடனத்தின் மையப் பொருளாக வைத்து தங்கள் பிரசங்கங்களைச் செய்தார்கள். (மத் 3 : 1-10; மாற்கு 1 : 4,5) மத் 11 : 20, லூக் 13 : 1-3, அப் 2 : 38; அப் 3 : 19,20).

ஆனால்,அந்தப் பிரபலப் பேச்சாளர் மனந்திரும்புவதைப் பற்றி வாயே திறக்கவில்லை. பாவத்தின் நச்சுத் தன்மையைப் பற்றி எச்சரிக்க வேயில்லை. அவருடைய இருபது நிமிஷத்துக்கும் குறைவான பிரசங்கத் தில் அவர் கூறியதின் சுருக்கும் : "இயேசு நல்லவர், வல்லவர்; அவரை விசுவாசித்தால் உன் வியாதிகள் நீங்கும். உன் வாழ்க்கை சுபிட்சமடையும், எண்ணங்கள் நிறைவேறும், உன் கஷ்டங்கள் தீரும். குடிசை கோபுரமாகும் என்பது தான். பல இலட்ச ரூபாய் செலவு செய்து கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தின் மீதி நேரமெல்லாம், கேசட் விற்பனை, பற்றாக் குறைத் தொகையை ஈடு செய்ய வசூல் வேட்டை, எங்கேயோ நடந்ததாகச்

சொல்லப்பட்ட சில நோய்கள் குணமான சாட்சியங்கள், வட்ட, மாவட்டச் செயலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கைகள், இளம் பங்காளர் திட்ட சாதனைகள் இத்தியாதிக் காரியங்களே.

அருமை நண்பர்களே! பேயோட்டுவதற்கும் தாயத்து எண்ணெய் விற்பனை செய்யவும் மோடி மஸ்தான்களும், சாலையோர சாமியார் களும் இருக்கிறார்கள். நோய்களை குணமாக்க மருத்துவ விஞ்ஞானம் அரும்பெரும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு சமூக நலத்துறை இருக்கிறது. குடிசைகளை கோபுரமாக்க குடிசை மாற்று வாரியம் செயல்படுகிறது. பொறியியற் கல்லூரிகளை நிறுவ கொங்கு வேளாளர்களும், குலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் பாவத்தின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்க இயேசு கிறிஸ்துவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? ஆகவே கவிசேஷகர்களே, அவர் செய்த அந்த மாபெரும் தியாகத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம். மனிதனை ஆட்டிப் படைத்து அழிவுக்கு அழைத்துச் செல்வது பாவமே. அந்த பாவத்தின் நச்சுத்தன்மையை உணரமுடியாமல் மக்களின் கருத்தை பிசாசு குருடாக்கி விட்டான். (II கொரி 4 : 4) அந்தக் குருட்டுத்தன்மை நீக்கப்பட்டு பாவத்தினால் வரும் கேடுகளை தெளிவாகப் பார்க்கும்படி அவர்களுக்குப் பிரகாசமான மனக் கண்களைத் தர வேண்டும் என்று மன்றாடி ஜெபியுங்கள் (எபே 1 : 19) அதற்கேற்ற சத்தியங்களைப் போதியுங்கள்.

"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (I தீமோ. 4 : 8). அதாவது சரீர முயற்சி உலக சம்பந்தமான காரியங்களை மேற்படுத்த கொஞ்சம் உதவியாக இருக்கலாம். ஆனால் தேவபக்தியானது இம்மை யிலும் மறுமையிலும் நன்மை பயக்கும் என்கிறார் பவுலடியார்.

சமூக சேவையா, இறைப்பணியா என்ற சவாலுக்கு அப்போஸ் தலர்கள் எடுத்த நிலை என்ன? ஆதித் திருச்சபையிலே ஒரு பிரச்சனை. கிரேக்க விதவைகள் சரியானபடி பராமரிக்கப்படவில்லை என்று ஒரு புகார் அப்போஸ்தலருடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த பதிலை அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் வாசியுங்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தை போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல.

ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

நாங்களோ, ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்'' என்றார்கள் (அப். 6 :2-4)

சகோதரர்களே, அப்போஸ்தலருடைய ஆத்தும பாரத்தை சுவிசேஷம் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியத்தை, அவசரத்தைக் கவனியுங்கள்''அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று வேதனைப்பட்டு மனதுருகுகிறாரே நமது ஆண்டவர் (மத் 9 : 23 - 37) இன்றைக்கு அதைவிட நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்தியாவின் 85 கோடி மக்களில் ஐந்து சத மக்களே கிறிஸ்துவை அறிந்திருந்தவர்கள். உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒரு முறை கூடக் கேள்விப்படாத கோடிக்கணக்கான மக்கள் இருக்கின்றனரே. அவர்களைப் பற்றி நம்முடைய பாரம் என்ன? "பணத்தை வாங்குவதற்கும் வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடு மாடுகளை யும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குவதற்கும் இது காலமா? என்று எலிசா தீர்க்கதரிசி அவனுடைய பொருளாசை பிடித்த வேலைக்காரன் கேயாசியைக் கடிந்து கொண்டாரே, ஏன் என்று எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? பொருளாசை கர்த்தருடைய மகிமையை விழுங்கி விடும் என்பதனாலல்லவா? கேயாசிக்கு இருந்த சூழ்நிலைகளை விட நமக்கு இருக்கிற சூழ்நிலைகள் அதிக சாதகமானது. தேவனுடைய வசனம் நம்முடைய மொழியில் கடந்த காலத் தவறுகளையும் அதன் விளைவுகளையும் எழுதி வைத்திருக்கிறது. (ரோமர் 15-4) அப்படியிருக்க நானும் நீயும் வரம்பெற்றவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அதைவிட கடுமையான குற்றத்தைச் செய்வோமானால் வரும் கோபத்துக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்?

"தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்து ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும், இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் (லூக்; 22 : 47) என்பதன் கருத்தை சிந்தித்துப் பாருங்கள்.

இயேசு நல்லவர் என்பதும் வல்லவர் என்பதும் யாருக்குத் தெரியாது? பிசாசுகள் செய்த அறிக்கையை நீங்கள் ஒரு நாளும் வாசிக்கவில்லையா?" .... இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே . . . என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக் கொள்கிறேன்'' (லூக் 8 : 28) "நசரேயனாகிய இயேசுவே, . . . எங்களைக் கெடுக்கவா வந்தீர், உம்மை

இன்னார் என்று அறிவேன். நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்." (மாற்கு 1 : 24; லூக் 4 : 34) மேற்படி வசனங்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்றும் சத்துருவாகிய சாத்தான் அவருடைய வல்லமையை உணர்ந்திருந்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறதே.

மேலும் அவரை விசுவாசித்தால் போதும், நீ இரட்சிக்கப்படுவாய் என்ற போதனை சரியா? அப் 20 : 26 கூறுகிற தேவனுடைய முழு ஆலோசனை இது தானா? அப்படியானால் யாக்கோபு நிருபம் கூறுகிற கீழ்க்கண்ட வசனங்களுக்கு என்ன பொருள்? 2-ம் அதிகாரம் 14-26 வாசித்துத் தியானியுங்கள்.

கர்த்தருடைய ஊழியர்களே, வீண் பெருமைக்கும், இழிவான ஆதாயத்துக்கும், பேருக்கும், புகழுக்கும், அலைவதை விட்டு விட்டு எளிமையாய், நேர்மையாய் ஆத்தும பாரத்தோடு கர்த்தரைச் சேவியுங்கள். இறைவன் அளிக்கும் எந்த வரமும் அவரை மகிமைப்படுத்துவதற்காகக் கொடுக்கப் பட்ட நன்கொடை. அதை உங்கள் புகழுக்கோ, செல்வாக்குக்கோ, நிதி திரட்டுவதற்கோ பயன்படுத்துவது மன்னிக்க முடியாத குற்றம். "அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்" என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவைத் தாளிடும் நிலைக்கு ஆளாகாதபடி திருந்தி நடவுங்கள் (மத் 7 : 21 - 23).

"வைத்தியர்களே உங்களை முதலில் குணமாக்கிக் கொள்ளுங்கள்" என்று கர்த்தரின் கடிந்து கொள்ளுதலுக்கு முதலாவது நாம் கீழ்ப் படிவோம், பின்னர் மற்றவருக்குப் பிரசங்கிப்போம்.

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்து கிறேன். (I கொரி 9: 27) என அப்போஸ்தலன் பவுல் சொன்னது நமக்கும் பொருந்தும்.

### பிரசங்கம்

வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.

அப் 20:7

# கிறிஸ்துவின் சபை என்றால் என்ன?

நமது நண்பர்கள் நம்மிடத்தில் அடிக்கடி புதிய ஏற்பாட்டுச் சபை என்றால் என்ன? அது மற்ற சபைகளைக் காட்டிலும் வேறுபட்டதா? அதற்கு ஒரு விசுவாசப் பிரமாணம் உண்டா? அது எவற்றை விசுவாசிக்கிறது என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள். அவர்கள் ஆர்வத்தை மெச்சுகிறோம். அவர்களுக்குப் பயன்தரும் வகையில் சில விளக்கங்களைக் கொடுத்து இருக்கிறோம். தயவு செய்து வாசித்து சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

கிறிஸ்துவின் சபை புதிய ஏற்பாட்டு சபையாகும். சபை என்றால் என்ன என்றும், கிறிஸ்தவர்கள் என்ன போதிக்க வேண்டும் என்றும் சொல்லுவதற்கு கிறிஸ்துவிற்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் அதிகாரம் உண்டு.

கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் மக்களனைவருடைய கருத்தும் அதுதான். ஸ்தாபன அமைப்பு, பெயர் ஆராதனை, மனம் மாறி குணப்படுத்துதற்கான விதிமுறைகள், கிறிஸ்தவ ஜீவியத்தின் தத்துவங்கள் ஆகியவற்றிலும் புதிய ஏற்பாட்டில் சபை எந்த மாதிரி இருந்ததோ அதே மாதிரிதான் இன்றிருக்கிற சபையும் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அங்கத்தினர்கள் தங்களுடைய பலவீனங்களையும் குறைகளையும் அறிந்திருக்கின்றனர். அதே சமயத்தில் தேவன் சபைக்காக வைத்திருக்கும் சகல நிறைவுகளையும் பரிபூரணத் திட்டத்தையும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். அனைத்து மக்களும் நன்கு படித்து புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் மக்களனைவரோடும் மன்றாடுகின்றனர்.

கிறிஸ்துவ மார்க்கத்தின் முழு அமைப்பும் கிறிஸ்துவின் தெய்வீகம், அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் விசுவாசிக்கின்றனர். (1 கொரி 15 : 1 -4). ஏனென்றால் அவர்கள் எல்லாவற்றிலும் புதிய ஏற்பாட்டையே பின்பற்ற முயற்சிக்கிறார்கள். இயேசு தேவனுடைய தெய்வீகக் குமாரன், கன்னிகையினிடத்தில் பிறந்தார். பூமியிலிருந்த போது அற்புதங்களைச் செய்வதற்கு தேவனுடைய வல்லமை பெற்றிருந்தார். அவருடைய

வாழ்க்கையும், மரணமும் பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை நிறை வேற்றியது. சிலுவையில் கொல்லப்பட்டார். தேவனுடைய வல்லமையால் மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டு ராஜாவாக உயர்த்தப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்றெல்லாம் அவர்கள் இயேசுவை மதிக்கின்றனர்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் தேவ ஆவியினால் ஏவப்பட்டவர்கள் என்றும், ஆதலால் புதிய ஏற்பாடு சத்தியம் என்றும், அது தேவனிடமிருந்து மனிதனுக்கு கிடைத்த முழுமையான, இறுதியான வெளிப்பாடு என்றும் சபையினர் விசுவாசிக்கின்றனர். (யோ. 16 : 13, IIதீமோ 3 : 16, 17, யூதா 3).

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், பழைய ஏற்பாடும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்றும், அது தேவனுடைய நித்திய திட்டத்தின் ஒரு பகுதி என்றும் கிறிஸ்துவுக்குள் நம்மை நடத்து வதற்கு உபாத்தியாயிருக்கிறது அல்லது ஆயத்தப்படுத்துவதாயிருக்கிறது என்றும் விசுவாசிக்கின்றனர். (கலா. 3:24).

பழைய ஏற்பாடு (பழைய பிரமாணம்) நடுவிலிராதபடி எடுத்து போடப்பட்டு சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டது என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது (கொலோ 2 : 14), பழைய பிரமாணம் ஒழிந்த பின்பு, புதியதும், மேன்மையானதுமான உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. (எபி 8 : 6- 7, 9 : 15-18).

புதிய ஏற்பாட்டை விசுவாசப் பிரமாணமாகவும், நடைமுறையாகவும் பழைய ஏற்பாட்டை மாதிரியாகவும் பின்பற்றுகின்ற கிறிஸ்துவின் சபையார், வேதம் பேசுகின்ற இடத்தில் தாங்களும் பேசுகின்றனர். வேதம் அமைதியாயிருக்கின்ற இடத்தில் தாங்களும் அமைதியாயிருக்கின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு இதுவே தர்க்கரீதியாக பாதுகாப்பான, வேதமுறை அல்லது வழி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

## புதிய ஏற்பாட்டிற்குக் கீழ்படியுங்கள்

புதிய ஏற்பாட்டில் இல்லாத ஒரு கொள்கையை உட்புகுத்துவதோ, புதிய ஏற்பாட்டிலுள்ள எந்த கட்டளைக்காவது கீழ்ப்படிய மறுப்பதோ, அல்லது புதிய ஏற்பாட்டில் இல்லாத எந்த வழக்கத்தையாவது கடைப் பிடிப்பதோ என்பது தேவனுடைய போதனைகளோடு கூட்டுவதும் அல்லது குறைப்பதுமே யாகும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

தேவன் சகல அதிகாரத்தையும் கிறிஸ்துவிற்கு கொடுத்திருக்கிறார் என்றும் அந்த கிறிஸ்துதான் இன்று தேவனுடைய பேச்சாளராக

இருக்கிறார் என்றும் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. (மத் 28 : 18, எபி 1 : 1-2) கிறிஸ்து தனது சீடர்களுக்கு கொடுத்திருக்கும் கட்டளைகளைப் புதிய ஏற்பாடு மட்டுமே அறிவிப்பதால் கிறிஸ்தவ மார்க்க உபதேசத் திற்கும், நடைமுறைக்கும் புதிய ஏற்பாடு மட்டுமே அடிப்படையாய் இயங்க முடியும்.

இதுதான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களுக்கு அடிப்படை யாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டை எவ்விதத்திலும் மாற்றாமல் போதிப் பதன் மூலம் மனிதர்கள் கிறிஸ்தவர்களாக வழிகாட்ட ஒரே வழி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்பது பொருத்தமானது என்று நம்புகின்றனர்.

ஏன் கிறிஸ்துவுக்கு மட்டும் கீழ்ப்படிந்து ஒரு கிறிஸ்தவனாக மட்டும் மாறி தொடர்ந்து கிறிஸ்தவனாக மட்டும் இருக்கக்கூடாது?

ஏன் புதிய ஏற்பாட்டில் இல்லாத ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்?

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் நிலையை விளக்குவதற்கு ஒரு சரித்திரக் கண்ணோட்டம் உதவியாக இருக்கும். கீழே வாசியுங்கள்.

வேதத்தில் பல முறை ராஜ்யம் என்று சொல்லப்பட்டுள்ள சபையின் ஸ்தாபிதம், தீர்க்கதரிசிகளாலும் யோவான் ஸ்நானகனாலும் முன்னு ரைக்கப்பட்டது. இயேசு இப்பூமியிலிருந்த போது தன்னுடைய சபையை கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். (மத். 16 : 18).

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதல் பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகையானது சபையின் ஸ்தாபிதத்தை அடையாளப்படுத்தியது என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு விசுவாசிக்கின்றனர்.

அந்த நாளுக்கு முன்பு சபையின் ஸ்தாபிதம் ஒரு எதிர்கால சம்பவமாகவே வசனங்களில் சொல்லப்பட்டு வந்தது. ஆனால், பெந்த கொஸ்தே நாளுக்குப் பின்பு, சபை ஏற்பட்டுவிட்ட ஸ்தாபனமாகவே வசனங்களில் சொல்லப்படுகிறது.

## அப்போஸ்தலர்களுடைய உபதேசம்

கர்த்தருடைய சபையின் முதல் அங்கத்தினர்கள் அதாவது எருசலே மிலுள்ள பிராந்திய சபை அங்கத்தினர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தை தவறற்ற உபதேசம் என்றும், அதுவே இறுதியானது

என்றும் ஏற்றுக் கொண்டனர். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப். 2 : 42).

காலம் கடந்து செல்லச் செல்ல பல கிறிஸ்தவர்களுடைய வாஞ்சையும், உறுதியும் தளர்ந்து போயிற்று. அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக ஒரு சிலர், அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திற்கு மாறுபாடானவைகளை போதிக்கவும் கடைப்பிடிக்கவும் தொடங்கினார்கள்.

ஆரோக்கியமான உபதேசத்தை விட்டு மக்கள் இப்படி விலகிப் போவார்களென்று, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தனர். கீழ்க்கண்ட வசனங்களைக் கவனிக்கவும். "நான் (அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார்) போன பின்பு மந்தையைத் தப்பிவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும், உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்". (அப்-28:29-30).

". . . . எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களால் கற்றுக் கொள்ளவும் . . ." (1 கொ. 4 : 6).

இவ்வளவு கட்டளைகள் இருந்த போதிலும், இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, இடைக்காலங்கள் மறுமலர்ச்சிக் காலங்கள் வரை, சபையின் ஸ்தாபன அமைப்பு ஆராதனை, உபதேசம் ஆகியவைகளை புதிய ஏற்பாட்டு சபையிலிருந்து முற்றிலும் மாறுபடும் அளவிற்கு சத்தியத்தை விட்டு விலகும் நிகழ்ச்சி ஒன்றன் பின் ஒன்றாக நடந்து கொண்டே வந்தது.

சபையில் புகுத்தப்பட்ட புதுமைகளை வரலாறு ஆதாரப் பூர்வமாய் அறிவிக்கிறது.

1. வசனம் அங்கீகரிக்காத சபை உத்தியோகங்கள்.
2. விசேஷித்த குருமார்கள் நியமனம் செய்யப்படுதல்.
3. சபை அமைப்பு, ஆராதனை, உபதேசம் ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு மத ஆலோசனை சங்கங்கள்.
4. முழுக்கு அகற்றப்பட்டு, தெளிப்பு நடைமுறைக்கு வருதலும் குழந்தைகள் தெளிப்பை பெறுதலும்.
5. ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுதல்.

இடைக்காலத்தின் இறுதியில் ரோம சபையின் நடைமுறையையும், குருமார்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்து சில விடுதலை விரும்பிகள் கலகம் செய்தனர். மதத்திற்குரிய காரியங்களில் வேதாகமத்திற்கு மட்டுமே முழு அதிகாரம் உண்டு என்று வாதிட்டனர். இவர்களில் மார்ட்டின் லூதர், ஜான் கால்வின், அல்ரிச் ஸ்விங்லி ஆகியோர் சிறப்பானவர்கள். இந்தத் தலைவர்களை பலர் பின்பற்றினார்கள். இறுதியில் இவர்களது உபதேசம் துரதிஷ்டவசமாய் பல்வேறு கொள்கைகளாய் உருவெடுத்தது.

## வேதத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்

மேற்கண்ட காரணங்களால் பல பிரிவு - சபைகள் எல்லா இடங்களிலும் தோன்றின. ஒவ்வொரு கட்டமும் வினோதமான பெயரும், ஸ்தாபன அமைப்பும், போதனையும் நடைமுறையும் உடையதாய் இருந்தன.

கி.பி. 1700ம் ஆண்டின் இறுதியில் உலகின் பல்வேறு பகுதியிலுள்ள பல்வேறு பிரிவு சபைகளைச் சேர்ந்த மக்கள் தனித்தனியாய் வேதத்தைப் படித்து கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர்.

நாம் ஏன் பல்வேறு பிரிவு சபையையும் ரோமன் கத்தோலிக்க சபையையும் கடந்து எளிமையும், தூய்மையும் நிறைந்த முதல் நூற்றாண்டு சபைக்கு செல்லக்கூடாது?

நாம் ஏன் மீண்டும் வேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருக்கக் கூடாது?

அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களும் விதைத்த அதே விதையை (லூக்கா 8 : 11) நாமும் விதைத்து அவர்களைப் போல நாமும் ஏன் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கக்கூடாது என்று அவர்களை வினவினார்கள்.

இவர்கள் மற்றனைவரையும் சந்தித்து, பிரிவு சபைகளையும் மனிதக் கொள்கைகளையும் உதறித் தள்ளி விட்டு வேதத்தை மட்டும் பின்பற்றும் படி அவர்களிடம் மன்றாடினர்.

இவர்கள் 'புதிய ஏற்பாட்டு' உபதேசத்தை மட்டும் உயர்த்த வேண்டுமேயொழிய இந்த மனிதர்களை அல்ல என்று தொடர்ந்து போதித்தார்கள்.

விசுவாசத்திற்குரிய செய்கைகளைப் பொறுத்த வரையில் வேதத்தில் ஆதாரப்பூர்வமாய் சொல்லப்பட்டவைகளைத் தவிர வேறு எதுவும் மக்களிடம் எதிர்பார்க்கப்படுவதில்லை என்றும் அவர்கள் போதித்தார்கள்.

வேதாகமத்திற்கு திரும்ப செல்வது என்பது மற்றொரு பிரிவு சபையை ஆரம்பிப்பது அல்ல; ஆனால் ஆதி சபைக்கு திரும்புவது என்பதை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இம்மக்கள் பிராந்திய சபை அடிப்படையில் சபை ஆட்சியை அமைத்தனர்.

இவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றனர். இவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் பாட்டுப் பாடுகின்றனர்.

மனம் மாறி குணப்படுவதற்கு, விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் ஞானஸ்நானம் ஆகியவை அவசியம் என்று அவர்கள் பிரசங்கிக்கின்றனர்.

சபையின் தலையாய நோக்கம் சுவிசேஷத்தை அறிவிப்பது என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். அதாவது சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், ஏழைகட்கு உதவுவதும், அனைத்து மக்களுக்கும் நன்மை செய்வதுமே சபையின் பணி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அவர்கள் எந்தப் பிரிவு சபையின் பெயரையும் தரித்துக் கொள்ளாமல் கிறிஸ்துவின் சபையார் என்று தங்களை அழைத்துக் கொள்வது மட்டுமே புதிய ஏற்பாட்டு மாதிரியை உறுதிபடுத்த முடியும் என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அவர்கள் தங்களை கத்தோலிக்கர்கள் என்றோ அல்லது பிராட்டஸ்டண்டுகள் என்றோ அழைப்பதில்லை. ஏனென்றால் கத்தோலிக்க இயக்கமோ அல்லது ப்ராட்டஸ்டண்டுகள் இயக்கமோ முதல் நூற்றாண்டில் இருக்கவில்லை என்றும் இவை இரண்டுமே புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்படவில்லை என்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

மற்றொரு உண்மை என்னவென்றால், கடந்த ஐம்பது ஆண்டுகளாக உலகில் பல நாடுகளிலுள்ள பல பிரிவு சபைகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிலுள்ள கிறிஸ்துவின சபைகளைக் குறித்து எவ்வகையிலும் கேள்விப்படாமல் தாங்களே வேதத்தை நன்கு படித்ததன் விளைவாக தாங்கள் அங்கம் வகித்த பிரிவு சபைகளை விட்டு விலகி அமெரிக்காவிலுள்ள கிறிஸ்துவின் சபையாரைப் போலவே தாங்களும் ஆராதனை செய்து போதித்து வருகிறார்கள் என்பதே.

இதற்கு ஒரு உதாரணம் அஸ்ஸாமிலுள்ள ஒரு கூட்டத்தாரும் நைஜீரியாவிலுள்ள மற்றொரு கூட்டமும் மத்திய ஐரோப்பாவில் இப்படி கூட்டங்களும் காணப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்னும் வேண்டுகோளில் விருப்பமாயிருக்கிற மக்களை கிறிஸ்துவின் சபையார் எல்லா இடங்களிலும் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது பெரிய அளவில் திட்டமிட்டு போதித்து, மக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிராந்திய சபைகளை ஸ்தாபித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு பிராந்திய சபையும் பிராந்திய அளவில் இயக்கப் படுகிறது. சபை அங்கத்தினர்கள் வேதாகமத்தை தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட வசனம் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். இயேசு தேவனுடைய தெய்வீகக் குமாரன் என்றும் அவர் தான் சபைக்குத் தலைவர் என்றும் அவர் புதிய ஏற்பாட்டின் மூலம் தன்னை பின்பற்றுகிறவர்களோடு பேசுகிறார் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

ஆவிக்குரிய உபதேசம் அல்லது ஆவிக்குரிய நடைமுறையைப் பற்றிய கேள்விகளுக்கு சபை அங்கத்தினர்கள் பதிலளிக்கையில் "புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?" என்ற கேள்வியைக் கேட்கிறார்கள்.

உதாரணமாக, சபையின் ஸ்தாபன அமைப்பைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?

புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஒரே ஸ்தாபன அமைப்பு அல்லது சபை அரசாங்கம், மூப்பர்கள், கண்காணிகள் அல்லது மேய்ப்பர்களால் (இந்த மூன்று வார்த்தைகளும் ஒரே வேலையைக் குறிப்பவை. ஒரே பொருளில் மாறி மாறி பயன்படுத்தப்பட்டுள்ளன) நடத்தப்படும் பிராந்திய சபையேயாகும். இந்த மனிதர்கள் எப்பொழுதும் பன்மையிலேயே அழைக்கப்படுகிறார்கள். இவர் ஒரு பிராந்திய சபையை மட்டும் மேற்பார்வை செய்பவர்கள் (அப். 20 : 28). சபையில் மூப்பர்களோடும், மூப்பர்களுக்குக் கட்டுப்பட்டும் சபையில் வேலை செய்கிற சில விசேஷித்த வேலைக்காரர்களே சபையின் உதவிக்காரர்கள் எனப் படுவர். ஒரு அதிகாரி, ஒரு சபையையே அல்லாமல் பல பிராந்திய சபைகளை மேற்பார்வை செய்வது புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் காணப்படாத ஒரு எடுத்துக்காட்டாகும். பல அதிகாரிகளடங்கிய குழு ஒன்று பல பிராந்திய சபைகளை மேற்பார்வை செய்வதும் புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒன்றே.

ஆகையால், சபை அங்கத்தினர்கள், மாசற்ற பிராந்திய சபையின் முறைதான் வேதவசனப்படி சபையின் ஸ்தாபன அமைப்பு முறை என்னும் கருத்தை உடையவர்களாயிருக்கின்றனர். இது ஒரு தத்துவ மேயன்றி, வசதிக்கேற்ப அமைப்பை மாற்றிக் கொள்ள அனுமதியோ அல்லது மத சுதந்திரமோ அல்ல.

சபையின் பெயரைப் பற்றியும் அதன் அங்கத்தினர்களைப் பற்றியும் புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (அப் 11 : 26 : I பேதுரு 4 : 16) மொத்தத்தில் அவர்கள்'சபை' என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் கூட்டம் அந்த இடத்திலுள்ள 'சபை' என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக அந்தியோகியாவிலுள்ள சபை, ரோமாபுரியிலுள்ள சபை அல்லது ஆசியாவிலுள்ள ஏழு சபைகள் ஆகிய இவைகளைக் குறிப்பிட லாம். ஆகையால் இன்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள உதாரணமாக ஈரோடு என்னுமிடத்தி லுள்ள சபையை ஈரோடு கிறிஸ்துவின் சபை என்றும் காங்கேயத்தில் இருக்கும் சபையை காங்கேயம் கிறிஸ்துவின் சபை என்றும் அழைக் கின்றனர். சபை அல்லது அவர்கள் எந்த இடத்தில் வசிக்கிறார்களோ அந்த இடத்திலுள்ள சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள் என்று நாம் பொருள் கொள்ளவேண்டும். இதர கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருப்பதால் அவர்களை சகோதரர்கள் என்று அவர்கள் அழைக்கிறார்கள். (ரோமர் 12 : 5 ; I கொரி 12 : 12).

கிறிஸ்தவர்களனைவரையும் மொத்தத்தில் பொதுவாக 'சபை' என்று சொல்லுகிறோம்.

## பிரிவு சபைக் கூட்டத்தாரின் தவறுகள்

சபையை அதாவது அனைத்துக் கிறிஸ்தவர்களின் பொதுக் குழுவை "கிறிஸ்துவின் சபையார்" (ரோமர் 16 : 16) என்றும் தேவனுடைய சபை (I கொ. 1 : 2) என்றும், கர்த்தருடைய சபை (அப். 20 : 28) என்றும் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது.

சபையைக் குறிப்பிடும் வேறுபல விளக்க சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. ஆனால் பிரிவு சபைகளின் பெயர்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. அவைகளை பயன் படுத்துவது தவறு என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் விசுவாசிக் கின்றனர். (I கொ. 1 : 10 -13).

ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனையைக் குறித்து புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது என்பதில் கிறிஸ்துவின் சபையார் அக்கறை யுள்ளவர்களாயிருக்கின்றனர்.

1) அவர்கள் பொது ஆராதனையில் ஜெபிக்கிறார்கள் ஏனெனில் அப்படி ஜெபிக்கும்படி புதிய ஏற்பாடு போதிக்கிறது.

2) அவர்கள் சபைப் பொதுக் கூட்டங்களில் போதிக்கிறார்கள். ஏனென்றால் புதிய ஏற்பாடு இப்படிப்பட்ட மாதிரிகளைக் குறிப்பிடுகிறது.

3) அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையை வேதம் கர்த்தருடைய நாள் என்றும், வாரத்தின் முதல் நாள் என்றும் குறிப்பிடுகிறது. "அவனவன் வாரத்தின் முதல் நாள் என்றும் குறிப்பிடுகிறது. "அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" (I கொ. 16 : 2) என்னும் வசனத்தை அவர்கள் பின்பற்றுகிறார்கள்.

4) அவர்கள் ஆராதனையில் பாட்டு பாடுகிறார்கள். ஆனால் அவர்கள் கருவி இசையைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் அதைக் குறித்து மாதிரிகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதுமில்லை என்று அவர்கள் விசுவாசிப்பதால் கருவி இசையைப் பயன்படுத்துவது தேவனுடைய பிரமாணத்தை மீறுவதாகும் என்று நம்புகிறார்கள். "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும் (கொலோ. 3 : 16) என்பதையும், அப்படிச் செய்யும்போது, "இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்தனம் பண்ணவேண்டும்" (எபே. 5 : 19) என்பதையும் அவர்கள் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறார்கள்.

5) அவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் ஒன்று கூடி அப்பம் பிட்கிறார்கள் அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறார்கள். ஏனெனில் அப்படி செய்வதுதான் புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றுவதாகும் (அப் 20 : 7) அவர்கள் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருவதற்காக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறார்கள் (லூக்கா 22 : 19, I. கொ. 11 : 26) அப்பம் இயேசுவின் சரீரத்தையும், ரசம் அவரது இரத்தத்தையும் நினைவுபடுத்துகிறது என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். (மத். 26 : 26 -29).

முழுக்கின் மூலம் 'திரு முழுக்கை' (ஞானஸ்நானம்) பெறுதல்

மனம் மாறி குணப்படுவதைக் குறித்து அல்லது இரட்சிக்கப் படுவதைக் குறித்து கிறிஸ்துவின் சபையார் என்ன போதிக்கிறார்கள்?

1) இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தல் (எபி.11 : 6) தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் வரும் விசுவாசமே (ரோமர் 10 : 17). மனம் திரும்புவதற்கு வழி நடத்தும் விசுவாசம்.

2) மனதிரும்புதலும் அப்படியே கட்டளையாகக் கொடுக்கப் பட்டுள்ளது. (அப் 2 : 38 : 17 : 30).

3) அறிக்கையிடுதல் மனந்திரும்பிய ஒரு விசுவாசி கிறிஸ்துவில் தனக்குள்ள விசுவாசத்தை பகிரங்கமாய் வெளியில் சொல்லுவது (I தீமோ 6:12 ரோமர் 10 : 9-10).

4) ஞானஸ்நானம் கீழ்ப்படிய வேண்டிய மேற்சொன்ன காரியங் களோடு ஞானஸ்நானம் பாவ மன்னிப்பிற்கென்று கொடுக்கப் படுகிறது. (அப். 2:38) ஞானஸ்நானம் தான் ஒருவனை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கிறது. (I. கொ. 12 : 13).

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் ஒரே ஞானஸ்நானத்தைக் குறித்துப் போதிக்கின்றனர். (எபே. 4 : 5) அது 'முழுக்கு' என்பதே. இதன் மூலவார்த்தைக்கு முழுக்கு என்றுதான் பொருள்.

புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தை, "அடக்கம் பண்ணப்படுதல்" என்று குறிப்பிடுகின்றது. (ரோமர் 6 :4, கொலோ. 2 : 12).

கிறிஸ்துவின் சபையார் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப் பதில்லை. ஏனெனில் குழந்தைகள் விசுவாசிக்கவோ, மனந்திரும்பவோ, விசுவாசத்தை அறிக்கையிடவோ இயலாதவர்கள். ஆகையால் குழந்தை கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியானவர்கள் அல்ல என்று கிறிஸ்துவின் சபையார் விசுவாசிக்கிறார்கள்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையால் வரும் இலவச ஈவு என்றும் அது மனிதனுடைய கிரியைகளினாலே சம்பாதிப்பதல்ல என்றும் புதிய ஏற்பாடு போதிக்கிறது என்று சபை அங்கத்தினர்கள் விசுவாசிக் கிறார்கள் (எபே. 2 : 8 -9) இருப்பினும் இந்த இலவச ஈவு ஒருவனை கீழ்ப்படிதலுக்குள் வழி நடத்துகின்ற ஜீவனுள்ள செயல்படும் விசுவாசத் தினால் வருகிறது என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். அவர்கள் தங்களது தகுதியை நம்பாமல் தங்களை பாவத்திலிருந்து சுத்திகரித்துக் கொள்ள இயேசுவின் இரத்தத்தையே நம்பி இருக்கிறார்கள். (I யோ. 1 : 7).

**மதப்படங்களில்லை**

நித்திய மகிழ்ச்சிக்குரிய இடம் பரலோகம் என்றும் நித்திய தண்டனைக்குரிய இடம் நரகம் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். காரணம், இதுவும் கிறிஸ்துவின் போதனையே (மத். 25 : 31-46).

கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் மறைதிரு (ரெவரெண்டு) போன்ற மதப்பட்டங்களை தரித்துக் கொள்ளுவதில்லை. இப்படிபட்ட பட்டங்கள் புதிய ஏற்பாட்டின் உபதேசத்திற்கும், தன்மைக்கும் மாறுபட்டது என்றும், ஒரு ஊழியரின் ஊழியத்திற்கும், பொறுப்புகளுக்கும் கூட இது மாறுபட்டது என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். குருக்கள் என்று அழைக்கப்படுகிறவர்களுக்கும் பாமர மக்களுக்குமிடையே புதிய ஏற்பாடு எந்த வேறுபாட்டையும் கூறுவதில்லை என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். அதோடு "பாஸ்டர்" என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் ஒரு மூப்பருடைய அல்லது கண்காணியினுடைய பணியைக் குறிக்கிறதேயன்றி ஒரு சுவிசேஷகனுடைய அல்லது பிரசங்கியின் பணியைக் குறிப்பது அல்ல என்பதையும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களனைவரும் தங்களுடைய தினசரி நடத்தையைப் புதிய ஏற்பாட்டின் தரத்திற்கு சரியாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் போதிக்கிறார்கள். அடிப்படைக் கருத்துக்களாகிய, உண்மை, நியாயம், உழைப்பு ஆகியவைகளே கிறிஸ்தவர்களை அவர்களது அனைத்து உறவு முறைகளிலும் வழி நடத்த வேண்டும்; ஏனென்றால் இத்தத்துவங்கள் புதிய ஏற்பாட்டில் போதிக்கப் பட்டுள்ளன என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

அதோடு விவாகம், விவாகரத்து ஆகியவைகளைப் பற்றியும் கிறிஸ்துவின் பிரமாணம் கடைபிடிக்கப்பட வேண்டும். விவாகரத்து செய்யப்படுவதற்கும், மறுமணம் செய்து கொள்வதற்கும் ஒரே ஒரு அடிப்படை மட்டும் உண்டு. இருவரில் ஒருவர் வேசித்தனம் என்றும் குற்றம் புரிவதேயாகும் (மத். 19 : 9) கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் இதை கிறிஸ்துவின் பிரமாணம் என்று போதிக்கிறார்களேயொழிய சபையின் கூட்டம் என்று போதிப்பதில்லை.

கிறிஸ்தவர்கள், இவ்வாறு அமைக்கப்பட்ட சபை அரசாட்சியின் நற்குடி மக்களாய் விளங்கவேண்டும் என்றும் கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது. (ரோமர் 13 : 1-7).

ஆகையால், முதல் நூற்றாண்டில் சபையார் பின்பற்றிய அதே உபதேசத்தை இருபதாவது நூற்றாண்டிலுள்ள கிறிஸ்துவின் சபையாரும் வழிகாட்டியாக வைத்துள்ளனர்.

புதிய ஏற்பாட்டை எல்லாக் காரியங்களிலும் கடைபிடிக்கவும், இயேசு கிறிஸ்து மரித்து ஸ்தாபித்த சபையில் இணைந்து கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்க அனைவரையும் கிறிஸ்துவின் சபையினர் தாழ்மையோடும் அன்போடும் அழைக்கின்றனர்.

# இயேசு கிறிஸ்து கட்டிய சபை ஒன்று மட்டுமே

தற்காலத்தில் சபைகள் என்ற பெயரால் பல நிறுவனங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன, அவைகளை நிறுவுகிறவர்களின் நோக்கத்தை நாம் சந்தேகிக்கவில்லை. அவர்களுடைய ஊழிய வாஞ்சையையும், ஆற்றும் தொண்டுகளையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அவைகளை மக்களாகிய நாம் பாராட்டி ஏற்றுக் கொண்டாலும், இரட்சிப்பின் அதிபதி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும் உடைய இயேசு கிறிஸ்து அவைகளை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வாரா?

இந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்வதைவிட வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

மத் 16 : 18ல் "நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று சொல்லியிருக்கிறார். சபையை என்று ஒருமையில் கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

இந்த ஒரு சபை தற்காலத்தில் நாம் காண்கிற பல்வேறு பிரிவு சபைகள் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தேவனால் கட்டி எழுப்பப்பட்டாயிற்று (அப் 2-ம் அதிகாரம் காண்க)

இந்த ஒரே சரீரமாகிய சபையில் தான் பேதுருவும் பவுலும் இன்னும் ஆதியில் வாழ்ந்த கிறிஸ்தவப் பெருமக்களும் அங்கங்களாயிருந்தனர். இதைத்தான் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் ஒரே சரீரம் என்று வர்ணிக்கிறார். (எபே 4 : 4 எபே 1 : 22). அதற்குக் கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். (கொலோ 1 : 18) கிறிஸ்து இரட்சகராகவும், தலையாகவும் இருக்கிற சபை இது ஒன்று மட்டுமே (எபே. 5 : 23).

அப்படியானால் நாம் காண்கிற நூற்றுக்கணக்கான சபைகள் என்று மக்களால் கொண்டாடப்படுகிற இந்தப் பெரிய பெரிய நிறுவனங்களின் நிலையும், அவர்கள் தொழுகைக்காகக் கட்டி வைத்திருக்கும் பிரமாண்டமான கட்டிடங்களின் நிலையும் என்ன?

இதற்கும் இயேசுவே பதில் சொல்லியிருக்கிறார் "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்". (மத் 15 : 13)

ஒரு தலைக்கு ஒரு சரீரம் என்பது தான் இயற்கை ஒரு தலைக்கு நானூறு சரீரங்கள் என்று சொல்வோமானால் அது சிந்திக்கிற மக்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஒரு சரீரத்துக்குப் பத்துத்தலைகள் இருந்ததாக நமது நாட்டில் ஒரு கதை உண்டு. அதையே மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். நாம் ஒரு தலைக்கு நானூறு சரீரம் என்றால் நம்மையும் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள்.

இந்த வேதனைக்குரிய நிலைக்கு ஒர் தீர்வு காணவே முடியாதா? ஏன் முடியாது? தேவன் நமக்குத் தந்திருக்கிற பரிசுத்த வேதாகமத்தில் துணை கொண்டு அதற்கு எளிதில் தீர்வு காணமுடியும். ஆனால் நமக்கு அதில் அக்கறையும் பாரமும் இருக்க வேண்டும். ஏனோ கடந்த ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளாக இம்முயற்சியில் யாரும் தீவிரமாக இறங்கி வெற்றி பெற முடியவில்லை. நம்முடைய நாட்டின் சாபக்கேடான ஜாதி ஒழிப்பைப் பற்றிப் பேசாத தலைவர்கள் கிடையாது. எனினும் ஜாதி ஒழிந்த பாடில்லை. ஏனெனில் அதை ஒழிக்க வேண்டும் என்று தீவிரமாகச் செயல்படுபவர்கள் வெகு வெகு சொற்பம்; அதனால் லாபம் அடைந்து கொண்டிருப்பவர்கள் அதிகம். பாம்பும் சாகக் கூடாது, தடியும் ஒடியக் கூடாது, அது போன்றது தான் சபைப் பிரச்சனையும், காலம் என்று கனியுமோ!

எதற்கும் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறவர்களுக்கு இயேசு கிறிஸ்து கட்டின உண்மையான சபை எது? என்பதைக் கண்டுபிடிக்க ஆர்வம் உள்ளவர்களுக்கு, வேதாகமத்திலுள்ள சில அடையாளக் குறிப்புகளைக் கீழே தந்திருக்கிறோம். காரியங்கள் இப்படியா இருக்கிறது? என்று சோதித்துப் பார்த்துச் செயல்படுங்கள்.

1. சபை என்பது "ஒளியில் உள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்காக பாவ இருளின் அதிகாரத்தினின்று வெளி யேறுவதற்காக கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட சுவிசேஷத்துக்குக் கீழ்ப் படிந்த நபர்களின் கூட்டம். எபி 5 : 8, 9 ; ரோம 1 : 16 கொலோ 1 : 11-13.

அந்தத் திருச்சபை இயேசு கிறிஸ்துவினால் கட்டப்பட்டது மத் 16 :18, அவரே அஸ்திபாரம்; (I கொரி 3 : 11, 12) அவரே தலை (கொலோ 1 : 18;) அவரே சபைக்காக தன்னுடைய மாசற்ற விலையேறப் பெற்ற இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்தவர் (அப். 20 : 28).

3. அந்தத் திருச்சபை தீர்க்கதரிசனங்களின்படி எருசலேமில் கட்டப் பட்டது. (ஏசாயா 2 : 2; அப் 2-ம் அதிகாரம்).

4. அந்தத் திருச்சபை கி.பி. 33ல் அதாவது இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகொஸ்தே பண்டிகையன்று அப்போஸ்தலன் பேதுருவால் துவக்கி வைக்கப்பட்டது. (அப் 2 : 41 -47).

5. அந்தத் திருச்சபையில் அங்கம் வகிப்பதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. பாவத்தை விட்டு மனம் திரும்புதல் (லூக் 13 : 3) கிறிஸ்துவைக் கர்த்தர் என்றும், இரட்சகர் என்றும், அறிக்கையிடுதல் (மத் 10 : 32, 33;) பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம்; (அப் 2 : 38; 22 : 16) மரண பரியந்தம் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில் உறுதியாக இருத்தல்; (வெளி 2 : 10) ஜாதி மத இனவேறுபாடு அற்ற நிலை; யூதர்கள், வேற்று இனத்தவர் என்ற வேற்றுமை அகற்றப்பட்டு ஒரே மனுஷனாகச் சிருஷ்டிக்கப்பட்டு புதியதொரு சமுதாயம் உருவாக்குதல்; (எபே 2 : 15).

6. அந்தத் திருச்சபைக்குத் தெய்வீக நிர்வாக முறை உண்டு. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள் (அப் 14 : 23) தீத்து 1 : 5; அந்த மூப்பர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட தகுதிகளையுடையவர்களாக இருந்தார்கள் (I தீமோ 3 : 1-7) சபையின் பணிகளைச் செய்வதற்கு உதவிக்காரர்கள் இருந்தார்கள் (அப் 6 : 2, 4) அவர்களுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட தகுதிச் சட்டங்கள் உண்டு (I தீமோ : 3 : 7 -13 அங்கே சுவிசேஷகர்களும் இருந்திருக்கிறார்கள் அவர்களுடைய பணி தேவனுடைய வசனத்தைப் போதிப்பது (அப் 21 : 8 எபே 4 : 12; II தீமோ 4 : 5) மேலும் சபையில் மூப்பர்களும், உதவிக் காரர்களும் ஏற்படுத்தும் நிலை வரும்போது அது முழுமையடைகிறது. (பிலி 1 : 1).

7. அந்தத் திருச்சபையில் பல்வேறு பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பல்வேறு திறமைகள் வாய்ந்த அங்கத்தினர்கள் இருந்தார்கள். (I கொரி 12 : 13-31).

8. அந்தத் திருச்சபை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொண்டது (யோவான்4 : 24) அப்போஸ்தலருடைய உபதேசத்தின் அடிப் படையில் ஆராதனை ஒழுங்குகள் இருந்தன. சௌகரியத்துக்கு ஏற்றவாறு பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் போட்டுக் குழப்பிக் கொண்டு, சுய இஷ்டமான ஆராதனை செய்யவில்லை.

சகோதரர்களே மேற்சொன்ன முறையில் நாமும் கூட நடந்தால் இயேசுக் கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் விரும்பி வேண் டிக் கொண்ட ஒற்றுமை ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் பால் மக்களுக்கு மென்மேலும் மதிப்பும் மரியாதையும் ஏற்படும். நம் காலத்திலாவது அதைச் செய்வோமா? கர்த்தர் கிருபை செய்வாராக.

# மேகங்கள் சூரியனை மறைக்க முடியாது; சாத்தானால் கிறிஸ்துவின் சபையை மறைக்க முடியாது.

உலகத் தோற்றம் முதல் மனுக்குலத்தை அழிவுப் பாதையில் தடுத்து நிறுத்துவார் இன்றி நடத்திச் சென்று கொண்டிருந்த சத்துருவாகிய சாத்தான், முதன் முறையாக சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோல்வியைத் தழுவ நேரிட்டது. கர்த்தராகிய இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கு முன்னர் வனாந்தரத்தில் சோதனைக்காரனோடு மோதி, அவனுடைய போராயுதங்களின் அடிப்படை என்று கருதப்படுகிற கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றைத் தகர்த்தெறிந்தார். இதுவே அவனுக்கு மரண அடியாக அமைந்துவிட்டது. அப்பொழுது புற முதுகு காட்டி ஓடிப்போன சாத்தான் அதற்குப் பிறகு நேரடியாக மோதாமல் ஒரு கோழையைப் போல பலரைத் தூண்டிவிட்டு, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைச் சீர் குலைக்க முயற்சிகள் பல மேற்கொண்டான். ஆனால் தொடர்ந்து தோல்வியையே தழுவினான்.

முதலில் சதுசேயர்கள் என்ற கூட்டத்தாரை ஏவி உயிர்த்தெழுதல் இல்லை என்று மக்களை நம்பவைக்க முயற்சித்தான். அது சிலகாலம் தான். கர்த்தர் தாமே உயிர்த்தெழுந்ததின் மூலம் அந்த வாதத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. அப்புறம் வேதபாரகர், பரிசேயர் என்ற கூட்டத்தாரை தனது கருவியாகப் பயன்படுத்தி முன்னோர்களின் பாரம்பரியம், ஓய்வுநாள், ஆசரிப்பு மீறல் என்று குற்றம் கூறி மக்களை ஏவி விட்டு ஆண்டவரின் செல்வாக்கைக் குறைக்க முற்பட்டான். அவர்கள் எந்த மோசேயை உயர்த்திப் பேசி மக்களைத் திசை திருப்ப முயன்றார்களோ அந்த மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த வசனங் களைக் மேற்கோள் காட்டியே அவர்களுடைய வாயை அடைத்தார். தோல்விகள் பொறாமையாக உருவெடுத்து சதிவேலைகளில் இறங்கினான்.

அவருடைய சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவனைப் பயன்படுத்தி இயேசுவைக் காட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்து

கொலை முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணி ஒரு அற்ப திருப்திப்பட்டுக் கொண்டான். ஆனால் உண்மை என்ன? தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற பல்வேறு கால கட்டங்களில் உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களின்படி தேவனால் நடத்தப்பட்ட தொடர் நிகழ்ச்சிதான் இயேசுவின் சரீர மரணம் என்பதை விளங்கிக் கொள்ள வெகு நாட்கள் ஆகவில்லை. மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? என்று கேட்டு வெற்றிப் புன்னகை யுடன் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து தற்காலிக வெற்றி மயக்கத்தில் மிதந்த சாத்தானின் முகத்தில் கரி பூசினார். தன் இறுதி ஆயுதமாகிய மரணத்தின் கூர் ஒடிக்கப்பட்டுவிட்டதால் நிலை தடுமாறிப் போன சாத்தான், இடிந்துபோய் கொஞ்ச காலம் முடங்கிக் கிடந்தான். உயிர்த்தெழுந்த நாதரின் பெயர் மகிமைப்பட்டது. அவரால் கட்டப்பட்ட சபை உருவாகி வளர்ந்து பெருகியது. கூடவே சாத்தானின் பொறாமையும் வளர்ந்தது.

மீண்டும் ஒரு ரவுண்டு. தோற்றுப் போன சதுசேயர்களையும், பரிசேயர்களையும், ரோம அதிகாரிகளையும் ஆலோசனை சங்கத்தா ரையும் கூட்டணி அமைக்கச் செய்து அப்போஸ்தலர்களை மிரட்டிக் காவலில் போடுவித்தான். பாவம் ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கு பயந்து கர்த்தராகிய ஆண்டவரை மறுதலித்த பேடர்கள் தானே என்பது அவனுடைய நினைப்பு. இப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்று தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டவர்கள் என்ற உண்மை அவனுக்குப் புரியவில்லை போலும்!

அதிகாரிகளுடைய மிரட்டலும், சிறைச்சாலையும் அவர்களுடைய இலட்சிய பயணத்தைத் தடுக்க முடியவில்லை. சிறைச்சாலை அவர்களுக்குச் சொர்க்கமாகத் தோன்றிற்று. அப். 16 : 25. இரும்புச் சங்கிலிகளும், சிறைக் கட்டுப்பாடுகளும் விலங்குகளும் ஆண்டவருடைய வல்லமைக்கு முன் எம் மாத்திரம்? ஆச்சரியவிதமாக அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அப். 5 : 19.

ஆனால், ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்லும் அளவிற்கு வெற்றி பெற்று விட்டோம் என்று இறுமாந்திருந்தான். என்ன அதிசயம்! ஒரு கோதுமை மணி சாவதினால் பல கோதுமை மணிகள் உண்டாவதைப் போல், ஸ்தேவானுடைய மரணம் சபை வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும்படி தேவன் செய்த ஏற்பாடு என்பதை புரிந்து கொண்ட பின்னர் வெட்கப்பட்டான். அப். 8 : 4.

அதன்பிறகு மத விஷயத்தில் வைராக்கியம் கொண்டவனும் சிறந்த கல்விமானுமாகிய சவுல் என்ற வாலிபனை பயன்படுத்தி சபையை அழித்துவிடத் திட்டமிட்டான். அந்த சவுல் எருசலேமில் வளர்ந்து வந்த

சபைக்கு பல துன்பங்களைக் கொடுத்தான். ஈவிரக்கமில்லாமல் பெண்கள் குழந்தைகள் என்றும் பாராமல் கொடுமைகள் பல செய்தான். அதோடு திருப்தியடையாமல், தமஸ்கு பட்டணம் வரை செல்ல விரும்பி அங்கு கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மக்களையும் இம்சித்துத் துன்புறுத்தப் புறப்பட்டுச் சென்றான். எதிரியின் வாளைப் பிடுங்கி அவனையே வெட்டி வீழ்த்துவதைப் போன்று எந்த வாலிபனை உபயோகித்து சபையை அழிக்கச் சாத்தான் திட்டமிட்டானோ அதே வாலிபனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள சவுலைச் சந்தித்து ஆட்கொண்டார் அப். 9 : 5, 6.

தன் அனைத்து முயற்சிகளும் கர்த்தருடைய சபையின் வெற்றிப் பயணத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதை சாத்தான் புரிந்து கொண்டான். சபை வளர்ந்து யூதர்களை மட்டுமின்றி புற ஜாதி மக்களையும் கவர்ந்து கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. கொஞ்சம் குறைய உரோமைப் பேரரசு முழுவதும் சுவிசேஷம் பரவிப் பயன்தந்தது. பெரும்பான்மையான மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க அந்தப் பொல்லாத சாத்தானால் முடியவில்லை.

இம்முறை தன் சாமர்த்தியத்தையெல்லாம் ஒன்று கூட்டி கள்ளப் போதகர்களை ஏவி, பொய்யின் ஆவியை அவர்களுக்குள் அனுப் பினான். அவர்கள் பற்பல விதமான மாறுபாடான உபதேசங்களை சபைக்குள் ஊடுருவச் செய்தனர். அப்போஸ்தலர்கள் காலத்திலேயே நுழைந்துவிட்ட இக்கள்ளப் போதகம் முதலாம் நூற்றாண்டு இறுதியில் ஆதி அப்போஸ்தலர்கள் மரித்துப் போன பிறகு சற்று வேகமாக வியாபித்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சற்றேறக் குறைய கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் ஆதிக்கம் செலுத்தி, சாமானிய மக்கள் பரிசுத்த வேதாகமத்தைப் பார்க்க முடியாமலும், சத்திய வசனங்களை கேட்க முடியாமலும் செய்தான். வரலாற்று வல்லுநர்கள் இந்தக் காலக் கட்டத்தை இருண்ட காலம் (Dark age) என்று வர்ணிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாயிற்று.

இந்தக் கால கட்டத்தில் தான் சபையின் அதிகாரமும் அரசு அதிகாரமும் ஒருங்கிணைக்கப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழுமனதோடு ஏற்றுக் கொள்ள விரும்பாத மக்கள் கூட இயேசு கிறிஸ்துவின் சீஷத்துவக் கோட்பாடுகளைத் திரித்தும், குறைத்தும் கிறிஸ்தவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டார்கள். சத்தியத்தோடு சமரசம் செய்துகொண்டு, புற ஜாதிகளின் தெய்வங்கள், அவர்களுடைய வழிபாடு கள் தாராளமாய் சபைக்குள் புகுத்தப்பட்டன. இவைகளையெல்லாம்

கண்டு நியாய உணர்வுள்ள உண்மைக் கிறிஸ்தவர்கள் வெகுண்டு எழுந்து போர்க்கொடி உயர்த்தினர். ஆனால் அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்து பல புரட்சிகளை முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. மதக் குருக்களும் போப் ஆண்டவர் என்று தங்களை உயர்த்திக் கொண்ட வர்களும் அரசர்களைக் கூட ஆட்டிப் படைத்தனர்.

கொடி கட்டிப் பறந்த சாத்தானின் ஆட்சிக்கு முடிவு கொண்டு வர தேவன் வில்லியம் டிண்டேல், மார்டின் லூதர் போன்ற சீர்திருத்தக் காரர்களை எழுப்பினார். அவர்கள் பல இன்னல்களையும், எதிர்ப்புக் களையும் சமாளித்துக் கொண்டு வேதாகமத்தை மக்கள் மொழியில் மொழிபெயர்த்து அச்சிட்டு மக்களே பரிசுத்த வேதாகமத்தைப் படித்து தேவனிடம் நேரடித் தொடர்பு கொள்ள உற்சாகம் ஊட்டினர். பலவிதமான கொடுமைகளுக்கும், அநியாயத்துக்கும் இலக்காக்கப்பட்ட சாமான்யர்கள் இச்சீர்திருத்தவாதிகளின் பின்னே அணிவகுத்து நின்றனர். பிசாசின் பிரதிநிதிகளின் கொடுமைகளும், கட்டுப்பாடுகளும் தகர்த் தெறியப்பட்டன. நீண்ட காலம் அரசு ஓச்சிவந்த சாத்தான் மீண்டும் தலை மறைவானான்.

புரட்சித் தீ ஐரோப்பா முழுவதும் பரவி இங்கிலாந்துக்கும் தாவியது. இக் கால கட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பல்வேறு நாடுகளுக்கும், கண்டங்களுக்கும் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர். அங்கே செல்லும் வியாபாரிகளுடன் கிறிஸ்தவ மிஷினரிகளும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று கிறிஸ்துவின் உபதேசத்தைப் பிரகடனப்படுத்தினர். இப்படியாகக் கிறிஸ்தவம் உலக நாடுகள் பலவற்றில் பரவிற்று.

சத்திய வேதம் பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு மக்கள் கையில் தாராளமாகக் கிடைக்கும்படி செய்யப்பட்டதின் விளை வாக மக்கள் வேதாகமத்தை தாங்களாகவே படித்து சிந்திக்க ஆரம்பித் தனர். கிறிஸ்தவ உபதேசங்கள் கிறிஸ்தவ வழிபாட்டு முறைகள் அனைத்தும் மாற்றப்பட்டு மனித ஞானத்தால் கறைபடிந்து கிடப்பதைக் கண்டு துணுக்குற்றனர். அநேக சடங்குகள், கிறிஸ்தவ வழிபாட்டு முறைகள் என்று விளம்பரப்படுத்தப்பட்ட ஆராதனை முறைமைகள் யாவும் கிறிஸ்துவின் உயர்ந்த இலட்சியங்கள், உபதேசங்களுக்கு முற்றும் மாறுபாடாயிருந்ததைக் குறித்துக் கவலையோடு கூட்டங்கூடி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

"வேதம் விளம்பியதை விவரித்துச் சொல்வோம்
வேதம் விளம்பாதவற்றிற்கு உடன்படவே மாட்டோம்"

என்ற கொள்கை உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் எதைச் செய்தாலும், பேசினாலும் தேவனுடைய வசனத்தில் அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று தேடிப் பார்க்க ஆரம்பித்தனர். அதன் விளைவாக சபை ஒன்றே என்பதைக் கண்டனர். அது கிறிஸ்து தமது இரத்தத்தைக் விலையாகக் கொடுத்து வாங்கின கிறிஸ்துவின் சபை என்று தெரிந்து கொண்டனர். இன்றைக்கு உலகம் எங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் தங்கள் கொள்கைகளை கிறிஸ்துவின் தூய உபதேச அடிப்படையில் மாற்றிக் கொள்கின்றனர். பலவிதமான பெயர்ப் பலகைகளை அகற்றிவிட்டு"ஒன்றே சபை, ஒருவரே தலைவர்" என்று கூறிக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். அதிலே யாருக்கும் வெட்கமோ வஜ்ஜையோ வேண்டியதில்லை சாத்தான் நம்மை வஞ்சித்து விட்டான். அதுதான் உண்மை. கூடாரத் தொழிலாளர்களான ஆக்கில் லாவும், பிரிஸ்கில்லாளும் மெத்தப்படித்த வேதாகமங்களில் வல்லவனான, பேச்சுத்திறமை கொண்ட அப்பொல்லோவுக்கு காரியங்கள் இப்படியிருக் கிறது என்று எடுத்துச் சொன்னபோது அவன் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லையா? அப். 18 : 24-28 பின் நமக்கு மட்டும் ஏன் பாரம் பரியப் பெருமை? எல்லாம் தெரியும் என்ற தலைக்கனம்?!

எபேசுப்பட்டணத்தில் மக்களிடம் நீங்கள் பெற்றுக்கொண்டது சத்தியத்தின்படி தவறான ஞானஸ்நானம் என்று கூறப்பட்ட பொழுது அவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லையா? பின் நமக்கு மட்டும் ஏன் பிடிவாதம்? அப் 19 : 1 - 5.

தயவு செய்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். 'எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" (1 தெச 5 : 21.) "சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்". (யோவான் 8 : 32.)

## பாட்டு

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக் கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி.

(கொலோ 3:16)

# மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?

நீதிமானாகிய லோத்துவின் நாட்களில் சோதோம், கொமோரா பட்டணங்களில் நடந்த அக்கிரமங்களைக் கண்டும், கேட்டும் நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டதாக வேதத்தில் வாசிக்கிறோம். (II பேது 2 : 7 -8). நாம் வாழுகிற இந்நாட்களில் காரியங்களில் அதை விட மோச மாக நடந்து கொண்டிருப்பதை நாம் கண்டும் கேட்டும் செய்வதறியாது வாய் மூடி நிற்கிறோம்.

செய்தித்தாள்களை விரித்தாலும் வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகளைத் திருகினாலும் நாம் காண்பதும், கேட்பதும் என்ன? கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லஞ்சம், தீ வைப்பு, ஜாதிக் கலவரங்கள் போன்ற விரும்பத்தகாத செய்திகள்தான். இது ஏதோ குறிப்பிட்ட ஒரு நாட்டின் நிலவரம் என்று சொல்லிவிட முடியாது. உலகெங்கிலும் இதுவே நிலை. விமானம் கடத்தல், தலைவர்கள் பணயக் கைதிகளாக்கப்படல், ஒரே நாட்டில் வாழும் வெவ்வேறு இனத்தவர்களுக்குள்ளோ வெட்டு, குத்துகள், படுகொலைகள், பொதுச்சொத்து நாசம் இவைகள் எல்லாம் அன்றாடச்செய்திகள்.

இப்படி நாள்தோறும் பெருகி வருகிற அபாயங்கள் நிறைந்த உலகத்தில் வாழ்வதைப் பற்றி பலவிதமான எண்ணங்கள் நமக்கு எழுவதுண்டு. அதில் ஒன்று: இப்படி நித்தம் நித்தம் பயத்தோடும் திகிலோடும் மரணத்தின் வாயிலுக்குள் போய் விட்டுப் திரும்பிக் கொண்டிருப்பதை விட, ஒரேயடியாக இந்த உலகத்தை விட்டே நிரந்தர மாகப் போய் விடலாமா என்பது. ஆனால் அது பிரச்சனையைத் தீர்க்குமா? மேலும் அது ஒரு வகையில் கோழைத்தனம் என்று கூடச் சொல்லலாம் வேறொன்று: நிலைமையைச் சரி செய்யலாம் என்ற எண்ணத்தில் தலையிட்டு நாமும் சேர்ந்து பிரச்சனைகளுக்குள் மாட்டிக் கொள்வதாகும்.

பெரும்பான்மையோர் செய்கிற முயற்சிகள் எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தது தான். ஒரு மரத்தின் ஆணிவேரைச் கண்டுபிடித்து அதை வெட்டியெறியாமல் கிளைகளை மட்டும் நறுக்கிவிட்டால் அது எப்படி மேலும், மேலும் செழித்து வளருகிறதோ அதைப்போன்று பிரச்சனை என்ன? அதன் தோற்றுவாய் எங்கே என்று புரிந்து கொள்ளாமல் மேலெழுந்தவாரியாய் அதைத் தீர்த்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்

படும்போது, பிரச்சனைகள் தீர்வதற்குப் பதிலாக பிரச்சனைகள் நாளுக்கு நாள் உபரியாகிக் கொண்டிருக்கின்றன. வாலை அமுக்கினால் தலை தூக்குகிறது தலையை அமுக்கினால் வால் தூக்குகிற கதைதான்.

ஒருபுறம், முக்கிய வல்லரசுகளின் தலைவர்கள் கூடி உச்ச கட்ட சமாதான மாநாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் பயங்கர மான யுத்தங்கள் வெடித்து அநேக உயிர்கள் சேதம், சொத்து, உடமைகள் நாசமடைந்ததாக வாசிக்கிறோம். காரணம் என்ன? பிரச்சனை என்ன? அது ஏன் எப்படி உருவாகிறது என்பதை ஆய்ந்து அறியாமல் மேலெழுந்த வாரியான முயற்சிகளை மேற்கொள்வதே. அப்படியானால் பிரச்சனை களின் ஆணிவேரை எங்கே தேடுவது? அதைக் கண்டுபிடிக்க பரிசுத்த வேதாகமத்துக்குத் தான் போயாக வேண்டும். ஏனெனில், அது வானத் தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்துப் பராமரித்து வருகிற ஒன்றான மெய்தேவனாகிய கடவுளால் கொடுக்கப்பட்ட அறிவுப் பெட்டகம். அப்போஸ்தலனாகிய பேதுரு "ஜீவனுக்கும்" தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமையானது. நமக்குத் தந்தருளனது மன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது" என்று சான்றிதழ் வழங்குகிறார் (II பேதுரு 1 : 3 - 4).

அதே காலத்தில் வாழ்ந்த அப்போஸ்தலன் பவுல் என்பவர் ரோமாபுரியில் இயங்கி வந்த கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதும் போது, மக்கள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போவதற்கும், உலகத்தின் தார்மீக நிலை நாளுக்கு நாள் சீர் கேடு அடைந்து வருவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி, அதன் விளைவுகள் எப்படி இருக்கும், அது எங்குபோய் முடியும், என்று கூடச் சொல்லியிருக்கிறார். தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பீடிகை போடுகிறார். காரணம் மனுஷருடைய அவபக்தியினால் சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறார்கள் (ரோமர் 1 : 18 - 20) அவர்கள் தேவனை அறிந்திருந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலும் இருக்கிறார்கள். அதன் விளைவு? மாந்தருடைய இதயம் இருளடைந்துவிட்டது. அதிலிருந்து உதிக்கிற அவர்களுடைய சிந்தனைகள் வீணும் உணர்வற்றதுமாயிருக்கிறது. (ரோமர் 1 : 21) அவர்களுடைய நினைப்பு தாங்கள் ஞானிகள் என்று. ஆனால் செயல் : பைத்தியகாரனுடையது. (ரோமர் 1 : 22).

அந்தப் பைத்திய நிலையில் அவர்கள் செய்த காரியங்கள் யாவை? 1) அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள்,

பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகியவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர் 1 : 23) அதற்குத் தேவன் கொடுத்த தண்டனை: அவர்களை அசுத்தத்துக்கு ஒப்புக் கொடுத்தார். (ரோமர் 1 : 24) அதன் விளைவு? 1) தங்கள் இருதயத்திலுள்ள இச்சை களினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்திக் கொண்டார்கள். 2) தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள். 3) சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது, சேவித்தார்கள் (ரோமர் 1 : 25) அதன் விளைவு? 1) தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். 2) அவர்களுடைய பெண்கள் சுபாவத்துக்கு விரோதமாக விரகதாபத் தினாலே பொங்கி தகாததைச் செய்தார்கள். 3) அவர்களுடைய ஆண்கள் ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்தார்கள். தற்காலத்தில் நாம் கேள்விப்படுகின்ற எய்ட்ஸ் நோய் போன்ற கொடிய வியாதிகள் அதன் விளைவுகள். அது மட்டுமல்ல இன்றைக்கு நாம் காண்கிற அனைத்து ஒழுக்கக் கேடுகள், வேசித்தனம், துரோகம், பொருளாசை, குரோதம், பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல் அவதூறு, தேவபகை, துராகிருதம், அகந்தை, வீம்பு, பொல் லாதவைகளை யோசித்துப் பிணைக்கும், இயல்பு, பெற்றோர்க்கு கீழ்ப் படியாமை, உணர்வற்ற தன்மை, உடன்படிக்கை மீறல், சுபாவ அன்பில் லாமை, இணங்காமை, இரக்கமின்மை, (ரோமர் 1: 26 - 31) ஆகியவைகள்.

ஒரு தோட்டத்தில் களை முளைத்து, முள் வளர்ந்து, மழை மாரியின்றி, பாங்கின்றி பாழடைந்து, கிடக்கும்போது, அங்கே நற்கனிகளைத் தேடி அலைவது வீண் வேலை அன்றோ! முதலாவது களைகளை அகற்றி, முள், கல் பொறுக்கி, காடு திருத்தி உழுது, பண்படுத்தி, நல்ல விதைகள் தூவி, நீர் பாய்ச்சி, உரமிட்டால் அல்லவா பயிர்கள் செழித்து வளர்ந்து கனி கொடுக்கும்? அது போல மேலே நாம் கண்ட தீக்குணங்கள் மாந்த உள்ளங்களிலிருந்து அகற்றப்பட்டு, மனதைப் பண்படுத்தி, நல்ல பண்பு களை வளர்த்து அவைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டினால் தானே நாடு நலம் பெறும். மாந்த இனம் ஒருவருக்கொருவர் இணக்கமுள்ளவர்களாக சமாதானமாக வாழுவார்கள். இவைகளை யெல்லாம் செய்யாமல் வெறுமனே சமாதானம், சமாதானம் என்று வாயால் சொல்லிக் கொண் டிருந்தால் சமாதானம் ஏற்பட வாய்ப்பேது?

அப்படியானால், இந்த சமாதானம், மகிழ்ச்சி, இணக்கம் ஆகியவைகளை அடைய வழி யாது? ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் நோய் இன்னதென்று கண்டுபிடித்துச் சரியாகக் கூற ஒரு வைத்தியனுக்கு முடியு மானால் அந்த நோய்க்கான மருந்தும் அவனால் கொடுக்க முடியும் என்று

நம்பலாமே! அதே போன்று; இவ்வளவு துல்லியமாய் உலகின் அவல நிலையையும், மாந்த சமுதாயத்தின் சீர் கேடுகளையும் படம் பிடித்துக் காட்டுகிற பரிசுத்த வேதாகமத்தில் அதைத் தீர்த்து வைக்கும் வழிமுறை களும் காணப்படுவது நிச்சயமல்லவா?

ஆகவே நண்பர்களே, இயேசுவின் அன்பான உருக்கமான அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரிடம் வாருங்கள் வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (மத் 11 : 28-30)

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே - அன்பும் கரிசனையுமான அழைப்பு

நீங்கள் எல்லோரும், என்னிடத்தில்
வாருங்கள் - பாரபட்சமற்ற உலகளாவிய அழைப்பு

உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல்
தருவேன் - வாக்குத்தத்தம் நிறைந்த அழைப்பு

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய்
இருக்கிறேன் - தன்னிலை விளக்க அழைப்பு

என் நுகம் மெதுவாயும் என் சுமை
இலகுவாயும் இருக்கிறது - பயம் நீக்கும் அழைப்பு

இன்னும் ஏன் தாமதம்! நண்பர்களே! நிச்சயமான தீர்வு உறுதியாக்கப்பட்டிருக்கிறதே விரைந்து வாரீர்! அவரன்றி இரட்சிப்பு இல்லை அவரே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன்.

## ஜெபம்

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலி 4:6)

# நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

வேதாகமத்தில் பல கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. மேலே, குறிப்பிட்டுள்ள கேள்வி அப். ௨-ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் அப்போஸ்தலன் பேதுருவின் முதல் நற்செய்திப் பிரகடனத்தை செவி மடுத்த ஏராளமான மக்களில் தேவனுக்கு மெய்யாகவே பயப்பட்ட மக்களின் கேள்வி. இந்தக் கேள்வியைக் கேட்ட மக்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்ற கூட்டத்தில் இருந்தவர்களானபடியால் நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்று பேதுரு, பகிரங்கமாக, தைரியமாகக் குற்றஞ்சாட்டின பொழுது, அவர்கள் உள்ளத்தில் குற்ற உணர்வு மேலிட்டதால் அக்கறையுடன் கேட்கப்பட்ட கேள்வி (அப் 2 : 37).

## இக்கேள்வியைக் கேட்க அவர்களைத் தூண்டியது யாது?

மோசே மூலமாய்க் கொடுக்கப்பட்ட யூதமார்க்கத்தின் கட்டுக்கோப்பையும், முன்னோர்களின் பாரம்பரியத்தையும் குறைகூறி அவைகளை நிலைகுலையச் செய்யும் முயற்சியில் வெற்றிமேல்—வெற்றி பெற்றுக் கொண்டு வந்த இயேசுவை ஒழித்துக்கட்டி விட்டோம் என்று இறுமாந்திருந்தனர்! சமயத்தலைவர்கள் பாவம்! அவர்கள் தேவனுடைய அநாதித் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிதான் என்பதை அறியாமல் இருந்தார்கள். சரீரப் பிரகாரமாக இயேசுவைக் கொன்று போடுவதற்கு இம்மனிதர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்து இயேசுவைக் கர்த்தர் (அதிகாரம் உடையவர்) என்றும், கிறிஸ்து (தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்) என்றும் அறிமுகம் செய்ய உதவியாக இருந்தது.

தேவனுடைய குமாரனைக் கொன்று போட்டோம், மனித குலத்தின் இரட்சகரை மரத்தில் தொங்க வைத்துவிட்டோம் என்ற குற்ற உணர்வே அவர்கள் இந்தக் கேள்வியை கேட்கத் தூண்டியது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட அவர்களுடைய மனோநிலை மாறி அவர்கள் இருதயம் குத்துண்டது.

*தங்கள் பாவநிலையை உணர்ந்தனர்*

ஒரு மனிதனின் இரட்சிப்புக்கு முதல்படி, தான் பாவி என்று உணர்ந்து ஒத்துக் கொள்வதாகும். பாவம் தான் நம்மை தேவனை விட்டுப் பிரிக்கிறது என்ற உணர்வு வேண்டும் (எசாயா 59 : 2). இன்று உயிரோடு இருக்கிற நம்மில் அநேகர் இயேசுவின் நாட்களில் வாழ்ந்திருந்தால் நிச்சயமாக நாமும் கூட, அவரைச் சிலுவையில் அறையும், அறையும் என்று கூப்பாடு போட்டிருப்போம். ஏனெனில், இன்றைக்கும் நம்முடைய போக்கு இயேசுவை தேவனுடைய குமாரனை மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிற தன்மையில் தான் இருக்கிறது (எபி 6 : 6).

தங்களுடைய குற்றங்களை, மீறுதல்களை, பாவங்களை உணருந் நிலை உருவாவது எப்படி? அன்று பெந்தேகோஸ்தே நாளில் அறிவிக்கப் பட்ட சுவிசேஷத்தைக் கவனித்துக் கேட்ட மக்களைப் போன்று நாமும் சுவிசேஷத்தைக் கவனித்து கேட்க வேண்டும். அதனால் தான் இயேசு, "நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள்" எனப் போதித்தார். (லூக் 8:18).

மேலும், அவர் மாற்கு 4 : 24ல், "நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்" என்றார். நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்றால், கேட்கிறவர்களுடைய இருதயம் கூட நல்ல பக்குவத்தில் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். (மாற்கு 4 : 20). ஒருவர் என்ன கேட்கிறோம் என்றும், எப்படிக் கேட்கி றோம் என்றும்கூட கவனமாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாததினால் அவர் மறுமையின்பத்தை இழந்து நிற்கிறார் என்று உணரமுடியும். (ரோமர் 1 : 16 II தெச 1 : 7 - 10). சுவிசேஷமாகிய ராஜ்ஜியத்தின் விதை (லூக் 8 : 11) ஒருவனுடைய உள்ளத்தில் ஊன்றப்படும் போது மறுபிறப்புக்குரிய வேலை தொடங்குகிறது (யோவான் 3 : 5) நண்பனே, சகோதரியே! நீங்கள் கிறிஸ்தவனானது சுவிசேஷத்தைக் கேட்டு, உங்கள் உள்ளம் குத்துண்டதாலா? அல்லது உங்கள் பெற்றோர், முன்னோர் கிறிஸ்தவர்கள். ஆகவே, நீங்களும் கிறிஸ்தவர்கள் என்ற பாணியிலா? வேதம் சொல்லுகிறதைக் கேளுங்கள் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான். பிரவேசிப்பது என்பது அப்புறம் (யோவான் 3 : 3).

விசுவாசித்தல் : இரட்சிப்பின் திட்டத்தில் அடுத்தபடி விசுவாசம். விசுவாசம் எப்படி உண்டாகிறது? கேட்பவர்களெல்லாம் விசுவாசிகள் ஆகிவிடுவதில்லை. இதைக் குறித்து ஏசாயா சொன்னதை அப்போஸ் தலன் பவுல் ரோமர் நிருபத்தில் மேற்கோள் காட்டி, "ஆனாலும்

சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா : கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? என்று அங்கலாய்க்கிறான் (ஏசாயா. 53 : 1).

ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்கிறார் (ரோமர்10 : 16, 17). அதாவது சுவி சேஷம் வாயினால் பிரசங்கிக்கப்பட்டதானாலோ அல்லது /அச்சிட்டதை வாசித்ததினாலோ விசுவாசம் வருகிறது. அதாவது, தேவனுடைய வசனம் விசுவாசத்தை உற்பத்தி செய்கிறது. ஒருவன் சுவிசேஷத்தைக் கேட்கும் போது, அவர் பெத்லகேமில் வாழ்ந்த ஒரு ஏழைத் தச்சுத் தொழிலாளியின் மகன் அல்ல. அவர் தேவனுடைய குமாரன், உலக இரட்சகர் என்று ஏற்றுக் கொண்டு, என்னுடைய பாவங்களுக்காக அவர் மரித்தார் என்று விசுவாசித்தப்பின், அந்த விசுவாசம் அவனைக் கர்த்தர் சொன்ன எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஆவலை உண்டாக்கு கிறது. இந்த விசுவாசம் அவனுடைய இருதயத்தை மாற்றுகிறது. "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்" (ரோமர் 10 : 10) வேதாகமம் இருதயம் என்று குறிப்பிடுவது மனிதனின் மனசு என்று பொருள்படும். அது அவனை கிறிஸ்துவுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும் என்ற, எண்ணத்தைத் தரும். "விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்". (எபி 11 - 6). நண்பனே, சகோதரியே! சொல்லப்பட்டுள்ள, இந்த விசுவாசித்தல் என்ற படியில் நீங்கள் ஏறினதாக நினைக்கிறீர்களா? இல்லாவிட்டால் இப்பொழுதாவது அதன் கருத்தைச் சிந்தித்துத் தக்க மாற்றத்தை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

### மனம் திரும்புதல் :

மூன்றாவது படியாக, கீழ்ப்படிகிற விசுவாசம் ஒருவனுக்கு இருக்குமானால் அது ஒருவனுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கும். அதைத் தான் வேதாகமம் மனம் திரும்புதல் என்று கூறுகிறது. இது ஒரு கடினமான படி. இந்தப் படியேறும் போது தான் பலர் இடறிவிடு கிறார்கள். ஏனெனில், இந்த மனது (இருதயம்) எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது' என்றும் (எரே. 17 : 9) 'இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது' என்றும் (ஆதி 6:5), 'மனிதனுடைய இருதயத்தின் நினைவு கள் அவன் சிறுவயது முதல் பொல்லாததாயிருக்கிறது (ஆதி 8 : 21) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று கிறிஸ்தவர்கள் என்று கூறிக்

கொள்ளுகிற மக்கள் பலவிதமான பாவங்களில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இப் படியேறாததே காரணம். ஒரு பேருந்து வண்டியின் எல்லா உறுப்புக்களையும் பழுது பார்த்துச் சாயம் பூசி, பார்ப்பவர் கண்களுக்குப் பகட்டாக, வைத்துக் கொண்டாலும், எஞ்சினை இறக்கிப் பழுது பார்க்காமல் போனால் அதனுடைய ஓட்டம் சரியாக இராது. அதே போல் மனிதனுடைய மனம் மாற்றம் இல்லாமல் போனால் வாழ்க்கையில் தூய்மையும், நற்பண்புகளும் காணப்படா. அதனால் தான் இயேசு, "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பாமற் போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்கிறார். (லூக் 13 : 3). இதை மற்றவர்களோ, தேவனோ அல்ல, சம்பந்தப்பட்ட மனிதனே செய்தாக வேண்டும். ஒரு பக்தன் கூறினது போல், இருதயக் கதவுக்கு உள் தாழ்ப்பாள்தான் உண்டு. வெளித் தாழ்ப்பாள் கிடையாது எவ்வளவு உண்மை! மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதனுடைய சிந்தனைப் போக்கை மாற்றி, செயல்பட வைத்து கிறிஸ்துவுக்குள் நல்வழிப் படுத்துகிறது.

தலைப்பில் கண்டுள்ள கேள்வியைக் கேட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட பதிலில்'மனந்திரும்புங்கள்' என்பதை நிபந்தனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது (அப் 2 : 38).நண்பனே, சகோதரியே! நீ இந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறாயா? கெட்ட குமாரன் அந்த அனுபவத்தை அடைந்தான். அவன் புத்தி தெளிந்தான் (லூக். 15 : 17) எழுந்து, புறப் பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். (15 : 20). சகேயு மனந்திரும்பினான் "சகேயு நின்று' கர்த்தரை நோக்கி ஆண்டவரே: என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையேனும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச்செலுத்துகிறேன்" (லூக் 19 : 8) அதன் பிறகே இயேசு இரட்சிப் பைப்பற்றி வாய் திறக்கிறார். (லூக் 19 : 9). நண்பனே, சகோதரியே! இந்தக் கடினமான படியைக் கடந்த அனுபவம் உண்டா? இல்லாவிட்டால் முயன்று வெற்றி பெற உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

## அறிக்கையிடுதல்

மனம் மாற்றப்பட்ட ஒருவனுடைய வாழ்க்கையில் கடக்க வேண்டிய நான்காவது படி. இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கை பண்ணுதல், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்". (மத் 10 : 32). அறிக்கை பண்ணுதல் என்றால் என்ன? குருவானவர் முன்பாக மண்டியிட்டு தான் செய்த பாவங்களை யெல்லாம் அறிக்கையிட வேண்டும் என்று சிலர் போதிக்கிறார்கள். இதில் சில சங்கடங்களும், தகாத - விளைவுகளும் உண்டாக வாய்ப்பு

இருக்கிறது. மேலும், குருவானவருக்குப் பாவத்தை மன்னிக்க அதிகாரம் ஏது?

கிறிஸ்தவனாவதற்கு மிகவும் விருப்பப்பட்ட ஒரு மனிதனுக்குச் சொல்லப்பட்டதைக் கேளுங்கள். 'நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை' என்று பிலிப்பு கூறினதற்கு, சம்பந்தப்பட்ட மனிதன்: இயேசுக் கிறிஸ்துவைத் 'தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்' என்று பதில் சொன்னான். (அப் 8 : 37) மேலும், அப்போஸ்தலன் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10 : 10) என்கிறார். நண்பனே, சகோதரியே! நீங்கள் கிறிஸ்தவர்களான போது அப்படிப்பட்ட அறிக்கை செய்தீர்களா?

### தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தீர்களா?

அதுதான் வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம், திருமுழுக்கு என்று இப்பொழுது அழகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஒருவன் சத்தியத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி அறிக்கையும் செய்து விடுகிறான். அதோடு இரட்சிப்பு பூரணமடைவதில்லை. ஐந்தாவதும், கடைசிப்படியும் ஆக அவன் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாதிருக்கிறீர்களா? (ரோமர் 6 : 3) மனந்திரும்பிய ஒருவன் தண்ணீரில் மூழ்கி (அடக்கம் பண்ணப்பட்டு) எழுந்திருக்கும்போது (உயிர்த்தெழும்போது) அவனுடைய பாவங்கள் போகக் கழுவப்படுகிறான். "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றும் (அப். 2 : 38), 'நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு' (அப். 22 : 16) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறான். (ரோமர் 6 : 3; கலா 3 : 27) ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். (II கொரி 5 : 17) ஒரு மனுஷனுடைய பாவங்கள் கழுவப்பட்டன என்றும், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான் என்றும் அதுவே இரட்சிப்பின் சரியான வழி என்றும் அறிந்து கொள்வது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி! இவைகளையெல்லாம் ஒழுங்காக நிறைவேற்றின பிறகு கர்த்தர் அவனை சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். (அப் 2 : 47; I கொரி 12 : 13).

இது முடிவு அல்ல : சுவிசேஷத்திற்கு மேற்சொன்ன முறையில் கீழ்படிந்த பிறகு எஞ்சியுள்ள வாழ்க்கையை கர்த்தருக்குப் பிரியமாக வாழ வேண்டும். (வெளி 2 : 10). இம்முறையை அடிபிறழாமல் கைக் கொண்டவர்களுக்கு மரணம் ஒரு இன்பக் கனவு போன்றது. நியாயத் தீர்ப்புக்குப் பிறகு, இதுவரையில் பரலோகத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த நினைவுகளெல்லாம் நிஜமாகும்.

### அவர்கள் என்ன செய்தார்கள்?

தலைப்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பேதுரு மறுமொழி கொடுத்தவுடன் கேள்வி கேட்ட மக்கள் அவனுடைய பதிலைத் தெரிந்தவுடன், மகிழ்ச்சியாய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப் 2 : 41, 42, 47) நண்பனே சகோதரியே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை (II யோ. 2 : 4) என்பது தேவனுடைய தீர்ப்பு. ஆகவே, மனிதர்கள் உங்களை வஞ்சித்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். இதுவரை இந்தக் காரியங் களை நீங்கள் அறியாமலும், அறிந்தும் கீழ்ப்படியாமலும் இருந்தால் பரவாயில்லை. "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போல் இருந்தார். இப்பொழுதோ மனம் திரும்ப வேண்டும் என்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார். (அப் 17 : 30) உங்கள் பதில் என்ன?

### சபையும், இராஜ்ஜியமும் ஒன்றே

**இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்கள்**
**இராஜ்யம் (வெளி. 5:9, 10)**

**இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்கள் -**
**சபை (அப். 20:28)**

**இராஜ்யம் பரிசுத்தவான்கள் ஆக்கப்பட்டுள்ளது**
**கொலோ. 1:12, 13**

**சபை பரிசுத்தவான்களால் ஆக்கப்பட்டுள்ளது**
**I கொரி. 1: 1, 2**

# ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி?

இந்தக் கேள்வி நமக்கு மட்டுமல்ல; நியாய சாஸ்திரியாக இருந்த நிக்கொதேமுக்கும் கூடப் புரிந்து கொள்ளமுடியாமல் இருந்திருக்கிறது. இருப்பினும் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு இதை விளக்குவதற்கு முயல்வோம்.

இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சரீரப் பிரகாரமான பிறப்பு எப்படி நிகழ்கிறது என்று கவனிப்போம். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தேவை. ஆணின் விந்து (வித்து) பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது.

ஆவிக்குரிய பிறப்பு விஷயத்திலும் கூட இதே விதிதான். ஒருவன் ஆவிக்குரிய பிறப்பு அடைய வேண்டும் என்றால் அவனுடைய (or) அவளுடைய உள்ளத்தில் ஆவிக்குரிய வித்து செலுத்தப்பட வேண்டும். அந்த ஆவிக்குரிய வித்து எது?

லூக் 8-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் தேவனுடைய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி பேதுரு கூறும்போது "அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்கிறார். Iபேதுரு 1 : 23.

யாக்கோபு நிருபத்திலும் "அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" என்று வாசிக்கிறோம். (யாக் 1 : 18)

மேற்கூறிய வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வசனங்களே ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ள வித்தாக நம்முடைய உள்ளங்களில் ஊன்றப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

“விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” என்று பவுல் கூறுவது எவ்வளவு உண்மை! (ரோமர் 10 : 17) விதை போடாமல் செடி முளைத்து வளராது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுறுகிறாள். ஆனால் குழந்தைப் பிறப்பு உடனே நடந்து விடுவதில்லை. அதற்கு முன்னதாக கருவுற்றதினால் ஏற்படும் விளைவுகளை நாம் காண்கிறோம். குழந்தை கருப்பைக்குள் வளர வளரத் தாய்மை அடைந்த பெண்ணின் சரீரத்தில் சில மாற்றங்கள் தென்படுகின்றன. இது இயற்கைச் சட்டம்.

அதே போன்று ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்கும் போது அதை விசுவாசிக்கிறான்; அதைப் பற்றிச் சிந்திக்கிறான். அதன் காரணமாக அவனுடைய செயல்களில் மாற்றம் உண்டாக வேண்டும். தன்னிடத்தில் இருந்த தவறான பழக்க வழக்கங்கள், பாவச் செயல்கள் ஆகியவைகளுக்காக மனம் வருந்தி அவைகளை விட்டுவிட வேண்டும். நற்பழக்கங்களைக் கைக்கொண்டு, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையில் தேறி வருகிறது யாவருக்கும் தெரிய வேண்டும். அதைத் தான் மனந்திரும்புதல் என்கிறோம்.

“தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்” என்று யோவான் எழுதுகிறார். I யோவான் 3 :9. இதற்கு, ஒரு விசுவாசி பாவம் செய்யவே மாட்டான். பரிசுத்தமடைந்து விடுவான் என்று கொள்ளக்கூடாது. ஒரு உண்மையான விசுவாசி பாவம் செய்யும் இயல்பிலே இன்பம் காணமாட்டான். அவனையும் மீறி பாவம் செய்யக்கூடிய இயல்பு மேற்கொள்ளும்போது அவன் அதற்காகத் துக்கப்பட்டு, வெட்கப்பட்டு வேதனைப்படுவான் (ரோமர் 7 : 15 - 24) வாசித்துத் தியானிக்கவும்.

மேலும், I யோவான் 5-ஆம் அதிகாரம், 4, 5 வசனங்களில் “தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? என்று யோவான் கேட்கிறார். அதாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்கிறவன், உலக ஆசைகளை வெறுத்து, ஜென்ம சுபாவ மனிதர்களைப் போல சிற்றின்பம், பாவம் ஆகியவைகளில் நாட்டம் செலுத்தாமல் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடு கொண்டு வெற்றி பெறுவான் என்று பொருள்.

(எப்படி கருவுற்ற நிலையே குழந்தையைப் பெற்றெடுத்ததற்கு சமம் ஆகாதோ அது போன்று மேலே சொல்லப்பட்ட விசுவாசம் மற்றும் மனம் திரும்புதல் மட்டுமே ஆவியின் பிறப்பு ஆகிவிடாது. இந்த இரண்டு காரியங்களும் தேவ வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையே ஆகும்.

இனி ஆவிக்குரிய பிறப்பு என்பது தண்ணீர் முழுக்கினால் ஏற்படுகிறது என்பதைக் கவனிப்போம். இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கூறினார். அதன் பொருள் விசுவாசித்து மனம் திரும்பிய ஒரு மனிதன், தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கவேண்டும். அதாவது நாம் விசுவாசித்து மனம் திரும்பும் போது ஜெநிப்பிக்கப்படுகிறோம். (கருத்தரிக்கிறோம்) திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும்போது பிறக்கிறோம்).

விசுவாசமுள்ளவனாகி (கருத்தரித்து) ஞானஸ்நானம் பெற்றவன் (பிறப்பு எய்தியவன்) இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16) ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைத் தீர்ப்படைவான் என்று இயேசு சொல்ல வில்லையே என்று சிலர் வாதிடலாம். கருத்தரித்திடுதலே பிறப்பாகாது. அதே போன்று விசுவாசமும் மனந்திரும்புதலுமே ஆவிக்குரிய பிறப்பு ஆகிவிடாது.

நாம் எப்படி இரட்சிப்படைகிறோம் என்பதை விளக்க "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியி னுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என்று பவுல் கூறுகிறார். தீத்து 3 : 5, ஆக, ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் மறுஜென்ம முழுக்கும் (ஞானஸ்நானமும்) பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலும் (மனம் திரும்புதலும்) தேவை என்றாகிறது. இங்கேயும் ஜலமும் ஆவியும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆகவே மறு படியும் பிறப்பதற்கு வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம் இன்றிய மையாதது.

கருவுறாமல் பிள்ளைப்பேறு கிடையாது. அது போல ஒருவன் விசுவாசித்து மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் மட்டும் பெற்றுக் கொண்டு வேதம் சொல்லுகிற இரட்சிப்பை பெறமுடியாது. ஒரு மனிதனை வலுவான கயிற்றினால் கட்டித் தூக்கிக் கொண்டு போய் தண்ணீரில் முழுக்கி எடுத்துவிட்டால் அவன் இரட்சிப்புக்குத் தகுதியடைந்து விடுவானா? அதே போல விசுவாசிக்க இயலாத ஒரு குழந்தைக்குத் திருமுழுக்குக் கொடுத்துவிட்டு, 12 அல்லது 15 ஆண்டுகள் கழித்து திடப்படுத்துதல் என்ற ஒரு சடங்கின் மூலம் அவனுக்கு வேதம் கூறுகிற

இரட்சிப்புக்குத் தகுதியுள்ளவனாக முடியுமா? விசுவாசமும் மனந்திரும்புதலும் கருவுறுதல் என்றும் தண்ணீர் ஞானஸ்நானம் பிறப்பு என்றும், நாம் மேலே பார்த்தோம். அப்படியிருக்கும் போது இன்று பிறப்பு; 12, 15 ஆண்டுகளுக்குப் பிறகு கருத்தரித்தல் என்பது இயற்கைக்குப் பொருந்துமா? ஆனாலும் அதைத் திருத்திக் கொள்வதற்கு நம்முடைய பாரம்பரியப் பெருமை இடம் தருவதில்லை. இதுதான் நாம் தேவனுடைய வசனத்துக்குக் கொடுக்கும் மரியாதையா? "சிறுமைப்பட்டு ஆவியில் நொருங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" என்கிறாரே தேவன் (ஏசாயா 66 : 2) சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள்.

அதே போல கருவுறுதலே (விசுவாசம், மனந்திரும்புதல்) புதிய பிறப்பு ஆகிவிடாது என்பதும் கூட உண்மை. ஜலமும் ஆவியும் ஒருங்கிணையும் போதே புதிய பிறப்பு உண்டாகிறது. "நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினால் அவருடைய புத்திரராயிருக்கிறீர்களே, ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா 3 : 26, 27) என்கிறார் பவுல் குழந்தைப் பிறப்பை ஆங்கிலத்தில் Delivery என்று கூறுகிறார்கள். கொலோ 1 : 13 கூட அதே அர்த்தத்தைத்தான் தெரிவிக்கிறது. "இருளின் அந்தராரத்தினின்று நம்மை விடுதலையாக்கி (delivered) தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்துக்குட்படுத்தினார் என்று கூறுகிறது. அதாவது கருவிலிருந்து குழந்தை எப்படி உலகுக்கு வருகிறதோ அதே போன்று இருளில் அதிகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வரப்படுகிறோம்.

(விசுவாசித்து மனந்திரும்பி இருந்தாலும் (கருவுற்றிருந்தாலும்) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாவிடில் (delivery ஆகாவிட்டால்) கருவில் ஏதோ கோளாறு அல்லது குழந்தை கருவிலேயே இறந்து போயிற்று என்று தானே பொருள்!)

ஆகவே ஒரு மனிதன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதற்கு, தேவனுடைய வசனமும், பாவங்களை மன்னிக்கிற கிருபையும் தேவை. அது தேவனுடைய இலவசமான ஈவு வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொள்வது மனிதனுடைய கடமை. நாம் இந்தச் சிறிய விஷயத்தைக் கூடச் செய்ய மனமில்லாமல் அதையும் தேவனே செய்யவேண்டும் அல்லது அதிலும் சலுகை வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. தேவனுடைய மகத்தான இரக்கத்தைப் பயன்படுத்தி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமாக!

# சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இன்றைக்குக் கிறிஸ்துவ உலகம் அசலுக்கும் போலிக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பி நிற்கிறது. ஆரோக்கியமான உபதேசம் எது கள்ள உபதேசம் எது என்று தெரியாமல் எவர் சொன்னாலும் "ஆமாம்" போட்டுக் கொண்டு இரட்சிப்பையும் நித்தியஜீவனையும் குறித்து நிர்விசாரமாயிருக்கின்றனர். அதைக் குறித்து வேத எழுத்துக்களின் வழியாக எவ்வளவோ எச்சரிப்புகளையும் அறிவுரைகளையும் கொடுத்து அதன் அபாயத்தை பரிசுத்த ஆவியானவர் விளக்கி இருக்கிறார்.

இருந்த போதிலும் மக்கள் வேதாகமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை ஊன்றிப் படிப்பதில்லை. படித்தாலும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. அதற்கு என்ன காரணம்? ஒரு காலத்தில் செல்வந்தர்களும் வசதிபடைத்தவர்களுமே வாங்கக் கூடிய அளவில் விலை அதிகமாக இருந்தது. ஆனால் அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு மலிவு விலையில் வேதாகமங்கள் கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த நாளிலும் கூட பெரும்பான்மையோர் வேதாகமப் படிப்பை அலட்சியம் செய்கின்றனர். சூது மதியினரும் சுய நலமிகளும் இவர்களின் மெத்தனத்தை பயன்படுத்தி வஞ்சித்து வாழ்கின்றனர். அப்படி மக்கள் அசிரத்தையாக இருப்பதற்கு அவர்கள் சொல்லுகிற காரணங்கள் வீண்சாக்கு போக்குகளேயல்லாமல் நியாயமானவைகள் அல்ல. வேதாகமத்தை படிப்பதினால் ஏற்படும் நன்மைகளை அவர் உணர்ந்து கொள்ளாததே அதற்குக் காரணம், சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கல்வியைப் பற்றியும் இவ்வாறே அக்கறை அற்றவர்களாகவே மக்கள் இருந்தனர். அறியாமையைப் போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியும், படித்து நல்ல உத்தியோகங்களில் அமர்ந்து கை நிறைய சம்பாதித்து வாழ்க்கையில் வசதியும் சௌகரியமும் ஆக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொண்ட பிறகு, இன்றைக்கு மிக மிகச் சாமானியமானவர்கள் கூட அரசு நடத்துகிற பள்ளிகளைக் கூட புறக்கணித்து விட்டு பெரும்பணம் செலவு செய்து பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னே பதிவு செய்து, பால் மறப்பதற்கு முன்பே கொண்டுபோய் பள்ளியில் சேர்க்கிறார்கள். குழந்தையோடு

தாயாரும், சில வேளைகளில் தகப்பனாரும் பள்ளிக்குச் சென்று வருவதையும் பார்க்கிறோம். அது போதாது என்று ட்யூஷன் வேறு வைத்துக்கொள்கிறார்கள். ஏனெனில் கல்வியினால் கிடைக்கும் நன்மைகளைப் புரிந்து கொண்டார்கள்.

அது போல வேதாகமத்தைப் படித்துத் தியானிக்கிற குடும்பங்களில் காணப்படுகிற மெய்ச் சமாதானம், மகிழ்ச்சி, இல்லாமையிலும் ஓர் நிறைவு, வறுமையிலும் ஒரு திருப்தி ஆகிய நற்பண்புகளைக் கவனித்துப் பார்த்தால் அவர்களுடைய மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் தேவன் மேல் அவர்கள் கொண்டிருக்கிற விசுவாசமே காரணம் என்பது புரியும். ஆனால் ஏனோ மனிதகுலம் அமைதியையும் சமாதானத்தையும் விட ஆடம்பரத்திலும், பகட்டு வாழ்க்கையிலும் நாட்டம் கொண்டு அமைதியும் எளிமையும், கொண்ட வேதாகம வழிகளைப் புறக்கணித்து விட்டுத் தீமை செய்ய திரளாக ஜனங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

வேதாகமத்தைப் படித்து ருசித்துப் பார்த்த சான்றோர்கள் நீங்கள் வேதாகமத்தைப் படித்து தியானிப்பதன் மூலம் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறிக் கெஞ்சி மன்றாடினாலும், "நாங்கள் என்ன ஐயர் வேலைக்கா போகப் போகிறோம்" என நையாண்டி செய்கிறார்கள். இது மிக ஆபத்தான போக்கு, போதகர் வேலைக்குப் போகிறவர்கள் தான் வேதாகமத்தைப் படிக்கவேண்டும், மற்றவர்கள் போதகர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு வாரம் ஒரு முறை கோவிலுக்குப் போய் விட்டு வந்தால் போதும் என்பது தவறான போதனைகளின் விளைவே. "நாம் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்பிக்க வேண்டும்", என்று ரோமர் நிருபத்திலும் (ரோமர். 14:12) "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" என்று கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. (II கொரி. 5 : 10).

இவைகள் கூறுகிற உண்மை என்ன? நியாயத்தீர்ப்பு நாளிலே போதகரோ, பிஷப்போ, போப் ஆண்டவரோ, தலைமைப் போதகரோ, நமக்காக பரிந்து பேச முடியாது. நாம் தேவனுடைய ஆலோசனைகளை கவனமாகப் படித்து அதன்படி ஒழுகவேண்டும். அவர்கள் சொன் னார்கள், இவர்கள், உபதேசித்தார்கள் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. வசனத்தின்படிதான் தீர்ப்பு (யோவான் 12 : 48) வேறு சிலர் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு எங்களுக்கு ஞானமில்லை. நீங்களே படித்துச் சொல்லுங்கள் நாங்கள் கேட்டுக்

கொள்கிறோம் என்கின்றனர். இது ஒரு மாயமான தாழ்மையே. இது கம்யூட்டர் யுகம். விஞ்ஞானம் அளப்பரிய முன்னேற்றம் அடைந்து பெரும் சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறது. அதன் நுணுக்கங்களை யெல்லாம் கற்றுத் தேறி வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டிருக் கிறோம். அப்படியிருக்க நம்முடைய தாய் மொழியில் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற வேதாகமத்தைப் படித்து புரிந்து கொள்ள முடியவில்லை என்பது நம்பத் தகுந்த சமாதானமல்ல. எந்த ஒரு மனிதனோ மனுஷியோ எனக்கு கல்வியறிவு இல்லை. என்னுடைய ஆஸ்தி சொத்துக்களையும் நீங்களே வைத்துக் கொண்டு எனக்கு மரண பரியந்தம் உணவும் உடையும் கொடுத்துவிடுங்கள், அது போதும் என்று ஒப்படைத்து விட்டதாக நான் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால் ஆன்மீக விஷயத்தில் மனிதர்கள் வெகு தாராளம் எல்லாம் நீங்களே செய்துவிடுங்கள். பாட்டு, ஜெபம், பிரசங்கம் அனைத்தும் போதகர் செய்தால் சரி, ஆன்மீக காரியங்களுக்கு நாம் கொடுக்கிற முக்கியத்துவம் அவ்வளவுதான். வாழ்க நமது ஆன்மீக தாகம்.

எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கும், எந்தப் படிப்பை மேற் கொள்வதற்கும் முயற்சியும் பயிற்சியும் வேண்டும். அதேபோல் வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதற்கும் கூட முயற்சியும் பயிற்சியும் தேவை. அவ்விதமான முயற்சிகள் ஒன்றையும் மேற்கொள்ளாமல் எப்படி ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும்? இன்னும் சிலர் எங்களுக்குப் போதிய நேரம் இல்லை என்பர். இதுவும் ஒரு விதண்டாவாத சாக்குப் போக்குத் தான். ஆண்டவரே நான் உம்மைத் தொழுகிறேன். உம்முடைய வேதத்தைப் படிக்கிறேன். எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் எனக்கு ஒரு மணி நேரம் சேர்த்துப் 25 மணி நேரமாகக் கொடும். உமக்குத் தான் எல்லாம் முடியுமே என்பது போல் உள்ளது. நமக்குக் 'கொடுக்கப்பட்டிருக்கும், வாய்ப்பு வசதிகளுக்கேற்ப வேதாகம தியானத்துக்காக என்று ஒரு நேரத்தை ஒதுக்கி கொள்ள வேண்டு மேயல்லாமல் நேரமில்லை என்று பிதற்றுவது, ஆண்டவரே, உம்மைத் தொழுவதும் உமது வேதத்தைப் படிப்பதும் எனக்கு வேண்டாத வேலை என்னுடைய முக்கிய அலுவல்களை அனைத்தையும் செய்துவிட்டு சாவகாசமாக உம்மிடம் வருவேன். வராவிட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வருத்தப்படாதீர்" என்று சொல்லாமல் சொல்கிறோம். "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத் தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் கூறியதற்கு எதிர்த்திசைச் சிந்தனையோட்டம், இது நியாயமா?

நண்பர்களே 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்று (மத். 4:4, உபா. 8:3) சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று பவுலடியாரும் (I தீமோ. 4: 8) கூறுவதின் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும் போது வேதாகமத்தின் மூலம் தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆலோசனைகள் எவ்வளவு மேன்மையானது என்று புரியும்.

ஆகவே, பரிசுத்த வேதாகமத்தை நாள்தோறும் படித்து தியானித்து அவைகளின்படி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எண்ணிப் பாருங்கள். சங்கீதக்காரன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்கிறார். (சங். 1 :2 3) ஆகவே, வேதாகம வாசிப்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள முற்படுபவர்களுக்கு சில முட்டுக் கட்டைகள் இருக்கின்றன என்பது உண்மை, அதனால் ஆர்வம் குன்றிப் போகிறதா என்று தெரியவில்லை அவைகளில் சில.

**வேதாகமத்தின் தமிழ் நடை :** பரிசுத்த வேதாகமம் தமிழ் மறு மலர்ச்சிக்கு முந்தி மொழியாக்கம் செய்யப்பட்டது. அதில் கணிசமான வடமொழிக் கலப்பு இருக்கிறது. அதனால் தற்போதைய இளைய சமுதாயம் வேதாகமத்தின் தமிழ்நடையைக் காரணம் காட்டிப் படிக்க ஆர்வமற்றவர்களாயிருக்கிறார்கள். வயதானவர்கள் வேதாகமத்தின் பொடி எழுத்துக்களைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயலுகின்றனர்.

இன்னும் அநேகருடைய ஆர்வமின்மைக்குக் கீழ்க்கண்டவைகள் கூடக் காரணமாயிருக்கலாம்.

1. வேதாகமம் ஒரே நூல் அல்ல, அது பல நூல்கள் அடங்கிய ஓர் நூல் நிலையம், என்ற உண்மை தெரியாமை.
2. வேதாகமத்தின் மையக் கருத்து பற்றிய தெளிவின்மை.
3. வரலாறு, புவியியல் பின்னணி தெரியாமை.
4. பகுத்துப் படிக்கும் முறை தெரியாமை.
5. வேதாகமம் நம்பத் தகுந்ததுதானா என்ற சந்தேகம்.

ஆதாம் காலத்து பேசுகிற யாம்பு, நோவா காலத்து ஜலப் பிரளயம் மோசே காலத்து செங்கடல் பிளவு, யோனா காலத்து மனிதனை உயிரோடு விழுங்கி பின்னர் கக்கிப் போட்ட மீன் இவைகள் எல்லாம் வரலாற்று உண்மைகளா என்பதைவிட இதிகாசம் புராணங்களில் வரும் கற்பனைக் கதைகள் போன்றே உள்ளது என்று நினைப்போரும் உளர். இன்னும் சிலர் இயற்கையைப் பார்த்தால் கடவுள் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாமே. பின்னே ஏன் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று கூட சிலர் நினைக்கின்றனர். இயற்கை தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவது உண்மைதான் (சங் 19 : 1)ஆனால் இயற்கை தேவன் எப்படிப்பட்டவர் என்றும் அவருக்கும் மனுக் குலத்துக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்றும் மனிதன் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்றும் சொல்வதில்லையே, ஆகவே அவர் நமக்குத் தந்தருளியிருக்கிற வேதாகமத்தை வாசிக்க வேண்டும். வேதாகமத்தைப் படிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

1. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது
2. பேதையை ஞானியாக்குகிறது
3. தெளிவு உண்டாக்குகிறது
4. எச்சரித்தும் புத்தி சொல்லுகிறது, என்று தாவீது தமது சங்கீதப் புத்தகத்தில் கூறியிருக்கிறார். சங். 19:7 -11) அப்படிப்பட்ட தேவ இரகசியங்கள் அடங்கிய ஞானப் பெட்டகத்தைப் புறக்கணியாமல் நாள்தோறும் தனிமையாகவும் குடும்பமாகவும் வாசித்து அதன் வழியில் நடந்து ஆசீர்வாதம் பெறுவோம்.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிற வர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், பாக்கியவான்கள்" என்பது எவ்வளவு உண்மை என்பதை ருசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன். (வெளி. 1:3)

## சபை கூடிவருதல்

சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லக் கடவோம்.

எபி 10:25

# நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?

சமீப காலத்தில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற மக்கள் மத்தியில் ஒரு கேள்வி பிரபலமடைந்து வருகிறது. "நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?" என்பதே அந்தக் கேள்வி.

இது மிகவும் முக்கியமான கேள்வி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இதற்கு அளிக்கப்படும் விளக்கமும் பதிலும் சரியானவைகள் தானா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையாலும் ஞானத்தினாலும் நமக்கு தந்திருக்கிற தேவன் இந்த முக்கியமான கேள்விக்கு சரியான விளக்கத்தைத் தராமல் இருப்பாரா? இது இம்மைக்கும் மறுமைக்கும் தேவையான சங்கதியாயிற்றே. வாருங்கள், பரிசுத்த வேதாகமத்தில் தேடி வாசிப்போம்.

**"ஒருவனுடைய உணர்வுகளை வைத்து ஒருவன் இரட்சிக்கப் பட்டிருக்கிறான் என்று கண்டு கொள்ள முடியுமா?**

ஒருவன் இரட்சிக்கப்பட்டு விட்டான் என்பதை அவனுடைய உடல் சிலிர்ப்பையும், ஆவேசக் கூச்சலையும், அர்த்தமற்ற உளறல்களையும், அஸ் . . புஸ் . . என்று அலட்டிக் கொள்வதையும் வைத்துக் கண்டு கொள்ள முடியும் என்று சிலர் நம்புகின்றனர்; போதிக்கின்றனர். நம்முடைய நாடு மூட நம்பிக்கையின் விளை நிலம். எதைச் சொன்னாலும் நம்புவதற்குத் தயாராக இருக்கும் மக்களுக்குப் பஞ்சமில்லை. இந்த அறியாமையை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தங்கள் நயவசனப் பினாலும், இச்சகப் பேச்சினாலும் கிறிஸ்தவ அறத்தின் தூய்மையை மாசுபடுத்தி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்களுடைய வயிற்றுக்கே ஊழியம் செய்து கபடில்லாத வர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிற (ரோமர் 16 : 18) ஒரு கூட்டம் வேலி முள் தழைத்து வள்ருவதைப் போல் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று மிக்க மனவேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இவர்கள் பண்ணுகிற ஆர்ப்பாட்டங்களையும், போடுகிற வெட்டிக் கூச்சலையும் வைத்து ஒருவன் இரட்சிக்கப்பட்டுவிட்டான் என்பது சரியானால் இவர்களை விட பன்மடங்கு வேடிக்கை காட்டித் தங்கள் பக்தி நிலையை வெளிப்படுத்துகிற விக்கிரக ஆராதனைக்காரர்கள்

இவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் பரிசைத் தட்டி சென்று விடுவார்களே! நான் மிகவும் அதிகமாக மதிக்கிற தேவ ஜனமே, சிந்திப்பீர்!

ஒருவனுடைய உணர்வுகளை வைத்து ஒருவனுடைய இரட்சிப்பை உறுதி செய்ய முடியாது. உணர்ச்சி என்பது நாம் ஒன்றை நம்புகிறதினால் ஏற்படும் விளைவுதான். அதுவே முழு முதற் காரணமல்ல. நாம் எதை நம்புகிறோமோ அதை வைத்து உணர்ச்சிகள் உருவாகிறது. அந்த நம்பிக்கை நமக்குத் தரப்படும் போதனைகளால் உருவாகின்றன. அது தவறாகவும் இருக்கலாம். ஒரு மனிதன் தவறான போதனையை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தன் விசுவாசத்தை அமைத்துக் கொண்டு அதன்படி வெகு உண்மையாய் நடந்து வந்தாலும் அது நமக்கு இரட்சிப்பை ஈட்டித்தராது.

எல்லா மதத்தினரும் தாங்கள் தான் சரியான பக்தி மார்க்கத்தார் என்று நம்புகின்றனர். ஆனால் எல்லாமே உண்மையாகி விடுமா? மற்ற மார்க்கத்தாரைப் பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் கிறிஸ்துவ மார்க்கத்தைப் பொறுத்தவரை இரட்சிப்புப் பற்றி புதிய ஏற்பாட்டில் நமக்கு மிகத் தெளிவான போதனைகள் இருக்கின்றன.

ஆனால் இதில் விஷயம் என்ன வெனில் மக்களில் பெரும்பாலோர் மார்க்கவிஷயத்தில் போதிய அக்கறை காட்டுவதில்லை. தாங்கள் நம்புகிறதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். நான் நம்புவது, உண்மையா, பொய்யா என்று எனக்கு கவலையில்லை; கர்த்தர் எனக்குக் கொடுத்த வெளிச்சத்தில் நான் போய்க் கொண்டிருக்கிறேன் எனக்கு மோட்சம் உறுதி. எங்கள் பெரிய பாஸ்டர் மூன்றாம் வானத்துக்கு ஏறிப் போய் ஜீவ புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து விட்டு வந்திருக்கிறார் என குருட்டுத் தனமாக அடித்துக் கூறிக் கொண்டு, முடிந்தால் மற்றவர்களையும் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ள முயல்கின்றனர்.

ஆனால் இரட்சிப்பை நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிற இயேசு கிறிஸ்து . . சத்தியத்தையும் அறியுங்கள்வ சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று கூறுகிறார். (யோவா 8:32) "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் (I தெச. 5:21) இது விஷயத்தில் யார் சொல்வது நியாயமாகவும், உண்மையாகவும் இருக்கும் என்பதை நீங்களே சொல்லுங்கள்.

இன்னும் அநேகர், நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதில் உண்மையாயிருந்தால் போதும் என்றும் வாதிடுகின்றனர், பவுல் ஆக

மாறின சவுலைப் போல தான் நம்பின காரியத்துக்காக முழு மூச்சுடன் பாடுபட்டவர்கள் மிக மிகச் சிலரே. அப்படிப்பட்ட வைராக்கியம் உள்ள சவுல் தன் நிலையை ஒரு கட்டத்தில் மாற்றிக் கொண்டார். அது எல்லோருக்கும் முடிகிற எளிதான காரியம் அல்ல. அதற்கு ஆண்மையும் மனத்தின்மையும் வேண்டும். சவுல் சீரிய செம்மனமுடையவராய் இருந்தபடியால் (லூக் 8 : 15) தன் தவறுக்காக மனஸ்தாபப்பட்டு, அதை விட்டு விட்டு உண்மையைப் பற்றிக் கொண்டார்.

ஆம், நண்பர்களே, நேர்மையான உள்ளம் படைத்த ஒரு மனிதர் ஒரு பொய்யை மெய்யென்று நம்பிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரை அணுகி, உண்மை இப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்போனால் இரண்டு காரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. ஒன்று : அவர் தன்னுடைய தவறுகளுக்காக மனம் வருந்தி அதை விட்டு விடுவார். அல்லது தன் பிடிவாதத்தில் இன்னும் கெட்டியாகி இதுவரை அறிந்தும் அறியாமலும் செய்து வந்த தவறைக் கூசாமல் பகிரங்கமாக செய்ய தீவிரிப்பார். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

இன்னும் சில பேர் நான் என் மனச்சாட்சிப்படி குற்றமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறேன். எனக்கு இரட்சிப்பும் மோட்சமும் உறுதி என்று கூறுகின்றனர். ஒருவன் சுத்த மனச்சாட்சியோடு இருப்பது ஒன்றே இரட்சிப்பைப் பெற்று தந்துவிடாது. மனசாட்சி என்பது நாம் ஒன்றைக் குறித்து கொண்டிருக்கிற அபிப்பிராயமே ஒருவன் ஒரு காரியத்தைச் சரி என்று ஏற்றுக் கொண்டால் மனச்சாட்சியும் ஏற்றுக் கொள்ளுகிறது. நாம் ஒன்றைத் தவறு என்று நினைத்துக் கொண்டிருந்தால் அதை மனச்சாட்சியும் தவறு என்றே நினைக்கிறது. அதாவது ஒரு காரியத்தில் உள்ள நியாய அநியாயங்களை மனச்சாட்சி நமக்கு உணர்த்துவதில்லை. உண்மை எது பொய் எது என்று கண்டுபிடித்துச் சொல்லுகிற ஆற்றலும் மனச்சாட்சிக்கு கிடையாது. ஆகையால் ஒருவனுடைய மனச்சாட்சி ஒன்றை ஏற்றுக் கொள்ளுகிறதினாலேயே தேவன் அதை அங்கீகரித்து பாவ மன்னிப்பு அருளுவார் அல்லது அது நியாயமானது என்று நினைப்பது சரிப்பட்டு வராது. "மனுஷனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்" (நீதி 14 : 12, 16 : 25) என்று ஞானி சாலமோன் மூலமாக பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார். அந்த தர்சு பட்டணத்து சவுல் பவுலாக மாறுவதற்கு முன்னர் சபைகளைக் கொடுமைப்படுத்தினான். பிற்காலத்தில் அதைப் பற்றி அவரே சொன்னது. "சுத்த நல் மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்" (அப் 23:1) ஆனால் அது தவறு என்று பின்னர் புரிந்து கொண்டு வருத்தப்படுகிறார். (கலா 1 : 13, 14; I தீமோ1 : 13) ஆகவே,

நான் மனச்சாட்சிப்படி நடக்கிறேன் என்பதை வைத்து இரட்சிப்பின் நிச்சயத்தை நிர்ணயிக்க முடியாது.

அப்படியானால் இரட்சிப்பின் நிச்சயத்தை அறிந்து கொள்ள என்ன தான் வழி என்று கேட்கிறீர்களா? அது மிக சுலபமானது. ஆனால் கொஞ்சம் வேதாகமத்தைப் புரட்டியாக வேண்டும். அது தானே சிரமம் என்கிறீர்களா? ஆம், நண்பர்களே! நம்முடைய இந்த பலவீனத்தைப் புரிந்து கொண்டு தான் சாத்தானும் அவனுடைய சேனைகளும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு சீஷத்துவத்தின் விலையைக் கொடுக்க விரும்பாத மக்களின் இருதயங்களில் பலவிதமான விஷ விதைகளை விதைத்து வளர்த்து வருகிறார்கள். இந்த விஷயத்திலாவது கொஞ்சம் விழிப்பாக இருந்து சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு. "நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன்" என்று சம்பந்தப்பட்ட பாவியே தம்பட்டம் அடித்துக் கொள்வது அறிவீனம். ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன என்ற அறிவிப்பு பரலோகத்திலிருந்து வரவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு குற்றவாளி சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம், ஒரு இரவு திடீரென்று ஒரு பயங்கர கூச்சல் கேட்டது. சிறைக்காவலர் ஓடி வந்து என்னப்பா? என்று பதட்டத்துடன் விசாரித்தார். அவன் ஒரு மாதிரி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு நான் மன்னிக்கப்பட்டுவிட்டதாக ஒரு கனவு கண்டேன். கதவைத் திறந்து விடுங்கள் நான் வீட்டுக்குப் போக வேண்டும் என்று கூறினான். நண்பர்களே, அவன் விடுதலையாவதற்கு அவனுடைய கனவும், உணர்ச்சியும் போதுமா? அவனை நியாயம் விசாரித்து மன்னிப்பு அளிக்க வல்ல அதிகாரமுள்ள நீதிபதி அவனை விடுவிக்கும் உத்தரவு போட்டால் அல்லவா அவன் விடுதலை அடையமுடியும்! அதுபோல பாவியாகிய ஒருவனை தேவன் புரிந்து மன்னிக்காமல் இவனாகவே நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று பிதற்றுவானானால் அவன் இரக்கப் பட வேண்டியவனேயன்றி இரட்சிக்கப்பட்டவன் ஆகிவிடு வானா? சிந்திப்பீர்!

### கர்த்தர் பாவ மன்னிப்புப் பெற சில நிபந்தனைகளை விதித் திருக்கிறார்.

பாவ மன்னிப்பை அருள, சில நிபந்தனைகளை விதிக்க தேவனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினாலே இரட்சிப்பு சாத்தியமாகும். அப்படியானால் அந்த நிபந்தனைகள் என்ன?

(1) விசுவாசம் : "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்". (மாற்கு 16 : 15, 16).

(2) மனந்திரும்புதல் : "அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக் 13 : 3,5)

(3) அறிக்கையிடுதல் : "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப் படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்", (ரோமர் 10 : 10)

(4) திருமுழுக்குப் பெறல் : "அதற்குப் பிலிப்பு, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான், அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" (அப். 8 : 37, 38 அப் 2 : 38) ஐயும் பார்க்க

தேவன் எவ்வாறு பாவ மன்னிப்பளித்து இரட்சிக்கிறார் என்று மேற்சொன்ன வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இதை தேவனுடைய 'இரட்சிப்பின் திட்டம்' என்று கூறலாம். இதை விட்டு விட்டு மனிதன் தன்னிச்சையாக எதைப் போதித்தாலும் நம்பினாலும் அது இரட்சிப்பைத் தராது. பாவத்திலிருந்து மனிதனுக்கு விடுதலையும் கிடைக்காது.

### பாவத்திலிருந்து விடுதலையடைவதற்கு சுவிசேஷத்துக்கு கீழ்ப் படிவது அவசியம்.

மக்கள் பாவங்களில் வாழ்வதே இரட்சிப்பை இழந்து போவதற்குக் காரணமாயிருக்கிறது. அதற்கு பரிகாரமாக சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந் தால் இரட்சிப்பு பெறமுடியும், பாவ மன்னிப்பு அடைவதற்கு வகுத்துத் தரப்பட்டுள்ள வழியையே சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிதல் என்கிறோம். (ரோமர் 10 : 16).

ஆனால் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களுக்கு இதில் நாட்டம் ஏற்படா வண்ணம் இப் பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கி வைத்திருக்கிறான் (II கொரி 4 : 4) அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் செத்தால் கல்லறையில் இடம், பிழைத்தால் திருமணம் செய்து வைப்பதற்கு ஓர் ஆலயம். இரட்சிப்பு நித்திய ஜீவன், மோட்சம் இதெல்லாம் இரண்டாம் பட்சம், இந்நிலை என்று மாறுமோ?

சகோதரர்களே, சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது அபாயகரமானது. "நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குங் காலமாக இருக்கிறது முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? (I பேது 4 :17) இந்தக் கேள்விக்கு அப்போஸ் தலனாகிய பவுல் பதில் அளிக்கிறார் கேளுங்கள். "தேவனை அறியாத வர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினைச் செலுத்தும்படிக்கும்.

கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப் படும் போது அப்படியாகும்.

அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப் படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்த படியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத் திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது

அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்ட னையை அடைவார்கள்". (II தெச 1 : 7 - 10) இரண்டு வித்தியாசமான நிலை (1) கீழ்ப்படிந்தவர்களுக்கு நித்திய இளைப்பாறுதல் (6ம் வசனம்) கீழ்ப்படியாதவர்களுக்கு அழிவாகிய தண்டனை. நண்பனே நீர் எதைத் தெரிந்து கொள்ளப் போகிறீர்?

## காணிக்கை எப்படிக் கொடுக்க வேண்டும்?

1. ஒழுங்காக - I கொரி. 16:12
2. திட்டமிட்டபடி - I கொரி. 16:2
3. ஒவ்வொருவரும் - I கொரி. 16 : 1, 2
4. உதாரத்துவமாய் - II கொரி. 8: 1-4
5. நோக்கத்துடன் - II கொரி. 8 : 12-15
6. உற்சாகமாய் - II கொரி. 9:7

# இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும்

கிறிஸ்தவ மார்க்கத்தில் எந்த ஒருதலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண்பாடுகளுக்கு வேதாகமம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துக்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப் பிடித்து வைத்துக் கொண்டு, அதே பொருளைக் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி ஒரம் கட்டி விடுவது தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வரவேண்டு மானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதைபோல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள் நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக் குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே அதைப் பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு".

"ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல", (எபே 2 : 8, 9) என்கிற வசனத்தையும், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று போதிக் கின்றனர்.

வேறு சிலர் . . . "நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்".

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" மாற்கு 16 : 15, 16) என்கிற வசனத்தையும் "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38) என்கிற வசனத்தையும் சுட்டிக் காட்டி இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர்.

இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் முழு உண்மை அல்ல. ஒருவர் இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார். வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷனுடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும். மாற்கு 16 : 15, 16 மற்றும் அப் 2 : 38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவ கிருபை மட்டும் இரட்சிப்புக்குப் போதும் என்று போதிப்பதும், அதை ஏற்றுக் கொள் வதும் தவறானது. அதே போல சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே இரட்சிப்புக்குப் போதுமானது என்பதும் அர்த்தம்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்க வில்லை. "என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின வருடையதாயிருக்கிறது" என்கிறார் (யோவான் 7 : 16) அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக் கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ் தலர்களை வழி நடத்தவும், மறந்து போனதை நினைவுக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்தார். (யோவான் 14 : 26; 16 : 13) அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக் கொண்ட அப்போஸ் தலர்கள் இரட்சிப்பைக் குறித்து எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? வேதாகமத்தில் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கும் இரட்சிக்கப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் கவனமாக வாசித்துப் பார்த்தால் அவைகள் (எபே 2 : 8 -9) க்கும், மாற்கு 16 : 15, 16 மற்றும் அப் 2 : 38க்கும் ஏற்ற வகையில் தான் நடை பெற்றிருக்கிறது என்று அறியலாம். இயேசு கிறிஸ்து ஒரே வழி, அவருடைய போதனையும் ஒரே போதனைதான்.

இயேசு கிறிஸ்து தம்முடைய மரணத்துக்குச் சற்று முன்பாக அவரைப் பின்பற்றுகிற சீஷர்கள், எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று உருக்கமாக ஜெபித்தார். (யோவான் 17 : 20, 21) அப்படியானால் அவரைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களும் ஒரே வழியில் நடக்கவும், ஒரே விதமாக இரட்சிக்கப்படவும் வேண்டுவதும் கூட அவசியமன்றோ! ஆகவே இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் (எபே 2 : 8-9) மற்றும் (யோவான் 3 : 16) ஆகிய வசனங்களில் சொல்லப் பட்டிருக்கிற தேவ கிருபையும், (மாற்கு 16 : 15,16) மற்றும் (அப் 2 : 38) ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள மனிதனுடைய பங்கும் சந்தேகத்துக்கு இடமின்றி இணைந்து இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பார்த்துக் கொண்டார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எவ்வாறு தேவனுடைய அன்பு, அழிந்து போகிற மானிடருக்காகச் சுரந்தது என்றும், கர்த்தராகிய இயேசு அதை அறிந்து எப்படித் தன்னை அர்ப்பணித்துத் தியாகம் செய்தார் என்பதையும் கேட்டு, உள்ளத்தில் விசுவாசித்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசித் தார்கள் என்று விளக்குகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இரட்சிப்பின் திட்டத்தில் அனைத்து அம்சங்களும் இழையோடுவதைக் கவனியுங்கள்.

பல சமயங்களில், நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமை யாமையை மறந்து விடுகிறோம். விசுவாசத்தின் மூலமாக எப்படி ஒரு மனிதன் அந்தக் கிருபையைச் சந்தித்து மறுபடியும் பிறக்கிறான் என்று விளக்கத் தவறி விடுகிறோம். அதனால் மக்கள் தேவகிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அது சரி அன்று.

கிருபை என்பது என்ன? கிருபை என்பது நாம் சம்பாதிக்காத ஓர் சொத்து. அதைப் பெற்றுக் கொள்வதற்கு நமக்குத் தகுதி கிடையாது. அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டியதில்லை. அதைப் பெற்றுக் கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. அதை, ரோமத் திருச்சபைக்கு அப்போஸ்தலன் பவுல் கீழ்வருமாறு விளக்குகிறார். "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்று எண்ணப் படாமல் கடன் என்று எண்ணப்படும்.

ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிற வரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் அவனுடைய விசு வாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்படும். (ரோமர் 4 : 4;6) ஆக, தேவ கிருபை என்பது, இரட்சிக்கப்படுவதற்கு எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவனை

இரட்சிப்புக்குள் கொண்டு வர தேவன் பாராட்டுகிற இரக்கம் என்று சொல்லலாம். ஒருவன் பாவ மன்னிப்புப் பெற்று இரட்சிப்புக்குள் வர நீதிமானாக இருக்க வேண்டும். ஆனால் எல்லாரும் பாவம் செய்து கெட்டுப் போய் விட்டபடியால் ஒருவருக்கும் அந்தத் தகுதி கிடையாது. பின்னர் ஒருவன் பாவமன்னிப்பு அடைவது எங்ஙனம்? அதற்கு தேவனே ஒரு எளிமையான திட்டத்தை வகுத்துத் தந்துள்ளார் என புதிய ஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. அதாவது ஒரு பாவி, சிலுவை மரத்தில் தொங்கி மரித்த இயேசுவின் வழியாகவே தேவ அன்பையும், தேவனுடைய இரக்கத்தையும் தேவ கிருபையையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்கமுடியுமே தவிர, தன்னுடைய நீதியின் கிரியைகளினி மித்தம் அது சாத்தியப்படாது ஏனெனில் நம்முடைய நீதி என்பது அழுக் கடைந்த கந்தை என்று ஏசாயா கூறுவதை (ஏசா 6 : 6 -11). "எல்லோரும் பாவம், செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம் (ரோமர் 3 : 23) "நீதிமான் ஒருவனும் இல்லை (ரோமர் 3 : 10) என்று கூறி பவுல் அப்போஸ்தலனும் அதை ஆமோதிக்கிறார். ஆகவே தேவனுடைய கிருபையில்லாமல் தன் சுய முயற்சியால் எந்த ஒரு மனுஷனும் தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக நீதிமானாக முடியாது.

விசுவாசத்துக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள மனிதன் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி இங்கே பேச்சில்லை. அப்படிப்பட்ட செயல்பாடுகள் அவனுடைய இரட்சிப்பை அவனுக்குச் சம்பாதித்துத் தருவதில்லை. அவைகள் தேவனுடைய கிருபையிலும், இயேசுகிறிஸ்துவின் மரணத் திலும் வைக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடே. அவைகள் அவனுடைய பாவமன்னிப்பை உள்ளடக்கிய தேவ கிருபையையும், இரக்கத்தையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு அவனுக்கு தேவைப்படுகிற காரியங்களே அன்றி அவைகளே இரட்சிப்புக்குப் போதுமானவைகள் அல்ல.

உதாரணமாக, ஒரு தர்ம சிந்தையுள்ள செல்வந்தன் ஒரு அனாதை விடுதிக்கோ அல்லது குருடர் பள்ளிக்கோ ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை இனாமாகக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்பள்ளியின் நிர்வாகி வங்கிக்கு எடுத்துச் சென்று பணம் பெறுகிறார். காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று பணமாக மாற்றினதே அந்த தொகையை பெற்றுக் கொள்வதற்கு தகுதியாகி விடுமா?அதனால் இலட்சம் ரூபாய் இனாமாகக் கொடுத்தார் என்ற உண்மை மாறுவதில்லை. அதேபோல் அந்தக் காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று பணமாக மாற்றாதவரை அந்தக் காசோலையால் பயன் கிடையாது. அதைப்

போன்றுதான் இரட்சிக்கப்படுவதற்கு தேவ கிருபையும், கிறிஸ்துவினுடைய தியாகமும் அவசியம். அது இலவசம், ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள விசுவாசம் தேவை"விசுவாசத்தின் மூலம்" என்ற சொல்லாச்சிக்கு அதுவே பொருள்.

தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான சுவாகிய இரட்சிப்பை மனிதன் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் (எபே 2 : 8,9) கூறுகிற முழுமைக் கருத்து அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாச் சொல்லியிருக்கலாமே "விசுவாசத்தைக் கொண்டு" என்ற சொற்றொடர் ஏன்?

ஆகவே இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ உதாசீனம் செய்வதோ கூடாது.

ஆனால், ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். கிறிஸ்துவே நம் பாவம் போக்கும் பரிகாரி. இரட்சிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது. மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்துக்கு ஏறிப் போகிறது.

தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு மனிதனுக்குள் எவ்விதமான தகுதியும் இல்லை. ஆகவே தன்னுடைய பாவங்களுக்காக தானே பாவ மன்னிப்புப் பெற முடியாது என்றும், அதைக் கர்த்தருடைய கிருபையே செய்யும் என்றும் புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. "கிருபையின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது கிரியையினால் உண்டானது அல்ல (எபே 2 : 8,9) என்கிற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே முழு முதற் காரணமாகிறது பாவப்பிணியால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் நம்மை விடுவிக்க வல்லவர் இயேசு கிறிஸ்துவே. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே.

ஆகவே இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது தேவனுடைய ஈவு; கிரியையினால் அல்ல ஒருவரும் பெருமை பாராட்டுவதற்கு இடம் இல்லை. எவ்வளவு அருமையான ஏற்பாடு! அவருடைய மகத்தான அன்புக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டாமா? இயேசுகிறிஸ்துவின் சிலுவை வழியாக தேவனுடைய இரக்கமும் கிருபையும் வெளிப்பட்டிருக்கிறதை நீங்கள் உணர முடிகிறதா?

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த (எபே 2 : 8, 9) ஒரு பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கூறுகிறது. வேதாகமம் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர் களானால் "விசுவாசத்தைக் கொண்டு" என்ற சொற்றொடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லாம் எவ்வளவு அர்த்தமுள்ளவை களோ, அதே அளவு 'விசுவாசத்தைக் கொண்டு' என்பதும் அர்த்தமுள்ளதே. ஈவைப் பூரணப்படுத்துகிறதற்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது. ஒருவர் கொடுக்க வேண்டும் . . . மற்றொருவர் பெற்றுக் கொள்ள வேண்டும். பெறுவதற்கு அங்கே ஒருவர் இல்லையென்றால் ஈவு பூரணப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம். ஆனால் மனிதன் விசுவாசத்தின் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளாதவரை அவன் அதை அடைய முடியாமல் இன்னும் இழந்து போன நிலைமையிலேயே இருப்பான். விசுவாசம் தான் நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள வகை செய்கிறது. இயேசு கிறிஸ்து, இரட்சிப்பின் நிபந்தனைகளில் மனிதனுடைய பங்கைப் பற்றி மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதைக் குறைவாக மதிப்பிட்டு தவறு செய்து விடாதபடி தேவன் காத்துக் கொள்வாராக!

'விசுவாசத்தைக் கொண்டு' என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? விசுவாசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிற ஒரு கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற வசனப்பகுதிகளை புறக்கணித்துப் போடுவதா? விசுவாசத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட எல்லா வசனப்பகுதிகளையும் படித்து ஒன்றோடொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையல்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக் கொடுத்தல் என்பவைகளின் பொருளை சரியாக விளங்கிக் கொள்ளாமற் போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும். தேவனுடைய பங்கு என்பதற்கு (எபே 2 : 8, 9) ஐ பயன்படுத்தினோம் ஈவையும் குறித்துப் பேசுகிறது. அவ்வாறே மனிதனுடைய பங்கு என்பதற்கும் அதைப் பொருத்திப் பார்ப்போம். ஏனெனில் அது மனிதனுடைய விசுவாசத்தைக் குறித்தும் பேசுகிறது.

தேவன் நமது இரட்சிப்புக்கு எவ்வளவோ செய்திருந்த போதிலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. முதலாவது நாம் இரட்சிப்பின் வேர் எது என்று கண்டுபிடித்து பின்னர் இரட்சிப்பின் கனியைத் தேட வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி. ஆனால் நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. இப்பொழுது நமக்குக் கருத்து வேற்றுமை எங்கே இருக்கிறது? யோவான் 3 : 16லும் மாற்கு 16 : 16 லும் உள்ள விசுவாசிக்கிறவன், என்ற வார்த்தை யின் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இந்த வார்த்தைக்கு நம்பு, சார்ந்து கொள் என்று பொருள் கொள்ளலாம். நாம் இரட்சிக்கப்பட கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அதற்கு நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். பாவ நிவாரண பலியாகிய கிறிஸ்துவின் மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோம் என்று பொருள். விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வருகிறது. (ரோமர் 10 : 17) விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் உறுதியும் காணப்படாத வைகளின் நிச்சயமுமாயிருக் கிறது என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர். (எபி 11 :1)

விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது; செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் ஆவியில்லாத சரீரம் என்று வாக்களிக்கிறது. (யாக் 2 : 26)

ரோமர் 4:3ல் "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்கிறது. ஒரு குழந்தையை ஈன்றெடுப்பதற்குரிய சரீர பெலன் சாராளுக்கு அற்றுப் போன பின்பு, சாராள் மூலமாக ஓர் ஆண் மகவைத் தருவேன் என்று சொன்ன போது

ற்ற கட்டளைகளைப் போலவே இதுவும் அவனுக்குச் சோதனையாய் அமைந்தது. ஆனால் ஆபிரகாம் தன் விசுவாசத்தில் உறுதியாக இருந்து ாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்தான். அவனுடைய விசுவாசம் றுதியுள்ளதாகவும், உயிருள்ளதாகவும், தேவனுடைய எந்தக் ட்டளைக்கும் கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. பின்னர் ஒரு கட்டத்தில் சாக்கைப் பலியிட தேவன் கட்டளையிட்ட போது நாம் அவருடைய விசுவாசத்தின் கனியைக் காணமுடிகிறது. (எபி 11 : 17-19) மரித்தோருக்கு வனைக் கொடுக்கிற தேவனிடத்தில் ஆபிரகாம் விசுவாசம் வைத்தான். தனால் ஈசாக்கைப் பலியிடத் தயங்கவில்லை. அவனுடைய விசுவாசம் சயல்படாததாக இருந்திருந்தால் அது தேவனுக்கு பிரியமாய் ருந்திருக்காது.

"விசுவாசத்தை கொண்டு" என்ற சொற்றொடரில் மனந்திரும் லும் அடக்கம்."அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் ருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத் னாலே பிரசங்கிக்கப்படவேண்டியது" என்று இயேசு சொன்னார். ாக் 24 : 47) சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் தேவனுடைய கிருபையை ப்வாறு அடைந்து பாவ மன்னிப்புப் பெறுவது என்று பேதுரு றினார். பாவ மன்னிப்புகென்று, மனந்திரும்பி ஞானஸ்நானம் பற்றுக் கொள்ளுங்கள்" (அப் 2 : 38).

மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து ன்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் ாக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று ணர்வதாகும். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு ாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (II கொரி 5 21) மனிதன் இயேசுவின் இரத்தத்தின் மேன்மையையும், வல்லமை யும் உணராவிட்டால் மனந் திரும்ப மாட்டான். அவன் சிலுவை ண்டையில் வந்து, இயேசுவின் கால்களிலும், கைகளிலும் அடிக்கப்பட்ட ணிகளின் சத்தத்தைக் கேட்டு, அவருடைய வேதனையின் பெருமூச்சின் ஷ்ணத்தால் மனமுருகி ஆண்டவரே! என் மேல் இரக்கமாயிரும் என்று றுவான். விசுவாசத்தைக் கொண்டு என்ற சொற்றொடரில் றிக்கையிடுதலும் அடக்கம்.

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு வன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் தயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப் ண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோமர் 10 : 9 -10)

பின்னர் ஞானஸ்நானம் : இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப் பட்டோம் ஆனால்'விசுவாசத்தை கொண்டு என்பதை மறந்து விடக் கூடாது. நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்ய வேண்டும் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' (மாற்கு 16 : 16) ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்துணை வேதனை! சிலுவை இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதே போல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை ஞானஸ்நானத்தில் நாம் அடக்கம் செய்யப்படும்போது, நாம் வெளிப்படையாகவும், அடையாளமாகவும் பாவ மன்னிப்புக் கென்று அவருக்குள் மரிக்கிறோம் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். நாம் ஞானஸ்நானத்தின்போது நம்முடைய பழைய பாவமனுஷனை அடக்கம் செய்து, உயிர்த்தெழுதலினால் அவருடைய சாயலில் இணைக்கப்படுகிறோம். ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது. (அப் 2 : 38). ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவரு டைய மரணத்திலும் இரத்தத்தினாலும் தான் நம்முடைய பாவங்களுக்குரிய பிரயாசித்தம் கிடைக்கும்.

ஞானஸ்நானம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்துணை மகிழ்ச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஆவியானாலும் ஜலத்தினாலும் பிறக்கிறோம். கீழ்ப்படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம். எப்படி ஆபிரகாம் தேவனை நேசித்துக் கீழ்ப்படிந்து தேவனைக் கனப்படுத்தினாரோ அவ்வண்ணமாக நாமும் செய்கிறோம். ஆனாலும் நாம் இரட்சிப்பைப் பற்றி பிரசங்கிக்கும் போது முழுக் கதையையும் சொல்ல வேண்டும். தேவனுடைய கிருபையிலிருந்தும், கிறிஸ்துவினுடைய சிலுவையில் இருந்தும் தொடங்க வேண்டும்.

மாற்கு 16 : 15ல் விசுவாசமும் ஞானஸ்நானமும், சொல்லப்படாததற்கு முன்பு, பூலோகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம் பண்ணப்

படுதல், உயிர்த்தெழுதல், ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். இது தான் மக்களுடைய மனதை மாற்றவல்லது. தேவனுடைய அன்பும் கிறிஸ்து தம்முடைய இன்னுயிரை நம்முடைய பாவங்களுக்காக விட்டதும் தான் மக்களுடைய உள்ளத்தைத் தொடும். அதனாலன்றோ **"நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்"** என்றார் இயேசு (யோவான் 12 : 32) அப்போஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தே கொஸ்தே நாளில் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்ட தையும் உருக்கமாகவும், உள்ளத்தை தொடும் வகையிலும் பிரசங்கித்தார். **நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார்,** என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள் என்று கூறியதைக் கேட்டு "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும், என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர். (அப் 2 : 36, 37).

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கும், மனிதனு டைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக் கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறைவேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது. அது கிறிஸ்து சொன்ன வசனமே. (யோவான் 12 : 48).

## பாட்டு

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி.

எபே 5:19.

# சவுல் என்கிற பவுல்

சவுல் என்ற மறு பெயருள்ள பவுல், உலக வரலாற்றில் பொ
னேடுகளால் பொறிக்கப்பட வேண்டிய வெகு சிலரில் ஒருவர். இ
கிறிஸ்தவத்தைத் தழுவிய சூழ்நிலை மிகவும் ஸ்வாரஸ்யமானது. அ
அப் 9, 22, 26 ஆகிய அதிகாரங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளலா

இவர், வெகு வைராக்கியமாய்க் கடைப்பிடித்து வந்த யூத மா
கத்தை விட்டு விட்டுக் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவியவர் (கலா 1 : 1
14) இதில் வேடிக்கை என்னவெனில் ஒரு காலத்தில் இந்
கிறிஸ்துவத்தைத் தான் அழித்து ஒழித்து விடக் கங்கணம் கட்
கொண்டு பாடுபட்டார். (கலா 1 : 23) இப்படிப்பட்ட வெறியர், தி
என்று மனம் மாற்றம் அடைந்தது மிகவும் எதிர்பாரதது,
மக்களிடையே பெரும்பரபரப்பை ஏற்படுத்திய செய்தியாகவும் இருந்தது

சவுலுடைய குணாதிசயங்கள் : கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொள்
முன்னர் கூட அவர் சிறந்த மதவாதியும் ஒழுக்கமுள்ளவரே (பிலி 3 :
அவர் எப்பொழுதும் சுத்த நல்மனச் சாட்சியோடு மனிதருக்கு முன்ப
மட்டும் அல்ல, தேவனுக்கும் முன்பாகவும் நடந்து கொண்டவர் (அப்.
: 1, 24 : 16) ஆனால் பாவம்! தான் நிலை நிறுத்த முயற்சிக்கிற யூத ம
காலாவதி ஆகிவிட்டதை சவுல் அறியாதிருந்தார். (கொலோ 2 : 14 -
இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் பின்
வாழ்கின்ற மக்கள் யூத மார்க்கத்தின் பிரமாணங்களின்படி இரட்
படைய முடியாது என்பதை அறியாதிருந்தான். (யோவான் 14 : 1-
கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மேன்மையை விளங்கிக் கொள்ளா
கிறிஸ்துவத்தைத் தழுவின. தழுவுகிற மக்களைத் துன்புறுத்தி அ
மார்க்கத்தையும் அழித்து விடுவது தான் தேவனுக்குச் செய்யும் தொண்
என்று நினைத்தார். (I தீமோ 1:13) இயற்கையாக அவர் ஒழுங்கில்ல
வரும் துன்மார்க்கனும் அல்ல யூதமார்க்கத்தில் அவனுக்கு இருந்த பற்
வைராக்கியமுமே கிறிஸ்தவ மார்க்கத்தின் மேல் பகைமை கொள்
காரணமாயிருந்தது. பின்னர் ஒரு காலத்தில் அதை உணர்
துக்கப்பட்டு,"பாவிகளில் பிரதான பாவி" என்று தன் அவலநிலை
அறிக்கையிட்டிருக்கிறார். (I தீமோ 1 : 13 - 15; பிலி 3 : 6).

கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு முன்பு, இயேசு கிறிஸ்து கட்டிய சபையை அழித்து நிர்மூலமாக்கிப் போட்டுத் தான் வேறு வேலை என்று வெறித்தனமாகஅலைந்த சவுலுடைய வாழ்க்கை, ஒருவன் தவறான மார்க்கத்தைப் பின்பற்றுவதில் கூட நல்ல மனச்சாட்சி உடையவனாக இருக்கமுடியும் என்பதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. (கலா 1 : 23; அப் 9 : 1-2; 26:9-11) அதனாலன்றோ சாலமோன் ஞானி "மனுஷனுக்குச்செம்மை யாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள்" என்கிறார். (நீதி 14 : 12) ஆதலால் இப்படி கர்த்தர் நிமித்தமாகத் தான் அவைகளைச் செய்தேன் என்று சொன்னாலும் அவர் தேவ சித்தத்தை அறிந்து கொள்ளாத ஒரு பாவியாகவே வாழ்ந்தார். (I தீமோ 1 : 13-15).

### கர்த்தர் ஏன் சவுலுக்குத் தரிசனமானார்?

கர்த்தர் சவுலுக்குத் தரிசனமானது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்துப் புறம்பாக விசேஷித்த முறையில் அவரை இரட்சிப்பதற்காக அல்ல. சிலபேர் இரட்சிப்படைவதர்கு கர்த்தர் தரிசனமாக வேண்டும் என்று தவறாக நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும் திரிகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தரை தரிசிக்க வேண்டும் என்ற விதியேதும் கிடையாது. (I பேதுரு 1 : 8)பின் ஏன் சவுலுக்கு தரிசன மானார்? (I கொரி 15 : 8) சவுல் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெறுவதற்குரிய தகுதியை அடையக் கர்த்தரை தரிசிப்பது அவசியமாக இருந்தது. அப்பொழுது தான் அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க முடியும். (அப் 1 : 21, 22 : 26 : 16-18) பின்னர் ஒரு சமயம் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து"எல்லாருக்கும் பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" என்று கூறுகிறார். (I கொரி 15 : 8) அவர் கூறியதின் கருத்து என்ன? பாவியாகியஅவருக்கு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்னர் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; இப்பொழுது கர்த்தருடைய கிருபையால் அந்த அரும் வாய்ப்பைப் பெற்றேன் என்பதைத்தான் அவ்வாறு கூறினார். நாம் இன்றைக்கு அப்போஸ்தலர் ஆகும் சந்தர்ப்பம் இல்லை என்பதால் நாம் கர்த்தரை தரிசிக்க வேண்டியதில்லை. ஆகவே, எனக்கும் கர்த்தர் தரிசனம் கொடுக்க வேண்டும் என்று வீணாகக் காத்திருக்க வேண்டாம். இந்த நினைவுகளைச் சதா தங்கள் உள்ளங்களில் வைத்துக் கொண்டிருப்பதால் இவைகள் சில வேளைகளில் கனவுகளாகத் தோன்றலாம் அது தரிசனமல்ல" "தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது போல . . . " (பிர 5 : 3; ஏசாயா 29 : 8) ஐக் கூட வாசிக்கவும்.

சவுலைப் போல, பாவியாக ஒருவன் வெளிச்சத்தைக்காண வேண்டியது அவனுடைய இரட்சிப்புக்கு அவசியமா?

சவுல் வெளிச்சத்தைப் பார்த்தது மத்தியான வேளை; இருள் சூழந்த இரவு நேரத்தில் அல்ல. வெளிச்சத்தைக் காண்பதற்கு முன் அவர் எப்படி பாவியாக இருந்தாரோ அதே போல வெளிச்சத்தைக் கண்ட பிறகும் அவர் பாவியே. வெளிச்சத்தைக் கண்ட பிறகு,"ஆண்டவரே நீர் யார்?" என்ற கேள்வியைக் கேட்டான். அதற்கு இயேசுவின் பதில் : நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே. (அப் 9 : 5) கவனியுங்கள்; இயேசு இவருடைய கேள்விக்குப் பதில் அளிக்கும் வரை அவர் இயேசுவை இன்னார் என்று அறிந்து விசுவாசிக்கவில்லை. 'தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் விசுவாசம் வருகிறது' என்று பின்னர் அவரே பரிசுத்த ஆவியைக் கொண்டு எழுதுகிறார். (ரோமர்10 : 17).

சவுல் பார்த்த மாதிரி ஒரு வெளிச்சத்தைக் காண்பது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதியன்று. சவுல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியாதவரை இரட்சிக்கப் படவில்லை (எபி 5 : 8,9 ரோமர் 6: 17 - 18, 6 : 3- 4) விசேஷித்த கிருபை, உணர்ச்சிகள் அல்லது வேறு எந்த செயல்பாடுகளும், அவைகள் உண்மையாக இருந்தாலும், போலியாக இருந்தாலும், அவைகள் தேவனுடைய மன்னிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியல்ல. தேவனுடைய வார்த்தைகளுக்குப் புறம்பான விசேஷித்த வரம் அது இது என்ற எந்த அனுபவமாக இருந்தாலும் அவைகள் இரட்சிப்புக்குரிய தகுதிகளைத் தராது. சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் (ரோமர் 1:16; எபி 4: 12).

## இரட்சிக்கப்படுவதற்கு சவுல் செய்தது என்ன?

"ஆண்டவரே, நீர் யார்? என்ற சவுலின் கேள்விக்கு இயேசு கூறிய பதில்" "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்பது. இதைக்கேட்டவுடன் சவுல் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்றான். அதற்குக் கர்த்தர், "நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்". என்றார் (இப் 9 : 5, 6).

அந்தப்படியே சவுல் தமஸ்கு பட்டணத்துக்குள் கொண்டு வரப் பட்டார். அங்கே அவர் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தார். அப் 9 : 11, "சவுல் ஜெபம் பண்ணுகிறார்" என்று கூறுகிறது. அவர் செய்த ஜெபம் அவருக்கு உடனடியாக இரட்சிப்பைத் தந்துவிட்டதா? நிச்சயமாக இல்லை. "எப்படி நீங்கள் அவ்வளவு உறுதியாய்ச் சொல்லுகிறீர்கள்?"- இது என் இடைவிடாத, கடுமையான ஜெபத்தின் மூலமாக இரட்சிப்புப் பெற்று விட்டேன் என்று சுயதிருப்தியோடு நிமிர்ந்து நடைபோடும் ஒரு

நண்பரின் காட்டமான கேள்வி. அவசரப்படாமல் கவனியுங்கள். அனனியா என்பவர் சவுலிடத்திற்கு அனுப்பப்படுகிறார். அந்த அனனியா சவுலிடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? வேதாகமம் பேசட்டும், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு' என்றார். (அப் 22 : 16; அப் 9 : 18) இங்கே இன்னும் ஒரு கேள்வி. ஒரு பாவி திருமுழுக்குப் பெற்று விட்டதினாலேயே இரட்சிப்படைந்து விடுகிறாரா? சரியாகச் சொல்வோமானால் "இல்லை" என்பது தான் பதில். எந்த ஒரு நற்செய்தி உரைஞரும் அவ்விதமாய் பிரசங்கிக்கவில்லை. இரட்சிப்பு விசுவாசம் மட்டும், போதும் என்பது எவ்வளவு அபத்தமோ அதே அளவு ஞானஸ்நானம் மட்டும் ஒருவனை இரட்சிக்கும் என்பதும் அபத்தமே அல்லது மனந்திரும்பினால் மட்டும் போதும் (அப் 17 : 30, 31) அல்லது அறிக்கை செய்தால் மட்டும் போதும் (மத் 10 : 32, 33) என்பதும் தவறே.

தேவனுடைய வசனத்தை நன்கு புரிந்து கொண்டு வாசித்தால் ஒரு பாவி இரட்சிப்படைவதற்கு விசுவாசமும் வேண்டும். மனந்திரும்புதலும் வேண்டும். அறிக்கையிடுதலும் வேண்டும். திருமுழுக்கும் வேண்டும் என்பது தெரியவரும்.

பவுல் தான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றேன் என்கிறார். (ரோமர் 6 : 3-4, கலா 3 : 26, 27) பவுல் தன் இரட்சிப்பைக் குறித்து உண்மையை சொல்லுகிறாரா? ஆம்! இரட்சிப்பு கிறிஸ்துவில் இருக்கிறது. (IIதீமோ 2 : 10). அந்த இரட்சிப்பை எப்படி அடைந்தார்? கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதின் மூலம் அந்த இரட்சிப்பில் பங்கடைந்தார். பவுல் அப்போஸ்தலன் விசுவாசத்தினாலன்றோ இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுகிறார். (ரோமர் 5 : 1,2) உண்மைதான். விசுவாசத்தினால் இரட்சிக்கப்படும் படிக்கு அவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் என்பதையும் மறந்துவிடாதீர்கள். ஒருவன் கிறிஸ்துவுக்குப் புறம்பே வெறும் விசுவாசத்தைக் கொண்டு மட்டும் நீதிமானாக முடியாது.

இதை வாசிக்கும் என் அருமை நண்பனே, சகோதரியே, பவுலின் முன் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களுக்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்து இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் மன்றாடுகிறேன்.

# ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து விடும் அபாயம் உண்டா?

உண்மையாகவே, இது ஒரு முக்கியமான, சிந்திக்க வேண்டிய கேள்வி. இதற்குப் பரிசுத்த வேதாகமத்திலிருந்து விடை காண முயலுவோம். அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும், யோவானும், யாக்கோபும், யூதாவும் எழுதின நிருபங்கள் யாவுமே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்ட அறிவுரைகள் மற்றும் எச்சரிப்புகளே. இந்தப் பரிசுத்த வேதாகம எழுத்தாளர்கள் ஒவ்வொருவருமே ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் வீழ்ந்து போகும் அபாயத்தைக் குறித்து எச்சரித்துப் புத்தி சொல்லியிருக்கிறார்கள் இந்த எச்சரிப்புகள் சிலவற்றை வாசித்து தியானிப்போம்.

"மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேது வான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கு கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர் களென்று அறியீர்களா?" (ரோமர் 6 : 16) இதில் பவுல் அப்போஸ்தலன் தெளிவாகச் சொல்லியிருப்பது என்னவெனில் : ஒரு கிறிஸ்தவன் மனப்பூர்வமாக பாவத்துக்கு அடிமையாகி விட்டால் மரணம் நிச்சயம் என்கிறார். மரணம் என்று இங்கே கூறப்படுவது சரீர மரணத்தையல்ல. தேவனிடத்திலிருந்து நம்மை சதாகாலத்துக்கும் பிரித்து வைக்கிற இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. மேலும் ரோமர் 8 : 6ல் "மாமிச சிந்தை மரணம்வ ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" என்கிறார். அப்போஸ்தலன் பவுல். இந்த எச்சரிப்பை கொரிந்தியருக்கு விடுக்கும்போது இன்னும்கொஞ்சம் அதிகக் கடுமையைக் கூட்டியிருக் கிறார். "அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப் பதில்லையென்று அறியீர்களா?" (I கொரி 6 : 9) நினைவில் வையுங்கள், கொரிந்து பட்டணத்தில் இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்.

ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் மீண்டும் அதை இழந்து போவதில்லை என்று போதித்து, கிறிஸ்தவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையைக் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டிய அவசியத்தை அலட்சியப்படுத்தத் தூண்டுபவர்கள். அப்போஸ்

தலன் யூதா சொல்வதைக் கவனித்துப்படிக்க வேண்டுகிறேன். "நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாத வர்களை அழித்தார்" (யூதா 5) இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதிய நிருபத்தில், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் செய்த மக்களை எவ்வாறு கர்த்தர் அழித்துப் போட்டார் என்று விளக்கு கிறார். (1 கொரி 10 : 1-10) அந்த நிகழ்ச்சி எல்லாக் காலத்துக் கிறிஸ்தவர் களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்படி அதைக் கீழ்க்காணும் எச்சரிப்போடு முடிக்கிறார்". இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணு கிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். (1 கொரி 10: 12).

சுவிசேஷத்தைப் புரட்ட முயற்சி செய்கிற கிறிஸ்தவர்களின் கதி என்னவாயிருக்கும் என்பதைக் கலாத்தியர் நிருபத்தில் நாம் காணமுடியும். "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்.

முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருப் பான். (கலா 1 : 8, 9) கவனித்தீர்களா? பவுலாகட்டும். வேறு எந்த ஒரு அற்புதப் பிறவியாகட்டும் சுவிசேஷத்தைப் புரட்டினால் தேவனுடைய சாபத்துக்கு ஆளாவான் என்பது திண்ணம் என்று பவுல் அடித்துக் கூறுகிறார். தேவனால் சபிக்கப்பட்ட ஒருவன் இரட்சிப்பின் பலனை அடைய முடியும் என்று இன்னும் நம்புகிறீர்களா? மேலும், சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் மட்டும் அல்ல; தேவனுடைய சுத்தக் கிருபையால் ஒரு முறை இரட்சிப்பு அடைந்த மக்கள் மீண்டும் நியாயப் பிரமாணத்துக்குத் திரும்பிப்போக விரும்பினால் அவர்களும் கூட சபிக்கப்பட்டவர்களே என்கிறார். "நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா 5 : 4) இப்பொழுது சொல்லுங்கள், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து போனவர்கள் இரட்சிப்பை இழக்க மாட்டார்கள் என்றால் பின்னர் யார் தான் இரட்சிப்பை இழந்து போவார்கள்?

மேலும், தங்கள் உபதேசத்தாலும், வாழ்க்கையாலும் கிறிஸ்துவினிடத்தில் அன்பும் மதிப்பும் இல்லாமல் கிறிஸ்தவ அறத்துக்கு இழுக்குண்டாக்கிக் கொண்டிருப்பவர்களைக் குறித்து பிலிப்பு பட்டணத்திலுள்ள சபையாருக்குப் பவுல் எழுதும்போது "சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

ஏனெனில் அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநே கந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்கிறேன்.

அவர்களுடைய முடிவு அழிவு அவர்களுடைய தேவன் வயிறு அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (பிலி. 3 : 17 - 19) குறித்துக் கொள்ளுங்கள்; அவர்களுடைய முடிவு அழிவு.

எபிரேய நிருபமும் கிறிஸ்தவர்கள் பாவத்திற்கும், அவிசுவாசத்துக்கும் ஆளாகி இரட்சிப்பை இழந்து விடக் கூடாது என்று எச்சரிக்கிறது. "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி 3 : 12) என்ன இப்படிச் சொல்கிறாரே, ஒரு கிறிஸ்தவன் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான சாத்தியக் கூறுகள் உண்டாகுமா? என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு, கண்டிப்பாக அப்படி நடக்கும் என்று அடித்துக் கூறுவதுமன்றி அப்படிப்பட்டவர்களுடைய கதி என்னவாயிருக்கும் என்றும் கூறுகிறார். "ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப் பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்.

தேவனுடைய நல்வார்த்தையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும்.

மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப் படுத்து கிறபடியால், மனந்திரும்புதலுக்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்." (எபி 6 : 4 - 6).

மேலும் அதே நிருபத்தில் "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனியிராமல்

நியாயத் தீர்ப்பு வரும் என்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.

மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவர்கள் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே

தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென் றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்" (எபி 10 : 26 - 29) என்று நம் சிந்தனையைத் தூண்டுகிறார். அன்பர்களே, மேற்கூறிய வசனங்கள் கிறிஸ்துவை அறியாத அஞ்ஞானிகளுக்குச் சொல்லப்பட்டதல்ல. நாம் என்றிருப்பதால் இது கிறிஸ்தவர்களையே சுட்டுகிறது.

அப்போஸ்தலன் யாக்கோபு, இந்த முக்கியமான விஷயத்தில் தன் நிலையை விளக்காமல் இல்லை. இப்படிப்பட்டவர்களை பார்த்து, "விபச்சாரரே, விபச்சாரிகளேக் உலக சிநேகம் தேவனுக்கு விரோத மான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவ்னுக்குப் பகைஞனா கிறான்" என்று சாடுகிறார் (யாக் 4 : 4) அப்படிப்பட்ட பகைவர்களை தேவன் தம்முடையவர்களாகக் கருதுவாரா? தவறு செய்கிற கிறிஸ்தவர்கள் மீண்டும் சத்தியத்துக்குத் திரும்பி வராவிட்டால் இழப்பு நிச்சயம் என்பதை மற்றுமொரு இடத்தில் யாக்கோபு கூறுகிறார். "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப் போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்து மாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியக் கடவன்" (யாக் 5 : 19, 20) ஆம் சகோதரரே! தவறு செய்கிற ஒருவனை மீண்டும் சத்தியத்துக்குள் கொண்டு வரா விட்டால் அவன் ஆவியிலே மரித்த நிலையில் இருப்பான் என்று அறிவோமாக!

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களிலேயே, தெரிந்தே பாவஞ்செய்கிற கிறிஸ்தவர்களைக் கடுமையாகச் சாடுபவர் அப்போஸ்தலன் பேதுரு என்று சொல்லலாம். "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்டையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங் கள். இவைகளைச் செய்தால் (அதாவது அதே அதிகாரம் 5 முதல் 9 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளைச் செய்தால்) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (II பேதுரு 1 : 10, 11). இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை என்பதை வேறுவிதமாகச் சொன்னால், இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறி விழுவீர்கள் என்றாகிறதில்லையா? மறுதலித்துப் போகிற கிறிஸ்தவர்களை "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமை களிலும் கேடுள்ளதா யிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டுப் விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்குச் சம்பவித்தது. (II பேதுரு 2 : 20 - 22). அப்போஸ்தலன் தான் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்துவதற்காக அவர் சாதாரண சூழ்நிலையில் சொல்லக் கூச்சப்படக் கூடிய ஒரு பழமொழியை மேற்கோள் காட்டி, சத்தியத்தை அறிந்த பிறகு தவறு இழைக்கிற மக்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இது விஷயத்தில் அப்போஸ்தலன் யூதாவும் மௌனமாயிருக்க வில்லை. "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக, ஆமென்." (யூதா 24, 25).

ஆம், சகோதரரே, நாம் அவருக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வோமானால் அவர் நம்மை வழுவாதபடி காத்துக் கொள்ள வல்லவராக இருக்கிறார்.

அப்போஸ்தலன் யோவானும் இது விஷயத்தில் இவர்களுடைய கருத்தை ஆமோதித்துக் கீழ்வருமாறு எழுதுகிறார். "அவரை அறிந்திருக் கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்; அவனுக்குள் சத்தியமில்லை." (I யோவா 2 : 4). அப்படிப் பொய் சொல்லித் திரிகிறவர்களுக்கு என்ன

சம்பவிக்கும் என்று அவர் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார், கேளுங்கள். "பயப்படுகிறவர்களும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி 21: 8).

சகோதரர்களே, மேலே எடுத்து ஆளப்பட்ட வேத வசனங்களை யெல்லாம் வாசித்துச் சிந்தித்த பிறகு, கிறிஸ்துவை மறுதலித்து மீண்டும் அவரைச் சிலுவையில் அறைந்து அவரை பகிரங்கமாக வெட்கப்படுத்துகிற போலிக் கிறிஸ்தவர்கள் மீது தேவன் பிரியமாய் இருக்கமாட்டார் என்று ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஒப்புக் கொள்வதோடு நின்று விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையை செப்பனிடவும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவும் கிறிஸ்தவ அன்புடன் வேண்டி, மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

## சபை அல்லாதது

1. சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல. (எபே. 3:10,11, ஏசா. 2:1-4)
2. சபை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமானதல்ல (மாற் 16:15, 16, மத். 28:18-20)
3. சபை சமூக நிலையை உயர்த்துவதற்கான ஸ்தாபனமல்ல (மத். 25:31-46)
4. சபை மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடம் அல்ல (அப். 5:11)
5. சபை ஒரு மார்க்க பிரிவினைக் கூட்டமல்ல (அப். 20:29, 30, 1 தீமோ. 4:1-3)
6. சபை தனக்கு சொந்த நியாயப் பிரமாணத்தை அளிக்கக் கூடியதல்ல (யாக் 4:12)

# வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரைச் சேவித்தல்

நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற குறைவுகள் ஏற்படுகிற துன்பங்கள் அநேக சமயங்களில் நம்மைச் சோர்வடையச் செய்து வாழ்க்கையைக் கசப்பாக்கிவிடுகிறது. நமக்குத்தான் ஊரில் இல்லாத துன்பங்களும், பிரச்னைகளும் இருக்கின்றன. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் தேவபக்திக்குரிய காரியங்களை இகழ்ந்தும், அசட்டை செய்தும் தங்கள் இச்சைகளுக்கேற்றபடி வாழ்கிறார்கள். சொத்துமேல் சொத்து சேருகிறது, எடுத்த காரியங்களை வெற்றியோடு முடிக்கிறார்கள். சர்வமும் நிறைந்து காணப்படுகிறது என்றெல்லாம் எண்ணி, நாம் கடவுளைப் பற்றிக் கொண்டிருப்பதால் என்ன நன்மையைக் கண்டடைந்தோம் என்று புலம்புகிறோம். தயவு செய்து 73-ம் சங்கீதத்தை ஜெபத்துடன் வாசித்துச் சிந்தியுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களும், துன்பங்கள் யாவுமே தீமையானவைகள் என்று ஒட்டுமொத்தமாக நினைத்துவிடக் கூடாது. பூச்சி, புழுக்கள் எல்லாம் பயிர்களை அழித்து நாசம் செய்து விடுகின்றன என்று பொதுவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் சில வகைப் புழுக்கள் பயிர்களுக்கு மிகவும் உபயோகமான பணிகளைச் செய்கிறதாக விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அதுபோல சில துன்பங்களும், கஷ்டங்களும் வாழ்க்கையில் நாம் வெற்றி அடைவதற்கு இன்றியமையாதவைகள் என்று அறிந்து ஆறுதல் அடைய வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்துவதற்கு தேவன் சில வேளைகளில் நம்மைச் சிட்சிக்க வேண்டியிருக்கலாம். ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் தன் நோயாளிகளில் ஒருவரைப் பார்த்து நான் உம்மைக் காயப்படுத்த வேண்டி வரலாம். ஆனால் உம்மை வேதனைப்படுத்த மாட்டேன் என்றாராம். ஆம் நம்மை பரிசுத்தப்படுத்துவதற்கு தேவன் நம்மைக் காயப்படுத்த நேரிடலாம். ஆனால் நிச்சயமாக வேதனைப்படுத்த மாட்டார். இதை எபிரேய ஆசிரியர் விளக்கும் போது,'அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத் தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சித்தார்கள். இவரோ நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காவே நம்மை சிட்சிக்கிறார்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியான சமாதான பலனைத் தரும் என்கிறார். (எபி 12 : 9 -11) சிட்சையை அதாவது கடிந்து கொள்ளுதலை எல்லாருமே விரும்புவதில்லை. ஆனால் அது கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு நம்மை பங்காளி யாக்குகிறதே.

நமக்கு நேரிடும் போதனைகளைக் குறித்து பேதுரு கூறும் போது, "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்" என்கிறார் Iபேதுரு. 1 : 7.

நாம் கிறிஸ்துவுக்காகப் படுகிற துன்பங்கள் ஒரு போர் வீரன் யுத்தத்தில் பெறும் விழுப்புண்களுக்குச் சமமானது. அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தமுண்டாக்காதிருப்பானாக: கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார். (கலா 6 : 17) தான் கிறிஸ்துவுக்காக பாடுபட்டதினால் ஏற்பட்ட தழும்புகளை மனதில் கொண்டு இப்படி எழுதுகிறார். பழைய ஏற்பாட்டில் யோனாவின் எட்டு வார்த்தைப் பிரசங்கம் நினிவே பட்டணத்து மக்களையும் அரசனையும் உலுக்கியதே, அதற்கு காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்? யோனா திமிங்கலத்தால் விழுங்கப் பட்டபோது அதன் ஜீரண அமிலத்தால் அவன் கூழாகாமல் தப்பினவிந்தை அவர்கள் காதுகளுக்கு எட்டியிருக்கலாம். அல்லது அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு கடற்கரையில் திமிலங்கத்தால் வாந்தி பண்ணப் பட்டதை அப்பட்டணத்தாரில் எவராவது ஒருவர் பார்த்து விட்டுப் போய் அதை ராஜாவிடம் அறிவித்திருக்கலாம். நமக்குச் சரியாய் தெரியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் அவனுடைய வாழ்க்கையில் நடந்த இந்த அற்புத சம்பவமும், அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமும் தான் அந்த மக்களை மனம் திரும்ப வைத்தது என்று துணிந்து கூறலாம். துன்பத்தைப் பற்றி நமக்குப் பட்டறிவு இல்லாமல் மற்றவர்களைத் தேற்றுவதும் மாற்றுவதும்

எப்படி? ஆகவே நமக்கு ஏற்படும் துன்பங்களையும் பாடுகளையும் கண்டு துவண்டு போகக்கூடாது.

சில பேர் குறிப்பாக பெண்கள் தாங்கள் அழகாக இல்லையே! என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். புற அழகை விட குணமே சிறந்தது. அழகுள்ளவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேரும், புகழும் பணம் படைத்த ஒரு சினிமா நடிகை தற்கொலை செய்து கொண்டதாக செய்தித் தாள்களில் வாசித்தேன். அவளுடைய அழகும், பேரும் புகழும், பணமும் அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைத் தரவில்லை என்பது தானே அவள் அகால மரணம் கூறுகிற சோகக் கதை. ஆகவே புற அழகை விரும்பி, அதில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டு அக அழகைப் புறக்கணிக்கலாகாது என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவுரை கூறுகிறார். "மயிரைப் பின்னி பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப் பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது." என்கிறார். I பேது 3 : 2-4. நீதி மொழிகளிலும் "சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது: அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் என்று அழகின் மாயையையும், புத்தியில்லாமல் வெறும் அழகு மட்டும் இருக்கிற பெண்களை ஒப்பிட்டு கூறும்போது "பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச்சமானம்' என்று இடித்துரைக்கிறது. (நீதி 11:22.)

நமக்கு அடுகடுக்காய் உபத்திரவங்கள் வரும்போது யோபின் மனைவியின் மனநிலை ஏற்பட்டு விடுகிறது. (யோபு 2 : 9) ஆனால் அதை முயன்று வென்று யோபுவின் மனநிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டும் (யோபு 2 : 10) பல நூற்றாண்டுகளாகியும் யோபின் சகிப்புத் தன்மையும் பொறுமையும் பலராலும் பாராட்டப்படுகின்றன. (யாக் 5:11) உபத்திரவம் வளர்த்துவிடும் சில நற்பண்புகளைப் பற்றி அப்போஸ்தலன் பவுல் கூறுவதைக் கேளுங்கள். உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் (மனத்தின்மை) பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்கு கிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் என்கிறார் (ரோமர் 5 : 3- 4.)

மனிதனுடைய இயலாமையே கர்த்தர் கிரியை செய்வதற்கு உரிய பக்குவமான பதம் என்று நாம் அறிய வேண்டும். இயேசு அப்போஸ் தலனாகிய பவுலிடம் கூறியதைக் கவனியுங்கள். "என் கிருபை உனக்குப்

போதும், பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் என்கிறார் IIகொரி 12 : 9 அதனால் பவுல் ஆறுதல் அடைந்து"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப் படுகிறேன் II கொரி 12 : 10. தேவன் பலவீனமுள்ளவரோடு சேர்ந்து பணியாற்ற விரும்புகிறார், உங்களுடைய பலவீன நிலையே தேவன் பெரிய காரியங்களைச் செய்வதற்கு உங்களை பயன்படுத்துவதற்கு எற்ற பக்குவமான நிலையாக இருக்கலாம்.

சிலருக்குத் தாங்கள் ஐசுவரியவான்களாக இல்லையே என்ற மனக் குறை உண்டு, சகோதரர்களே. ஐசுவரியம் வஞ்சனையுள்ளது. பல நற் பண்புகளை அடகு வைத்துத்தான் ஒருவன் செல்வந்தனாக முடியும். ஆகவே செல்வம் சேர்க்கும் ஆசையே கூடாது. அமெரிக்காவில் ஈவர்க்குயூகர் என்றொரு மிகப் பெரிய பணக்காரன் வாழ்ந்தானாம். வங்கிகளை ஏமாற்றியும், வேறு பல மோசடி வேலைகளிலும் ஈடுபட்டும் கோடிக்கணக்கில் பணம் சேர்த்தானாம். நாள் ஒன்றுக்கு பல மில்லியன் டாலர்கள் வருமானம் வந்ததாம். அவன் காலத்தில் உலகில் எந்த ஒரு பகுதியிலும் அவனை விட அதிக வருமானம் பெறக் கூடிய நபர் வேறு எவரும் இல்லை என்று ஊரேபேசிக் கொண்டது. ஆனால் அவனோ பல இரவுகளை தூக்கமில்லாமல் கழித்து இறுதியில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான். என்னே பரிதாபம்! பிரசங்கி இதைக் குறித்து எவ்வளவு தெளிவாய் சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாய் இருப்பவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார். பாவஞ் செய்கிறவனுக்கோ, தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக் கிறார்." (பிர 2 : 26.) இதையெல்லாம் மனதில் கொண்டு தான் பவுல் அடியார் கூட "போதுமென்ற மனதோடு கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்றும், பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவுறுத்தி எச்சரிக்கை செய்கிறார். (I தீமோ 6: 6, 10.)

இறுதியாக நீங்கள் உண்மை மனதோடு ஆண்டவருடைய பணியில் ஈடுபடும் பொழுது மாயம்பண்ணி பொருளாசையுடையவர்களாய்

மனிதரைப் பிரியப்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுகிற / கள்ள சகோதரர்களிடமிருந்து பலவிதமான எதிர்ப்புகள் வரக்கூடும். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியபட்டுக் கலங்க வேண்டியதில்லை. இது இன் றைக்குப் புதிதாக முளைத்த பிரச்சனை அல்ல. காலமெல்லாம் தொடர்ந்து நடைபெறுகிற சாத்தானின் திருவிளையாடல்கள்தான் மாறாக இவைகளைச் சந்தித்துப் பொறுமையோடு இவைகளை மேற்கொள்ள நாம் முயற்சிக்கும் போது நீடிய சாந்தமும் பொறுமையும் நமக்கு ஏற்படுகிறது. கர்த்தரின் சகோதரனாகிய யாக்கோபு இதைப்பற்றிச் சொல்லும்போது "என் சகோதரரே!நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் பொழுது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவில்லாதவர்களாயிராமல், பூரணராயும், நிறை வுள்ளவர்களாகவும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது என்று கூறுகிறார்." (யாக் 1 : 2-4) சிலவேளைகளில் நாம் பரம இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கு உரிய சில தகுதிகளை அடைவதற்கு சோதனைகள் உதவியாக இருக்கின்றன என்கிறார். பேதுரு கூறுவதைக் "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சகாலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி நிலை நிறுத்துவாராக" என்கிறார். (I பேது 5 - 10.)

வாழ்க்கையில் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களும் துன்பங்களும் நமக்கு நன்மையே செய்கின்றன. ஒவ்வொரு குறையும் நம்மைக் கடவுள் பக்கமாக இழுத்துச் செல்லுகிறது. கிறிஸ்துவினிமித்தம் நமக்குப் பலவிதமான நிந்தை கள் ஏன் மரணமே சம்பவிப்பதாயிருந்ததாலும் நாம் நீடிய பொறுமையோடு அவற்றைச் சகித்துக் கொள்வது கர்த்தருக்குப் பிரியமான பண்பு என்று கிறிஸ்தவ நெறி நமக்குப் போதிக்கிறது.

ஆகவே நாம் செய்ய வேண்டியது, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆறுதல் அடையப் பழகிக் கொள்ளவேண்டும். பலர் பல்வேறு நிலைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்படி அழைக் கப்பட்டிருக்கிறார்கள். அவரவர் நிலையில் உண்மையுள்ள வர்களாக மன அமைதலோடு கர்த்தருடைய பாதையில் பொறுமை யோடே ஓட வேண்டும். கொரிந்து திருச்சபைக்குப் பவுல் அப்போஸ்தலன் வரைந்த முதல் நிருபத்தின் 7-ம் அதிகாரம் 17முதல் 24 வசனங்களை வாசித்து அதன் கருத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறுவோமாக!

# முயற்சியின் சிகரம்

ஒரு காலத்தில் தரம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கு ரொம்ப மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது எப்படிக் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பது, மார்க்கெட் பிடிப்பது என்பதில் மக்கள் அதிகக் குறியாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலர் தான் தரம் ஒழுக்கம், நீதி, நேர்மை என்றெல்லாம் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.

இந்த மனோநிலை மார்க்கத்தையும் விட்டு வைக்கவில்லை. எதிலும் விளம்பரமோகம், பேர், புகழ், மனிதர்கள் பாராட்டினால் போதும் கடவுள் என்ன நினைக்கிறார் என்பதைப் பற்றிக் கவலையில்லை என்கிற எண்ணம் வளர்ந்து பெருகி வருகிறதைப் பார்க்கிறோம். இந்த இழிநிலை வருந்தத்தக்கது; தீமை பயப்பது, வெறுக்கத்தக்கது. இதைக் குறித்துக் கிறிஸ்தவ மக்கள், சான்றோர்கள் அதிக ஆழமாகச் சிந்தித்து இவை வளராமல் தடுக்க முற்பட வேண்டும்".

நல்ல இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வேதாகமம் குறிப்பாக புதிய ஏற்பாடு, வாழ்க்கைக்குத் தேவையான மற்றெல்லா விஷயங்களுக்கும் ஆலோசனைகள் நல்கி அறிவுரை வழங்கு வதைப் போலவே இந்த விஷயத்துக்கும் நமக்கு வழிகாட்டுகிறது. நமக்கெல்லாம் நன்கு அறிமுகமாயிருக்கிற அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் எவ்வாறு இந்த உன்னத மாண்பு இடம் பெற்றிருந்தது என்று கவனிப்போம்.

அவர்கள் யூத மார்க்கத்தில் இருந்த பொழுது என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும், யூத மார்க்கத்தில் தேறினவனாய் என் பிதாக்களுடைய பாரம்பரிய, நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவனாக இருந்தேன்" (கலா 1 : 14) என்கிறார். பின்னர் கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு அப்போஸ்தலனாகிய மாறினபிறகு அதே வைராக்கியத்தைக் கிறிஸ்துவின் பணியிலும் தொடர்ந்து காட்டி தனக்கு முன்பிருந்த அப்போஸ்தலர்களையெல்லாம் மிஞ்சி நிற்கிறார்" . . . அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப் பட்டேன். ஆகிலும் நான் அல்ல. என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச்செய்தது" என்று அவருடைய ஊழியத்தின் பிரயாசைகளைப்

பற்றியும் (I கொரி 15 : 10) அவர்கள்மேல் வைத்த அன்பின் மிகுதியைப் பற்றியும் (II கொரி 2 : 4) சபைகளுக்காக பாடுபட்டதைப் பற்றியும் (IIகொரி 11 : 23-28). அவருடைய எழுத்துக்கள் முயற்சியின் சிகரத்தைச் சுட்டுவதாகவே இருப்பதைக் கவனித்துப் பாருங்கள். இவைகளைச் சொல்லி அவர் பெருமை பட்டுக் கொள்ளாமல் நாமும் கூட செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் நம்மால் இயன்ற மட்டும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று உற்சாகமூட்டுவதற்காக எழுதுகிறார் என்று கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த முயற்சியின் சிகரம் என்னும் உன்னத நிலையை அடைவதைப் பற்றி இன்னும் பல்வேறு சந்தர்ப் பங்களில் பேசுகிறார். உரோமாபுரியிலுள்ள திருச்சபை நம்பிக்கையில் பெருகவேண்டும் என்று ஜெபிக்கிறார் (ரோமர் 15 : 13) கொரிந்து பட்டணத்துத் திருச்சபைக்கு மற்ற விஷயங்களில் தேறியிருக்கிறது போல தர்ம காரியத்திலும் பெருகவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். (II கொரி 8 : 7) உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், சிறந்தபண்புகள் எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருங்கள் என்று புத்திமதி கூறுகிறார் (பிலி 1 : 9; 4 : 8). கொலோசே பட்டணத்துத் திருச்சபைக்கு விசுவாசத்திலே உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக என்கிறார் (கொலோ 2 : 7) மேலும், தெசலோனிக்கே திருச்சபைக்கு இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும், நற்காரியங்களில் தேறவேண்டும் என்றும், சகோதர அன்பில் பெருக வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார் (தெச 4 : 1, 10).

இப்படி ஏறக்குறைய தாம் அறிந்த மக்கள் யாவரும் முயற்சியின் சிகரத்தை எட்டவேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலன் மட்டுமே வலியுறுத்துகிறார் என்று எண்ணி ஒதுக்கிவிடக்கூடாது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இந்த உன்னதநிலை அடைவதைப் பற்றி மௌனமாயிருக்கவில்லை. "உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் நீதியைக் காட்டிலும் அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்துக்குள் பிரவே சிக்க முடியாது என்றும், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் என்றும் ஆலோசனை கூறுகிறார். (மத் 5 : 20, 48,) ஆக இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள், மாந்தர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதைப் பின்பற்றி பவுல் அப்போஸ்தலனும் எதிர்ப்பார்க்கிறார் அப்படியானால் நாம் அதை அசட்டை செய்யக்கூடாது.

இவ்வாறாக நாம் முயற்சியின் உச்சநிலையை அடைய வேண்டும் என்று செயல்படும் போது ஏற்படும் விளைவுகள் யாவை? நாம் செய்கின்ற பணியில் சில உடனடி மாற்றங்கள் தென்படும். நம்முடைய பணிகள் நேர்த்தியாகவும் சரியாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணுவோம். அன்றன்றுள்ள பணிகளை அன்றன்று செய்து முடிக்க பிரயாசப்படுவோம். நாம் நம்முடைய காரியங்களை ஒழுங்காகவும், பாங்காகவும் செய்ய முற்படும்பொழுது தேவன் கூட மகிமைப்படுகிறார். ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' என்றும் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் என்றும் . . . எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும் படியே செய்வீர்களாக" என்றும் வாசிக்கிறோம் (I கொரி 10:31,கொலோ 3 : 17 : I பேதுரு 4 : 11).

நம்மால் அதிகமாகச் செய்ய முடிந்தும் குறைவாகச் செய்து விட்டு திருப்தியடைந்தவர்களாய்க் காணப்பட்டால், நாம் யாருக்காகப் பணி செய்கிறோமோ அவரை நாம் மதிக்கவில்லை அல்லது அன்புகூரவில்லை என்று நம்மைக் கவனிக்கிற மக்களுக்கு தெரியாமற்போகாது. நாம் யாருக்காகப் பணிபுரிகிறோமோ அவரின் எண்ணங்கள், சிந்தனைகளை, கொள்கைகளை நாம் உண்மையாகவே மதிக்கிறவர்களாயிருந்தால் நாம் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்ய முயற்சிப்போம்.

நாம் முயற்சியின் உச்சிக்கு ஏறிப்போக வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படும்போது சில சங்கடமான உண்மைகள் நமக்குத் தெரியவரும். நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாக இருக்கிறோம். தவறு செய்கிற வர்களாக இருக்கிறோம் என்பதும், நாம் நினைக்கிறபடி நாம் ஒன்றும் அவ்வளவு சிறந்தவர்களல்ல என்கிற உண்மையும் தெளிவாகத் தெரியவரும். இந்த இடத்தில் 'நம்மால்' முடிந்த அளவு, என்பது பரிபூரணத்தைக் குறிக்காது என்பதை நினைவில் கொள்க. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக என்றே பொருள்படும். ஒருவேளை நம்மால் முடிந்த அளவு சிறந்தது என்பது பரிபூரணத்தை விட மிக மிகக் குறைவாகக் கூட இருக்கலாம். ஆனால் அது ஆண்டவருக்குப் பிரியமானது. நம்மால் இயன்றதை வஞ்சகம் இல்லாமல் செய்துவிட்டோம். அதுதான் தேவன் விரும்புவது. ஏழை விதவை போட்ட காணிக்கையை இயேசு பாராட்டினதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு பைசா என்பது செல்வந்தர்கள் போட்ட காணிக்கைகளை விட அதிகம்

என்பதனால் அல்ல; தனக்கு இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்து விட்டாள் என்பதே பாராட்டப்படுவது (மாற்கு 12 : 42- 44).

ஒரு காரியத்தை நினைவில் வையுங்கள், உங்கள் முயற்சியின் சிகரத்தை எட்ட நீங்கள் பாடுபடும்பொழுது உங்கள் திறமையின் தரம் நாளுக்குநாள் பட்டை தீட்டப்பட்ட வைரம்போல் பிரகாசம் அடைகிறது. உங்கள் ஆர்வம் புதிய புதிய எண்ணங்களைத் தோற்றுவித்து புதிய புதிய கோணங்களில் காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

இப்படி நீங்கள் முயற்சியின் உச்சியை அடையப் பாடுபடுகிற போது சில எதிர்மறை விளைவுகளும் உண்டாகலாம். மேலும் மேலும் நீங்கள் உற்சாகமடையும்போது ஏற்படுகிற வேலைப்பளு அந்தவிதமான சிந்தை இல்லாத உங்கள் உடன் வேலையாட்களுக்கு தொய்வைக் கொடுக்கலாம். அவர்கள் தாங்கள் அடைந்த சாதனை போதும் என்று மெத்தனமாக இருப்பார்கள். அதனால் சில வேளைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மெல்ல வாக்குவாதத்துக்கும், சச்சரவுக்கும் கூட இழுத்துச் சென்றுவிடும். பிரிந்து செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் கூட உருவாகலாம் (அப். 14 : 39-39). அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்துபோய் போதிய ஆதரவு இல்லையே என்று அவர்களுடைய இழுப்புக்கு உடன்பட்டு உங்கள் முயற்சியைத் தளர விட்டு விடாதீர்கள். பொறுமையாய் இருங்கள்; தைரியம் இழக்காமல் தனிமையாகவே செயல்படுங்கள். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகச் செயல்படுங்கள். வேதாகமத்தை எடுத்து குணக் குன்றுகளாகத் திகழ்ந்த சான்றோர்கள் விசுவாசிகள் ஆகியவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள். ஒரு வேளை அது உடனடியாகப் பலன் தராமல் போகலாம். சிறுகச் சிறுக அது மற்றவர்களையும் ஆட்கொள்ளும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

சபையில் செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்துமே விருப்பப் பட்டு செய்யப்படும் தன்னார்வப் பணிகளே. சில பேர் இப்படி அப்படி போக்குக் காட்டி விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். இந்தப் பணிகளுக்கு கண்காணிகளும் மேஸ்திரிகளும், கிடையா. குறைவாகச் செய்கிறவர் களுக்கோ மோசமாகச் செய்கிறவர்களுக்கோ தண்டனை ஏதும் கொடுப் பாரில்லை. சம்பளப் பிடித்தமும் கிடையாது. ஆனால் தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் யாருக்கு எத்தனை தாலந்துகள் கொடுத்தோம் என்பதை மறந்துவிட மாட்டார்.

ஆகவே சகோதரர்களே! தாய்குலமே! மனுஷர் பார்க்க வேண்டும் என்று பார்வைக்கு ஊழியம் செய்யாமலும், 'கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்படுவான்' என்பன போன்ற அறிவுரைகளையும் எச்சரிப்புகளையும் மனதில் கொண்டு உங்களால் முடிந்த அளவு நம்முடைய வாழ்க்கையில் நற்பண்புகளைப் பெருக்கி தேவனுக்குப் பிரியமாய் நடக்க முயலுவோமாக!

# நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோபு "என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர். அதை எனக்குத் தெரியப்படுத்தும்.

நீர் என்னை ஒடுக்கி உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கனின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ" என்று கர்த்தரை நோக்கி முறையிடுகிறார். (யோபு10:2, 3).

அதே விதமான மனக்குழப்பத்தோடு இன்றைக்கும் கோடிக் கணக்கான மக்கள் தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து விளங்கிக் கொள்ள முடியாமல் "கர்த்தர் என்னை வெறுக்கிறாரா? அதனால்தான் நான் இப்படி வேதனையில் உழல்கிறேனா? பலவிதமான பாவங்களைக் கூசாமல் செய்கிற எத்தனையோ பேர் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை?" என்று கேட்டு மருகுகின்றனர்.

பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தால் சாகிறான்; ஒரு குடிகார ஓட்டுநர் பயங்கர விபத்துக்குள்ளாகிறான். சதா சிகரெட்டும் கையுமாக அலைகிறவன் காச நோயால் பீடிக்கப்படுகிறான். அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்கள் வெடி குண்டுகளுக்கு இரையாவதும் பள்ளி செல்லும் சிறார்கள் விபத்துக் குள்ளாகி மடிவதும், பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள் பலவித கொடிய நோய்களால் பீடிக்கப்படுவதும் ஏன்?

கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் அன்பும், இரக்கமும் கருணையும் உள்ளவர் என்றால் என் இவ்வளவு துன்பங்களை அவர் படைத்த உலகத்தில் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்? ஒரு வேளை உலகத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் சக்தியை இழந்துவிட்டாரா? கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றால், ஏன் இப்படி நல்லவர்கள் துன்பப்படுவதையும் துன்மார்க்கர்கள் செழித்து வாழு வதையும் அனுமதிக்கிறார்? இது போன்ற கேள்விகளுக்கு விடை

தெரியாத காரணத்தால் ஒரு சிலர் கடவுளே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்கள். ஏனெனில், கடவுள் ஒருவர் இருந்தால் இவ்வளவு கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார் என்று மனம் வெதும்பி விரக்தியடைந்து குறைப்பட்டுக் கொள்கின்றனர். வேறு சிலர் கடவுள் இருக்கலாம். ஆனால் அவரைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், அவரை நினைத்துப் பார்த்துப் பெருமைப்படும் அளவுக்கு அவர் நல்லவரும் வல்லவரும் அல்லர் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர், பாவம், கர்த்தர் என்னமோ நல்லவர் தான். ஆனால் நாளுக்கு நாள் பாவத்தில் திளைத்து, கலகம் செய்கிற மக்களோடு எத்தனை நாளுக்குத் தான் போராடுவார்? எப்படியோ தொலைந்து போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறார்? என்கின்றனர். ஆனால் சிலபேர் எல்லாம் வல்ல இறைவன் அன்பும் அருளும் நிறைந்தவர், ஞானமுள்ளவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்துக் காகத் தான் செய்கிறார் என்று நம்புகின்றனர்.

இப்படி கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குத் தோன்றுகிறபடி யெல்லாம் இறைவனின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்கிற வேளையில், நான் மட்டும் எனக்கு எல்லாம் தெரியும். கடவுள் என்னோடே பேசி அதன் சரியான காரணங்களை இரகசியமாக எனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறிப் பெருமையடித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அல்லது இவைகளையெல்லாம் நமக்குத் தெளிவுபடுத்தித்தான் ஆகவேண்டும் என்று கோருவதும் எதிர்பார்ப்பதும் நியாயமல்ல." ஆகையால் நான் எனக்குத் தெரியாதவைகளையும், என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன் என்று தான் தேவனுடைய செயல் பாடுகளுக்கான காரணங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்று முயன்று தோற்றுப்போன யோபு சொல்லுகிறதைக் கவனியுங்கள். (யோபு 42 : 3).

ஆயினும், நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை தேவன் தமது அநந்த ஞானத்தால் மனுக்குலத்துக்குத் தந்தருளியிருக்கிற பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய பிரச்னைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி யாகத் தீர்வுகள் சொல்லப்படாவிட்டாலும், பொதுவாக மனுக்குலத்துக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் சொல்லப்பட்டுத் தான் இருக்கின்றன. தேடி வாசித்து ஆறுதலடைவோம் வாருங்கள்.

### உலக நடைமுறையில் கோளாறுகள் :

"இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்"

என்று கூறுகிறார். ஞானி சாலமோன் (பிர. 7 : 29) தேவனால் செம்மையாகப் படைக்கப்பட்ட உலகத்தை தன் கெடுமதியால் சீர்குலைத்து போட்டான். நாட்டு நடப்புகளைக் கவனித்துப் பார்த்தால், துன்பங்களும், வேதனைகளும் அனைத்து மக்களையும் அகில உலகத்தையும் கவ்விக் கொண்டிருக்கிறதைக் காணமுடியும், நல்லவர்களுக்குத் திண்டாட்டம், துன்மார்க்கர்களுக்குக் கொண்டாட்டம்.

அப்படியானால், மனிதர்கள் உலக நடப்புகளில் தலையிட்டுக் கெடுத்துப் போடாதபடி படைத்திருக்கக் கூடாதா? அல்லது கெட்டது செய்யும் ஆற்றல் அற்றவர்களாக மனிதனைப் படைத்திருக்கக் கூடாதா? என்று கேட்கத் தோன்றுகிறது. படைப்பின் சிகரமாகிய மனிதனுக்கு தேவன் கொடுத்திருக்கிற தேர்வு செய்யும் உரிமம் மிகப்பெரிய ஆசீர்வாதம். அதை அவன் பயன்படுத்துவதில் கவனமாயிராவிட்டால் சில தவறான முடிவுகள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. அதைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்போமானால் அதற்கு உரிமம் என்ற பெயர் பொருந்தாது.

எடுத்துக்காட்டாக, ஒட்டுரிமையை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன் மனதுக்குப் பிடித்த ஒரு கட்சிக்கோ அல்லது தனி நபருக்கோ தன் வாக்கை அளிக்கலாம் என்று அரசியல் அமைப்பு உரிமம் கொடுத்திருக்கிறது. அதற்கு மாறாக அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, மனிதனுக்கோ தான் ஒட்டளிக்க வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தால் அது அரசியல் சாசனம் கொடுத்த குடியுரிமையைப் பறிப்பது ஆகும் அல்லவா? அதே போன்று, தேர்வு செய்யும் உரிமத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்துவிட்டு, அவன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த முயல்வது முறையாகாது. அப்படிச் செய்தால் அவன் ஒரு மனித இயந்திரமாகவோ அல்லது சாவி கொடுத்த பொம்மையாகவோ தான் இருப்பான். சுதந்தரமாய் செயல்பட முடியாது.

இவ்வுண்மையை சாத்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தேவன் முதன் முதலில் படைத்த, ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்து தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்து, அவருடைய கட்டளையை மீறினார்கள். அதைத் தான் வேதாகமம் பாவம் என்று கூறுகிறது. எப்படி "எய்ட்ஸ்" என்னும் கொடிய நோய் சரீரத்தைச் சடுதியாய்த் தாக்கி, விரைவில் மரணமடையச் செய்கிறதோ அதை விடக் கடுமையாய் பாவம் ஆன்மாவை பாதிக்கச் செய்து பல கேடுகளை உண்டாக்கிவிட்டது. (ரோமர் 1 : 18 - 32, 5 : 12).

பாவம், உலகத்துக்குள் பிரவேசித்து மனிதனுடைய சுபாவத்தைக் களங்கப்படுத்தியதோடு நில்லாமல் தேவ கோபம் பல வழிகளிலும்

வெளிப்படக் காரணமாயிற்று. மனிதனுக்கு ஆவிக்குரிய, சரீர மரணம் சம்பவிக்கச் செய்தது (ஆதி 3 : 9) குழந்தை பேறு பயங்கர வேதனையுடன் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (ஆதி 3 : 16) பூமி சபிக்கப் பட்டு முள்ளும் குறுக்கும் முளைத்து மனிதன் பாடுகளுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. (ஆதி 3 : 17-19) ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தேவனோடு கொண்டிருந்த நல்லுறவு துண்டிக்கப்பட்டது (ஆதி3 : 23, 24).

இந்த அவல நிலையை அப்போஸ்தலனாகிய பவுல் "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" என்று அங்கலாய்க்கிறார். (ரோமர் 8 : 22). இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற உண்மை என்னவெனில்; இன்றைய உலகம் தேவன் படைத்த பொழுது இருந்த மாதிரி இல்லை என்றும் இன்று உலகில் பெருகி வரும் பிரச்னைகளுக்கு பாவமே முதல் காரணம் என்றும் துணிந்து கூறலாம்.

இதற்கு விமோசனமே இல்லையா? உண்டு. கருணை நிறைந்த தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி மனுக்குலத்தை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ள வகை செய்திருக்கிறார் (யோவான் 3 : 16) அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் சமாதானமும், மகிழ்ச்சியுமுள்ள வாழ்க்கை வாழலாம்.

மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கிய தேவன், பிசாசின் வஞ்சகத்தால் சீரழிவுக்குள்ளான உலகத்தில் வாழ்கிற மக்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, இவ்வுலகத்தின் கேடுபாடுகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார். (I கொரி 10 : 13) மேலும் நமக்கு வருகிற சோதனைகளை மாற்றி அவைகளை நமக்கு நன்மைக் கேதுவாக மாற்றிப் போடுகிறார். (ரோமர் 8 : 28).

**I சில சோதனைகளும் துன்பங்களும் நம்மை உஷார்ப்படுத்தி நமக்கு வரும் பெரும் அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நம்மை ஏவுகிறது.**

எடுத்துக்காட்டாக, நமக்கு ஏற்படுகிற சில சரீர உபாதைகளை நம்முடைய சரீர உறுப்புகளில் ஏதோ ஒன்றோ, சிலதோ பழுதடைந்து கொண்டு வருகிறது. அதைக் கவனி என்று எச்சரிக்கிறது. அதைப் புரிந்து

கொண்டு வைத்தியம் செய்து கொண்டால், அவைகளைச் சீர் செய்து கொண்டு ஆரோக்கியமாக வாழலாம்.

**II.**சில சோதனைகள் நமக்கு பொறுமை என்னும் நற்குணத்தைப் பெற்றுக்கொள்ள உதவி செய்கிறது. (எபி 10 :36) "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கு மென்று அறிந்து அதை மிகுந்த சந்தோசமாய் எண்ணுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக் 1 : 2,3) சோதனைகள் கொஞ்ச காலப்பாடுகள் தான் என்றும், அவைகள் உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப் படுத்தி நிலை நிறுத்துவதற்கு அவசியம் என்கிறார் பேதுரு (1 பேதுரு 5 : 10).

**III** மனுக்குலத்தைக் குறித்து எப்பொழுதும் பிராது செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிற சாத்தானின் வாயை அடைப்பதற்கு, தேவன் சில வேளைகளில் நமக்குச் சோதனையை கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக யோபுவின் வரலாற்றைக் கவனியுங்கள். யோபு உம்மை விருதாவாக சேவிக்கவில்லை. அவனுக்கு நீர் வசதியான வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறீர் அவைகளை நீர் பிடுங்கிக் கொண்டால் அவன் உம்மை சேவிக்கமாட்டான். மாறாக சபிப்பான் என்று சவால் விடுகிறான் சாத்தான். (யோபு 1 : 9-12) அதை மறுக்கும் வகையில் யோபுவை சோதித்துக் கொள்ளும்படி அனுமதி வழங்குகிறார் தேவன் (யோபு 2 : 3-7) ஆனால், யோபு சாத்தான் எதிர்பார்த்ததற்கு மாறாக "தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" என்று கூறி துன்பங்களைப் பொறுமையோடே சகித்ததின் மூலம் பிசாசின் வாய் அடைக்கப்பட்டது. அவருக்கும் இரட்டிப்பான ஆசீர்வாதங்கள் கிடைத்தன. (யோபு 42 : 12) யாக் 1 : 12).

**IV.** இன்னும் சில துன்பங்களும் உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் ஏற்படுகின்றன. யோவான் நற்செய்தி நூலில் நாம் வாசிக்கிற பிறவிக் குருடன் விஷயத்தில் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு ஆண்டவர் அளித்த பதில், "இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடம் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்கிறார். (யோவான் 9 : 3) அதே நற்செய்தி நூல் 11-ம் அதிகாரத்தில் மீண்டும் இயேசு "இந்த வியாதி மரணத்துக்கேதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" என்கிறார். (யோவான் 11 : 4).

**V.** சில சோதனைகளும், துன்பங்களும் நம்மை கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள உதவுகிறது.

குயவன் சட்டி பானைகள் செய்வதைக் கவனித்து பாருங்கள். அவை களை வனைவதற்கு முன்னர் அதை நன்றாகப் பிசைந்து, மிதித்துப் பதப் படுத்துகிறான். அதைப் போன்று நமக்கு நேரிடுகிற துன்பங்கள் நம்மை கர்த்தருக்கேற்ற பிள்ளைகளாக மாற்றுகிறது. "உபத்திரவம் பொறுமை யையும் பொறுமை, பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண் டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" என்கிறார் பவுல் (ரோமர் 5 : 3–4).

**VI. நாம் கர்த்தரைச் சார்ந்து நிற்க ஏவுகிறது.** கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்.

நானே திராட்சைச்செடி; நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப் பான். என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்கிறார் இயேசு (யோவான் 15 : 4,5) அப்போஸ்தலன் பவுல் கூட "ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத் திருக்கிறார் என்று கலா 2 : 20லும், அதற்கு அவர் என்கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். (IIதிமோ 12 : 9)

ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பெலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டு வேன்.

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பெலமுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பெலவீனங் களிலும், நிந்தனைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண் களிலும் நான் பிரியப்படுகிறேன்" என்கிறார் (II கொரி 12 : 9, 10).

**VII. நம்முடைய வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த உதவுகிறது**

சங்கீதக்காரன் "எங்களைச் சோதித்தீர்; வெள்ளியை புடமிடுவது போல எங்களைப் புடமிட்டீர்

எங்களை வலைகளில் - அகப்படுத்தி எங்கள் இடுப்புகளின் மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர். தீயையையும், தண்ணீரையும் கடந்து வந் தோம். செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்துவிட்டீர் என்று

தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு ஈடுகட்டி பல மடங்கு ஆசீர் வாதங்களைக் கொடுத்ததாக மகிழ்ச்சி தெரிவிக்கிறார் (சங் 66 : 10 - 12).

அப்போஸ்தலன் பேதுரு "இதிலே நீங்கள் மிகவும் சந்தோசப் படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமாதலால் இப்போது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படு கிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதா யிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப் படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்கிறார் (I பேதுரு 1 : 6, 7)

## VIII. சில துன்பங்கள் நம்மைச் சீர்திருத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்படுகின்றன.

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, உங்களுக்குச் சொல்லி யிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாய் இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.

அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டு மல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சிக்கிறார்கள்: இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர் களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 12 : 5 -11).

**IX. இன்னும் சில துன்பங்கள் நம்முடைய ஊழியத்தை அனுபவ ரீதியாகச் செய்ய உதவுகிறது.**

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திர வங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறு தலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதல் அடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்புபலன் செய்கிறது". (II கொரி 1 : 4 -6)

ஆகவே, நண்பனே, சகோதரியே கலங்க வேண்டாம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்து, அவருடைய பிள்ளைகளுக்கு நன்மையே செய்கிறார் என்று அறிந்து நம்பிக்கையோடு நம்முடைய நாட்களை அவருடைய பணியில் செலவிடுவோமாக.

### கிறிஸ்துவின் சபையில் அங்கமாவது எப்படி?

1. நற்செய்தியை கேட்க வேண்டும்
   - ரோம. 10:17, யோவா. 20:20.
2. விசுவாசிக்க வேண்டும்
   - எபி. 11 : 6, ரோம. 3:28.
3. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்
   - அப். 17:30, அப். 2:38.
4. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் மத். 10:32, ரோம 10:10.
5. பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும்
   -அப் 2:38, அப். 22:16.

# எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு முன்பு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிற தகுதி எனக்கோ இந்த உலகில் வேறு எவருக்குமோ அல்லது குழுவினருக்கோ இல்லை என்பதைக் எல்லா மனத் தாழ்மையுடனும் ஒப்புக் கொள்ளுகிறேன். கிறிஸ்து ஒருவருக்கே அத்தகுதி உண்டு என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளவோம். ஏனெனில் அவரே நியாயாதிபதி. (அப். 17 : 31).

இருப்பினும், எனது நண்பர்களும், உறவினர்களும் பல்வேறு சபைகளில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களில் பலர் மிகுந்த பக்தி வைராக்கியமும், ஆர்வமும் உள்ளவர்கள். கர்த்தருடைய காரியங்களுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறவர்கள். ஆனாலும் பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் "தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியெனில், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறபடியால் தேவனுக்குக் கீழ்படியாதிருக்கிறார்கள். (ரோமர் 10 : 2, 3) என்று வருத்தத்தோடே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது, நான் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறேன் என்று தயவு செய்து என்மீது ஆத்திரப்படாதீர்கள். "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும்" (யோவான் 12 : 48) என்பதை நான் மறந்து விடவில்லை. ஆயினும் நாம் நேசிக்கிற உறவினர்களோ, நண்பர்களோ தேவனுடைய சித்தத்தை அறியாமலும், அல்லது தேவனுடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறினாலும், கவலையீனமாக இருந்தாலும், அவர்கள் பேரில் உள்ள கரிசனையால் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைத்து தேவனுடைய சித்தத்தைப் புரிய வைத்து, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தூண்டுவதும் நம்முடைய கடமையன்றோ!

அப்போஸ்தலனாகிய பவுல், தன் இனத்தாரின் தவறான வைராக்கியத்தைக் குறித்து "எனக்கு மிகுந்த துக்கமும், மனவேதனையும் உண்டாயிருக்கிறது" (ரோமர் 9 : 1) என்கிறாரே, அது போன்ற ஒரு பந்த பாசத்தால் இதைப் பற்றி எழுதத் துணிந்தேன்.

முதலாவதாக, "எல்லா சபைகள்" என்பதே வேத வாக்கியத்துக்கு முரணானது. சபை ஒன்று தான் (எபே 4 : 4) அதில் ஒரே சரீரம் என்று தானே இருக்கிறது என்பீர்கள். அவசரப்படாமல் அதே நிருபம் 1-ம் அதிகாரம் 23-ம் வசனத்தையும் வாசியுங்கள். அங்கே 'சரீரமாகிய சபை' என்று இருக்கிறதைக் கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் 'என் சபையைக் கட்டுவேன்' என்று ஒருமையில் தான் சொல்லியிருக்கிறார். (மத் 16 : 18) அது இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகொஸ்தே பண்டிகையன்று வேத வசனத்தின்படி எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. (அப் 2:41 - 47) அந்தச் சபையை வேதம் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கிறது. (ரோமர் 16 : 16).

உண்மை இவ்வாறு இருக்க இன்று மனிதன் பல நிறுவனங்களை அமைத்துக் கொண்டு அவைகளுக்குச் சபை என்ற பெயரைச் சூட்டி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுய ரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த தேவனுடைய சபையைக் கொச்சைப்படுத்தி மகிழ்கிறான். (அப். 20 : 28) இன்றைக்கு மனிதனால் நிறுவப்பட்ட சற்றேறக்குறைய நானூறு நிறுவனங்கள் சபைகள் என்று கூறிக் கொண்டு மக்களைக் குழப்புவதால் கிறிஸ்து கட்டிய உண்மையான சபை எது? என்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இது இரட்சிப்புக்குத் தூணும் ஆதாரமாக இருக்கிற கிறிஸ்துவின் சபையை நோக்கி மக்கள் வராதபடி மக்களை வஞ்சிக்க சத்துருவாகிய சாத்தான் செய்யும் சதித் திட்டமேயன்றி வேறல்ல.

இந்தச் சமயத்தில் பழைய ஏற்பாட்டில் கடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. புகழ் பெற்ற சாலமோன் அரசனுக்குப் பிறகு அவன் குமாரன் ரெகொபெயாம் அரசுக் கட்டில் ஏறுகிறான். அவனுடைய மதியீனமான போக்கினால இஸ்ரவேல் சாம்ராஜ்ஜியம் இரண்டாக உடைந்து, வடபகுதிக்கு யெரொபெயாம் அதிபதியானான். ஆனாலும் அவனுக்கு ஒரு பயம். மக்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்துக்குப் போக்கு வரவாக இருந்தால் அரச பரம்பரையைச் சேர்ந்த ரெகொபெயாம் மீது அன்பும் மதிப்பும் ஏற்பட்டு, நாளடைவில் மக்கள் அவன் பக்கம் சாய்ந்துவிட்டால் ஆபத்து என்று நினைத்தான். ஆகவே அவன் மக்களை எருசலேம் தேவாலயத்துக்குப் போய்த் தொழவேண்டிய அவசியம் உண்டாகாதபடி, தடுத்து நிறுத்த ஒரு தந்திரம் செய்தான். அவனுடைய எல்லைக்குள் அதாவது தாணிலும், பெத்தேலிலும், விக்கிரக

கோவில்களைக் கட்டி எகிப்தின் தெய்வங்கள் என்று நம்பப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, ஒரிஜினல் நாடாகிய யூதாவில் ஆதரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியில் பண்டிகை கொண்டாடி, மேடையிலே பலியிட்டான். மக்களைப் பார்த்து, நீங்கள் எருசலேமுக்குப் போகும் சிரமம் வேண்டாம். இங்கேயே தொழுங்கள் என்று திசை திருப்பினான். அதே நாளில் பண்டிகை, ஆர்ப்பாட்டம், அலறல், வேடிக்கை! மக்களுக்கு இது போதுமே. தேவன் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்கிறாரா, இல்லையா? அதைப் பற்றி யாருக்குக் கவலை? (I ராஜா 12 : 26 - 33).

இன்றைக்கும் அதுவே நிலை. பிழைக்கத் தெரிந்த சில சுயநல வாதிகள், மக்களுடைய மடமையையும், மெத்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தேவனுடைய ஸ்தானத்திற்கு தங்களை உயர்த்திக் கொண்டு மக்களுடைய மனநிலைக்கேற்ப தேவனுடைய நீதிச் சட்டங்களின் வீரியத்தைக் குறைத்து திருத்தம் செய்து மக்கள் கூட்டத்தைத் திரளாய்ச் சேர்த்துக் கொள்கிறார்கள். இவர்களின் தந்திரங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் பலரும், புரிந்து கொண்ட சிலர் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாய் கசிந்து வருவதை ருசித்துக் கொண்டும், இரசித்துக் கொண்டும் இப்படிப்பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித்துக் கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு போலி திருப்தியோடு உலா வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பிக்கப்படுகிற உபதேசங்களில் அநேகம் வேத வசனத்துக்குப் புறம்பானவைகள், மிக முக்கியமானவைகள் என்று வேதம் குறிப்பிடுகிற சில உபதேசங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதே யில்லை என்பது மிகவும் வேதனையாயிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு அதைச் சுட்டிக் காட்டி அவர்களைச் சரியான பாதையில் போகும்படி ஆலோசனை கூறுவது நியாயம்தீர்ப்பது அல்ல; நல்லெண்ண மன்றாட்டே (யாக் 5 : 20).

சான்றோர்களே! அரசு அங்கீகாரம் இல்லாத ஒரு பள்ளியில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பீர்களா? அல்லது இரண்டும் இரண்டும் ஐந்து என்றோ, தமிழ்நாடு ஐரோப்பா கண்டத்தில் இருக்கிறது என்றோ ராஜீவ்காந்தி, மகாத்மா காந்தியின் பேரன் என்றோ போதிக்கப்படுகிற பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து அனுப்புவீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். ஆனால் சபையா? அதைப்பற்றி என்ன ஐயா, எல்லாம் இயேசு சாமியைத் தானே கும்பிடுகிறான். மாதாவையும் கும்பிடுகிறானோ, அது அவன் சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே, வேண்டாம் சகோதரனே, சகோதரியே! ஆன்மீகக் காரியங்களை அப்படி

அசட்டை செய்ய வேண்டாம். தயவு செய்து லாசரு ஐசுவரியவான் உவமையை ஊன்றி வாசியுங்கள் (லூக் 16 : 27-31) வரை உள்ளதைச் சிந்தியுங்கள்.

முதலாவதாக, சிறு குழந்தையாக இருக்கும்போது ஞானஸ்நானம் என்ற பெயரால் தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் இருக்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறான எண்ணம். மாற்கு சுவிசேஷம் 16 : 16, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று தெளிவாகப் போதிக்கிறது. இதில் இரண்டுவிதமான போதனைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானஸ்நானம் செய்விக்கப் பட்டவனுடைய வயதும் புரிந்து கொள்ளும் தன்மையும், (2) திருமுழுக்கு என்று அர்த்தம் கொள்ளும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட முறை.

"விசுவாசமுள்ளவனாகி" என்றால், சொல்லப்படுகிற சத்தியத்தைப் புரிந்து கொண்டு நம்பிக்கை தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர் களுக்கு ஞானஸ்நானம் கொடு என்று பொருளாகும். ஒரு சிறு குழந்தை சொன்னதைக் கேட்டு விசுவாசிக்குமா? புரிந்து கொள்ளுமா? அதற்குத் தான் பெற்றோர்கள் பொறுப்பு எடுக்கிறோமே! என்பீர்கள். அதற்கு எங்கே ஐயா, ஆதாரம்? இயேசு கிறிஸ்துவே முப்பது வயதில் தானே திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? (லூக் 3 : 23) வேதத்தின் காரியங்களை வேதத்தின்படி செய்வது தானே நியாயம். நம் இஷ்டம் போல செய்து கொள்வதற்கு அதிகாரம் எங்கே? எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறாரே இயேசு (மத். 28 : 19) ஆகவே குழந்தை ஞானஸ்நானத்தை இனிமேலாவது கைவிடுங்கள்.

இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கும் முறை. திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் என்ற சொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Baptizo (பாப்டிஸோ) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அமுக்குதல், அல்லது மூழ்கடித்தல் என்று பொருள். சிறு குழந்தையில் தலைமேல் இரண்டு சொட்டு தண்ணீர் தெளித்து திருமுழுக்குக் கொடுத் தாயிற்று என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கும் மனப்பக்குவம் இல்லாத பச்சிளங் குழந்தை யின் தலை மீது இரண்டு சொட்டுத் தண்ணீரைத் தெளித்து இது தான் ஞானஸ்நானம் என்று நானும் நீங்களும் ஒத்துக் கொண்டாலும் வேத வசனம் ஏற்றுக் கொண்டு இரட்சிப்புத் தருமா? "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிடில் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்கிறார் இயேசு (யோவான் 3 : 5).

ஒருவனுடைய பிரவேசமே தவறு என்று ஆகும்போது அவன் இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வது எப்படி? "ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணா விட்டால் முடி சூட்டப்படான் (1 தீமோ 2 : 5) என்று பவுல் தீமோத்தேயு என்ற இளம்பிரசங்கிக்கு எழுதுகிறார். பந்தயத்தில் முறைப்படி உன்னைப் பதிவு செய்து கொள்ளாமலும் பந்தயம் நடத்தியவரின் நிபந்தனைக்குக் கட்டுப்படாமலும் ஓடினால் பரிசு எப்படிக் கிடைக்கும்? இன்று அநேக கிறிஸ்தவர்கள் முறைப்படி பதிவு செய்து கொள்ளாத ஓட்டக்காரனைப் போல் கர்த்தருடைய உபதேசச் சட்டத்தின்படி செய்யாமல் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பரிசு பெறுவது முடியாத காரியம். ஒருவேளை பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும் நீங்கள் வாசித்து தியானிப்பதால் உங்கள் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பாக இருக்கலாம். அதற்கு நீங்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தான் படிக்க வேண்டும் என்பதில்லை. அழகிய தமிழில் உள்ள திருக்குறள், முஸ்லிம்களின் வேத புத்தமாகிய குரான், ஹிந்து மதத்தினரின் பகவத் கீதை போன்ற நூல்களே கூடப் போதும். இந்த உலகத்தில் மகிழ்ச்சியாக, உல்லாசமாக, ஆரோக்கியமாக, வாழ வேண்டும். அது தானே உங்கள் இலட்சியம்!

வேதாகமம் படிப்பது இம்மைக்காக மட்டுமல்ல (1 கொரி 15 : 19) மறுமையிலும் நாம் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து நமக்கு ஆயத்தம் செய்திருக்கிற நித்திய வீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் அவருடைய ஆளுகையில் பங்கு கொள்வதற்கும் ஆகும்.

ஆகவே என் நண்பனே, சகோதரியே! உன்னுடைய கிறிஸ்துவ ஓட்டம் வேதாகம உபதேசச் சட்டத்தின்படியும் நிபந்தனைகளின்படியும் பதிவு செய்யப்பட்ட ஓட்டம் தானா? தயவு செய்து வேதாகமத்தின் வெளிச்சத்தில் அதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள்,

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு

எல்லாவற்றையும் (தேவனுடைய உபதேசச் சட்டங்கள் அனைத்தையும்) முறுமுறுபில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலி 2: 14 - 16).

# வைத்தியனே, முதலில் உன்னை குணமாக்கிக் கொள்!

ஒரு சமயம் 'டீக்'காக உடை அணிந்து கொண்டு, ஒரு மனிதன் கூந்தல் தைலம் விற்றுக் கொண்டிருந்தான். நல்ல திறமையான பேச்சாற்றல் உள்ளவன். தான் விற்கும் தைலத்தின் நற்பயன்களைப்பற்றி மக்கள் நம்பத்தக்க வகையில் விவரித்துச் சொன்னான். சினிமா உலகில் புகழ்பெற்று விளங்கும் பிரபல நடிகைகளும், அரசியலில் கவர்ச்சிப் பாவைகளாக உலா வரும் காரிகைகளும், கல்லூரி மாணவிகளும் அவர் விற்கிற தைலத்தை உபயோகித்தே கரிய, நெடிய கூந்தலைப் பெற்றிருக்கின்றனர் என்று பல சான்றுகளை ஆதாரத்துடன் காட்டி, மக்களின் ஆர்வத்தைத் தூண்டினான்.

மக்களும் அவனுடைய வார்த்தைகளை நம்பி நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வாங்கிக் கொண்டிருந்தனர். விற்பனை வெகு வேகமாக நடந்தது. விற்பனையாளனுக்கு படுகுஷி! ஆர்வமாக அப்படியும், இப்படியும் ஓடி, ஆடிப் பணியாற்றிய நேரத்தில் அவர் அணிந்திருந்த குல்லாய் நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அவருடைய தலையெல்லாம் ஒரே வழுக்கை; ஒரு முடி கூட இல்லை.

இந்தக் கண்ணுற்ற ஒரு ஆள், ஆச்சரியம் கலந்த குரலில், "என்ன ஐயா, உங்கள் கூந்தல் தைலத்தின் மேன்மை இவ்வளவு தானா? நீங்கள் சொல்லுகிற மாதிரி இது ஓர் அற்புதமான தைலம் என்றால் உங்கள் தலையில் ஏன் ஒரு முடி கூட இல்லை? நீங்கள் ஏன் இந்த அற்புத வல்லமை படைத்த தைலத்தை உபயோகித்துப் பயன் பெறவில்லை?" என்று சரமாரிக் கேள்விக்கணைகளைத் தொடுத்தான்.

விற்பனையாளனுக்கு வேர்த்து, விறு விறுத்துப் போயிற்று. பேச நா எழவில்லை. வெட்கித்தலை குனிந்தான். அதைக் கவனித்த மக்கள் விழிப்படைந்து, அவர் மீதும், அவர் விற்கும் தைலத்தின் மீதும் சந்தேகப் பட்டனர். தாங்கள் வாங்கின தைலத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்து விட்டுத் தங்கள் பணத்தை வாபஸ் செய்ய வேண்டும் என்று கலாட்டா செய்தனர்.

கலாட்டா அதிகமாகவே காவல்துறையினர் தலையிட்டு விசாரித்தனர். அந்த தைலத்தை சோதனைக்கு அனுப்பினர். தைலத்தில் குறையேதும் இல்லையென்று தீர்ப்பு வழங்கினர் பரிசோதனையாளர்கள். ஆனால், அதை விற்ற ஆசாமி பொருத்தமில்லாதவர் பாவம்! படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரியாம். வேலையே கிடைக்கவில்லையாம். வயிற்றுப் பிழைப்புக்காக இந்த வேலையை ஏற்றுக் கொண்டாரம்.

கிறிஸ்தவத்தைப் பரப்ப முற்பட்டிருக்கும் நண்பர்களே! இந்த நிகழ்ச்சியில் வர்ணிக்கப்பட்டிருக்கும் நிலைமையில் தான் நாமும் இருக்கிறோம் என்று ஒத்துக் கொள்வதற்கு நாம் வெட்கப்படவோ, போலித்தனமான காரணங்களை முன்வைக்கவோ, முன் வைக்க முயன்று மீண்டும் ஒரு பாவத்தைக் கூட்டிக் கொள்ளவோ வேண்டாம். மாறாக, நம்மை நாமே சோதித்துப் பார்த்து நம்முடைய குறைகளைக் களைவதற்கு முற்படுவோம். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28 : 13).

நம்மில் அநேகர் நாம் போதிக்கிறது இன்னதென்றும், சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதவர்களாக இருந்தும் நியாயப்பிரமாண போதகர்களாயிருக்க விரும்புகிறோம் (I தீமோ 1 : 7) தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன் பலன்களை மறுதலிக்கும் இயல்புள்ளவர்களாக இருக்கிறோம். (II தீமோ 3:5) நாமே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை வாரி வழங்குகிறோம் (II பேதுரு 2 : 19) முதலாவது நாம் இந்தப் பரிதாபமான நிலையிலிருந்து விடுபட முயல்வோம். பிறகு மற்றவர்களை இரட்சிப்புக்குள் நடத்தப் பிரயாசப்படுவோம். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்கிறாரே பவுல்! (I கொரி 9 : 27) அப்படியிருக்க நாம் வெட்கப்பட்டுக் கொண்டு நம்முடைய நிலையை சீர்தூக்கிப் பார்க்க மறுப்பது நியாயமா? அறமா?

சுமார் மூன்று நூற்றாண்டுக்கும் அதிகமான காலக் கெடுவில், பெரும் பணம் செலவழித்து பல முயற்சிகளை மேற்கொண்டும் நம்முடைய நாட்டின் மூன்று விழுக்காடு மக்களுக்குக் குறைவான மக்களையே கிறிஸ்தவத்தை ஏதாவது ஒரு வகையில் (முழுமையாக அல்ல) ஏற்றுக் கொள்ள வைத்திருக்கிறோம்.

ஆனால், அதே நேரத்தில் சுமார் 50 ஆண்டு காலங்களுக்கும் குறைவான கால கட்டத்தில், தற்காலத்து நவீன வசதிகள் ஏதும் இல்லாத காலத்தில், அன்றைக்கு உலகம் என்று கருதப்பட்ட பூபாகத்தில் எங்கும்

கிறிஸ்தவத்தை அறிவித்து விட்டதாக விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்குக் குறைவான மக்கள் பெருமிதப்பட்டுக் கொள்கின்றனர். (ரோமர் 15 : 19, 23 : அப் 17 : 6) அவர்களால் செய்ய முடிந்ததை, எண்ணிக்கையில் அதிகமுள்ள, பல வியத்தகு விஞ்ஞான சாதனைகளைப் பெற்றிருக்கிற நம்மால் ஏன் முடியவில்லை? சுவிசேஷத்தின் பெலன் குன்றிப் போயிற்றா? அது எப்போதும் போல் இரட்சிப்புக்கு தேவ பெலனாகவே இருக்கிறது. (ரோமர் 1 : 16) உலகத் தோற்றத்தின் போது உண்டாக்கப்பட்ட வித்துக்களில் காணப்படுகின்ற உயிர் அணுக்கள் இன்றைக்கும் அதே வீரியத்தில் தானே இருக்கிறது! அப்படியிருக்க இரட்சிக்கப்படுவதற்கு தேவனால் கொடுக்கப்பட்ட திட்டம் மட்டும் எப்படிச் செயலிழந்து போகும்? ஆகவே, வித்தாகிய தேவ வசனத்தில் எவ்விதக் குறைபாடும் இல்லை (லூக் 8 : 11) என்பதில் ஐயமில்லை. அப்படியானால், அதை எடுத்து இயம்புகிறவர்களின் வாழ்க்கையிலும் நோக்கத் திலும் தான் குறைபாடு இருந்தாக வேண்டும். அன்றைக்கு சுவிசேஷத் தைப் பிரகடனம் செய்தவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று முதலாவது தாங்கள் விசுவாசித்தனர். அவர் செய்த தியாகத்தையும், சேவையையும், வாழ்க்கை முறையையும் அப்படியே பின்பற்றினர். கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் பட்டனர். உயிரையும் இழப்பதற்குத் தயக்கம் காட்டவில்லை. சரீரத்தைக் கொன்று; ஆத்துமாவை ஒன்றும் செய்ய முடியாதவர்களுக்கு அவர்கள் அஞ்சி, கொள்கையை விட்டுவிடவில்லை; மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப் 8 : 4) கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லால் கூறி செயலால் பாடுகள் பல பட்டனர். (பிலி 1 : 21.)

இன்று நாம் என்ன சொல்லுகிறோம்? செய்கிறோம் நம்முடைய சொல்லும், செயலும் வெவ்வேறு திசைகளில் பயணம் செய்வதை எவரும் பார்த்து எளிதில் புரிந்து கொள்ளும் அளவுக்கு அப்பட்டமாகத் தெரிகிறது. வாய் வானமே. வானமே என்று கூறுகிற நேரத்தில், கை பூமியைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது. பண ஆசையும், சுய விளம்பரமும், பதவி வெறியும், மாய்மாலமும் நம்மை ஆட்டிப்படைக் கின்றன. பரலோகத்துக்குப் போக விரும்புகிறவர்களைக் காண்பது அரிது. அப்படியே விருப்பம் இருக்கிறது என்று சொன்னாலும் அதுவும் ஒரு நடிப்பே. கையில் பைபிள் இல்லாத ஊழியர்கள் அநேகரைப் பார்க்கமுடியும். ஆனால் பாஸ்போர்ட் இல்லாத ஊழியரைப் பார்ப்பது அரிது. ஆவிக்குரிய தன்மைகளையும், வேத அறிவையும் வைத்து ஊழியர்களை எடைபோட்டது ஒரு காலம், இப்பொழுது அவர் வைத்திருக்கிற வங்கி இருப்பு (Bank Balance), அவர் வசிக்கும் வீடு, அவர்

உபயோகிக்கும் வாகனம்; அவர் உடுத்தயிருக்கிற உடை இவைகளை வைத்து எடைபோடுகிறார்கள் என்பது உண்மை தான்! அதற்காக? நாம் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பலாமா? (யோவான் 12 : 43).

நம் நாடு மூட நம்பிக்கைகளின் விளைநிலம் என்பது உலகறிந்த உண்மை. அதை விரட்டியடிக்க அவ்வப்பொழுது பல சமய சீர்திருத்த வாதிகள், பகுத்தறிவுவாதிகள் தோன்றி, மூட நம்பிக்கையை ஒழிப்பதில் ஓரளவு வெற்றி கண்டனர். அவர்களால் விரட்டியடிக்கப்பட்ட மூடநம்பிக்கைகள் எல்லாம் கிறிஸ்தவத்துக்குள் புகுந்து விட்டனவோ என்று ஐயுறும்படி ஊருக்கு ஒரு கும்பல் பல பெயர்களால் இயங்கி வருகின்றன. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சத்தான உயர்நெறிகளை யெல்லாம் உரித்தெடுத்து உளையில் போட்டு விட்டு, வேற்று சமயங்களிலிருந்து விரட்டப்பட்ட மூட நம்பிக்கைகளுக்குப் புதுச் சாயம் பூசி விற்பனை செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமம் இப்படிப்பட்ட இழிநிலைகள் வரும் என்று முன்பே எச்சரித்து இருப்பதை நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொண்டு விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏமாந்தோ அல்லது அப்படி சத்தியத்தைத் திரித்துப் பிரசங்கிப்பதால் நமக்கு கிடைக்கும் சில அற்ப சுகங்களுக்கு அடிமையாக வாழ்வோமானால் தேவ ஆக்கினைக்குத் தப்பவே முடியாது. தயவு செய்து II பேதுரு 2-ம் அதிகாரம் முழுவதையும் ஜெபத்துடன் வாசித்துத் தியானிக்கவும்.

**காணிக்கை**

நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்.

I கொரி 16:2.

# என்னுடைய திட்டமா? தேவ சித்தமா?

சுமார் கி.பி. 57ல் அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியில் உள்ள பரிசுத்தவான்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் அவர்களுடைய விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாயிருக்கிறது என்று அவர்களை மெச்சிக் கொள்கிறார். (ரோமர் 1:8) அவர்களைக் காணவும், ரோமா புரியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், தனக்குள்ள வாஞ்சையைத் தெரிவிக்கிறார் (ரோமர் 1, 15) ஆனாலும் அவருடைய எண்ணம் நிறைவேறாமல் தேவனால் தடுக்கப்பட்டுவிட்டதாகப் புலம்புகிறார் (ரோமர் 13 : 15 : 22) இருந்தபோதிலும் நான் ஸ்பெயின் நாட்டுக்குப் போகும்போதாவது உங்கள் ஊர் வழியாய்ப் பயணம் செய்து, உங்களைக் கண்டு கொள்ளவும் உங்களிடத்தில் சற்றுத் திருப்தியடைந்த பின்பு, அவ்விடத்திற்கு உங்களால் வழி விட்டனுப்பப்படவும் எனக்குச் சகாயம் கிடைக்கும் என நம்புகிறேன் என்று தன் ஆதங்கத்தை விவரிக்கிறார் (ரோமர் 15: 24,28)

கர்த்தரே தரிசனத்தில் "பவுலே, நீ திடன் கொள், நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததைப் போல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்" என்றாரே (அப் 23 : 11) பின்னே, ஏன் எனக்கு ரோமாபுரிக்குப் போவதற்குத் தடை ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது? என்று பவுலுக்கு ஒரே குழப்பமாக இருந்திருக்கலாம். தேவன் சொன்னதில் மாற்றமில்லை பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குப் போனார். சுவிசேஷமும் அறிவித்தார். ஆனால் அவர் கற்பனை செய்து கொண்டிருந்ததைப் போலவும், அவர் விரும்பிய கால கட்டத்திலும் அவருடைய தீர்மானத்தின்படியும் அல்ல. சிறைக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார். கைதியாக நான் பிடிக்கப்பட்ட பிறகு, நான் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்வது எப்படி முடியும்? என் திட்ட மெல்லாம் பாழாகிவிட்டதே என்று பவுல் நிலை குலைந்து போயிருக் கலாம். ஆனால் தேவன் தன் திட்டத்தை நிறைவேற்றியை நிறைவேற்றி னார். பவுல் ரோமாபுரியில் தனக்கென்று ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அங்கே கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார். ஏராளமானவர்கள் அவருடைய சிறை வீட்டுக்கு வந்து சுவிசேஷத்தைக் கேட்டனர். தடையில்லாமல் தேவனுடைய இராஜ்ஜியத் தைக் குறித்துப்

பிரசங்கித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். (அப் 28 : 23, 30, 31).

பின்னரே, ஒரு சமயம் தன் சிறை நாட்களை நினைவு கூர்ந்து "சகோதரரே எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபல்யமாவதற்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்.

அரண்மனை எங்கும் உள்ளவர்களுக்கும், மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகள் என்று வெளியரங்கமாகி சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே திடன் கொண்டு பயமில்லாமல் திரு வசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள் என்று பெருமிதம் கொண்டு தன்னுடைய திட்டத்தைக் காட்டிலும் தேவனுடைய திட்டமே சிறந்தது என்று ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார் (பிலி1:12-14).

மனிதர்களாகிய நாம் மிகுந்த ஞானத்துடனும் பாரத்துடனும் எச்சரிப் புடனும் திட்டங்களைத் தயாரித்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதாக நினைத்துக் கொண்டாலும் தேவனுக்கு என்று ஒரு திட்டம் உண்டு. அது அநேக நேரங்களில் நம்முடைய திட்டத்துக்கு ஒத்துப்போகாது. அப்பொழு தெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த முள் நீங்க வேண்டும் என்று கண்ணீரோடு மன்றாடியிருப்போம். ஆனால் அந்த முள் நீக்கப்படாதது மட்டும் அல்ல. அது இன்னும் கூர்மையாகி நமக்கு வேதனை அளிக்கிறதை நாம் நினைத்து ஆயாசப்பட்டு ஆண்டவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நாம் தேவனை சபித்துவிட்டு செத்துப்போகலாம் என்று முடிவுக்கு வருமுன்னே (யோபு 2 : 9) உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் (II கொரி 12 : 9) என்ற மெல்லிய சத்தத் தால் நம்மைத் தேற்றுகிறார். நம்முடைய பெலத்தையும், திறமையையும் குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளாதபடி, தேவன் மேல் சார்ந்து அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுப்பதற்கு நமக்குக் குறிப்பிட்ட சோதனைகளும், துன்பங்களும் அவசியமாக இருந்திருக்கலாம்.

நான் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு இன்னும் சில வசதிகள் இருந்தால் இன்னும் பெரிய அறுவடையைச் செய்து காண்பிப்பேன் என்று ஏங்கியிருப்போம். ஆனால் இப்படியே வறுமைக்கும் பிரச்னைகளுக்கும் மத்தியில் உழல்வது, நாம் மனத் தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு நல்லது என்று தேவன் நினைத்திருப்பார். சவுல் அரசனுடைய உடைகளையும் போர் ஆயுதங் களையும் தரித்துக் கொண்டு கோலியாத்தை வெல்வதற்கு தாவீது முயற்சித்தான். ஆனால் அது அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. தன்னு டைய எளிமையான மேய்ப்பனின் ஆடைகளும் போர் ஆயுதங்களும்

கோலியாத்தை வீழ்த்துவதற்குப் போதுமானது என்னும் தேவ திட்டத்தைப் பின்னர் அவன் உணர்ந்தான் (I சாமு - 17 : 38–51) வசதியாக இருக்கிற ஊழியனைப் பார்த்து, நானும் அப்படியிருந்தால் நன்றாக இருக்குமே என்று ஆசைப்பட வேண்டாம். தேவன் உனக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து உபயோகி, தேவன் அற்புதங்களைச்செய்வார்.

மோசேயைப் பயன்படுத்தியதைப் போல நம்மையும் ஒரு முக்கிய மான பணிக்கு தேவன் பயன்படுத்தமாட்டாரா? என்று அங்கலாய்த்திருப் போம். (அப் 7:25) மோசேயுக்குக் கல்விச் செல்வமும், நிர்வாகப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, வில்வித்தை, வாள் வீச்சு இன்னும் எத்தனை எத்தனையோ பயிற்சிகளும் கொடுக்கப்பட்டிருக்கலாம். (அப் 7 : 22) இளமை இருந்தது (வ. 23) சமுதாயப் பற்று இருந்தது (வ. 24) சொல்லப்போனால் தேவனே மோசேயை அப்பணிக்கு என்று தான் பயிற்றுவித்தார். அப்படியில்லாவிட்டால் அடிமைகளைப் பெற்றோராகக் கொண்ட ஒரு அடிமை, தான் அடிமையாக இருக்கிற அதே நாட்டின் அரசுக் கட்டில் ஏற சூழ்நிலை அமையுமா? ஆனால் தேவன் நியமித்த நேரமும், சூழ்நிலைகளும் வரவில்லை என்பதை மோசே அறிய முடியாமல் உயிர் பிழைத்தால் போதும் என்று மீதியான் தேசத்துக்கு ஓடிப் போகச் செய்தார். தேவனுடைய திட்டத்தில் மாற்றமா? இல்லை. இல்லை மோசே மீதியான் தேசத்துப் பாலைவனப் பல்கலைக்கழகத்தில் மௌனம் என்னும் சிறப்புப் பாடத்தை எடுத்து நாற்பது ஆண்டுகள் பயில வேண்டும் என்று நினைத்தார். மோசே எப்படிப்பட்ட கடினமான பணிக்கு ஏற்படுத்தப்பட்டவன் என்பதை மோசேயை விட தேவன் தெளிவாக அறிந்திருந்தார். சகோதரனே, அவசரப்பட்டு ஆசைப்படாதே, கர்த்தருடைய வேலைக்காகக் காத்திரு.

கர்த்தருக்கு எவ்விதமான நிபந்தனைகளையும் விதிக்காமல் அவரு டைய திட்டங்களுக்குத் திருத்தங்கள் கொடுக்காமல் ஊழியத்தை மேற் கொள்ளுங்கள் என்னுடைய சித்தமல்ல உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்று தேவகுமாரனாகிய இயேசு ஜெபித்தார், செயல்பட்டார் என்றால் நானும் நீங்களும் எத்தனை அதிகமாய் நம்மைத்தாழ்த்தி அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்? நான் குறிப்பிட்ட நகரத்தில் தான் பணியாற்றுவேன். ஆண்டவரே, எனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் தந்தால் நான் ஊழியத்துக்கு வசதியாக இருக்கும். சொந்த இடம் இல்லாததால் ஊழியம் பெருக வாய்ப்பில்லை. ஆகையால் சொந்தமாக ஒரு இடத்தைக் கொடும் என்றெல்லாம் பிடிவாதம் செய்து ஆண்டவரைத் துக்கப்படுத்தாதீர்கள். அவர் கசந்து போய் உங்கள் கோரிக்கைகளை

நிறைவேற்றின கையோடு உங்களுக்குத் தண்டனையையும் கொடுத்துவிடாதபடி அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருங்கள் (எண் 11 : 33).

முன்னொரு காலத்தில் தென் இராஜ்ஜியமாகிய யூதாவை ஆண்ட மிகச் சிறந்த அரசனாக விளங்கினார் எசேக்கியா என்பவன், அவனைப் போல நல்ல அரசன் அவனுக்கு முன்னும் இருந்ததில்லை பின்னும் இருந்ததில்லை என்று பேர் பெற்று இருந்தான். அவர் மரிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக தகவல் தந்தார். இது எல்லாருக்கும் கிடைக்கும் பேறு அல்ல; இருந்த போதிலும் அவர் தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடாமல் இன்னும் சில காலம் வாழ வேண்டும் என்று விரும்பி கண்ணீர் மல்க மன்றாடினான். தேவன் அவன் விருப்பப்படியே பதினைந்து ஆண்டுகள் நீட்டிக் கொடுத்தார். என்ன பரிதாபம்! அந்த நீடிக்கப்பட்ட ஆண்டுகளில் அவன் சமாதானம் இழந்தார். அந்த நாட்களில் அவன் பெற்ற பிள்ளை தான் மனாசே என்ற பொல்லாத அரசன். அவன் தன் தகப்பனுக்கு எதிர்த் திசையிலே பயணம் செய்து தேவனுக்கு அருவருப்பான-விக்கிரக ஆராதனையை ஊக்குவித்து நாட்டை அழிவின்பாதையில் அழைத்துச் சென்றான். எசேக்கியா தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து மரணத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவனுடைய ஆட்சி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட்டிருக்கும். தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுக்காததால் கிடைத்தது என்ன என்று சிந்தித்துப் பாருங்கள், வெறும் கெட்ட பெயர் தான். (II ராஜா 20, 21ம் அதிகாரம்)

ஆக நம்முடைய ஜெபங்களுக்கு இல்லை என்று மறுமொழி கிடைத் தாலும், நமக்குக் கொடுக்கப்பட்ட முள் எடுபட்டு போகாவிட்டாலும், நம்முடைய பணித்திட்டங்கள் நிறைவேறாமற் போனாலும் நாம் கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து நம்முடைய ஊழியத்தைச் செய்வோம். ஆபகூக் தீர்க்கனைப் போல மகிழ்ச்சியாயிருப்போம் (ஆபகூக் 3:17) அவரே கர்த்தர். சர்வ வல்லவரோடே வழக்காடி அவருக்கு புத்தி சொல்லுகிறவன் யார்? (யோபு 40:2).

**காணிக்கை**

நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்.

I கொரி 16:2.

# ஊழியர்கள் சிந்தனைக்கு!

ஊழியர் ஒருவரை அண்மையில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந் தேன். அவருடைய உரையாடலில் அடிக்கடி ஊழியர்களின் தற்காப் பின்மையைப் பற்றிக் கவலை தெரிவித்தார். நமக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஒரு பிராவிடண்ட் பண்டா? பென்ஷனா? பிள்ளைகளுக்கு ஏதாவது சலுகையா? ஒன்றுமே கிடையாது. நாளைக்கு திடீர் என்று ஏதாவது வந்துவிட்டால் குடும்பம் என்னாவது என்று அங்கலாய்த்தார்.

அவரைக் குறை கூறவில்லை. தற்காப்பு உணர்வு இயற்கையானது. ஆனால், அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, நாம் அழைக்கப்பட்ட நோக்கத்தை உதாசீனம் செய்வது நியாயமா? ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் : ஒரு ஊழியனின் நலன்கள் பாதுகாக்கப்படுவது, அவர் தேவனுடைய நலன்களைப் பேணுவதில் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. (மத் 10:39) ஒரு ஊழியன் தேவனை விட்டு விலகாதிருக்கும் வரையிலும், தான் கை விடப்படுவேன் என்றோ, பிறர் நமக்குத் தீமை செய்துவிடுவார்கள் என்றோ அஞ்சத் தேவையில்லை. (ரோமர் 8 : 31) அப்படியே அவர்கள் தீமை செய்தாலும், அதையே நமக்கு நன்மையாக மாற்றித்தர தேவனால் ஆகும். (ஆதி 50 : 20) ஆகவே, பலன் அளிக்கிறவர் தேவன் என்ற விசுவாசத்துடன் அவரது சித்தத்தை நிறைவேற்ற தைரியமாய் உழைக்க வேண்டும்.

மேலும், ஊழியத்தில் மனிதரைப் பிரியப்படுத்தும் போக்கு அதிக மாகத் தென்படுவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. மனிதரைப் பிரியப்படுத்துவது தவறு என்று கூறவில்லை. ஆனால், மனிதர் பாராட்ட வேண்டுமென்றோ அல்லது உதவி செய்கிறவர்களைப் பிரியப்படுத்த வேண்டுமென்று சத்தியத்துக்கு முரணாகக் காரியங்களைச் செய்வது ஆரோக்கியமான முறை அல்ல. முதல் நூற்றாண்டு ஆத்தும ஆதாயப் பணியாளர்கள் தேவனைப் பிரியப்படுத்துவதை மட்டுமே இலட்சியமாக கொண்டிருந்தனர்.

பெரும்பான்மை மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு அல்லது அதிகார வர்க்கங்களின் போக்குக்கு எதிராக ஒரு போதனையைப் புகுத்துவது எளிதல்ல. ஆனால், அப்போஸ்தலர்களும் தேவ ஊழியர்களும் பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தேவனுடைய சித்தத்திற்

கிசைவாகப் போதித்தது, தேவனைப் பிரியப்படுத்துவதில் அவர்களுக்கு இருந்த இலட்சியப் பிடிப்பைக் காட்டுகிறது.

ஸ்நானகன் ஏரோதுக்கு எதிராக போதித்தார். (மத் 14 : 3, 4) அப்போஸ்தலர்கள், "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேசாமலிருக்கக் கூடாதே, மனுஷருக்கு கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்படிகிறதே அதிக அவசியமாய் இருக்கிறதே" என்று ஆலோசனை சங்கத் தீர்ப்புக்கு எதிராய் முழங்கினர். (அப் 4 : 19 -20, 5 : 28) அத்தேனே, பட்டணத்தாரை 'நீங்கள் மிகுந்த மத பக்தியுள்ளவர் களாயிருக்கிறீர்கள்' என்று பாராட்டின பவுல், பின்னர், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று அவர்கள் அறியாமையைச் சுட்டுகிறார். (அப் 17 : 22, 23) தன்னை நியாம் விசாரித்துக் கொண்டிருந்த அகிரிப்பா இரா ஜாவை, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? என்று கேட்டு பவுல் விசுவாச விசாரணை செய்தார். (அப் 26 : 27 - 28). இவர்களில் எவரும் மனிதரை பிரியப்படுத்துவதற்காக தங்கள் இலட்சியங்களையோ, சுவிசேஷ செய்தியையோ மாற்றிக் கொள்ளவில்லை. தீமையோடு சமரசம் செய்து கொள்ளவில்லை.

மனிதரை பிரியப்படுத்துவதில் சில உடனடிபலன்கள் கிடைக்கின்றன என்பது உண்மைதான். அதிலும் கலாச்சாரத்திற்கு புதியவர்களைப் பிரியப் படுத்துவது சுலபம். பரமபிதா அருளும் பலனா அல்லது மனிதன் தரும் உதவியா? நித்தியா பலனா அல்லது உடனடி பொருளியல் லாபமா? (மத் 6 : 16 - 17). நான் மனுஷரை பிரியப்படுத்துகிறவனாய் இருந்தால் கிறிஸ்து வின் ஊழியக்காரன் அல்லவே. (கலா 1 : 10) எபே 6 : 6 -8) என்கிறார் பவுல். மேலும் மனிதரைப் பிரியப்படுத்தும் முயற்சியில் கிடைக்கும் உடனடி பலன்களுக்காக தங்கள் சிருஷ்டிகரை துக்கப்படுத்திய சவுல், யூதாஸ் போன்றோர் முடிவில் பெற்ற பலன் என்ன? (1 சாமு 31 : 4 -5, மத் 27 : 5-7) சிந்திப்பீர்!

மேலே கூறப்பட்டுள்ள மனநிலைகளினால் ஆத்துமா ஆதாயப் பணியாளர் என்ற நிலையிலிருந்து தாழ்ந்து ஊழிய அறிக்கை தயாரிப் பாளராக மாறிவிடும் அபாயம் தோன்றியுள்ளது. பிரிவுக்கூட்ட கும்பல் களில் சிலர் கவர்ச்சி ஊழிய அறிக்கை தயாரிப்பதற்காக மலிவான யுக்திகளையும், விளம்பரங்களையும் கையாண்டு இழிவான ஆதாயம் தேடு கின்றனர். ஏதோ ஒரு காரியத்தைச் சொல்லி மக்களைக் கையுயர்த்தும்படி ஏவி, படம் பிடித்து, இதோ, இவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானத்துக்கு கீழ்ப்படிய ஒப்புக் கொடுத்தவர்கள் என்று அறிவிப்பர். உணவுத் தட்டில் மணலையும், சிறு கற்களையும் குவித்து, அதைப் படம் பிடித்து இவ்வளவு

பேருக்கு அன்னதானம் செய்தோம் என்று கூசாமல் கூறுவர். அவர்களைப் பின்பற்றி நாமும் செயல்பட்டால் எப்படி?

அயல் நாட்டுச் சகோதரர்கள் வரும்போதும், அவர்களுடைய ஏஜெண்டுகள் விரும்பும் போதும் ஞானஸ்நானங்களுக்கு ஆள் திரட்டு வதும், சிலர் அவர்கள் முன்னிலையில் மட்டும் ஞானஸ்நானம் எடுக்க விரும்புவதும் நல்ல நடைமுறை அல்ல. இது தவிர்க்கப்பட வேண்டும். தவறான தகவல்கள் அடங்கிய கவர்ச்சி அறிக்கைகளும், மலிவான போலி விளம்பரங்களும் கிறிஸ்தவத்தின் சிறப்பு நிலையை மாசுபடுத்தி வருகிறதை உணர்வீர். நமது ஊழியத்தை தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரே வினையச் செய்கிறவர். அவரே தக்க பலனளிப்பவர் என்பதை மறந்து விட்டு மனிதரைப் பிரியப்படுத்த நாடகம் ஆடுவது முறையா? (I கொரி 3 : 10 -15).

இவ்விதமான தவறான போக்கினால், ஆத்துமா ஆதாயப் பணி யாளர் என்ற நிலை திரிந்து கூலிக்கு மாரடிக்கும் போலிப் பிரசங்கிகளாக மாறிவிடும் அபாயம் தோன்றியுள்ளது. செயலாற்றல் உள்ளவன் செயல்படுகிறான்: கையால் ஆகாதவன் உபதேசம் செய்கிறான் என்றார். அறிஞர் பெர்னாட்ஷா எவ்வளவு உண்மை! வேறு தொழில் செய்ய லாயக்கற்றவன் ஊழியனா? கையால் ஆகாததால் உபதேசமா?

கர்த்தருக்கு ஊழியம் செய்வதைவிட உலகில் வேறு சிறந்த பணி இல்லை. ஆனால் அந்தப் பணி நல்ல நோக்கத்தோடு உண்மையாய்ச் செய்யப்படும்போது தான் ஆசீர்வாதம். சிலருக்கு, கர்த்தருடைய ஊழியம் பணம் காய்க்கும் மரமாக மாறிவிட்டது. சிலர் நற்செய்தி உரைஞர்களாகத் துவங்கி, மேடைப் பேச்சாளர்களாக மாறிவிடுகின்றனர். பிரியமாண வர்களே, நாம் அழிந்து போகும் ஆத்துமாக்களுக்கு காவலாளிகள். சுவிசேஷப் பணியைச் செய்யத் தவறுவோமானால் தேவன் அவர்கள் இரத்தப் பழியை நம் கையில் கேட்பார். (எசே. 3 : 17-21) சத்தியத்தை உத்தமமாய் அறிவித்ததால் பவுல் அநேகருடைய இரத்தப் பழிக்கு நீங்கி சுத்தமானார். (அப் 20 : 26–27; 18:16).

நாம் கடனாளிகள், சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால் நமக்கு ஐயோ! (1 கொரி 9 : 16) தேவன் பாவிகளுக்காய்ப் பரிதபிக்கும் போது, நாம் நமக்காகவே கவலைப்படுவது சரியா? கேவலம்! வயிற்றுப் போஜனத்தைக் கண்டுபிடித்த குஷ்டரோகிகள் அந்த நற்செய்தியை அறிவிக்கத் துடித்தார்கள் என்றால் நாம் ஆத்தும இரட்சிப்பு பற்றிய நற்செய்தியை அறிவிப்பதில் எத்தனை அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (II ராஜா 7 :9).

நம்மில் பலர் வெளி மாவட்டங்களில், மாநிலங்களில் ஏன்? வெளி நாடுகளிலும் சுவிசேஷம் அறிவிக்க விரும்புகிறோம். அது நல்ல எண்ணம் தான். நம்மில் எத்தனை பேர் நமது குடும்பத்தாருக்கும் அயலகத்தாருக்கும் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறோம்?

அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் துணிவு நமக்கு இல்லையா, அல்லது மனமில்லையா அல்லது அவர்கள் நற்செய்தியை கேட்டுக் கீழ்ப்படிவதற்கு நமது வாழ்க்கை நிலை தடையாக இருக்குமென நினைக்கிறோமா? சிந்திப்பீர் சகோதரரே!

"நோவா தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினான்" (எபி 11 : 7). நமது கண்ணெதிரில் நரக வழியில் செல்லும் நமது குடும்பத்தாரையும் மற்றவர்களையும் இரட்சிப்புக்குள் கொண்டுவர என்ன செய்திருக்கிறோம்? (1 தீமோ 4 : 16) சொந்த ஊரில் எந்த தீர்க்கதரிசியும் மதிக்கப்படுவதில்லை என்பதை சாக்காக நாம் பயன்படுத்த வேண்டாம்.

நமது பணியின் முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் உணர தேவன் நமக்கு உதவி செய்வாராக.

கடைசியாக, ஆத்தும ஆதாய பணியாளராகிய நாம் மற்றவர்களை ஆதாயப்படுத்தும் வேளையில் தம்மை இழந்துவிடும் அபாயத்தில் இருக்கிறோம்.

மோசே மக்களை வழி நடத்தினான். ஆனால் ஐயகோ! எத்தனை பெரிய துக்கம்! அவன் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. "ஆதலால் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்து கிறேன்" என்றார் பவுல் (1 கொரி 9 : 26 - 27).

ஒரு ஆத்தும ஆதாயப் பணியாளர் சுயநலவாதியாக, மனிதரைப் பிரியப்படுத்தும் ஊழியராக, உடனடி சரீர நன்மைகளுக்காக, கவர்ச்சி ஊழிய அறிக்கை தயாரிப்பவராக, ஊழியத்தை ஆதாய நோக்கோடு செய்பவராக இருப்பின் அவர் தன் சொந்த ஆத்துமாவை இழந்துவிட வேண்டிய அபாயத்தில் இருப்பார். அப்போஸ்தலர்களும், ஆதிக் கிறிஸ்தவர்களும் தங்களுக்கு லாபமாக இருந்த எல்லாவற்றையும் விட்டு விட்டுக் கர்த்தரைச் சேவிக்க வந்தனர். (மத் 19 : 27-29; பிலி 3 : 5- 11) நாம், யாக்கோபு கூறியதைப் போல கோலும் கையுமாக (ஆதி 32:10) வெறுமையாய்க் கர்த்தரை சேவிக்க வந்து, வசதியான வாழ்க்கை, அந்தஸ்து, புகழ், செல்வம் ஆகியவற்றைச் சம்பாதிக்கத் துடிக்கிறோம்!

இதுவா தியாகம்?! சிலர் இவைகளைத் தவறான வழியில் அடைந்து விட்டுக் கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்லவும் தயங்குவதில்லை. "பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும் .. . . வாங்குகிறதற்கும் இது காலமா?" (II ராஜா 5 : 26 -27) இந்த நோக்கங்களுக்காக கர்த்தரைச் சேவிப்பவர்கள் தங்களை இழப்பது நிச்சயம். (மத் 10 : 39).

## அருமை உடன் ஊழியர்களே!

இஸ்ரவேலரும், அவர் தம் சமய, சமுதாயத் தலைவர்களும் உலகியல் பற்றினால் சீரழிந்தனர். இன்றைய கிறிஸ்தவமும் அதனுடைய ஊழியர் களும் உலகியல் கரிசனையால் தங்கள் விசுவாச ஓட்டத்தில் தடுமாறி, தடம்புரண்டு அழிவை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஆத்தும பாரம், சபை பற்றிய வைராக்யம் அந்நிய காரியங்களாக மாறிவிட்டன.

ஆத்துமாக்களின் அவலத்தைப் பாரீர்! ஐயோ, நான் இங்கு வேதனைப்படுகிறேனேக் பூமியில் எனக்கு ஐந்து சகோதரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் இந்த வேதனையுள்ள இடத்திற்கு வராமலிருக்க வேண்டுமே என்ற கூக்குரலைக் கேளீர்!! (மத் 16 : 27-28) சபையின் சீரழிவைக் காணீர்.!!!

குழு உணர்வுகள் மறைந்து ஒருமைப்பாடு ஓங்கட்டும்! சந்தர்ப்ப வாதங்கள் மறைந்து, சகோதர அன்பு பரவட்டும் தேவன் தமது சபைக்காக கரிசனையுள்ளவராக இருக்கிறார். பாவிகளுக்காகப் பரிதவிக்கிறார். கர்த்தர் தமது சபைக்காக பக்தி வைராக்கியமாக இருக்கிறார். (எபே.5:26-27) அப்போஸ்தலரும் ஆதிக் கிறிஸ்தவர்களும் சபைக்காய் தேவ வைராக்கியம் கொண்டிருந்தனர். (I கொரி 11 : 1-2 நாமும், நமது உலகியல் பற்றை விட்டு விட்டு ஆத்தும மேம்பாட்டை வாஞ்சிப்போமாக! எஸ்றா, நெகேமியா போல சபைகளின் இழிநிலையைக் கண்டு உருகுவோமாக! சபைக்காக, ஊழியத்திற்காக கரிசனை கொள்வோமாக! இக்காலத்தின் தேவையை - அதில் நமது பங்கை உணருவோமாக! சபைக்காக, ஊழியத்திற்காக கரிசனை கொள்வோமாக! இக்காலத்தின் தேவையை - அதில் நமது பங்கை உணருவோமாக! இந்திய கர்த்தருடைய சபைகளின்எழுச்சிக்காக,வளர்ச்சிக்காகபாடுபடுவோமாக! உடன் ஊழியர் களே! நாமும் பவுலோடு சேர்ந்து சபைகளைப் பற்றிய கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது என்று சொல்லுவோமா (II கொரி 11 : 26).

# அப்போஸ்தலப் பட்டம்

இன்றைக்கும் சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். வேறு சிலர் அதை மறுத்து அப்போஸ்தலப் பட்டம் மனிதனுடைய விருப்பத்துக்கும் சௌகரியத்துக்கும் சூடிக் கொள்கிற விருது அன்று, அது தேவனுடைய கிருபை வரம், தமது சித்தத்தின்படியும் தேவைக்கேற்பவும் தேவனே பகிர்ந்து கொடுக்கிறார் என்கின்றனர். இதில் யார் சொல்வது சரி என்பதை வேதாகமத்தின் துணைக்கொண்டு கண்டுபிடிப்போம். என்னோடு கூட வாருங்கள். ஏனெனில் மார்க்க சம்பந்தமான காரியங்களுக்கு வேதாகமம் தான் உரைகல். "அப்போஸ் தலன்" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல்லுக்கு மூல மொழியாகி கிரேக்கத்தில் Apostolos என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இச்சொல் புதிய ஏற்பாட்டில் சுமார் 80 இடங்களில் வருகிறது. வைத்தியன் லூக்காவும், அப்போஸ்தலன் பவுலும் மட்டும் சுமார் எழுபது முறை இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இலக்கிய ரீதியில் பார்த்தால் அப்போஸ்தலன் என்ற சொல்லுக்கு "அனுப்பப்பட்டவர்" என்பது தான் உண்மையான பொருள். வேதாகமத் தில் இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தவிர வேறு சில நபர்களும் கூட அப்போஸ்தலன் என்று அர்த்தம் கொடுக்கும் சொற்களாலே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்காக சபை அனுப்பி வைக்கிற தூதர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக பிலிப்புப் பட்டணத்துச் சபை அனுப்பி வைத்த எப்பாப்பிரோதீத்துவைச் சொல்லலாம் (பிலி 2 : 25). வேறு ஒரு இடத்தில் ஒரு சபை, தர்ம காரியத்துக்காக சேகரித்த பணத்தை வேறொரு சபையிலுள்ள ஏழைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக அனுப்பி வைக்கிற நபர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தம் கொடுக்கும் ஸ்தானாபதி என்று குறிப்பிடுகிறது. (II கொரி 8 : 19-23).

எபிரேய நிருப ஆசிரியர் இயேசு கிறிஸ்துவையே கூட அப்போஸ் தலர் என்று குறிப்பிட்டிருக்கிறார். (எபி. 3 : 1) ஏனெனில் அவர் தேவனால் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அனுப்பப்பட்டார். அதுபோல இஸ்ரவேல் மக்களுக்குள் அனுப்பப்பட்ட ஊழியர்களைக் கூட அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. (லூக்கா 11 : 49).

கர்த்தருடைய சகோதரராகிய யாக்கோபையும் (கலா 1 : 19, 2 : 9) பவுலின் கூட்டாளியாக இருந்த பர்னபாவையும் (அப் 14 : 4–14) அன்றோனீக்கையும், யூனியாவையும் கூட அப்போஸ்தலர்கள் என்று அழைக்கிறது (ரோமர் (16:7) அது அல்லாமல் சீலாவைக் கூட அப்போஸ்தலன் என்று பவுல் கூறுகிறாரா என்று சந்தேகம். (I தெச. 2:6) பவுலின் எதிரிகள் கூட கள்ள அப்போஸ்தலர்கள் என்று வர்ணிக்கப் பட்டிருக்கிறார்கள். (II கொரி 11 : 13).

இப்படி மேலே கூறப்பட்டுள்ளபடி உள்ள அப்போஸ்தலர்களுக்கும் இயேசுகிறிஸ்துவினால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலருக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. முன் சொல்லப்பட்டவர்கள் சபைகளால் அனுப்பப்பட்டவர்களும், இயேசுவால் தமது ஆரம்ப நாட்களில் இஸ்ரவேலுக்குள் சென்று ஊழியம் செய்யும்படி அனுப்பு விக்கப்பட்ட எழுபது பேராகக்கூட இருக்கலாம், திட்டமாய் தெரிய வில்லை (லூக் 10 : 1).

ஆனால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் சில சிறப்புத் தகுதிகளின் அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்பட்ட சிறப்புத் தொண்டர்கள். அவர்கள் சில சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

முதலாவதாக, அவர்கள் இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற மீட்புப் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருக்கும்படியாகவும் ஏற்படுத்தப் பட்டவர்கள் (யோவான் 15 : 16, 27; அப் 1 :8, 22 2 : 32, 3 : 15; 4 : 20, 33 : 5 : 32; 10 : 39 I யோவான் 1 : 1-4) இயேசு கிறிஸ்துவின் செயல்பாடு களையும் உயிர்த்தெழுதலையும் அவர்கள் நேரடியாகக் கேட்டும் பார்த்தும் இருந்தார்கள்.

இரண்டாவதாக கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களை இயேசு கிறிஸ்து நேரடியாகத் தேர்வு செய்து கொண்டார் (லூக்கா 6 : 13; அப் 1:2; 9 :6; 22 : 16-18 கலா 1 :1).

மூன்றாவது இந்த அப்போஸ்தலர்கள் இயேசுவின் போதனை களைக் கூடவே இருந்து நேரடியாகக் கேட்டவர்கள். இப்படி அவர்கள் நேரடியாகக் கற்றுக் கொண்டது போக மீதியை அவரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கற்றுக் கொண்டனர். (யோவான் 16:13; 14 : 26.)

நான்காவதாக : இந்த அப்போஸ்தலர்கள் ஒரு குறிப்பிட்ட பிராந்திய சபையில் மட்டுமல்ல; அனைத்துச் சபைகளிலும் செல்வாக்குப்

பெற்றிருந்தார்கள். அவர்கள் சபையின் ஒரே தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தத்துக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக் கொடுத்து தங்கள் பணிகளைச் செய்தார்கள். (யோவான் 13 : 16, 30 : 14:26; 16 : 12-15 அப் 2 : 42: I கொரி 4 : 17; 11 : 2; 23 14 : 37 II கொரி 13 : 10.)

**ஐந்தாவதாக :** அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்பதற்கும், தங்கள் செய்திகள் ஆவியினால் ஏவப்பட்டவை என்பதற்கும் ஆதாரமாக அநேக அற்புத அடையாளங்களைச் செய்து உறுதிப்படுத்தினார்கள். (அப் 2 : 43 எபி 2 : 2-4 அப் 5 : 19; 12 : 6-9, 9-37-40 8 : 2-7).

**ஆறாவதாக :** அப்போஸ்தலர்கள் மற்றவர்கள் மீது கை வைத்து அற்புதம் செய்யும் வரத்தை அளிக்கும் வல்லமை பெற்றிருந்தார்கள். (அப் 8 ; 14-18 19 : 1-6 ரோமர் 1 : 11; 2 தீமோ 1:6.

**ஏழாவதாக :** பழைய ஏற்பாட்டு தீ ர்க்கதரிசிகளைப் போல பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பரிசுத்த வேதாகமத்தின் சில நூல்களை எழுதினார்கள். எல்லா அப்போஸ்தலர்களுக்கும் இந்த பாக்கியம் கிடைக்காவிட்டாலும் ஒரு சிலருக்கு அந்த பாக்கியம் கிடைத்தது.

அதுவுமல்லாமல், இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மிகவும் சிறப்பு நிலை பெற்றவர்கள் "புதிய வானத்தையும், புதிய பூமியையும் பற்றி அப்போஸ்தலன் யோவான் கண்ட தரிசனத்தில் இஸ்ரவேலின் பனிரெண்டு கோத்திரங்களின் பெயர்களை அதில் இருந்த பனிரெண்டு வாசல்களுக்கும், நகரத்தின் மதிலில் இருந்த பனிரெண்டு அஸ்திபாரக்கற்களுக்கு ஆட்டுக்குட்டியானவருடைய பனிரெண்டு அப்போஸ்தலர்களின் பெயரும் பதிக்கப்பட்டிருந்தன" என்கிறார் (வெளி 21 : 13, 14).

இந்தப் பனிரெண்டு பேர்களில் யூதாஸ் என்பவன் தன்னுடைய இழிமதியால் அகால மரணம் அடைந்ததினால் அந்த மாபெரும் பதவியை இழந்து போனான். ஆதலால், அந்த ஸ்தானத்தை நிரப்ப வேண்டிய அவசியம் நேர்ந்தபடியால் அவருடைய ஸ்தானத்தில் மத்தியாஸ் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மீதியுள்ள பதினொரு அப்போஸ்தலர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டான். (அப் 1 : 26; 6 : 2) யூதாஸ் காரியோத்துக்கும் பதிலாக மத்தியாஸ் தேர்வு செய்யப்பட்டது போல ஒவ்வொரு அப்போஸ்தலருடைய மரணத்துக்கும் பிறகு அவர்களுக்குப் பதிலாக வாரிசுகள் தேர்ந்தெடுக்கப்படும் என்று நினைத்து விடக்கூடாது. ஏனெனில் (I) மத்தியா தேர்வு செய்யப்பட்டது ஒரு தீர்க்கதரிசன நிறைவேறல் (அப் 1:20 சங் 69 :25; 109 :8 (காண்க) (II) யதாஸ்காரியோத்தின் மரணத்தினால் ஏற்பட்ட காலி ஸ்தானம். யூதாஸ்காரியோத்தின் மரணத்

தினால் ஏற்பட்டது என்பதை விட அவனுடைய துரோகத்தின் விளைவாக பறித்துக் கொள்ளப்பட்டது என்பதே உண்மை (அப் 1 : 24) ஆகவே அப்போஸ்தலர்கள் பனிரெண்டு பேர் என்கிற நிலையை உறுதி செய்யும் வகையில் ஸ்காரியோத்தின் இழப்பை ஈடு செய்ய வேண்டியிருந்தது மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பொருந்தாது. (III) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒருவர் இயேசுகிறிஸ்து ஊழிய செய்த நாட்களில் அவரோடே கூட இருந்திருக்க வேண்டும் (அப் 1 : 21-22) (IV) மத்தியாவுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் கூடவே இருந்தது மட்டும் அந்தத் தகுதியைப் பெற்றுத் தந்து விடவில்லை. அப்படிப் பார்த்தால் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபாவுக்கும் கூட அந்தத் தகுதி இருந்தது. ஆனால் அப்போஸ்தலன் ஆக முடியவில்லையே (அப் 1 : 23) மேலும் இயேசு தாமே தம்முடைய ஊழிய நாட்களில் தம்முடைய அப்போஸ்தலர்களைத் தெரிந்துக் கொண்டார். மத்தியாஸ் விஷயத்திலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. இங்கேயும் சீஷர்கள் வேண்டிக் கொண்டதென்னமோ உண்மை. ஆனால் தேர்ந்தெடுத்தது கர்த்தர்தான். (அப் 1 : 23-26).

அப்படியானால் பவுல், அப்போஸ்தலன் ஆனது எப்படி என்று உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். சவுல் என்னும் மறு நாமமுள்ள பவுலின் வரலாறு மிகவும் வித்தியாசமானது. "மனிதராலுமல்ல, மனிதர் மூலமாயுமல்ல இயேசு கிறிஸ்துவே அவரை நேரடியாகத் தெரிந்துக் கொண்டார். (கலா 1 :1) அவர் கர்த்தரைத் தரிசித்தார் (அப் 22 - 14 -15) (அப் 26 : 16-17 I கொரி 9:11) அவருக்கு சுவிசேஷம் வெளிப்படுத்தப் பட்டது (I கொரி 15 ; 1 -3 : கல 1 : 11,12).

சவுல் என்கிற பவுலுக்கு இயேசு கிறிஸ்து நேரடியாக போதனை செய்தார். சுவிசேஷத்தை வெளிப்படுத்தினார் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களே, நாங்கள் சொல்வதை மட்டும் ஏன் சந்தேகிக்கிறீர்கள்? என்று அங்கலாய்க்கிறார், நவீன கால அப்போஸ்தலர் ஒருவர். ஐயா, நீங்கள் சொல்வதையும், ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு நிபந்தனை. பவுல் செய்வதைப் போல நீங்களும் செய்து காட்டுங்கள். அவர் பல்வேறு விதமான அற்புத அடையாளங்களைச் செய்து, தான் எந்த அப்போஸ்தலனுக்கும் குறைந்தவன் அல்ல என்று நிரூபித்துக் காட்டினார் (ரோமர் 15 : 18; II கொரி 2 : 12; II கொரி 11 : 5; அப் 14 :10; 19 : 11-12) அவர் ஆவியினால் ஏவப்பட்டு, மற்ற எவரைக் காட்டிலும் அதிகமாக புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதியிருக்கிறார். அந்நிய பாஷைவரத்தை அதிக அளவில் பெற்றிருந்தார் (I கொரி 14 : 8) மரித்தப் போனவனை உயிரோடே எழுப்பினார் அப் 20 : 9 -12 விஷப் பாம்பு கடித்தும் சேதம் ஒன்றும் ஏற்படாமல் சுகமாக இருந்தார். (அப் 28 : 6) நீங்களும் அப்படிச்

செய்து காட்ட முடியுமானால் உங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயார், செய்வீர்களா?

அப்போஸ்தலர்கள் செய்த அற்புத அடையாளங்களை செய்து பேரும் பணமும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையால் போலியாகவும் கோமாளித்தனமாகவும் எதையாவது செய்து, கிறிஸ்தவத்தின் வாசனை யைக் கெடுத்து, கிறிஸ்துவை வெட்கப்படுத்தி, உங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முனைவோரே! "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியங்களுக்குள்ளும் உங்களை நடத்துவார்" என்ற வசனத்தை மீண்டும் ஒருமுறை ஜெபத்துடன் வாசித்துத் தியானியுங்கள் (யோவான் 16 : 13) அவர் வாக்கு மாறாதவர் என்பதை நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்களே. சகல சத்தியங்களும் முதலாம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்தப்பட்டும் உறுதி செய்யப்பட்டும் நிறைவு பெற்றுவிட்ட படியினால் தானே வெளி 22 :18-19ல் மேற்கொண்டு "எதையும் கூட்டவும் வேண்டாம், குறைக்கவும் வேண்டாம் என்று எச்சரிக்கப் பட்டிருக்கிறது. அதனால் தானே யாக்கோபும் நிறைவு பெற்ற புதிய ஏற்பாட்டை பூர்ண பிரமாணம் என்கிறார் (யாக் 1 : 25) அதாவது அவர் கூறியபடியே சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டாயிற்று என்று அவர்கள் உறுதி செய்கிறார்கள். பின் ஏன் இந்த குழப்பமும் தடுமாற்றமும்?

அப்போஸ்தலர்கள் தவிர, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட பரிசுத்தவான்கள் கொஞ்சம் பேர் இருந்தார்கள் என்பது உண்மையே. அது சம்பந்தமாக I கொரி 12 : 28-31 வரை உள்ள, வசனப்பகுதிகளை வாசித்து தியானியுங்கள். அவர்களை தீர்க்கதரிசிகள் என்றும் போதகர்கள் என்றும், குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் நம்மைப் போன்று சாதாரண போதகர்கள் அல்ல. அவர்கள் அற்புதங்கள் செய்யும் ஆவியைப் பெற்றவர்கள் (I கொரி 12 : 11). அந்த வரங்கள் எதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதற்கு எபே 4 : 11-13 வரை உள்ள வசனப் பகுதியை வாசிப்போம். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமார னைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்ட வர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்,

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும்,

அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும்

ஏற்படுத்தினார் என்கிறது. அவர்களை ஏற்படுத்தின நோக்கத்தையும், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தாமல் இல்லை. "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்.

அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார் என்கிறார் (எபே 4 : 14 -15).

இன்னும் கொஞ்சம் பின்னோக்கி மீண்டும் கொரிந்தியர் முதலாம் நிருபம் 12 : 31ம் வசனத்துக்கு வருவோம் "இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள். இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன் என்று கூறி விட்டு, கிறிஸ்தவத்தின் மையப் பொருளாகிய அன்பின் மாட்சிக்கு ஒரு முழு அதிகாரத்தையும் ஒதுக்கி விட்டு, அதன் இறுதியில் ஒரு கிறிஸ்தவனிடத்தில் நிலைத்து நிற்க வேண்டிய மூன்று முக்கிய காரியங்களாகிய விசுவாசம், நம்பிக்கை அன்பு ஆகியவைகளில் நிலைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். (I கொரி 13 : 13).

ஆகவே, ஆவியின் கனியாகி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய கிறிஸ்தவ உயர் பண்புகளைப் பெற நாடுங்கள். வீண் பெருமைக்கும் வேண்டாத பதவிகளுக்கும் ஆசைப்பட்டு நேரத்தை வீணடிக்காதீர்கள். காலம் சமீபித்துவிட்டது! நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார் நம் கணக்கை சரி பார்ப்போமாக!

## பாட்டு

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி.

எபே 5:19.

# கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?

உலக வரலாற்றில் மாபெரும் போதகர் (Master teacher) என்று அறிஞர்களாலும், பண்டிதர்களாலும் ஒருங்கே பாராட்டப்படுகிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வேதபக்திக்கும் நல்லொழுக்கத்திற்கும் சீரான வாழ்க்கை நெறிக்கும் தேவைப்பட்ட ஏராளமான நல் உபதேசங் களையும் கட்டளைகளையும் கொடுத்திருக்கிறார். அவைகள் எல்லாவற் றையும் காற்றில் பறக்க விட்டு விட்டு "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற ஒரு கட்டளையை மாத்திரம் குரங்குப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வாய்ப்பந்தல் போட்டு, சொற்சிலம்பம் ஆடிக் கொண்டிருக்கிறோம்.

வயல் இல்லாமல் நெல் விளைவிக்கும் இவ்வீண் முயற்சியால் கிறிஸ்தவத்துக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ எவ்வித நற்பயனும் விளைவ தில்லை. மாறாக கிறிஸ்தவத்தையும் கிறிஸ்தவர்களையும் புற மதஸ்தர்கள் குறைவாக மதிப்பிடுவதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் இது வாய்ப்பு அளிக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது.

முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தைப் பற்றியும் கிறிஸ்தவர் களைப் பற்றியும் மக்கள் மத்தியில் இருந்த மரியாதைக்கும், தற்காலத்தில் இருக்கிற நிலைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. தற்காலத்தில் மக்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக மாறிவிட்டார்கள் என்றோ, சுவிசேஷத்தின் வலிமை குறைந்து விட்டது என்றோ சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. பின் என்ன காரணம்? கிறிஸ்தவத்தைப் பின்பற்றுபவர்களிடையே காணப்படுகின்ற ஒழுங்கற்ற போக்கு, சுயநலம், மூட நம்பிக்கை பிரிவினைப் போக்கு மாய்மாலம் ஆகிய இழிகுணங்களே காரணம் என்பதைச் சிந்திக்க விரும்புகிற எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இந்த அவல நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டிய முதல் குற்றவாளிகள் சபைகளைக் கண்காணிக்கிறவர்களும், அவைகளை நடத்துபவர்களுமே. ஏனெனில் சத்தியத்தை அவர்கள் அறிந்திருந்தும் தாங்களே அதைச் செய்யாமலும் மற்றவர்களுக்குப் போதியாமலும், கண்

ஜாடையாக இருந்து வருகிறார்கள். சத்தியத்தைச் சொன்னால் சத்துருவாக வேண்டி வரும். பின்னர் நம்முடைய பலவீனங்களை, குறைகளைப் பெரிதுபடுத்திச் சபையிலே குழப்பம் விளைவிப்பார்கள் என்ற அச்சம் தேவனுடைய பூரண ஆலோசனைகளைச் சொல்ல விடாமல் செய்து விடுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் தேவனால் வரும் மகிமையைப் பார்க்கிலும், மனுஷரால் வரும் மகிமையை அதிகமாக விரும்புகிறார்கள். (யோவா 12 : 43) "மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியம் செய்கிறார்கள்" (எபேசி. 6: 6) அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்' (ரோமர் 15 : 18) என்றெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பலவிதமாக இடித்துரைத்தும் கூட நமது நிலைகளை மறுபரிசீலனை செய்யத் தொடர்ந்து மறுத்து வருகிறோம்.

அடுத்தபடியாக, தேவ ஊழியர்களில் பெரும்பாலோருடைய சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. சொல் வினையும் செய் வினையும் வேறுபட்டால் கண்ணால் கண்டதைச் செய்வார்களே ஒழிய, காதால் கேட்டதை எண்ணார்கள் என்று வீரமாமுனிவர் எழுதுகிறார். நாம் பிரசங்கிக்கிறபடி வாழ்ந்து காட்டுகிறோமா? இல்லையே! பெரும்பான்மையான மக்களுக்கு வேத புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்புக் குறைவு. ஆனால் அதைக் குறித்துப் பிரசங்கிக்கிற நம்மை கவனித்து நோக்குகிறார்கள். நாம் தான் அவர்களுக்கு வேத புத்தகம், 'நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்' என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப்போல் நீங்களும் நானும் கூறத் தைரியமுண்டா? I கொரி 11 : 1.இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை மேற்கொண்டவர்களில் தலை சிறந்தவராகக் கருதப்படுவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் வெற்றிக்கு அஸ்திபாரம் அவரது சொல்லும் செயலும் ஒன்றாக இருந்ததுதான் என்று துணிந்து கூறலாம். அவர் எதை நம்பினாரோ அதையே சொன்னார். எதைச் சொன்னாரோ அதையே செய்தார். அவரிடத்தில் துளியும் மாய்மாலம் இருந்ததில்லை. மற்றவர்கள் மெச்ச வேண்டுமென்று காரியங்கள் செய்ததுமில்லை. சிறைச்சாலையிலிருந்து பிலிப்பியருக்கு. "சந்தோஷமாயிருங்கள், ஒன்றுக்கும் கவலைப் படாதிருங்கள்"எழுதினார். (பிலி. 4 : 4, 6.) இதைக்கேட்பவர்களுக்கு இலேசில் நம்பிக்கை வராது. ஆனால் தன்னுடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் பட்டணங்கள் தோறும் பரிசுத்த ஆவியானவர் பவுலாருக்கு ஏற்படவிருக்கும் கட்டுகளைப்பற்றியும், உபத்திரவங்களைப் பற்றியும் எச்சரித்துக் கொண்டே வருகிறார். அந்த நிலையிலும் "நான் ஒன்றைக் குறித்தும் கவலைப்படேன்" என்று உரைக்கிறார். அப் 20 : 23,24. சொல்வது சுலபம், செய்வது கடினம் என்பார்கள். ஆனால் பவுலடியார்

இதற்கு விதிவிலக்கு. அவருடைய போதனையும் சாதனையும் ஒன்றுதான். உயிரைப் பணயம் வைத்து ஊழியம் செய்த வகையில் மட்டும் அல்ல. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அதே கொள்கைகளைச் சுத்த நல் மனச் சாட்சியோடே கடைப்பிடித்தார்.

ஐசுவரியத்தின் அபாயத்தையும், பண ஆசையின் தீமையையும் குறித்து தீமோத்தேயுக்கு அறிவுரை கூறும்போது "போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்றார். (1 தீமோ 6 : 6. அதே போல சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்ட நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இருந்து கொண்டு "எல்லாவற்றிலும் மனரம்மியாக இருக்கக் கற்றுக் கொண்டேன்" என்று இயம்புகிறார். பிலி. 4 : 12. 'தேவ ஊழியக்காரன் இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும் பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும்" என்று சட்டம் வகுத்தார். 1 தீமோ 3 : 3 அதை அவரே முழு மனதோடு கடைப்பிடித்தார். "ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தை யாகிலும் நான் இச்சிக்கவில்லை என்று எபேசு பட்டணத்து மூப்பர்கள் முன்பு தன்னிலை விளக்கம் கொடுக்கிறார். (அப். 20 : 33.) சகோதரனே! நானும் நீயும் பிரசங்கிக்கிறவைகளைக் கடைப்பிடிக்க முடிகிறதா? அப்போஸ்தலனுடைய ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட மகத்தான வெற்றிக்குக் காரணம் புரிந்துவிட்டதா? பவுல் அப்போஸ்தலன் காலம் வேறு; இன்றைய சூழ்நிலை வேறு என்றெல்லாம் மழுப்பி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. பவுல் அப்போஸ்தலன் காலத்தில் இருந்த எந்த சூழ்நிலையும் இன்றைக்கு உள்ள நிலையைவிட சிலாக்கியமானதாக இருக்கவில்லை. அல்லது அவர் ஒன்றும் தெய்வப் பிறவி இல்லை. பரிபூரணத்தை நோக்கி வாஞ்சையோடு தொடர்ந்து போராடித் தான் அந்த உன்னத நிலையை அடைந்தார். ரோமருக்கு எழுதின நிருபத்தின் ஏழாம் அதிகாரம் 14-ம் வசனத்திலிருந்து 24-ம் வசனம் வரையில் உள்ள வசனங்களில் அவருடைய மனப் போராட்டத்தைச் சித்தரிக்கிறார். கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தின் ஒன்பதாம் அதிகாரம் 27-ம் வசனத்தில் தன்னுடைய சரீரத்தை ஒடுக்கி தான் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாக கடும் பிரயாசை எடுத்துக் கொள்வது பற்றி விவரிக்கிறார். பிலிப்பியருக்கு எழுதும்போது "ஒன்று செய் கிறேன்,பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி பந்தயப் பொருளாகிய இலக்கை நோக்கித் தொடர்கிறேன்." பிலி 3:14, என்று தான் நடந்துவந்த பாதையில் ஏற்பட்ட தவறுகளைப் பற்றி எண்ணிப் பார்த்து "நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவை கள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்று இனிமேல் தவறு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்காது என்று நிலையெய்துகிறார். இறுதியாகத் தனது

கடைசி நிருபமாகிய தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் நான்காம் அதிகாரம் 7, 8-ம் வசனத்தில் தன் இரட்சிப்பின் நிச்சயத்தை உறுதிப்படுத்துகிறார். "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்கிறார்.

இதை வாசிக்கிற எனது உடன் ஊழியனே, இன்றைக்கு இருக்கும் எவ்விதமான வசதியும் இல்லாத அந்த நாளில் பனிரெண்டுக்கும் குறைவான அப்போஸ்தலர்கள், சுமார் ஐம்பது ஆண்டுகால இடை வெளிக்குள் ரோமைப் பேரரசின் எல்லா இடங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடிந்தது. ஆனால் எனக்கும் உனக்கும் 300 ஆண்டுகள் ஆகியும் விஞ்ஞானயுகத்தின் சகல சௌகரியங்களையும் கைவசம் வைத்துக் கொண்டு இந்திய நாட்டின் மக்கள் தொகையின் மூன்று விழுக்காடு மக்களைக்கூடக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரமுடியவில்லை. சிந்திப்போம், செயல்படுவோம். நம்முடைய வாழ்க்கையை ஆண்ட வனுக்கு அர்ப்பணிப்போம். அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப் போம். "கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?" (மாற் 16 : 3) திகையாதே. நீ புறப்பட்டுப் போ. இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங் களுடனே இருக்கிறேன் என்றவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.

## ஞானஸ்நானம் பெற தகுதி உடையோர் யார்?

| | |
|---|---|
| a) பாவிகள் | (அப். 2:38) |
| b) கேள்விப்படுபவர்கள் | (ரோம. 10:14, 17) |
| c) விசுவாசிப்பவர்கள் | (மாற். 16:16, யோவா. 3:16) |
| d) மனந்திரும்புபவர்கள் | (லூக் 13:3, அப். 2:38) |
| e) கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் | (லூக். 12:8, அப். 8:36-39) |
| f) கிறிஸ்துவ ஜீவியத்தை வாழ விரும்புவோர் | (I பேது. 2:9) |

# கொத்தி எருப்போடுவோம் வாரீர்!

இன்றைய கிறிஸ்தவ மக்களிடையே காணப்படும் ஒருவித சோர்வையும் மெத்தனத்தையும் கண்டும், கனிகொடாத நிலையையும் கேட்டும் கவலைப்படாமல் இருக்கிற உண்மைக் கிறிஸ்தவர்கள் மிகச் சிலரே இருக்கமுடியும். இந்த இழி நிலைக்கு யார் காரணம் என்று கேட்டால் ஒருவர் மற்றவரையும் மற்றவர் அடுத்தவரையும் சுட்டிக் காட்டி விட்டுத் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முற்படுவார்கள். எல்லா வற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வரமுடியும் பொதுவாகவே கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்து கிறிஸ்துவின் உயர்ந்த வாழ்க்கை நெறிகள் அடங்கிய உபதேசச் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல் அலட்சியம் செய்து தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர் என்பதே அம்முடிவு.

அப்படியானால், அந்த் தவறை எப்படிக் களைவது, எங்கிருந்து தொடங்குவது? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்த வேதனைக்குரிய நிலை உருவானதற்கும் இன்று அது வளர்ந்து களைந் தெறிவதற்கு இயலுமா? என்று மலைத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கும் பல காரணங்களைச் சொல்லலாம் என்றாலும், தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு தங்கள் வாழ்க்கையால் அதை மறுதலித்துக் கொண்டிருக்கிற மக்களுக்குக் கணிசமான பங்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. தன்னை ஒரு வரம் பெற்ற ஊழியக்காரர், தேவனோடும் கிறிஸ்துவோடும் நேரடியாக பேசுகின்ற அருள்பெற்றவர் என்று மக்கள் மதிக்க வேண்டும் என்ற சுயவிளம்பரத்துக்காக வீணர்கள் சிலரை தங்கள் வசம் சேர்த்துக் கொண்டு சுவிசேஷத்தை கேலிக் கூத்தாக்கி, தெருவில் வேடிக்கை காட்டும் மோடி மஸ்தான்களைபோல பாமர மக்களையும் சபல புத்தி உள்ளவர்களையும் மயக்கி இதுதான் இயேசுபிரான் காட்டிய வழி, இது தான் இரட்சகரின் இலட்சியம் என்று பிதற்றித் திரிகின்றனர். அவர்கள் சீஷத்துவத்தின் விலையை, அதிலுள்ள அர்பணிப்பு, தியாக உணர்வை அதன் தூய்மை நிலையை விளக்கிக் கூறமாட்டார்கள். கிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிறோம் என்று சொல்பவர்களின் கூற்று உண்மை யாகவே இயேசுவின் அரிய கருத்துக்களை புரிந்து ஏற்றுக்கொண்ட

தனால் ஏற்பட்ட முடிவுதானா என்பதைக் கவனிக்கமாட்டார்கள். அப்படி நாம் சொன்னால், ஐயோ, பாவம் அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறான். நாம் அதற்கு மறுப்புச் சொல்லலாமா இருதயத்தின் நினைவுகளை நாம் அறியக் கூடுமா? அது தேவனுடைய காரியமல்லவா என்று பசப்புவர். ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயம் செய்ததாக வேதம் நற்சாட்சி பகருகின்றன. யோவான் ஸ்நானகனும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இது விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்று கவனிப்போம்.

அரசனையே அதட்டிக் கேட்டு அவனுடைய கோபத்திற்கு ஆளான அஞ்சா நெஞ்சன் யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வந்த, பரிசேயர்களையும், சதுசேயர்களையும் பார்த்து "விரியன் பாம்புக்குட்டிகளே என்று கடுமொழியால் சாடி மனத்திருந்தலுக் கேற்ற கனிகொடுங்கள் என்று" அறிவுரையும் கூறுகிறான், (மத் 3 : 1–8.)

சாந்தத்தின் உறைவிடமாகிய நமது ஆண்டவராகிய இயேசு அந்த அளவு சுடுசொல்லால் தாக்கவில்லையேயொழிய இம்முக்கியமான பிரச்சனையில் தனது ஆலோசனையை கூறாமலில்லை. லூக்கா சுவிசேஷத்தில் இதை குறித்து ஒரு உவமையை சொல்லியிருக்கிறார் (லூக்கா 14 : 25 -33).

ஒருவனுடைய பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் மனைவி குழந்தைகள் ஏன், ஒருவனுடைய உயிரே கூட கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவனுக்கு பெரிதாகத் தோன்றக் கூடாது என்றும் கிறிஸ்து வைப் பின்பற்றுதல் என்பது இன்பமான உல்லாசமான பொழுதுபோக்கு அல்ல என்றும், துன்பமும் தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கை நெறி என்றும் விளக்கியுள்ளார்.

அப்படி அவர் அறிவுரை கூறியதோடு நிறுத்திக் கொள்ளாமல் தான் உதவ நேர்ந்த எல்லா மனிதரிடத்திலும் தன்னைப் பற்றியும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும் அக்கறை காட்டுகிறாரா என்று கவனித்திருக்கிறார். எடுத்துக்காட்டாக லாசரு என்பவரை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம். நான்கு தினங்களுக்குப் பிறகு அவரை உயிரோடு எழுப்பவேண்டும் என்ற நோக்கத்தோடு கல்லறைக்குச் செல்லுகிறார். ஆனால் தன்னுடன் வந்து சுற்றிலும் நிற்கிறவர்களைப் பார்த்து கல்லை எடுத்துப் போடுங்கள். (யோவா 11 : 39) என்று கட்டளையிடுகிறார். ஏன் மரித்தவனுக்கு உயிர்கொடுக்கும் வல்லமை பெற்ற நமது ஆண்டவருக்கு கேவலம் ஒரு கல்லைப் 'புரண்டு வழிவிடு" என்று கூறமுடியாதா? சிந்தித்துப் பாருங்கள்! கர்த்தர் தான் செய்யப்போகிற இந்த மகத்தான காரியத்தை அவர்கள் புரிந்துகொண்டு

விசுவாசிக்கவும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுடைய பங்கும் ஓரளவுக்கு இருக்கிறது. வெறுமனே கைகளைத் தட்டி தாளம் போடுவதனாலேயே பரலோகம் போய் சேர்ந்துவிட முடியாது என்பதையும் உணர்த்தவே அவ்வாறு கூறினார் என்று கூறமுடியும்.

அப்படியே தயவு செய்து, யோவான் 9-ம் அதிகாரத்துக்கு வாருங்கள். அங்கே ஒரு பிறவிக் குருடனை சந்தியுங்கள் அவன் மெத்தப்படித்த பட்டதாரி அல்லன். சமுதாயத்திலே செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதனும்அல்லன். ஆயினும் அவனுடைய விசுவாச உறுதியும், கொள்கைப்பிடிப்பும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மாபெரும் விளக்கமாக அமைந்திருக்கிறதைப் பாருங்கள். முதலாவதாக அவனிடத்தில் காணப்படுகிற சகிப்புத் தன்மையை கவனியுங்கள். எச்சில் என்றாலே அருவருப்பு தோன்றுகிறது. அப்படிப்பட்ட எச்சிலை தரையிலே துப்பி, சேறுண்டாக்கி அதை ஏற்கனவே குருடாக இருக்கிற கண்ணில் பூசிய பின்னர் "நீ சீலோவாம் குளத்திற்குப் போய்க் கழுவி பார்வையடை" என்று கூறுகிறார். ஐயோ, பாவம்! அவனோ ஏற்கனவே குருடன். அவன் கண்களிலே சேற்றைப் பூசி குளத்திலே போய் கழுவு என்கிறாரே வழுக்கி விழுந்துவிட்டால் என்ன செய்வது? என்று நீங்களும் நானும் கூட அங்கலாய்க்கிறோம். ஆனால் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கர்த்தர் அப்படிச் செய்யச் சொல்லும் போது காரணம் நமக்கு விளங்குவதில்லை யல்லவா? அதுவும் எத்தனையோ பேய் பிசாசுகளைத் துரத்தும் போதும் கொடிய வியாதியால் பாதிக்கப்பட்ட மக்களை சுகப்படுத்திய போதும் கூட வாய்ச் சொல்லைத் தானே பயன்படுத்தினார், என்று அறியும்போது நமது வியப்பு இன்னமும் பன்மடங்கு அதிகமாகிறது. ஆனால் அந்த பிறவிக் குருடன் எவ்வித முறுமுறுப்போ, சலிப்போ இல்லாமல் கீழ்ப்படிகிறான். பார்வையடைந்தவனாகத் திரும்பி வருகிறான்.

நாமும் கூட எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தபோதிலும் தேவனுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் தம்மை நேசிக்கிறவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி தமக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புகிறார். இரண்டாவதாக நாம் அவனிடத்திலே கவனிக்கக் கூடிய மற்றொரு நற்பண்பு, சுறு சுறுப்பு. வெகு குறுகிய நேரத்தில் அநேக மக்கள் அவன் பார்வையடைந்து மகிழ்ச்சியாக இருப்பதை அறிந்து அவனிடத்தில் விசாரிக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் தான் பார்வையடைந்த விதத்தைக் குறித்து விளக்கமாகக் கூறினான். அவனுக்குப் பார்வை கொடுத்தவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்பதை பரிசேயர்கள் மற்றும் யூத மதத் தலைவர்கள் முன்பிலும் அறிக்கை செய்கிறான். (மத் 10 : 32) ஓய்வு நாளைக் குறித்த சட்டமோ, இயேசுவைக் கிறிஸ்துவென்று எவனாவது அறிக்கை செய்தால் அவனைச்

சபைக்கு புறம்பே தள்ளிவிடுவோம் என்ற பயமுறுத்தலோ அவனுடைய நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. அவனுடைய துடுக்குத்தனமான பேச்சினால் தன்னுடைய பெற்றோருக்கு ஏதேனும் துன்பம் விளையுமோ என்றும் கவலைப்பட்டானில்லை (லூக் 14 : 26) என்னே. அவனுடைய துணிவும், கொள்கைப் பிடிப்பும்? இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லோரும் அவனைப் போலவே துணிவும் மன உறுதியும், கொள்கைப் பிடிப்பும் உள்ளவர்களாக இருந்தால் கிறிஸ்தவத்தின் நிலை மிகவும் வித்தியாசமானதாகவன்றோ இருக்கும்?!

அடுத்ததாக, தேவனுடைய எளிதான திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாமலும், சில நேரங்களில் புரிந்துகொள்ள விருப்பம் அற்றவர் களாகவும், தங்களுடைய தலைக்கனத்தால் மனிதன் உருவாக்கிக் கொண்ட பல்வேறுவிதமான தத்துவங்களைப் பற்றியெல்லாம் அவன் அலட்டிக் கொள்ளவில்லை. மெத்தப் படித்திருக்கிறோம் என்ற மமதையால் மண்டை வீக்கம் பெற்றிருந்த அந்த யூதத்தலைவர்கள் நியாயப் பிரமாணம் என்றும் பழைய ஏற்பாடு என்றும் எதை எதையோ சுட்டிக் காட்டி அவனைக் குழப்பி மிரட்ட முயல்கின்றனர். நியாயப் பிரமாணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்றும், முழுதும் பாவத்தில் பிறந்தவன் என்றும் பல இழி சொற்களை வீசி அவனை மடக்க முயலுகின்றனர். பெரிய மனிதர்களும், கல்விமான்களும் மதவித்தகர்களும் அவனைப் பற்றியும், அவனுடைய நம்பிக்கையைக் குறித்தும் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் அவன் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை.

பல கோணங்களில் முயன்றும் அவனை மேற்கொள்ள முடியாத யூதத் தலைவர்கள் எரிச்சலடைந்து தங்கள் வசமுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அவனைச் சபைக்குப் புறப்பாக்கி தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர். ‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்’ என்று அன்றே பவுலார் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். (II தீமோ 3 : 12) ஆம் சகோதரனே, இப்படி இரத்த சாட்சியாக மரித்தவர்களையும், கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவித்த வர்களையும் வேதாகமத்தில் பல இடங்களில் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய கல்லறைகள் மீது தான் அநேக உயிரோட்ட முள்ள பலமான சபைகள் உதயமாயின என்பதை சபை வரலாறு கூறுகிறது.

அதிகாரப் பீடத்தில் அமர்ந்து கொண்டு கோலோச்சும் உத்தமர்கள், அறியாமை, மூடநம்பிக்கை, விக்கிரக ஆராதனை கள்ள போதகங்கள் என்னும் இருளிலே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிற மக்களுக்கு உதவும் நல் எண்ணத்துடன் மெய்ஞான ஒளியாகிய இயேசுவினிடத்தில் நாம் வழி

நடத்த எத்தனிக்கும் பொழுது, இரும்புக் கரம் நீட்டி நமக்குத் தடை விதித்து தீங்கு விளைவித்தால் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்றோ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சம்பவித்த சில நிகழ்ச்சிகளையே சொல்லிச் சொல்லி பழங்கதை பேசப் போகிறோமோ? அன்றி தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பிய மெய் வாழ்வுக்கு முன்பு இந்த அழிந்து போகிற உலகமும் அதன் மேன்மைகளும் குப்பையும் தூசுமாம் என்று அறைகூவி கிறிஸ்துவுக்காக எழும்பிப் போராடத் தோள் தட்டுகிற மற்றவர்களையும், வீராங்கனைகளையும் நம்முடைய சீரிய முன் உதாரணத்தின் மூலம் உருவாக்கப் போகிறோமா? என்பதே இன்றைக்கு நம் மத்தியில் விடுக்கப்பட்டிருக்கிற சவால். அன்பின் திருவுருவம், சாந்தத்தின் உறைவிடம், பரிசேயரைக் கடுமையாகச் சாடினாரே அதற்கு என்ன காரணம் தெரியுமா, என் உடன் ஊழியனே? அவர்கள் சந்தை வெளிகளில் வந்தனங்களை விரும்பியும், மனிதரால் 'ரபீ' என்றழைக்கப் படுவதற்கு ஆசைப்பட்டும், மக்களிடம் காணப்படுகிற தேவ விரோதச் செயல்களையும் பாவங்களையும் கண்டும் காணாதவர்கள் போல் இருந்ததோடு மட்டும் அல்லாது அப்படிச் செய்கிறவர்களுக்கு முகத்தாட் சண்யம் காட்டி, தேவனால் வரும் மகிமையைக் காட்டிலும் மனிதரால் வரும் புகழ்ச்சியை விரும்பியதனாலேயே. (யோவா 12 : 43) அதன் விளைவாக மாய்மாலமும், வெளிப்பகட்டு, மேல் பூச்சு விசுவாசமும் தேவனுடைய மெய்ஞான வழி செல்வோரைக் குழப்பமுறச் செய்தன. அதனால் தான் அவர்களைக் 'குருட்டு வழிகாட்டிகள்' என்று இடித்துரைக் கின்றார். அருமைச் சகோதரன் யாக்கோபும் கூட என் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் போதகர்களாக விரும்பாதீர்கள். போதகர்களாகிய நாம் கண்டிப்பான தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பது தெரியுமன்றோ? (திருத்திய மொழி பெயர்ப்பு) என்று எச்சரிக்கிறார். ஆகவே நாம் நம்மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பினை உணர்ந்தவர்களாக கிறிஸ்தவ வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் தெளிவாகவும், பூரணமாகவும் போதித்து, புரிந்துகொண்டு விருப்பம் தெரிவிக்கிறவர்களை மாத்திரம் அவர்களுடைய தொண்டர் களாக்குவோம். ஒருவேளை இது கடினமான வழி கர்த்தருடையபணி இதனால் தாமதமாகும் என்று எண்ணி மலைக்க வேண்டாம்.கர்த்தர் அப்படிப்பட்ட வழியைத் தான் நிச்சயம் அங்கீகரிப்பார். இடுக்கமான வழியில் செல்பவர் சிலர் தான் என்பதை அன்றே சொன்னதை நினைவுகூர். பன்றி யானையை விட குறைவான காலத்தில் நிறைய குட்டிகளை ஈன முடியும். ஆனால் பன்றிக் குட்டிகளுக்கும் யானைக் குட்டிக்கும் பயனிலும் மதிப்பிலும் மாபெரும் வேறுபாடு இருக்கிறது என்பதை மறவாதே.

# மனிதர்களே, நமக்கு இந்தத் தொழி லினால் நல்ல பிழைப்பு உண்டா யிருக்கிறது என்று அறிவீர்கள்!

**அப். 19:25**

மக்களுடைய அறியாமை, அக்கறையின்மை, மூடநம்பிக்கை, மதவெறி ஆகியவைகளைச் சில சுய நலமிகள் தங்களுடைய நலனை பாதுகாத்துக் கொள்வதற்கும், வசதியைப் பெருக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். இது இன்றைக்கு மட்டும் அல்ல; பன்னெடு நாட்களாகவே நடந்து வருகிற தொடர் மோசடி என்றும் தெரிகிறது. சிலர் வீட்டிலே செத்துப்போன எலிகளைக் கொண்டுவந்து வீதியிலே போட்டுவிட்டு, 'துர்நாற்றம்' தாங்கமுடியவில்லை. பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களே, ஏதாவது செய்யுங்களேன்; என்று ஊரைக் கூப்பிட்டு ஓலம் இடுவார்கள். மக்கள் நடந்தது தெரியாமல் எலியை அப்புறப்படுத்தத் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பிரச்னையை உருவாக்கினவர் வேடிக்கை பார்த்துக்கொண்டு அவர்கள் படுகிற அவஸ்தையை ரசித்துக் கொண்டிருப்பார். அப்படிப்பட்ட இனத்தைச் சேர்ந்த இந்த சுயநலக் கும்பல் மக்களுடைய நன்மைக்காகவே வாழ்பவர்கள் போன்று காட்டிக் கொள்வார்கள். ஆனால், உண்மை என்னவென்று கூர்ந்து கவனித்தால் இவர்கள் தங்களுடைய பேருக்கும், புகழுக்கும், செல்வாக்குக்கும் வாழ்க்கை வசதிக்கும் கேடு நேரா வண்ணம் காத்துக்கொள்வதற்காகவே பிரச்சினைகளை உருவாக்கி, மக்களுடைய உணர்ச்சிகளில் நஞ்சைப் பாயவிட்டு, அவர்களுடைய நரம்புகளில் முறுக்கேற்றி ஏழை, எளிய மக்களின் மேம்பாடும் நல்வாழ்க்கையுமே தங்களுடைய வாழ்க்கை இலட்சியம் என்று நம்பும்படி கூச்சலிடுவர். விவரம் தெரியாத, மக்கள் கூட்டமும் அவர்களுடைய கபட நாடகத்தை அறிந்து கொள்ளும் ஆற்றல் அற்று, அவர்கள் ஆட்டுவிக்கிறபடி எல்லாம் ஆடி வம்பில் மாட்டிக் கொள்வர். பின்னர் வருத்தப்படுவர்.

மக்களை மயக்கும் கலையில் கைதேர்ந்த இந்த சூழ்ச்சிக்காரர்களின் சூது மதியால் திசைமாறிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஏராளம். நமது

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். மரண நாளுக்கு சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர் நடந்த குருத்தோலைத் திருநாளில் மக்கள் கூட்டத்தினர் போட்ட ஆர்ப்பாட்ட ஒலி விண்ணைப் பிளந்தது. உற்சாக மிகுதியினால் சிலர் தங்கள் மேல் அங்கிகளையும், உருமால்களையும் அவர் சவாரி வந்த சாலை நெடுக விரித்தார்கள். இன்னும் வேகமுள்ள இளைஞர்கள் மரக் கிளைகளில் ஏறித் தழைதாம்புகளை ஒடித்து வழி நெடுகப் போட்டு தங்கள் உற்சாகத்தைக் காட்டினார்கள். முன் நடப்பாரும், பின் நடப்பாரும் ஓசன்னாப் பாடி மகிழ்ந்தார்கள். எண்ணி ஒரு வாரம் முடியவில்லை. அதே மக்கள் திரள் பிலாத்துவின் அரண்மனையைச் சுற்றி வளைத்துக் கொண்டு இவனை அகற்றும், சிலுவையில் அறையும், அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.

அந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம்? இயேசுவின் புகழ் பரவுவதைக் கண்டு எரிச்சலும் பொறாமையும் அடைந்த வேதபாரகர் பரிசேயர், பிரதான ஆசாரியக் கும்பலும் பொய்யான பல குற்றச் சாட்டுகளை மக்கள் மத்தியில் பரவவிட்டு, மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றியும், ஆலயத்தைப் பற்றியும், ஒய்வு நாள் ஆசாரிப்புப்பற்றியும், இயேசுவின் கருத்துக்கள் தவறானவை என்று மக்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்ச்சிகளை விதைத்துவிட்டனர். மக்கள் கூட்டமும், சாவி கொடுத்த பொம்மைகளைப் போலக் கத்தித் தீர்த்தனர். சூழ்ச்சி தற்காலிக வெற்றி பெற்றது.

புதிய ஏற்பாட்டின் அடுத்து சில பக்கங்களைப் புரட்டினால் எபேசு பட்டணத்தில் அப்போஸ்தலர் பவுல் சந்தித்த பயங்கரமான நிகழ்ச்சி யொன்றை அப்போஸ்தலர் நடபடிகள் 19ஆம் அதிகாரத்தில் வாசிக் கலாம். தட்டான் ஒருவன், பெயர் திமேத்திரியு, தியானாள் என்ற தேவதை யின் கோவிலைப் போன்று சிறு, சிறு கோவில்களை வெள்ளியினால் உண்டு பண்ணி, விற்பனை செய்து பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டு வந்தான். அவனைப் போல வேறு சிலரும் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தியானாள் தேவதையை ஒரு தெய்வமாக மதித்து \ வழிபட்டார்களா? என்பதைப் பற்றியெல்லாம் ஒன்றும் சொல்லப்படவில்லை. அந்தத் தேவதையைத் தொழுகிற மக்களுக்கும் இந்தத் தொழிலாளிக்கும் எவ்விதமான ஐக்கியமோ, வேறு எவ்விதமான ஈடுபாடோ இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் அந்தச் சிலை விற்பனையில் நல்ல சம்பாத்தியம் இருந்தது என்பது மட்டும் தெரிகிறது.

அப்போஸ்தலன் பவுலாரின் மூன்று ஆண்டு கடும் உழைப்பு பெரும் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கிய நேரம் அது. பிரபல மந்திரவாதிகள்

கூட தங்கள் மனமாற்றத்தைக் குறிக்கும் வகையில் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான சுவடிகளை எரித்துத் தங்கள் விசுவாசத்தின் உறுதியைப் பொதுமக்களுக்குப் பறைசாற்றினர். கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்தது. அநேக மக்கள் சத்தியத்தை அறிந்ததினாலே மூட நம்பிக்கை குறைந்தும், மனிதர்களால் கற்பனை செய்யப்பட்டதுமான கட்டுக் கதைகளையும் அதை அடிப்படையாகக் கொண்ட மதங்களையும், அவைகளின் விபரீதமான கற்பனையால் உருவாக்கப்பட்ட கடவுள்களையும் அவைகளை வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்தும் பேர்வழிகளையும் மக்கள் வெறுத்து ஒதுக்கிவந்தனர். அதன் விளைவாக சிலை விற்பனை குறைந்தது. சற்றேறக் குறைய மூன்று ஆண்டு காலமாக பவுல் வீடுகளிலும், பொது இடங்களிலும் பிரசங்கித்து வந்தார். அப்பொழுதெல்லாம் இது என்ன, ஏது என்று இந்தக் கூட்டம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தப் புதிய மார்க்கம் சொல்லுகிற காரியங்களில் உண்மை இருக்கிறதா? இது நம்முடைய கலாச்சாரத்துக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றதா? இந்த மார்க்கம் கூறுகிற வழியில் சென்றால் நித்திய ஜீவன் கிடைக்குமா? என்பதைப் பற்றியெல்லாம் எப்பொழுதாவது சிந்தித்திருப்பார்களா? என்றால் இல்லை என்றே கூறலாம். அல்லது இதற்கு முன்னதாக தியானாளின் மேல் மக்களுக்கு உள்ள பக்தி நிலையை மேம்படுத்துவதற்கு உருப்படியாக ஏதேனும் செய்தார்களா? நிச்சயமாக இல்லை. பின் இந்தத் திடீர் பக்திக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும், காட்டத்திற்கும் கூக்குரலுக்கும் என்ன அடிப்படை என்று கவனித்தால் அந்தக் கும்பலின் தலைவனே கூறுகிற மாதிரி "மனுஷர்களே இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது" என்பதே பதிலாகும்.

ஆம் சகோதரர்களே, அவர்களுடைய கோபத்துக்கும் கொக்கரிப்புக்கும், எதிர்ப்புக்கும் சித்தாந்த அடிப்படையோ தத்துவார்த்த முரண்பாடுகளோ அன்றி கருத்து வேறுபாடுகளோ காரணங்கள் அன்று. அவர்களுடைய சொந்த வாழ்க்கை வசதிகள் குறைந்து போயின. அவர்களுடைய முக்கியத்துவம் தேய்பிறை போன்று மங்கி மறைந்து கொண்டு வந்தது. அவர்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகளுக்கு ஆபத்து வந்துவிட்டது. இதுதான் உண்மைநிலை. ஆனால் அந்தக் காரணங்களைச் சொன்னால் மக்கள் ஆதரவை பெற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே அவர்களின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது; திட்டம் உருவானது. தியானாளின் மேல் மக்களுக்கு இருக்கிற மூடபக்தியை மூலதனமாக வைத்து ஏதும் அறியாத அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு, கலகமூட்டி சத்தியத்தின் வெற்றியைச் சீர்குலைக்க முயற்சி செய்தார்கள். மக்களும் உண்மையறியாமல், உலுத்தர்கள் விரித்த வலையில் சிக்கி என்ன செய்கிறோம் என்றுகூட சிந்திக்காமல் கலகத்தில்

பங்கேற்றனர். வேதம் அவர்களைப் பற்றி"தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று கூட அனேகருக்குத் தெரியாதிருந்தது" என்று ஒற்றைவரி விமரிசனம் செய்கிறது. மக்கள் தங்களுக்குத் தாங்களே சிந்திக்க மறுக்கும் வரையிலும் இவ்விதமான அசம்பாவிதங்கள் குறைவதற்கு வாய்ப்பே இல்லை. இன்றைக்கும் மதத்தின் பெயராலும், கடவுள் பெயராலும் நடக்கும் அநீதிகளை கயமையை ஆதாரமற்ற மூட நம்பிக்கைகளை எடுத்துக் காட்டி, இது வேதத்துக்குப் புறம்பானது, தேவனுடைய அங்கீகாரம் பெறாத புளுகு, சுய நலமிகளாலும் தெய்வ பயமற்றவர் களாலும் சேர்க்கப்பட்ட இடைச்செருகல், ஆதி அப்போஸ்தலர்களால் போதிக்கப்படாதது, ஆதித் திருச்சபை அனுஷ்டிக்காதது என்று சத்திய வேதத்தின் பக்கங்களைப் புரட்டி ஆதாரம் காட்டினால் ஒரு சில அசைவுகளை ஆங்காங்கே காண்கிறோம். ஆனால் மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். "காரியங்கள் இப்படி இருக்கிறதா" என்று வேத வாக்கியங்கலை ஆராய்ந்து பார்த்தார்கள்" (அப் 17:11) "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள" (I தெச 5 : 21) முயலுகிறார்கள் என்று செய்தி எட்டியவுடன் சீறுகிறார்கள், கட்டுப்பாடு விதிக்கிறார்கள், யோக்கியதைகளைப் பற்றி வினா எழுப்புகிறார்கள், கூட்டம் கூடுகிறார்கள், கமிட்டி போடுகிறார்கள்.

பாவம்! ஆத்திரம் அவர்களின் அறிவை மழுங்கச் செய்கிறதினால் வரலாறு தரும் உண்மையை மறந்துவிட்டனர். சத்தியத்தை அணை போட்டுத் தடுத்துவிட முடியும் என்று நினைத்த திமேத்திரியு அழிந்தான். அந்தக் கும்பலும் ஒழிந்தது. எந்த தியானாளுக்கு வக்காலத்து வாங்கினார்களோ, அந்த தேவதையும் அழிந்தாள். அந்தக் கொடுமையைத் தாங்கி நின்ற கோவிலும் பாழடைந்தது. ஏன்? எபேசு பட்டணமே கூட மண்மேடாகிப் போனது! ஆனால் சத்தியமோ உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் காற்றுப் புகாத இடங்களிலெல்லாம் ஏறுநடை போட்டுக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறது.

ஆகவே, மதத்துறையின் மகுடாதிபதிகளே, மக்களை சிந்திக்க அனுமதியுங்கள். சிந்திக்கத் தொடங்கினால் உங்கள் சொகுசு வாழ்க் கையும், சுகபோகமும் பறிபோகும் என்று எண்ணி அதைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சிகளில் ஈடுபடாதீர்கள். முயன்று தோற்றவர்களின் பட்டியலின் நீளத்தை அதிகப்படுத்த விரும்பினால் அது உங்கள் சௌ கரியம். ஆனால், ஒரு வேண்டுகோள், தயவுசெய்து புகழ் பெற்ற நியாய சாஸ்திரி கமாலியேலின் அறிவுரையை சற்றே கேளுங்கள். "தேவ னோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்" அப். 5 : 39.

# ஏன் முடியவில்லை?

எத்தனையோ அருளுரைகள் ஆற்றினேன், பயனில்லை, எத்தனை யோ எத்தனையோ அறிவுரைகள் கூறினேன்; கேட்பாரில்லை. எத்தனை யோ முயற்சி; தோல்வி தான் கண்ட பலன். எத்தனை நற்பணிகள் செய்தேன், எதுவும் எடுபடவில்லை.

அப்போஸ்தலர் காலத்தில் பனிரெண்டுக்கும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்கள் ஐம்பது ஆண்டு காலங்களுக்குள் அன்றைக்கு பரவி வியாபித்திருந்த உரோமைப் பேரரசு முழுவதையும் சுவிசேஷத்தால் நிரப்பி விட்டு, இனிப் போவதற்கு இடம் காணோமே என்று அங்கலாய்த்தார்கள். ரோமர் 15 : 23. அப்பொழுது இன்றைக்கு இருக்கும் நவீன வசதிகளில் பல இல்லை. ஒலிபெருக்கிகளும், வானொலிகளும், தொலைக்காட்சி பெட்டிகளும், பறக்கும் விமானங்களும் கிடையா.

இன்றைக்கு இவ்வளவு வசதிகளையும் கைவசம் வைத்துக் கொண்டு ஆயிரத்தெட்டு அமைப்புகள் சுமார் முன்னூறு ஆண்டுகள் பாடுபட்டு இந்தியாவில் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக்குள் கொண்டுவர முடியவில்லையே.

ஏன் கூடாமற் போயிற்று? முறை தவறா? முயற்சி குறைவா? பக்திக் குறைவா? சத்தியத்தின் வலிமை குறைந்து விட்டதா? பயிற்சி போதாதா? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இரண்டு முக்கியமான காரியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. 1. அர்ப்பணிப்பு உணர்வும், ஐக்கிய உணர்வும் இல்லாத ஊழியர்கள் 2. சத்தியத்தை முறையாகப் பகுத்துப் போதிக்கும் அளவுக்கு வேத அறிவு இல்லாமை.

'நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங் கள்' கலா 5 : 15 என்று அன்றே சொல்லி வைத்தார் பவுல். அது இன்று கனகச்சிதமாய் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. ஒரே ஆவியினால் உந்தப் பட்டவர்கள் இவ்வளவு முரண்பாடாக எப்படிப் பேசமுடிகிறது? என்று மக்கள் வியப்படைகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அதை பற்றிக் கவலைப்பட்டதாகக் காணோம். இந்தக் கட்டுரை அச்சேறி வெளியே வருவதற்குள் ஒரு புதிய அமைப்பு

உதயமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்களே! முதலில் ஒன்றுபடுங்கள்.

இரண்டாவது, உங்களைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடத்தைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் (I பேது 1 : 15.) கடவுளுக்கு நம்மை ஒப்படைக்கும் போது மனிதனின் சித்தம் திருத்தப்படுகிறது. நம்மை பரிசுத்தம் பண்ணுதல் என்னும் போது ஒருவித போலித்தனமான சன்மார்க்க வாழ்க்கை வாழ்வதல்ல, கடவுளே நம்மைத் தமக்கேற்ற கருவியாக மாற்றும்படி நம்மை ஒப்புக்கொடுத்து விடுவதாகும். நம்முடைய தவறுகள் நமக்கே தெரியாது. தாவீது அரசன் நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன கற்பனைக் கதையில் அநியாயமாய் நடந்து கொண்ட மனிதனைக் கண்டு கதையில் அநியாயமாய் நடந்து கொண்ட மனிதனைக் கண்டு கோபமடைந்தான். ஆனால் அதே போன்ற தவறொன்றைத் தான் செய்து கொண்டிருந்ததை நாத்தான் தீர்க்கதரிசி சொல்லும்வரையிலும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே 'கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ எனப் பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும்' என்று சொல்லுவோமாக (சங். 139 : 1; 24.) அப்பொழுது நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரை நாம் சந்திப்போம் (லேவி 21:23.) ஏசாயா வைப் போன்று அனுதினமும் நம்மை ஜெபம் என்னும் பலி பீடத்தில் வைக்கும் போது அவர் தமது தூய்மை என்னும் அக்கினித் தழலால் நம்மை சுத்தமாக்குவார் (ஏசாயா 6 : 6, 7.)

அடுத்து நமக்கு போதிய கல்வி அறிவும், வேத அறிவும் இருக்க வேண்டும். மருத்துவம், கல்வி, தொழில், பாட்டு, நடனம் என்று எல்லா வற்றிற்கும் முறையான கல்வியும், பயிற்சியும் இருக்கின்றன. ஆனால் திருமறையைத் தூக்கிக் கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன் என்று புறப்படுகிறவர்கள் பயிற்சி, கல்வித் தகுதி ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இது தேவனையும் அவருடைய வார்த்தையையும் அவமதிக்கும் செயலாகும்.

என்ன ஐயா, பெரிய படிப்பு! இயேசுகிறிஸ்து மீன் பிடிக்கிறவர் களையும், ஆயக்காரர்களையும், பாமரர்களையும் தானே ஊழியத்துக்கு எடுத்துக் கொண்டார் என்று எங்கே முணுமுணுக்கிற சத்தம் காதில் விழுகிறது. ஐயா, தயவு செய்து அப் 4 : 13-ஐ வாசியுங்கள். அவர்கள் படிப்பறியாத பேதைகளாக ஒரு காலத்தில் இருந்தது மெய்தான். ஆனால் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கொடுத்த கடுமையான பயிற்சியின் காரணமாக மெத்தப் படித்திருக்கிறோம் என்று எண்ணி

கர்வம் கொண்டிருந்த அந்த கும்பலே வியந்து ஒப்புக் கொள்ளக் கூடிய அளவு தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விடலாமா?

இயேசு அவர்களுக்குச் சகல காரியங்களிலும் பயிற்சி கொடுத்திருந்தார். ஜெபம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார். பிரசங்கம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார். யாருக்கு எப்படி பதில் சொல்வது என்று கற்றுக் கொடுத்திருந்தார், வீடு சந்திக்கக் கற்றுக் கொடுத்திருந்தார். விருந்து வீட்டிற்கோ திருமண வீட்டுக்கோ சென்றால் எங்கே உட்கார வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருந்தார்.

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் என்நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் (மத்11 : 29.) ஆனால் நாமோ அவருடைய உபதேசங்களை விட்டு விட்டும் மனிதனுடைய ஞானத்தால் கறைபடுத்தி திரித்தும், சேர்த்தும், குறைத்தும் போதிக்கிறோம். சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் (ரோமர் 1:16) என்ற நிலை மாறி அஞ்ஞானிகள் கூட நம்ப மறுத்து ஏளனம் செய்கிற மூட நம்பிக்கைகளுக்குத் தீனி போட்டு புது மெருகு கொடுத்து இயேசுவின் பெயருக்கு எவ்வளவு கேவலத்தை உண்டு பண்ணுகிறோம்.

இவ்வளவு காரியங்களையும் நம்முடைய மனதும் மாமிசமும் விரும்பினபடி செய்துவிட்டு முதலாம் நூற்றாண்டின் அப்போஸ்தலர்களால் பெற்ற வெற்றி நமக்குக் கிட்டவில்லையே என்று புலம்பினால் எப்படி முடியும்? ஆகவே முதலாம் நூற்றாண்டில் போல் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் , உறுதியாய்த் தரித்திருப்போம், வெற்றி பெறுவோம்.

## பாட்டு

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி.

எபே 5:19.

# மௌன பாவம்

கர்த்தராகிய இயேசு, நியாயம் விசாரிக்கப்படும்படி பிரதான ஆசாரியர் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பொழுது, அவருடைய சீஷர்களைப் பற்றியும், அவருடைய உபதேசங்களைப் பற்றியும் கேள்வி கேட்கப்பட்டன. (யோவான் 18 : 19 - 21). இவைகளைப் பற்றித் தெரிந் திருந்தும் அதைப் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டது வேண்டாத வேலை என்று நினைத்த ஆண்டவர், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் எதிர்க்கேள்வி கேட்டதுமன்றி நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடம் விசாரியும் என்று நறுக்கென்று பதில் அளித்தார். அதைச் செவிமடுத்த ஓர் அதிகாரி, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் சொல்வது? என்று இயேசுவை கன்னத்தில் அறைந்தான். (வ. 22)

இயேசு, அந்த அதிகாரியின் அடாத செயலைக் கண்டித்து நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்பி, நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்?" என்று கேட்டார் (வ.23) சில பேர் இந்த சம்பவத்தைச் சுட்டிக் காட்டி " ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு (மத் 5:39) என்று போதித்த ஆண்டவருடைய நடவடிக்கை முரண்படுகிறதே. மறு கன்னத் தையும் திருப்பிக் கொடுக்காமல் அவனிடத்தில் நியாயம் கேட்கிறாரே என்பர். அப்படிப்பட்டவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் கய் N வுட்ஸ் என்னும் வேத அறிஞர் யோவான் சுவிசேஷ வியாக்கியான நூலில், மார்ட்டின் லூதர் அவர்கள் சொன்ன கருத்தை மேற்கோள் காட்டி, கிறிஸ்து கையால் பதில் செய்வதைத் தான் கூடாது என்று சொன்னாரேயன்றி வாயால் பதில் செய்யக் கூடாது என்று சொல்லவில்லை என்கிறார்.

ஆம், சகோதரர்களே. சாந்தமும் பொறுமையும் அன்பும் நிறைந்த ஆண்டவர் எப்பொழுதெல்லாம் தவறு நடந்ததோ அப்பொழுதெல்லாம் அதைக் கண்டிக்கத் தவறவில்லை. பாவத்தைக் கண்டு கொள்ளாமல் வாய் மூடி மௌனியாக இருப்பதைக் காட்டிலும் கோழைத்தனமும், மாய் மாலத்தனமுமான பாவம் வேறொன்றும் இருக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களில் நேர்மைக்காக எழுந்து நின்று போராடுவதற்கு மிகுந்த தைரியம் தேவை. இந்த விஷயத்தில் பழைய ஏற்பாட்டு

தீர்க்கதரிசிகளில் அஞ்சாநெஞ்சம் பாராட்டத்தகுந்தவை. அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களின் பாவங்களையும் தேவ விரோதக் காரியங்களையும் கடுமையாகச் சாடி தங்களுடைய பணியை நேர்மையாகச் செய்தார்கள். தீர்க்கன் மீகா "நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக் கிறேன் என்று கூறுகிறார். (மீகா 3 : 8) அதே போன்று அவர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு தீர்க்கன் ஏசாயா "சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே, எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதல்களையும் யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி என்கிறார். (ஏசாயா 58 : 1).

அவர்கள் இப்படித் தைரியமாக மக்களுடைய பாவங்களை கடுமையாகக் கண்டித்து பிரசங்கித்ததால் பெரிய இடத்துப் பொல்லாப்புகளைத் தேடிக் கொண்டு துன்பங்களை அனுபவித்தனர் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும் அவைகளைப் பரிசுத்த ஆவியானவர் பொறுக்கி எடுத்து வேத எழுத்துக்களில் பொறித்திருக்கிறார்.ஏன் என்றால் அவர்களைப் போல கர்த்தருடைய பணியைச் செய்ய அழைக்கப்பட்டு இருக்கிற நாமும் கூட தைரியமாய் பாவத்துக்கு எதிரே போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் (எபி 11:32- 12 : 4).

நீங்கள் நீதிக்காக எழுந்து நின்று போராடும் இயல்புடையவர்களா? அப்படியானால் நீதியினிமித்தம் துன்பம் அனுபவித்த உண்மையுள்ள தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி நீங்களும் நடக்க வேண்டும். (ரோமர் 15 : 4) இதைக் குறித்து யாக்கோபு "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்தலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்"(யாக் 5 : 10) என்கிறார்.

மீண்டும் புதிய ஏற்பாட்டில், மேசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்ட ஒட்டக மயிர் உடை அணிந்து காட்டுத் தேனையும் வெட்டுக் கிளியையும் உணவாக்கிக் கொண்டவனும் (மத் 3:4) எலியாவின் ஆவியை உடையவனுமாகிய யோவான் ஸ்நானகன், அந்நாளில் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும், சதுசேயர்களையும் "விரியன் பாம்புக் குட்டிகளே," நீங்கள் மனந்திரும்பாற் போனால் எரிநகரத்தில் தள்ளப்படுவது நிச்சயம் என்று கர்ஜிக்கிறார். (மத் 3 : 1 - 12, 11 : 14.)

அரசனும் கூட யோவானின் சொல்லடிக்குத் தப்பமுடியவில்லை. விபச்சாரம் பெருகி விட்ட இந்தக் காலத்தில், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு ஏன்? என்ற மனநிலையோடு சம்பந்தப்பட்டவர்களின், காதுக்குள்ளே போய் முணுமுணுக்கும் ஒரு விஷயத்தை இவர் பகிரங்கமாக 'நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல' என்று குற்றம் சாட்டுகிறார். ஆம், ஏரோது அரசன் தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியோடு வாழ்ந்தது நியாயப் பிரமாணத்துக்கு விரோதமானது. அரசனே விபசாரக் குற்றவாளியாக இருந்தால் மக்கள் நீதியின் வழி நடப்பது எப்படி? யோவான் அதைத் தட்டி கேட்ட காரணத்தால் அவர் தலை துண்டிக்கப்பட்டது. ஆம், சகோதரர்களே! பாவத்தைக் கண்டிக்கத் துணிவு இல்லாமல் நம் தலை உடலோடு ஒட்டிக் கொண்டிருப்பதை விட நாம் சத்தியத்தைப் பிரசங்கித்ததினால் நம் தலை துண்டிக்கப்பட்டு தட்டில் வைக்கப்படுவது மேல். நீர் இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்யும் உண்மையுள்ள ஊழியனா? ஆம் என்பது உமது பதில் ஆனால் யோவான் ஸ்நானகனின் சீரிய முன்மாதிரியைப் பின்பற்று.

இயேசு கிறிஸ்து யூதரின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டதைப் போல பவுல் அப்போஸ்தலன்கூட நிறுத்தப் பட்டார். அப்பொழுது பவுலும் இயேசுவின் அடிச் சுவட்டையே பின் பற்றினார். புற ஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக ஏற்படுத்தப்பட்ட இந்த அப்போஸ்தலன் உண்மையாகவே ஒப்பு நோக்க முடியாத கர்த்தருடைய ஊழியக்காரன் என்பதில் சந்தேகமில்லை.

ரோமாபுரியில் சக்கரவர்த்தி சீசருக்கு முன்பாக முதல் விசை விசாரிக்கப்பட நின்ற பொழுது ஒருவரும் அவனுடன் கூட இருக்க வில்லை என்று கூறுகிறார். (II தீமோ 4 : 16) இருந்தாலும் அவர் பெற்ற அந்த தைரியம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதை அவருடைய வாயாலேயே சொல்லுகிறார், கேளுங்கள்" கர்த்தரே எனக்குத் துணை நின்றார்" என்கிறார் (II தீமோ 4 : 17) அப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே அவர் ஊழியத்துக்கு அழைக்கப்பட நேரத்திலிருந்தே அவருடைய பெலனும் நம்பிக்கையும் கர்த்தரே. (பிலி 1 : 17; 4: 13). அதனால் தன் இறுதி நாட்களில் பவுல் நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தை காத்துக் கொண்டேன்' என்று சொல்ல முடிந்தது. (II தீமோ 4 : 7) நீங்கள் உத்தம இருதயத்தோடு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறதாயிருந்தால் அவரைப் பின்தொடர்ந்து நீங்களும் நித்தியத்தை அவரோடு கழிக்கமுடியும்.

நீங்கள் உண்மையாய்ச் சத்தியத்தைப் போதிக்கிறவர்களாயிருந்தால் வேதாகமத்தில் உள்ள எந்தக் காரியத்தையும் மறைத்து வைக்கக் கூடாது. (அப். 20 : 27) நாம் விசுவாசிக்கிற போதிக்கிற, கடைப்பிடிக்கிற அனைத்துக் காரியங்களுக்கும் வேதாகம அங்கீகாரம் இருக்க வேண்டும். (கொலோ 3 : 17) எந்த ஒரு தனி நபரானாலும், எந்நிறத்தவரானாலும், குழு அல்லது கூட்டத்தாரானாலும், அவர்கள் உறவினரோ, நண்பரோ சபையைச் சார்ந்தவர்களோ பட்டம் பெற்றவர்களோ, பதவியிலுள்ள வர்களோ எவரானாலும் சரி; தவறான உபதேசங்களைப் போதித்தால் அவர்களுடைய தவறைச் சுட்டிக் காட்டுவதற்கு தயங்கவே கூடாது. அப்படிச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி எப்படிப்பட்டதாயிருக்கும் என்று தெரியாமல் இல்லை. தவறு இழைக்கிற மக்கள்திரள் தங்கள் செல்வாக்கு, பணபலம், ஆள்பலம், ஆட்சி பலம் ஆகியவற்றைக் காட்டி, மிரட்டி, பல முனைகளிலும் நமக்குப் பிரச்னைகளை உருவாக்குவார்கள். துன்பம் செய்வார்கள். அது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. ‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று அன்றே சொல்லப்பட்டுத் தானே இருக்கிறது. (II தீமோ 3 : 12) சத்தியத்தைப் போதித்ததினால் துன்புறுத்தப்பட்ட இயேசு, தீர்க்கர்கள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களை விட நீங்கள் மேலானவர்களல்லவே! அவர்களுடைய பாடுகளுக்கு நீங்களும் பங்காளிகளாகி அவர்களுடைய ஆசீர்வாதத்திலும் பங்கடையுங்கள். (II தீமோ 2:12)

## ஞானஸ்நானம் பெற தகுதி உடையோர் யார்?

| | | |
|---|---|---|
| a) | பாவிகள் | (அப். 2:38) |
| b) | கேள்விப்படுபவர்கள் | (ரோம. 10:14, 17) |
| c) | விசுவாசிப்பவர்கள் | (மாற். 16:16, யோவா. 3:16) |
| d) | மனந்திரும்புபவர்கள் | (லுக். 13:3, அப். 2:38) |
| e) | கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் | (லூக். 12:8, அப். 8:36-39) |
| f) | கிறிஸ்துவ ஜீவியத்தை வாழ விரும்புவோர் | (I பேது. 2:9) |

# கிறிஸ்தவ ஈகை

உலகத்தின் பல்வேறு பாகங்களில் வாழ்கின்ற பல தரப்பட்ட மக்களின் மொழி, நிறம், நாகரீகம் பண்பாடு என்று ஏதேதோ காரியங் களில் வேற்றுமையும், முரண்பாடும் காணப்பட்ட போதிலும், சிந்தனைப் போக்கிலும் எண்ணங்களிலும் பெரும் ஒற்றுமையைப் பார்க்கமுடிகிறது. மனிதர்கள் அவைகளுக்குப் பல சித்தாந்த சாயங்களைப் பூசி நிறங்களை மாற்றி செப்படி வித்தை செய்தாலும் அதன் அடிப்படைத் தன்மை மாறாமலும், மாற்றப்படாமலும் இருக்கிறதை நாம் உணரலாம்.

எடுத்துக்காட்டாக ஈகை அல்லது தர்மம் கொடுத்தல் என்கிற காரியத்தைக் கவனிப்போம். தாங்களாகவே முன்வந்து ஈகை அறத்தினால் ஏற்படும் நிலையான, நியாயமான பலன்களை மனதில் கொண்டு செயல் படுபவர்கள் எத்தனைபேர் என்று சிந்தித்துப் பார்த்தால் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் தேறுவர். மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஈகை என்பது கசப்பு மாத்திரை சாப்பிடுகிற அனுபவம் தான். எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி, உருட்டி மிரட்டிச் சம்மதிக்க வைத்தாலும் கீழ்க்காணும் ஏதாவது ஒன்றைப் பிரதியுபகாரமாக எதிர்பார்த்துத் தான் தர்மம் கொடுப்பதற்கு முன் வருகின்றனர் என்றால் மிகையாகாது.

## 1. கெண்டையைப் போட்டு விராலைப் பிடிப்பது :

அதாவது நாம் கொடுக்கும் தர்மத்தின் மூலம் என்ன நன்மைகளைப் பிரதியுபகாரமாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கிறது, என்று கணக் குப் போடுபவர்கள் சிலர் உண்டு. அப்போஸ்தலர் நடபடிகள் 8-ஆம் அதிகாரத்தில் மந்திரவாதி சீமோனைப்பற்றி வாசிக்கிறோம். அவன் அப்போஸ்தலருக்குப் பணம் கொடுத்தான். எதற்காக? அவர்களிடமிருந்து பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டு அதைப் பயன்படுத்தி நிறையப் பேரும், புகழும் பணமும் சம்பாதித்துவிடலாம் என்று எண்ணினான். அப். 8 : 18 -21.

## 2. பய உணர்ச்சியினால் தற்காப்புக்காகக் கொடுப்பது

வேறு சிலர், நாம் இந்த காரியத்துக்குக் கொடுக்காவிட்டால், நம்மை சமாதானமாக வாழவிடமாட்டார்கள். நம்முடைய உடமைகளுக்குச் சேதம் விளைவித்துத் தொல்லை கொடுப்பார்கள் என்ற பய உணர்ச்சியினால்

உந்தப்பட்டவர்களாகக் கொடுக்க முன் வருவர். நாபாலின் மனைவி அபிகாயில் என்னும் மாது, தாவீது அரசனுக்கு வெகுமதிகளைக் கொண்டு வந்தது இந்த இரகத்தைச் சேர்ந்தது தான். I சாமுவேல் : 25-ஆம் அதிகாரம்.

## 3. கொடுப்பது கொஞ்சம்; எதிர்பார்க்கிற புகழ் ஏராளம்.

இன்னும் சிலர் குறிப்பிட்ட காரியத்துக்கு நான் ஏதாவது கொடுத்தால் அது என்னுடைய செல்வாக்கை உயர்த்தி சமுதாயத்திலே ஒரு புதிய அந்தஸ்தை கொடுக்குமா? என்று எண்ணிக் கொண்டு செயல்படுவர். அப்போஸ்தலர் ஐந்தாம் அதிகாரத்தில் நாம் சந்திக்கிற அனனியாவையும் சப்பீராளையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

## 4. புண்ணுக்கு புனுகு தடவுவது :

இன்னும் கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் செய்யும் பலவகையான சமூக, தேவ விரோதச் செயல்களை மறைத்து ஊரை ஏமாற்ற உத்தமர் வேஷம் போட்டுக்கொண்டு தர்மத்துக்கு கொடுப்பது ஒரு பங்கும், விளம்பரத்துக்கு ஒன்பது பங்கும் செலவிடு வார்கள். மத்தேயு சுவிசேஷம் ஆறாம் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களிலும், இன்னும் பல்வேறு இடங்களிலும் நமது ஆண்டவர் பரிசேயர்களைக் கடிந்து கொண்டது இப்படிப்பட்ட போலி பக்தி காரணமாகத்தான்.

மேற்கூறிய நோக்கங்கள், ஈகை அறத்தின் சீரிய நோக்கத்தை மாசு படுத்துவதாக இருந்த போதிலும் "தற்காலப் போக்கு" என்று கூறிக் கொண்டு இவற்றில் சிலவற்றை மனித சமுதாயம் ஏற்றுக்கொண்டு செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒருவர் கல்வி நிலையம் ஒன்றுக்கு ஒரு மேசையோ, மேசை விரிப்போ அல்லது ஒரிரு இருக்கைகளோ அன்பளிப்பாக வாங்கிக் கொடுக்கிறார் என்றால் அதிலே அவர் பெயரைப் பொறித்துக் கொள்வது தவறல்ல என்பது சமூகத்தால் ஒப்புக்கொண்ட ஓர் தீமையாகும். இவ்விதமாக மனிதருடைய உள்ளக் கிடக்கைகளை அறிந்து அவர்களுடைய உள் நோக்கங்களுக்கும் கொஞ்சம் தீனி போட்டாலுமே கொடுக்கிற காரியத்தில் மக்களை விருப்பத்தோடு ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியவில்லை.

## 5. கிறிஸ்தவ ஈகை இன்னும் கடினம் :

பொதுவான தர்ம சிந்தனையையே, மனிதர்களுடைய விருப்பத்தை ஓரளவு திருப்திப்படுத்திக் கொண்டு, ஊக்குவிப்பது கடினமாக இருக்கும்

போது, இவைகள் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாதது மட்டும் இன்றி கடிந்து கொள்ளுகிற கிறிஸ்தவ ஈகையை எவ்வாறு கடைப்பிடிக்கத் தூண்டுவது? கொஞ்சம் சர்க்கரையையும்போட்டு, விளக்கெண்ணெயின் வளவளப்பையும் குறைத்து, சரி, இனிக் குடி மகனே, என்றாலே உதட்டைப் பிதுக்கி, முகத்தைச் சுளிக்கின்ற குழந்தைக்கு இவைகள் ஒன்றையுமே செய்யாமல் விளக்கெண்ணெயைக் குடிக்கச் சொன்னால் எப்படியிருக்குமோ அப்படித்தான் கிறிஸ்தவ ஈகை விஷயமும் இருக்கிறது. கொடுப்பவர்களின் உள்ளங்களில் நர்த்தனம் ஆடும் வீண் பெருமைகளுக்குக் கொஞ்சம் கண் ஜாடை காட்டியே, காரியங்களை எளிதில் சாதிக்க முடியவில்லை என்கிற நிலை இருக்கும்போது தேவனுடைய அருள் வாக்கை மாத்திரம் நம்பி "கொடுங்கள்" என்று கூறினால் யார் தருவார்கள்? அதனால்தானோ என்னவோ இவ்விஷயத்தில் கற்பிக்கிறவர்கள், கற்றுக்கொள்பவர்கள், ஏழைகள், பணக்காரர்கள் மேலை நாட்டவர், கீழைநாட்டவர், பரம்பரை கிறிஸ்தவர்கள், புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்ற பாகுபாடின்றி எல்லோரும் "ஏகமனதும் ஏகசிந்தையும்" உள்ளவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். அதாவது மூக்குச் செம்பைப் போன்று (Kettle). பெற்றுக் கொள்வதற்கு அகன்ற வாயும், கொடுப்பதற்குச் சிறிய மூக்கும் ஆக நடந்து கொள்ளுகிறார்கள்.

### 6. கொடுப்பதிலுள்ள சில முட்டுக் கட்டைகள்:

சில நேரங்களில் செய்யப்படுகிற காரியங்களின் தன்மை, அதை முன்னின்று நடத்துபவர்களின் பொறுப்புணர்ச்சி, நாணயம், நேர்மை இவைகளைப் பொறுத்தும் மக்களுடைய கொடுக்கும் தன்மைகள் விரிவடையவும் சுருங்கவும் செய்கின்றன. எடுத்துக்காட்டுக்கு இஸ்ரவேல் மக்களின் வனாந்தரப் பயணத்தின்போது நிகழ்ந்த ஒரு சம்பவம். (யாத் 35 :5-9, 36 : 5-7).

இஸ்ரவேலரின் ஒப்பற்ற தலைவனும் வழிகாட்டியுமான மோசே தேவனுடைய கட்டளைப்படி ஆசரிப்புக் கூடாரம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் செய்தார். அதற்கு வேண்டி, பொன், வெள்ளி, உயர்தர மரச் சாமான்கள், விலையுயர்ந்த ஆடைகள் தயாரிக்கும் பட்டு, சணல் நார் போன்றவைகள், நவரத்தினங்கள் அபிஷேகத்துக்கு வேண்டிய தைலங்கள் எல்லாம் தேவைப்படுவதாக மக்களுக்கு அறிவிப்புக் கொடுத்தார். இவ்வறிவிப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே எல்லா மக்களும் தங்களிடத்தில் இருந்த பொருட்களையெல்லாம் ஏராளமாகக் கொணர்ந்தனர். சிறிது நாட்களுக்குள் தேவைக்கும் அதிகமாகவே பொருள்கள் சேர்ந்து விட்டபடியால் காணிக்கை கொண்டு வருவதை நிறுத்துங்கள் என்று

மறுகட்டளையிட வேண்டியதாயிற்று. இது நடந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு அதே மக்களை ஆண்ட நியாயாதிபதிகளின் நாட்களில் தேவனுடைய ஊழியக்காரனான ஏலி தீர்க்கதரிசி நியாயாதிபதியாக இருந்த நாட்களில் கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பதையே மக்கள் வெறுத்தனர் என்று வேதாகமம் கூறுகிறது. காரணம் என்ன? ஏலியின் மக்கள் கர்த்தருடைய சந்நிதானத்தில் அக்கிரமங்கள் அநியாயங்கள் செய்து தெய்வ பயமின்றி மக்களுடைய பக்தி நெறிகளை அற்பமாய் மதித்து, துணிகரமான பாவங்களைச் செய்தார்கள். (I சாமு 2 : 12 -17.)

மறுபடியும் அதே மக்கள், சுமார் கி.மு. 700 வாக்கில் யூதா தேசத்தை அரசாண்ட எசேக்கியா என்னும் அரசன் காலத்தில் தாராளமாய் காணிக்கை கொடுத்தார்கள். கர்த்தருடைய சந்நிதானத்தில் மிதமிஞ்சித் தானியங்களும் பொருட்களும் சேர்ந்துவிட்டதால் புதிய களஞ்சியங்களைக் கட்டிச் சேமித்து வைக்க நேரிடுகிறது. காரணம் என்ன? எசேக்கியா அரசன் தெய்வ பயமுள்ளவனாக பல மதச் சீர்திருத்தங்களைச் செய்து நேர்மையாக அரசாண்டு மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்ததினால் மக்கள் உற்சாகமாகக் கொடுத்தார்கள். (II நாளா 31 : 5 - 11).

கொஞ்ச காலம் சென்றது. அதே மக்கள் மீண்டும் சோர்வடைந்து கடவுளுடைய காரியங்களில் அக்கறையற்றவர்களாகி தேவனை மகிமைப் படுத்தும் காரியங்களில் ஈடுபாடு இல்லாமல் தேவ கோபத்தையும் தேடிக் கொண்டனர். இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் மறுபடியும் வழி காட்டுபவர்கள் சரியில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பொறுப் பற்று, சுய நலமிகளாய், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாய் தவறு செய்கிற மக்களைத் தட்டிக் கேட்காமல் நியாயத்தைப் புரட்டி தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் போனதே காரணம்! (மல்கியா 2-ம் அதிகாரம்).

இப்படிக் கூறுகிற நேரத்தில் எல்லா பாரத்தையும் ஊழியர்கள் தலைவர்கள் பேரில் போட்டுவிட்டு, மற்றவர்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. யாரும் போக்குச் சொல்வதற்கு இடமின்றி தேவனு டைய வார்த்தைகள் ஒவ்வொரு தனி மனிதனையும் தனித்தனியே பொறுப்பாக்கி வைத்திருக்கின்றன. ஆதலால் நம்மில் "ஒவ்வொருவனும்" தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான் (ரோமர் 14 : 12.) ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக் காவது தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டுற (II கொரி 5 : 10.)

### 7. கிறிஸ்தவ ஈகையில் உள்ள எதிர்மறைச் சித்தாந்தம் :

கிறிஸ்தவ ஈகையை பரிசுத்த வேதாகமம் கூறுகிற வகையில் செயலாற்ற முடியாமல் தடுக்கிற மற்றொரு சிக்கல் என்னவெனில் அதில் அடங்கியுள்ள எதிர்மறைச் சித்தாந்தம். அதாவது இவ்வுலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள முறைமையின் படி வாங்குவது ஆதாயம் அல்லது லாபம் என்றும் கொடுப்பது இழப்பு அல்லது நஷ்டம் என்றும் அறிந்திருக்கிறோம். ஆனால் திருமறை இதற்கு எதிர்மறையாக "வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே பாக்கியம்"(அப். 20 : 35) என்று கூறுகிறது. இதை ஏற்றுக் கொண்டு செயல்படுவது எளிதான செயல் அல்ல. இயேசு கிறிஸ்துவின் போதனைகள் உலகத்து மாமேதைகள் என்று உலகம் புகழ்ந்துரைக்கிற ஒரு மகானின் போதனைகளைக் காட்டிலும் சிறந்தது. கருத்தாழம் மிக்கது என்று ஒப்புக் கொள்பவர்கள் கூட இந்த எதிர்மறை உபதேசத்தின் ரகசியங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். இதன் இரகசியங்களைப் புரிந்து கொள்வதற்குப் பிரகாசமான மனக்கண்கள் தேவை. (எபே.1: 19.) ஜென்ம சுபாவமான மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றும்". (1கொரி 2 : 14) என்பன போன்ற வசனங்கள் கூறுகிற உண்மைகளை நாம் முழு மனதோடே விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது தான் அதனைச் செயல்படுத்த முடியும். அதற்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இறுதியாகக் கூறுமிடத்து, கிறிஸ்தவ ஈகையைப் பற்றி சரியாகப் புரிந்து கொண்டவர்கள் கிறிஸ்துவின் சகல உபதேசங்களையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் என்று துணிந்து கூறலாம்.

கிறிஸ்தவ ஈகை என்பது எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல எப்படிப்பட்ட மனநிலையோடு கொடுக்கிறோம் என்பதாகும். (லூக்கா 21 : 1-4; II கொரி 8 : 1.)

கிறிஸ்தவ ஈகை மனிதரால் புகழப்படுவதற்காக அல்ல - தேவனிடத்திலிருந்து வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக (மத் 6 : 1- 4.)

கிறிஸ்தவ ஈகை என்பது கட்டாயமாயும் விசனமாயுமல்ல - உவந்த மனத்தோடு, உற்சாகத்தோடு கொடுப்பது (II கொரி 9 : 7).

கிறிஸ்தவ ஈகை என்பது நம்முடைய பணபலத்தாலும் செல்வாக்கினாலும் சபையைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்துவதற்கு பயன்படும் மந்திரக்கோல் அல்ல - இல்லாதவர்களையும், விதவை களையும் அனாதைகளையும், பரிசுத்தவான்களையும் தாங்க உதவும் தேவனுடைய சமநிலைப் பிரமாணத்தின் திறவுக்கோல். (II கொரி 8 : 5; யாக் 1 : 27 : I தீமோ 5 : 16.)

**கிறிஸ்தவ ஈகை**

**I கொரி 16 : 2**

| | | |
|---|---|---|
| எப்பொழுது? | - | வாரத்தின் முதல்நாள் தோறும். |
| ஏன்? | - | பதட்டம் இல்லாமல் (நான் வந்திருக்கும் போது சேர்க்குதல் இராதபடிக்கு) |
| எவ்வளவு? | - | தன் தன் வரவுக்குத் தக்கதாக |
| என்ன கொடுப்பது? | - | எதையாகிலும் |

**பாட்டு**

உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்...

எபி 2:12

# கிறிஸ்தவம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

முதலாம் நூற்றாண்டின் இறுதி நாட்களுக்குள் அப்போதலர்கள் அனைவரும் மரித்துப் போயினர். அவர்கள் வாழ்நாட் காலத்திலேயே, தன் நாச வேலையை சாத்தான் துவங்கி விட்டான். அதைக் குறித்து அப்போஸ்தலர்கள் அவ்வப்பொழுது எச்சரித்து வந்திருக்கின்றனர். இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொஞ்சம் நஞ்சம் மீதமிருந்த அப்போஸ்தலர்கள் காலத்து விசுவாசிகளும் காலமாகிவிட்டனர். சாத்தானுக்கு ரொம்ப சௌகரியமாகப் போய்விட்டது. பெரிய எதிர்ப்பு இல்லாமலே தூய கிறிஸ்தவத்தைத் தனக்கு இஷ்டமானபடியெல்லாம் வளைத்தும், ஒடித்தும், கூட்டியும், குறைத்தும் சிதைத்து ஆறாம் நூற்றாண்டுக்குள் கிறிஸ்தவத்தைத் தன் ஆதிக்கத்தின் கீழ் முழுமையாகக் கொண்டு வந்து விட்டான்.

நிலைமை மிஞ்சிப் போனதை உணர்ந்த மெய் விசுவாசிகள் பதறினர். போர்க்கொடி உயர்த்தினர். ஆனால் அவர்கள் அச்சுறுத்தப் பட்டனர். மீறினவர்கள் நசுக்கப்பட்டனர். இருந்தபோதிலும் புரட்சி ஓயவில்லை. திரைமறைவில், மூலை முடுக்குகளில் உண்மை விரும்பிகள் தங்கள் பாசறைகளை அமைத்துக் கொண்டு பதுங்கிச் செயல்பட்டனர். அவ்வப்பொழுது காரியங்கள் அம்பலமாகி ஆள்பவரின் அடக்கு முறைகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாயினர், சித்திரவதை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிந்திய இரத்தம் வீண் போகவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் மாவீரன் மார்ட்டின் லூத்தர் அடிமைத் தலையை அறுத்துக் கொண்டு சீறிப் பாய்ந்தான், கேள்வி கேட்டான், மக்களை சிந்திக்கத் தூண்டினான். விழிப்படையச் செய்தான். அவர் உழைப்பும், தியாகமும், ஜெபமும் கனி கொடுக்க ஆரம்பித்தன. அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்கள் ஆர்த்தெழுந்தனர். அணி திரண்டனர், புரட்சி ஓங்குக என்று முழக்கமிட்டனர். ஆணவம் அசைந்து கொடுத்தது. வேறு வழியில்லை, போகிறவர்கள் போகட்டும், இருப்பது மிஞ்சட்டும் என்று விட்டுக் கொடுத்து வழிவிட்டனர்.

மார்ட்டின் லூத்தர் ஏதோ ஒரு காய்மாகாரா உணர்வினாலும் சுயநலத்தினாலும் இப்புரட்சியை ஆரம்பிக்கவில்லை. கர்த்தர் மேலும்

அவருடைய வசனத்தின் பேரிலும் அவருக்கு இருந்த மாபெரும் நம்பிக்கையால் அப்படிச் செய்தால் புரட்சி வெற்றி பெற்ற பிறகும் தன் இறைப் பணியைத் தொடர்ந்து செம்மைப்படுத்த முயன்றனர். வேதாகமத்தை மக்களுடைய மொழியில் கொண்டு வந்தார். புரட்சித் தீ ஐரோப்பா நாடெங்கிலும் பரவிற்று.

அந்நாட்களில் புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதும், வியாபாரத்தினிமித்தம் புதிய நாடுகளுக்குப் பயணம் செய்வதும் சர்வ சாதாரணமாக நடந்து வந்தது. அப்படிப்பட்ட மக்களோடு மிஷனரிப் பணியாளர்களும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் பிரகடனம் செய்தனர்.

இந்த ரீதியில் இந்தியாவுக்கும், சுவிசேஷம் வந்து ஆரம்பகால மிஷனரிகள் செய்த தியாகங்களையும், ஆற்றிய தொண்டினையும் கேட்டாலே மெய் சிலிர்க்கும். நரமாமிசப் பட்சினிகளாகிய ஆப்பிரிக்கா காட்டுமிராண்டிகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கச் சென்று பல இன்னல்களையும் அனுபவித்து தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட டேவிட் லிவிங்ஸ்டன்கள், பசிக் கொடுமை தாங்கமுடியாமல், தன் தொப்பியை ஏந்தி கஞ்சி வாங்கிக் குடித்துக் கொண்டு தன் சுவிசேஷப் பணியைத் தொடர்ந்த வில்லியம் கேரிகள், வெறுவாய் தண்ணீர் குடிக்க மறுத்ததால் உண்பதற்கு வேறு ஒன்றும் கிடைக்காததால் தோலால் ஆன தனது பூட்ஸையே அறுத்துச் சுட்டு நாக்கைத் துவர்ப்படையச் செய்து கொஞ்சம் தண்ணீர் பருகி தன் களைப்பைப் போக்கிக் கொண்டு ஊழியஞ் செய்த மிஷனரிகளின் வாழ்க்கைகளை எழுதினால் ஏடு கொள்ளாது.

“தீங்கநுபவி சுவிசேஷகனுடைய வேலையைச் செய் உன் ஊழியத்தை நிறைவேற்று” என்று பவுல் அடியார் தன் வாரிசான தீமோத்தேயுவுக்கு எழுதினதற்கிசைவாக தங்கள் வாழ்நாட்களைச் சேவையிலும் தியாகத்திலும் செலவிட்டனர்.

பட்டி தொட்டிகளிலெல்லாம் பள்ளிகள் நிறுவி ஒடுக்கப்பட்டுக் கிடந்த, அவ்வேழைப் பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்காக விடுதி வசதிகளை உண்டாக்கி நோயாளிகளுக்கு மருத்துவமனைகளை ஏற்படுத்தி அரும்பாடுபட்டு சற்றேறக்குறைய ஒரு இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே ஒரு அமைதியான மாபெரும் சமுதாயப் புரட்சியைச் செய்துள்ளனர். இத்தியாகச் செம்மல்கள் ஆற்றிய அரும்பெரும் பணிகள் காரணமாகக் கிறிஸ்தவம் வேரூன்றி தழைத்து ஆங்காங்கே அவர்கள் சேவைக்குச் சாட்சி கூறிக் கொண்டு நிற்கின்றன.

அவர்கள் ஆரோக்கியமான உபதேசங்களைப் போதித்து இரட்சிப்பை முதன்மைப்படுத்தி கிறிஸ்தவ உயர்நெறிகளைப் பரப்பினார்களா? என்பது சர்ச்சைக்குரிய விஷயம். ஆனால் அவர்கள் தியாகத்தையும், நேர்மையான உழைப்பையும், தன் நலம் கருதாத சேவையையும் யார் குறைத்து மதிப்பீடு செய்ய முடியும்!

காலத்தின் கட்டாயத்தால் அந்த தியாகச் செம்மல்கள், நாம் பக்குவமடைவதற்கு முன்பே நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. அவர்கள் விட்டுப்போன சொத்துக்கள், நிறுவனங்களை ஆண்டு பராமரிக்கும் பொறுப்பு நம்மவர்கள் கையில் விடப்பட்டது. ஆட்சி செய்து அனுபவமில்லாமையாலும் பக்குவமடையா பண்புகளினாலும், பொருளாசையினாலும் சுயநலத்தாலும் இன்னும் ஏதேதோ காரணங்களினாலும் கிறிஸ்தவ நிறுவனங்கள் பொலிவிழந்தன. சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டன. கிராம சபைகளும், மக்களும் புறக்கணிக்கப்பட்டனர். ஜாதி சண்டைகள் பெருகி, கோஷ்டிகள் முளைத்து எதைச் செய்தாவது பதவிகளைக் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி தோன்றி அரசியலை விட கேடு கெட்ட நிலைமையில் கிறிஸ்துவம் அழிவை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இது உலகப் பிரகாரமான சீரழிவு நிலை.

ஆன்மீகத்தை எடுத்துக் கொண்டால் அங்கேயும் குழப்பம். அன்றைக்கு வந்த மிஷனரிமார்களுக்கு ஆரோக்கியமான உபதேசம் முழுவதும் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஒன்று அந்த நாட்களில் வேதத்தை ஆய்வு செய்து, எது ஆரோக்கியமான உபதேசம் என்று பார்த்துக் கொண்டிருக்க அவகாசமில்லை. வாய்ப்புகளும் குறைவு அப்பொல்லோவை போல தங்களுக்குத் தெரிந்த சத்தியத்தை தைரியமாகவும், நேர்மையாகவும், சுத்த நல்மனச் சாட்சியோடும், தியாக உணர்வோடும், அன்பு உள்ளத்தோடும் விதைத்தார்கள். (அப். 18 : 24-28).

இரண்டாவது கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களும் அன்றைக்கு அவர்களை கடித்துக் கொண்டிருந்த பிரச்சனைகளாகிய பொருளாதாரம், கல்வி, சமுதாய முன்னேற்றம் போன்ற சரீரப் பிரகாரமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இரட்சிப்பைப் பின்னுக்குத் தள்ளி விட்டனர். ஆனாலும் கிறிஸ்தவர்கள் அவர்களுக்குச் செய்த நன்மைகளுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாகவே நடந்து கொண்டார்கள். காலமும் சூழ்நிலைகளும் மாறினபொழுது ஆட்சிக் கட்டில் ஏறிய மண்ணின் மைந்தர்கள் செய்திருக்க வேண்டியது என்ன? தேவனுடைய தொடர்ந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மூலகாரணமாக இருக்க வேண்டிய விசுவாசத்தை வளர்க்கும் வேத அறிவை திருச்சபை

மக்களுக்கும் புகட்டியிருக்க வேண்டும், துரதிர்ஷ்டவசமாக அதைச் செய்யத் தவறிவிட்டார்கள் விளைவு?

இளைய சமுதாயம் கிறிஸ்தவத்தையும், அதன் சிறப்புக்களையும், அறியும் வாய்ப்பை இழந்தனர். திருச்சபை நடவடிக்கைகளில் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். விவிலியப் பேருண்மைகளும் உயர்நெறிகளும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் அவர்களுக்குக் கற்பிக்கப்படவில்லை. காலமெல்லாம் இயேசு பெத்தலையில் பிறந்தார் என்றும், இயேசுவின் உவமைகளுக்குப் பாட்டி கதை பாணியில் விளக்கம் அளிக்கும் உப்பு சப்பற்ற பிரசங்கங்களும், முன்னூறு ஆண்டு காலத்துக்கு முற்பட்ட வடமொழி கலந்த வேதாகமத் தமிழும் இளைய சமுதாயம் மார்க்கத்தின் மேல் நாட்டம் கொள்ள முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் அவர்கள் பாதைமாறி அரசியல் மற்றும், இதர சமூக நல அமைப்புகளின் மீது நாட்டம் செலுத்துகின்றனர். ஆராதனைகள், ஜெபக் கூட்டங்கள், வேத ஆய்வுகள் அவர்களுக்கு அர்த்தமற்ற சடங்குகளாகத் தென்படுகின்றன.

இந்த நிலையைத் திருச்சபை ஆளுநர்கள் உணர்ந்து கொண்டு வருகிறார்கள் என்று தோன்றுகிறது. அதற்கு அவர்கள் திட்டமிட்டு வேத அறிவை பல்வேறு நிலைகளிலும் கற்பிக்க ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக புறமதங்களும், ரோமன் கத்தோலிக்கங்களும், அனுஷ்டிக்கும் சில அர்த்தமற்ற பண்டிகைகளையும் விழாக்களையும் உட்படுத்தி ஒரு போலி பக்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அந்த வழியில் வந்தது தான் தற்காலத்தில் பிரபலமடைந்து வரும் லெந்து நாட்கள், மரித்த நாற்பதாவது நாளில் ஒரு சிறப்புக் கூட்டம் என்பதெல்லாம்.

திருச்சபையின் குழப்பத்தைப் புரிந்து கொண்ட சாத்தான் தனது குட்டிச் சாத்தான்களை ஏவிவிட்டு அவர்களுக்கு மாறுவேடம் அணிவித்து திருச்சபைக்குள் ஊடுருவச் செய்து கொண்டிருக்கிறான். எலி கஷ்டப்பட்டு வலை தோண்டி வைத்திருக்கும். அதற்குள் நச்சரவம் உள் நுழைந்து எலியை விரட்டிவிட்டு வலையைத்தான் ஆக்கிரமித்துக் கொள்ளும். அதைப்போல மிஷனரிகள் அரும்பாடுபட்டு தியாகம் செய்து வளர்த்த திருச்சபையாகிய தோட்டத்துக்குள் நச்சரவங்களைப் போன்று சுயநலமி களும், கள்ளப்போதகர்களும், உள் நுழைந்து மிஷனரிகள் வளர்த்து விட்ட திருச்சபை என்ற மரத்தின் கனிகளை காணிக்கை என்ற பெயரால் அறுவடை செய்து தங்கள் களஞ்சியங்களை நிரப்பிக்கொண்டு கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார் என்று கூறிக்கொண்டு, கோடிக்கணக் கான ரூபாய்களை முதலீடு செய்து மில் முதலாளிகள், தொழில் அதிபர்கள் அனுபவிக்க முடியாத சுகத்தை அனுபவித்துக் கொண்டு உலா

வருகிறார்கள். இவர்களை ஆசீர்வதிக்கிற தேவன் முதல் நூற்றாண்டில் இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களையும், காட்டுமிராண்டிகள் மத்தியில் பணியாற்றி பல இன்னல்கள் அடைந்து உயிர்நீத்த தியாகச் செம்மல்களை ஏன் ஆசீர்வதிக்கவில்லை. சுகங்களும் இன்றைக்கு விட அன்றைக்கல்லவா தேவைப்பட்டது? ஏன் கர்த்தர் அந்த வரங்களை அவர்களுக்குக் கொடுக்கவில்லை? கிறிஸ்தவ அறம் தழைக்க வேண்டும் என்ற வாஞ்சையுள்ள சான்றோரே, சிந்திப்பீர்!

ஒரு காலத்தில் கிறிஸ்தவம் என்றால் மக்களின் நினைவுக்கு வந்ததெல்லாம் தியாகம், நேர்மை, உழைப்பு, பகுத்தறிவு, தொண்டு இன்றைக்கு? கிறிஸ்தவத்தைப் போல ஒரு மூட நம்பிக்கை நிறைந்த மார்க்கம் வேறு ஒன்று இல்லை என்று அஞ்ஞானிகள் சான்றிதழ் வழங்குகிறார்கள். இந்து மதத்தைக் கவ்வியிருந்த மூட நம்பிக்கைகள் எல்லாம் தந்தை பெரியார் துரத்திட அவைகளெல்லாம் கிறிஸ்தவ மதத்துக்குள் புகுந்து கொண்டது என்று ஒரு பழுத்த கிறிஸ்தவர் கூறித் துக்கப்பட்டுக் கொண்டார். எவ்வளவு உண்மை! இதைத் தடுத்து நிறுத்த உங்கள் ஆலோசனை என்ன? வாருங்கள் கூடுவோம். கருத்துப் பரிமாற்றங்கள் செய்வோம், முடிவெடுப்போம், செயல்படுவோம் காலம் சமீபத்துவிட்டது. இனியும் தாமதிப்போமானால், "மனுஷ குமாரன் வரும் போது விசுவாசத்தை காண்பாரோ" என்று நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஐயப்பாடு உண்மையாகிவிடும்.

## கூடி வரும்போது செய்ய வேண்டியவை

| | |
|---|---|
| 1. ஜெபம் செய்தல் | I தீமோ 2 :1 |
| 2. பாடுதல் | எபி 2 :12 |
| 3. அப்பம் பிட்டுதல் | அப் 20 :7 |
| 4. காணிக்கை கொடுத்தல் | I கொரி 16 : 2 |
| 5. போதித்தல், பிரசங்கித்தல் | அப் 20 : 7 |

# இன்னும் எத்தனை காலம் . . .?

கிறிஸ்தவ மார்க்கத்தில் காணப்படும் குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணமே வேதாகமத்தைப் பகுத்துப் போதிக்காதது தான் என்றால் மிகையாகாது.

பரிசுத்த வேதாகமம் இரண்டு ஏற்பாடுகளால் ஆனது. ஒன்று பழைய ஏற்பாடு; மற்றொன்று புதிய ஏற்பாடு. ஏற்பாடு என்றால் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்று பொருள். அதாவது இரண்டு தரப்பினருக் கிடையே சில காரியங்களைச் செய்யும்படி பேசி முடிவு எடுத்து ஒப்பந்தம் செய்து கொள்வது ஆகும்.

பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது யெகோவாவாகிய தேவனுக்கும் இஸ்ரவேல் நாட்டாருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட தேசிய ஒப்பந்தம். (உபா 5 : 1- 3) அது இஸ்ரவேலரல்லாதவருக்குப் பொருந்தாது.

ஆனால், புதிய உடன்படிக்கை என்பது கிறிஸ்துவுக்கும், உலகம் எங் கிலும் உள்ள (யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடு இன்றி) ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே செய்யப்பட்டிருக்கின்ற ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, அதைத் தான் புதிய ஏற்பாடு என்கிறோம். ஏற்பாடு என்றால் என்னமோ ஏதோ என்று மலைக்க வேண்டாம்.

இந்த இரண்டு உடன்படிக்கைகளிலுமே சில நிபந்தனைகள் உண்டு. அதாவது நீ இப்படிச் செய்தால் நான் இன்னின்னதைத் தருவேன் இதுதான் நிபந்தனை என்பது.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்த வரையில் அது நிபந்தனை என்ன? புதிய உடன்படிக்கையின் ஷரத்துகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்று புதிய உடன்படிக்கை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியா கூறுகிறார். மேலும், அவர் பழைய உடன்படிக்கையை புதிய உடன்படிக்கையோடு ஒப்பிட்டு அதிலுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் பாவ மன்னிப்பு உண்டு என்றாலும் ஒருவனும் அந்த உடன்படிக்கையின் பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க இயலவில்லையாதலால் அது அருளப்பட

வில்லை. (அப் 13 : 39; ரோமர்3 : 20; கலா 2 : 16; 3 : 10 - 12) அதாவது பழைய உடன்படிக்கை யாருக்கும் பாவ மன்னிப்பு அளிக்கவில்லை. ஆனால் புதிய ஏற்பாடு பாவமன்னிப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. அது ஒரு வித்தியாசம் (எரே 31 : 34).

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் வேறொரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பழைய உடன்படிக்கையின்படி தேவனுக்கும், முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியில் உதித்த மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆதி 17 : 1-14 வரை உள்ள வசனப் பகுதியில் "நான் (தேவன்) உனக்கும் உனக்குப்பின் வரும் சந்ததியாருக்கும் தேவனாய் இருப்பேன் என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார். ஆகவே ஆபிரகாமுடைய சந்ததியார் பிறவியிலேயே, தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்குச் சொந்தக்காரராகி விடுகிறார்கள். அந்த ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதற்கு அடையாளமாக அவர் சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்வித்தார்கள். ஆனால், அப்படி விருத்தசேதனம் செய்விக்கப்பட்ட குழந்தைகளுக்கு அந்த உடன்படிக்கையின் ஷரத்துகளைப் புரிந்து கொள்ளும் ஞானம் இருக்க நியாயமில்லை.பின்னர் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது யெகோவாவையும் அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் பற்றிப் போதிக்கப்பட்டார்கள். இது ஒரு வகையில் நம்முடைய நாட்டில் முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்த பாலிய விவாகத்தைப் (குழந்தைத் திருமணம்) போன்றது. குழந்தைகளின் விருப்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் பெற்றோர்கள் தங்கள் கருத்தைத் திணிப்பது. விளைவு என்ன? அவர்கள் அந்த உடன்படிக்கையை விபரம் தெரிந்து விருப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் "நான் அவர்களுக்கு நாயகராக இருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே" என்று தேவன் வருத்தப்படுகிற அளவுக்கு அவர்கள் அந்த உடன் படிக்கையை அசட்டை செய்தார்கள்.

ஆகையால், தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்தப் புதிய உடன்படிக்கையின் படி "என்னுடைய (தேவன்) பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங்களிலே அவைகளை எழுதுவேன். நான் அவர்களின் தேவனா யிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறிய வன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லோரும் என்னை அறிவார்கள் (எபி 8 : 10, 11) மேற்சொல்லப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்து என்ன?

போதிப்பதினாலும், கற்பிப்பதினாலும் ஒரு விஷயத்தை ஒருவன் மனதிலே பதிப்பிக்க முடியும். புதிய ஏற்பாட்டின் கீழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதின் மூலம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை போதிக்கப்படுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை என்னை அறிவார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதின் கருத்து இதுதான். இங்கே ஒரு வித்தியாசத்தைக் கவனியுங்கள். பழைய உடன்படிக்கையின் படியும் மக்கள் போதிக்கப்பட்டார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்கிற சுதந்தரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையில் அந்த சுதந்தரம் உண்டு. ஒருவன் அதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியலாம் அல்லது விட்டு விடலாம். கீழ்ப்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு உண்டு; தேவனுடைய புத்திரர்கள் ஆகும் வாய்ப்பு உண்டு; கீழ்ப்படியாத வர்களுக்கு அது இல்லை, "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங் களையும் இனி நினையாமலிருப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபி 8 : 12) இந்த வாக்குத் தத்தம் யாருக்கு? புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைக் கற்று தங்கள் இருதயங்களில் விசுவாசித்துக் கீழ்ப்படிந் தவர்களுக்கு மட்டுமே. இந்தக் கருத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய பெரிய கட்டளையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். 'நீங்கள் உலக மெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங் கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 15, 16) ஒருவனுக்கு விசுவாசம் எப்படி வரும்? என்பதை விளக்க அப்போஸ்தலன் பவுல் "விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்கிறார் (ரோமர் 10 : 17.)

இரண்டு காரியங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பழைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுவதற்கு நாம் யூதரல்ல அதாவது ஆபிரகாமின் மாம்சீக வழித் தோன்றல்கள் அல்ல; இரண்டாவது பழைய உடன்படிக்கை மாற்றப்பட்டு புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தாயிற்று (எபி 8 : 13; கொலோ 2 : 14.)

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இன்னும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலம், கர்த்தரே பிரயோஜனமற்றது, சரிபட்டு வரவில்லை என்று தள்ளிப்போட்ட பிரமாணத்துக்கு நீங்கள் புத்துயிர் கொடுக்கிற பாவத்தைச் செய்கிறீர்கள் என்று உணராதிருக் கிறீர்களே! அஞ்ஞானிகள் என்று நாம் வர்ணிக்கிற மக்கள் பால்ய விவாகம் நியாயமற்றது; சம்பந்தப்பட்டவர்களுடைய கருத்தைக் கேட்

காமல் செய்யப்படும் காரியங்களுக்கு அவர்கள் உடன்பட வேண்டிய தில்லை என்று புரிந்து கொண்டு அதைப் புறக்கணித்துப் போட்டார்கள். ஆனால் நாமோ, வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டு ஆவிக்குரிய பால்ய விவாதகமான குழந்தை ஞானஸ்நானத்தை விடாப் பிடியாய்ப் பற்றிக் கொண்டு சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்கு அநியாயம் செய்கிறோம்; தேவனுக்கும் எதிர்த்து நிற்கிறோம்.

அப்படி அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் கிறிஸ்தவ மார்க்கம் அழிந்து போகும் அல்லது தேய்ந்து போகும் என்று ஒருவேளை நீங்கள் பயப்படுகிறீர்களா? கிறிஸ்தவம் கத்தி முனையிலும், கட்டாயத் திலும் வளர்க்கப்படுவதற்கு அது ஒன்றும் செத்த மார்க்கமல்ல; அது ஜீவனும் பெலனும் உள்ளது, வளரக்கூடியது. தேவனுடைய வார்த்தைகள் இருநயங்களை நொறுக்கும் சம்மட்டி, இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது, ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் உருவக் குத்தி, பிரிக்கும் வல்லமையுடையது, இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கக் கூடியது. அதை எடுத்து உபயோகித்து சத்துருவாகிய சாத்தானை வீழ்த்தாமல், உலுத்துப் போன கொள்கைகளை, மாய ஜால வித்தைகளை, மோடி மஸ்தான் கையாளுகிற நாலாந்தர யுத்திகளைக் கையாண்டு கிறிஸ்தவத்தை வளர்க்கவும் நிலை நிறுத்தவும் முடியும் என்று நம்புகிற உங்களுக்கு ஐயோ!

இன்னும் எத்தனை காலம் தான் கிறிஸ்து நம்முடைய மதியீனத்தையும், நிர்விசாரப் போக்கையும் பொறுத்துக் கொண்டிருப்பார்.

நண்பர்களே! தாய்க்குலமே! வாசி, சிந்தி, விரைந்து செயல்படு!

காலம் சமீபமாய் வந்து கொண்டிருக்கிறது.

## நான்கு வகையான ஆராதனை

1. வீணான ஆராதனை மத். 15 : 9
2. அறியாமல் செய்யும் ஆராதனை அப். 12 : 23
3. சுய இஷ்டமான ஆராதனை கொலோ. 2 : 20 - 23
4. உண்மையான ஆராதனை யோவா. 4 : 23, 24

# மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள்

தேவன் மனிதக்குலத்துக்கு மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள் கொடுத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. அவைகள் 1) கோத்திரப் பிதாக்கள் அல்லது மூதாதையர் சகாப்தம் 2) யூதர்களின் சகாப்தம் 3) கிறிஸ்தவர்கள் சகாப்தம் என்பதாகும்.

மூதாதையர் சகாப்தம் என்பது ஏதேன் தோட்டத்தில் துவங்கி மனிதக்குலத்தைக் குறிப்பிட்ட காலம் வரையில் தனித் தனிக் குடும்பமாக 2500 ஆண்டுகள் ஆட்சி செய்தது. அதற்குப் பிறகு மோசேயின் நியாயப்பிரமாணம் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டு அது இஸ்ரவேல் மக்களை ஒரு தேசமாக சுமார் 1500 ஆண்டுகள் ஆட்சி செய்தது. அதுவும் ஒரு குறிப்பிட்ட காலம் தான். அதன் பின் மூதாதையர் ஆட்சி முறையும், யூதரின் நியாயப் பிராமண ஆட்சி முறையும், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் எடுபட்டுப் போன பிறகு தேவன் எல்லா நாட்டவரையும் எல்லா இனத்தவரையும் தழுவிக் கொள்ளத்தக்க வகையில் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கொடுத்தார். அதற்குப் பிறகு யூதனென்றும் யூதனல்லாதவன் என்றும் பாகுபாடு இல்லாமல் கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குள் ஒப்புரவாக்கப்பட்டார்கள். இதில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவெனில், ஒரு சகாப்தத்தில் அமுலில் இருந்த ஒரு பிரமாணம் அடுத்த சகாப்தத்திற்கு செல்லுபடியாகாது. இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் கிறிஸ்தவத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிற பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

உதாரணமாக, சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தியாவைப் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டு கொண்டிருந்தார்கள். இப்பொழுது இந்திய சுதந்தரமடைந்து தனக்கென ஒரு அரசியல் சாசனத்தை ஏற்படுத்திக் கொண்டது. இப்பொழுது இந்தியாவில் ஒருவன் எந்த சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்? நிச்சயமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தான் என்பதை நாம் எல்லாரும் ஒத்துக் கொள்வோம். அதே போலத்தான் முற்பிதாக்கள் காலத்தில் அமுலில் இருந்த ஆட்சிமுறை, தேசீய ஆட்சிமுறை அமுலில் இருந்த யூத சகாப்தத்திற்குப் பொருந்தாது. அதே போல யூத சகாப்தத்தில் உள்ள சட்ட திட்டங்கள் கிறிஸ்தவ சகாப்தத்துக்குப் பொருந்தாது.

இப்படிச் சொல்லும் போது நாம் எந்தச் சட்டத்தையும் குறை கூறுகிறோம் என்று தப்பாக எண்ணிவிடக் கூடாது. மாறாக சட்டத்தின் சிறப்பு நிலைகளை உய்த்து உணர்ந்து அது என்ன நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது என்று தெளிவாகப் புரிந்து கொண்டு இருக்கிறோம். இதைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதும் போது "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும், நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது" என்கிறார். (ரோமர் 15 : 4.)

அவைகளை நாம் அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல, நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது என்று கொரிந்து சபையாருக்கு எழுதும் போதும் சொல்கிறார். (II கொரி 10 : 11) அதை நாம் புரிந்து கொண்டு செயல்பட்டால் குழப்பத்திற்கு இடமில்லை.

ஏற்கனவே, நாம் குறிப்பிட்டது போல் மூதாதையர் யுகம் ஆதிமக்களாகிய ஆதாம் ஏவாளிலிருந்து ஆரம்பிக்கிறது. இதைக் குடும்ப ஆட்சிமுறை என்று சொல்லலாம். அதாவது குடும்பத் தலைவனே ஆசாரியனாகவும் செயல்பட்டான். இந்தத் தலைவர்களுக்கு கோத்திரப் பிதாக்கள் என்றும் இந்த ஆட்சி முறைக்கு 'தந்தைவழி ஆட்சி' என்ற பெயரும் பொருந்தும் (அப் 7 : 8,9) ஆதாம் மனித குலத்தின் முதல் நபராக இருந்தபடியால் அவர் அந்தக் குடும்ப ஆட்சி முறைக்கு தலைவராகக் கருதப்பட்டார். (I கொரி 15 : 22, 45) இந்த ஆட்சி முறை சீனாய் மலையில் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட காலம் வரை நீடித்திருந்தது. பின்பு யூதருடைய சகாப்தம். இது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரையில் நிலைத்திருந்தது. இந்த சகாப்தத்துக்குரிய நியாயப் பிரமாணம் பாலைவனப் பயணத்தின் போது சீனாய் மலையில் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. அது முதல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்துக்குள் பிரவேசிக்கிற வரை ஏற்பட்ட பலவிதமான சூழ்நிலைகளில் அஞ்சாமலும் ஞானமாகவும் தீரமாகவும் இஸ்ரவேல் மக்களை நடத்தி வந்தவர் மோசே. ஆகையால் அவரே அந்த சகாப்தத்தின் தலைவர். "நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது" என்று சொல்லப் பட்டிருப்பதைக் கவனிக்கவும். (யோவான் 1 : 17) சீனாய் மலையில் கர்த்தருடைய பிரமாணம் மோசேயிடம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சியைச் சுருக்கிக் கீழ்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட பின்பு யோர்தானுக்கு இப்புறத்தில் எஸ் போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுடைய தேசத்திலுள்ள

பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே, அவர்களுக்கு மோசே சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும், நியாயங்களும் இவைகளே". (உபா 4 : 45).

"பிரிவினைச்சுவர்" என்று வர்ணிக்கப்படும் நியாயப் பிரமாணம் சிலுவையில் ஆணி அடித்து நிறைவேற்றப்பட்ட பிறகு, கடைசி யுகமாகிய "கிறிஸ்துவின் சகாப்தம்" அமுலுக்கு வந்தது. இது குடும்ப ஆட்சி முறை போன்றதோ அல்லது தேசிய ஆட்சி முறை போன்றதோ அன்று. இது உலகமெங்கும் உள்ள அனைத்து மாந்தரையும் உள்ளடக்கியது. பரிசுத்த வேதாகமத்தில் இக்கால கட்டத்தைக் "கடைசி காலம்" என்று பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் பொருள் "உலகம் உள்ளளவும்" என்பதாகும். இந்த யுகம் உலகத்தில் உள்ள அனைத்து மாந்தரையும் கட்டுப்படுத்தும் என்றாலும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்பவரை குறிப்பாகக் கட்டுப்படுத்தும். யூத சகாப்தத்தின் போது "இஸ்ரவேலர்" என்ற பெயர் உயர்த்திக் காட்டப்பட்டது. ஆனாலும் அந்நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் ஒரு புதிய பெயர் கொடுக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைத்து வந்தார்கள். (ஏசாயா56 : 5, 62 : 2 65 : 15) அந்த தீர்க்கத் தரிசனங்கள் நிறைவேறின என்பதை அப் 11 : 26ல் நாம் வாசிக்கிறோம். "அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு, கிறிஸ்தவர்கள்அஅ என்ற பெயர் வழங்கலாயிற்று."

அதற்குச் சில காலம் சென்று "ஒருவன் கிறிஸ்தவனாயிருப் பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதனிமித்தம் தே வனை மகிமைப்படுத்தக் கடவன்" என்கிறார் பேதுரு (1 பேது 4 : 16) இந்த புதிய சகாப்தத்திற்கு கிறிஸ்துவே தலைவர். அதை எபேசியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் மேலும் தெளிவாக்குகிறார். எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லா வற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் எபே 1 : 22, 23) வேறு ஒரு இடத்தில் இதை இன்னும் வலியுறுத்தி, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர், எல்லாவற்றிலும் முதல்வரா யிருக்கும்படி அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் என்கிறார் (கொலோ 1 : 18) இதன் மூலம் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு கிறிஸ்துவே தலைவர் என்பதும் அவர் அருளிய பிரமாணங்களே இந்தச் சகாப்தத்தில் வாழ்கிற மக்களைக் கட்டுப்படுத்தும் என்பதும் தெளிவாகிறதல்லவா? (யோவான் 1 : 17).

## இம்மூன்று சகாப்தங்களிலும் பலி செலுத்தலில் உள்ள ஒற்றுமையும் வேற்றுமையும்

மேற்சொன்ன மூன்று சகாப்தங்களிலுமே பலி செலுத்துதல் ஒரு இன்றியமையாத அம்சமாக இருந்திருக்கிறது. குறிப்பாக இரத்தம் சிந்துதல் இல்லாமல் பலி செலுத்தப்படவில்லை. முதல் மனிதனாகிய ஆதாமின் முதல் மக்கள் இரண்டு பேரும் பலி செலுத்தினார்கள். ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளில், கொழுமையானவைகளில் சிலவற்றைக் கொண்டுவந்து பலியிட்டான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனாக இருந்தபடியால் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தான். கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கைகளையும் நிராகரித்தார். காயீன் விவசாயியாக இருந்தபடியால் தன்னிடத்தில் உள்ளதை பலியாகக் கொண்டு வந்தது நியாயம் தானே என்று எண்ணத் தோன்றுகிறதல்லாவா? ஆனால் அதற்கான காரணத்தை எபிரேய நிருப ஆசிரியர் சொல்லும் போது "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்" என்கிறார். (எபி 11 : 4) மிருக இரத்தத்தை மேன்மையான பலி என்றும், கர்த்தர் அதை அங்கீகரித்தார் என்றும் சொல்லப்பட்டிருப்பதினால் மூதாதையர் சகாப்தத்தில் மிருக இரத்த பலி செலுத்தும்படி தேவன் அவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த வழக்கம் யூதருடைய சகாப்தத்திலும் நடைமுறையில் இருந்தது. "இரண்டாம் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து அந்த இரத்தத்தைத் தனக் காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்' (எபி 9:7) மேலும் 22ம் வசனத்தில் "இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து தேவன் இந்த சகாப்தத்திலும் மிருக பலியை அங்கீகரித்தார் என்பதை அறியலாம்.

இருந்தபோதிலும் அந்த மிருக இரத்தம் பாவ நிவர்த்தி செய்ய முடியவில்லை."அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக் கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே" என்கிற வசனம் அதை உறுதிப்படுத்துகிறது. (எபி 10 : 4) ஆனால் அந்த பலிகள் பாவங்கள் உண்டென்றும் அதை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம் என்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்க பயன்பட்டது. (எபி 10 : 3)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மிருகங்களின் இரத்தத்தைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்தது என்பதை இயேசுவே கூறியிருக்கிறார். "இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்கிறார் (மத் 26 : 28) ஏனெனில் மிருகங்களின் இரத்தம் தரமுடியாத பாவமன் னிப்பை இது அருளுகிறது. இதைக் குறித்து பவுல்"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாகியிருக்கிறது" என்கிறார். (எபே 1 : 7) யோவான் கூட "அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (யோவான் 1 : 7) என்கிறார். இதன் மூலம் இதற்கு முந்திச் செலுத்தப்பட்ட மிருக இரத்த பலிகள் இதற்கு நிழலாகவே இருந்தது என்றும் இயேசுவின் மாசற்ற இரத்தமே பாவங்களைப் போக்க முடியும் என்பதும் உறுதியாகிறது.

**சபை சம்பந்தமாகவும் நிழலும் நிஜமும் நமக்குத் தரப் பட்டுள்ளன.**

சென்ற இரண்டு யுகங்களிலும் கர்த்தருடைய சபை நமக்கு நிழலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு நோவாவின் பேழை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. மனிதக்குலம் அனைத்தும் பெருவெள்ளத்தால் அழிக்கப் பட்டபோது நோவாவின் குடும்பத்துக்கு ஒரு அடைக்கலம் கொடுத்தார். அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் இரட்சிக்கும் எண்ணத்தோடு ஒரு பேழையை உண்டு பண்ணச் சொன்னார். "ஆனாலும் உன்னோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் உன் மனைவியும் உன் குமாரர்களின் மனைவியும் பேழைக்குள் பிரவேசியுங்கள்". (ஆதி 6 : 18).

நோவா கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து முடித்தபடியால் (ஆதி 6 : 23) நோவா அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது மட்டுமல்லாமல் விசுவாச வீரர்கள் வீராங்கனைகள் பட்டியலில் இடமும் பெற்றான். "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்பைப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்". (எபி 11 : 7) இந்தப் பேழை சபைக்கு நிழலாக இருக்கிறது. இது பாது காப்பும் அடைக்கலமுமான இடம்.

அடுத்து, பிற்காலத்தில் ஆலயமாக உருவெடுத்த ஆசரிப்புக் கூடாரம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சபையின் நிழலாக ஆராதனை செய்யும் இடமாக இருந்தது. இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்தில்

உள்ளவைகளின் சாயலின் நிழலுக்கு ஒத்திருந்தது. மோசே நிழலாகிய கூடாரத்தை உண்டு பண்ணுகையில் 'மலையிலே உனக்குக் காண்பிக்கப் பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று சொல்கிறார். (எபி 8 : 5) கூடாரத்தின் அமைப்பு முறைகளையும் அதற்குள் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் அர்த்தத் தையும் காரணங்களையும் எபி 9 : 1- 6 வசனங்களில் காணலாம். அவைகள் சபை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நிழலாக இருக் கிறது. நிழலாகிய ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்படும் போது தேவனு டைய கட்டளைப்படியே அனைத்தையும் செய்ய கவனமா யிருந்தனர். நிழல் விஷயத்தில் எவ்வாறு அனைத்தையும் தேவனுடைய கட்டளை படியே செய்தார்களோ அதே போன்று தேவனுடைய அனாதித் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள நிஜமாகிய சபை விஷயத்திலும் கூட அனைத்தையும் தேவனுடைய ஆலோசனையின்படி செய்வது மிகவும் அவசியம் அன்றோ!

பாருங்கள், இயேசு கிறிஸ்து "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார். (மத் 16 : 18) இங்கே சபை ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவர் அந்த ஒரே சபையைத் தான் எல்லாக் காலத்துக்கும் ஏற்றதாக அங்கீகரித்திருக்கிறார். அந்த ஒரே சபையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று மூப்பர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கை யா யிருங்கள்" (அப் 20 : 28) இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தி னாலே சம்பாதிக்கப்பட்ட அந்த சபை அசுத்தமடையாதபடி அதன் பரிசுத்தம் காக்கப்பட வேண்டும். அது நிழல்களாகிய நோவாவுடைய பேழையை விட, மோசே காலத்தில் கட்டப்பட்ட ஆசாரிப்புக் கூடாரத்தை விட, மிகவும் உயர்ந்தது, சிறந்தது. "கிறிஸ்து சபையிலே அன்பு கூர்ந்து தம்மைத் தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார்" (எபே 5 : 25, 26) இயேசு கிறிஸ்து தன் ஜீவனைக் கொடுத்து சபையைக் கிரயத்துக்குக் கொண்டார் என்றால் அதன் சிறப்பை அவருடைய தொண்டர்களாகிய நாம் உணர்ந்து தொடர்ந்து போராடி அதன் பரிசுத்தத்தைக் காக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் அல்லவா? பிசாசு உட்புகுந்து தேவனுடைய திட்டத்தைப் பாழ்படுத்தி இன்றைக்கு பல போலி சபைகளை உருவாக்கி மக்களைக் குழப்புகிறானே. மத் 15 : 13 வாசித்துச் சிந்திப்பீர்!

### மார்க்க ரீதியான ஒற்றுமை வேற்றுமை

அந்தந்த யுகங்களின் மார்க்க ரீதியான ஒழுங்கு முறைகளையும் கூட ஆய்ந்து பார்க்க வேண்டும். ஏற்கனவே நாம் சொல்லிய பிரகாரம், முதலாவது குடும்ப ஆட்சி முறை அதாவது ஒவ்வொரு குடும்பமும் தனக்கும் தேவனுக்கும் உள்ள உறவை எவ்வாறு வைத்துக் கொள்வது என்பதை ஒவ்வொரு குடும்பத் தலைவனும் நிர்ணயித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஆபிரகாமினுடைய குடும்பத்துக்குத் தான் "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப் பேன். உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன். பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று வாக்குக் கொடுத்தார் (ஆதி 12 : 3) பின்னர் வேறு ஒரு இடத்தில் ம்ம்கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின் வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவேன் என்பதை அறிந்திருக்கிறேன்" என்கிறார். (ஆதி 18 : 19) மேற்சொன்ன காரியங்கள் ஆபிரகாமின் குடும்பத்துக்கு மட்டுமே பொருந்தும். மற்ற எவரையும் கட்டுப் படுத்தவில்லை என்பதைக் கவனிக்கவும்.

பின்னர் யூத சகாப்தத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களை ஒரு நாடாக ஏற்றுக் கொண்டு ஆட்சி செய்தார் என்று வேதம் கூறுகிறது. "நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்ஜியமும், பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள்" என்றார். இதை இன்னும் தெளிவுபடுத்தும் "உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும் உம் முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைப்பதற்கும் உம்முடைய வழியை எனக்கு அறிவியும். இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும்" என்று மோசே ஜெபித்தார். (யாத் 33 : 13) இங்கே இஸ்ரவேல் மக்களை தேவனுடைய சொந்த ஜனம் என்று பிரத்தியேகப்படுத்திச் சொல்லப் பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆனால் கிறிஸ்தவ சகாப்தத்தில் ஒரு குறிப்பிட்ட நாடு, இனம் என்ற பிரச்னைக்கே இடமில்லை. இயேசு கிறிஸ்து "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத் தை பிரசங்கியுங்கள் (மாற்கு 16 : 15) என்று தம்முடைய சீஷர்களுக்கு கட்டளை கொடுத்தார். இக்கட்டளையை நிறைவேற்றச் செயல்படும் பொழுது யூதர்கள் வைராக்கியங் கொண்டு சீஷர்களைத் துன்புறுத்தத் தொடங்கினார்கள். ஆனால் அதைக் கண்டு அவர்கள் மருண்டு போய் தங்கள் சுவிசேஷப் பணியைக் கைவிட்டு விடவில்லை. "சிதறிப்

போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள்" (அப் 8 : 4) ஒரு காலத்தில் சுவிசேஷமும் இரட்சிப்பும் யூதர்களுக்கு மட்டுமே என்று எண்ணிக் கொண்டிருந்த பேதுரு புதிய சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டு "தேவன் பட்சபாதமுள்ளவர்கள் அல்லவே எனினும் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். "என்று தன் தெளிந்த சிந்தனையை வெளிப் படுத்துகிறார் (அப் 10 : 34,35) கிறிஸ்தவர்களுடைய பணி களம் உலகம் முழுவதும் என்பதைப் பவுலும் பறை சாற்றுகிறார். "இப்படியிருக்க அவர்கள் கேள்விப்படவில்லையா? என்று கேட்கிறேன். கேள்விப் பட்டார்கள். அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச் சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறதே" என்கிறார் (ரோமர் 10 : 18) மேலும், "அந்த சுவிசேஷம் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டி களுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது" என்றும் கூறுகிறார் (கொலோ 1:23) இதன் மூலம் கிறிஸ்தவ சகாப்தம் ஒரு குடும்பத்தையோ, ஒரு நாட்டையோ, ஒரு இனத்தையோ தன் எல்லைக்கோடாக அடைத்துக் கொள்ளாமல் அனைத்து மக்களையும், அனைத்து நாடுகளையும் ஊடுருவிச் செல்லும் ஒரு மாபெரும் சக்தியாகத் திகழ்கிறது.

## மூன்று சகாப்தங்களிலும் சுவிசேஷம்

நாம் சாதாரணமாக நம்முடைய காலத்தில் சுவிசேஷம் எப்படி அறிவிக்கப்படுகிறது என்று தான் அறிந்திருக்கிறோம் இந்தக் கடைசி காலத்தில் தான் சுவிசேஷத்தின் இரகசியம் பரிபூரணமாக வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது என்பது மெய்தான் என்றாலும் (I கொரி 2 : 8, 12; I பேது 1 : 10 - 12) கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளில் சுவிசேஷப் பிரகடனம் செய்யப்பட்டதற்கு வெகு காலத்துக்கு முன்பே வாக்குத்தத்தமாகவும் ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் சுவிசேஷம் அந்தந்த காலத்துக்கேற்ப அறிவிக்கப்பட்டுக் கொண்டு தான் இருந்தது. "மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" என்று பவுல் கூறுகிறார். (கலா 3 : 8) இந்தக் காரியத்தை இன்னும் தெளிவாக வேறொரு இடத்தில் "ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் வாக்குத் தத்தங்கள் பண்ணப் பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி

கிறிஸ்துவே" (கலா 3 : 16) சொல்லப் போனால் ஆபிரகாம் நாடோடியாக இருந்த பொழுதே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்று தெரிகிறது.

யூத சகாப்தத்தின் போது, தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகையைக் குறித்து அடிக்கடி தீர்க்கதரிசனம் உரைத்துள்ளனர். (ஏசாயா 53 : 1- 12; சகரியா 13 : 1; மல் 4 : 2) அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைப் பிரசங்கித்த பொழுது நியாயப் பிரமாணத்தையும், தீர்க்கதரிசிகளையும் மேற்கோள் காட்டுகிறார் (அப் 24 : 14) பேதுருவும் கூட அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கதரிசகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்கிறார் (அப் 10 : 43).

இருந்தபோதிலும் கடைசிக்காலத்திலே கிறிஸ்தவ சகாப்தத்தில் தான் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற பூரண சுவிசேஷம் தெளிவாகப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. (அப் 2 : 14-40) சுருங்கச் சொன்னால் இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலே சுவிஷேமாகும் (I கொரி 15 : 1-4) இதை இயேசுவின் மரணத்துக்குப் பிறகு மிகுந்த தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு போன்றவர்கள் தேவனுடைய குமாரனைக் கொலை செய்தவர்களிடம் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்து அவர்களைக் கர்த்தருக்குள் கொண்டு வந்தார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் பவுலோடு சேர்ந்து "சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1 : 16) என்று முழங்கினார்கள். ஆதிக் கிறிஸ்தவர்களின் தாரகமந்திரம் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதே.

## ஒவ்வொரு சகாப்தத்திலும் ஓய்வுநாளின் இடம்

மூதாதையர் சகாப்தத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஓய்வு நாளைப் பற்றியோ ஓய்வு நாள் அனுசரிப்புப் பற்றியோ எதுவும் தெரியாது. நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட பிறகு, மோசே பரிசுத்த வேதாகமத்தில் முதல் ஐந்து நூல்களாகிய நியாயப் பிரமாண புஸ்தகங்களை எழுதினபோது அதாவது கி.மு. 1500 வாக்கில் தேவன் ஆறுநாள் சிருஷ்டிப்புப் பணிகளை முடித்துக் கொண்ட பிறகு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று எழுதுகிறார். அதாவது ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டதற்கு சுமார் 2500 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓய்வு நாள் அனுசரிப்பது பற்றி தேவன் கொடுத்த விதியை இங்கே அவர் தெளிவுபடுத்துகிறார். "நீ எகிப்து தேசத்தில் அடிமையாய் இருந்தாய்

என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக, ஆகையால் ஒய்வுநாளை ஆசரித்த உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார். (உபா 5 : 15) இந்த ஒய்வு நாள் ஆசரிப்புச் சட்டம், நியாயப் பிரமாணம் கொடுக்கப் பட்ட பிறகு அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை யாக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

ஒய்வுநாள் ஆசரிப்பைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு கீழ்க்காணும் வசனப்பகுதியைப் படியுங்கள். "நீர் சீனாய் மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி அவர்களுக்குச் செம்மையான நீதி நியாயங்களையும், நல்ல கட்டளைகளும், கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர்."

"உமது பரிசுத்த ஒய்வு நாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி உமது தாசனாகிய மோசேயைக் கொண்டு அவர்களுக்குக் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயப் பிரமாணங்களையும் கற்பித்தீர்" (நெகே 9 : 13, 14) மேற்படி வசனங்கள் கூறுகிற உண்மை என்ன? ஒய்வுநாள் பிரமாணம் மோசேயின் மூலமாக சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது என்று தெளிவாகக் கூறுகிறதல்லவா? அதற்கு முந்தி வாழ்ந்த மக்களுக்கு அதைப்பற்றி தெரியாது. இது இஸ்ரவேல் மக்களுக்கு மட்டும், வேறே இனத்தவர்களுக்கு ஒரு போதும் கொடுக்கப்படவில்லை. "ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும் ஒய்வு நாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி அதைக் கைக்கொள்ளக் கடவர்கள்".

"அது என்றென்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடை யாளமாயிருக்கும். ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி ஏழாம் நாளிலே ஒய்ந்திருந்து பூரித்தார் என்றார்" என்று யாத் 31 : 16, 17 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இந்த விசேஷ அடை யாளம் இஸ்ரவேலருக்கு மட்டுமே. மற்ற எவருக்கும் இது பொருந்தாது.

கிறிஸ்தவர்கள் ஒய்வுநாளை ஆசரிப்பதில்லை. ஆசரிக்க வேண்டி யதும் இல்லை. ஆராதனை மற்றும் தொழுகைக்காக வாரத்தின் முதல் நாளிலே கூடி வருகிறார்கள். அது ஒய்வெடுத்துக் கொள்ளும் நாளல்ல. இந்த நாளில் கர்த்தருடைய பந்தியை நினைவு கூரும்படி கூடி வரு கிறார்கள். (அப் 20 : 7) அவர்கள் அந்த நாளைக் கொடுப்பதற்கும் கர்த்த ரைப் பாடித் துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் பயன்படுத்தினர்கள். (I கொரி 16 : 2) தங்களுடைய உழைப்பு முடிந்து நித்திய இளைப்பாறுதலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். "ஆகையால் தேவனுடைய ஜனங் களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருவதாயிருக்கிறது". (எபி 4 : 9).

"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்துக்கு வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது". (கலா 3 : 24) இந்த வசனத்தின்படி யார் எல்லாம் மீண்டும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாகிய மிருகபலி, அங்கி அணிதல், மெழுகுவர்த்தி கொழுத்துதல், இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது, ஓய்வுநாள் ஆசரிப்பு, ஆகியவைகளைப் கைக்கொள்ள விரும்புகிறார்களோ, அவர்களைக் கிறிஸ்துவை விட்டு விலக்கி வைக்கும். "நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலா 5 : 4) என்று கூறுகிறதைக் கவனியுங்கள்.

## ஒவ்வொரு சகாப்தத்தின் முடிவு

மூதாதையர் யுகம் என்பது ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்து நியாயப் பிரமாணம் வரையும், மோசேயின் யுகம் என்பது கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரையும் நீடித்தது. எந்த ஒரு சகாப்தத்திலும் புறஜாதியாரை தேவன் கைவிடவில்லை. உண்மையென்னவெனில், அவர்கள் தான் தேவனை விட்டு விலகிப்போய் விட்டார்கள் (ஏசா 59 : 1-2) அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்கள்" (எபே 2 : 11 : 15) பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டு இருதிறத்தாரும் ஒன்றாகும் வரை அப்படி யிருந்தார்கள்; பிறகு அவரே "நம்முடைய சமாதான காரணராகி இரு திறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைக் தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படி சமாதானம் பண்ணினார் (எபே 2 : 14, 15) நியாயப் பிரமாணம் அகற்றப்பட்டதால் அதிக நன்மைகள் ஏற்பட்டன. முந்தின கட்டளை பலவீனமுள்ளதும் பயனற்றது மாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது.

நியாயப் பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது. அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். (எபி 7:18,19) தேவனே உம்முடைய சித்தத்தின் படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார், இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்.

இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப் பட்ட தினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" என்று எபிரேய நிருப ஆசிரியர் கூறுகிறார். (எபி 10 : 9, 10) இப்படியாக நியாயப்பிரமாணமானது சிலுவையில் ஆணியடிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (கொலோ 2 : 14).

அந்தப் பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்ட பிறகு அனைத்து மாந்தருக்கும் அதாவது கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிற யூதருக்கும், யூதரல்லாதவருக்கும் கிறிஸ்துவே மத்தியஸ்தராயிருக்கிறார். இதைத் தான்"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரா யிருக்கிறார்.

ஏனென்றால் எங்கே மரணசாசனமுண்டோ அங்கே அந்த சாச னத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்.

எப்படியெனில் மரணமுண்டான பின்பே மரண சாசனம் உறுதிப் படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்கு பெலன் இல்லை யே என்று தெளிவுபடுத்துகிறார். எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9: 15 - 17) இந்த வசனங்கள் கோடிட்டுக் காட்டுகிற கருத்து என்னவெனில்; கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குப் பிறகு கிறிஸ்துவின் பிரமாணம் அமலுக்கு வந்ததையும், அது கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகோஸ்தே பண்டிகை நாளில் அதிகாரப் பூர்வமாக பிரகடனப் பட்டதையுமே. அன்று மலர்ந்த கிறிஸ்துவ சகாப்தம் இந்த யுகத்தின் முடிவுபரியந்தம் நிலைநிற்கும்.

நண்பர்களே, மேற்சொல்லப்பட்டுள்ள அனைத்துக் காரியங்களையும் கவனமாய்ப் படித்து உங்கள் வேதாகமத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து குழப்பம் நீங்கித் தெளிவடையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## நான்கு வகையான ஆராதனை

1. வீணான ஆராதனை மத். 15 : 9
2. அறியாமல் செய்யும் ஆராதனை அப். 12 : 23
3. சுய இஷ்டமான ஆராதனை கொலோ. 2 : 20 - 23
4. உண்மையான ஆராதனை யோவா. 4 : 23, 24

## கிறிஸ்தவ நோயாளிகள் மருந்து சாப்பிடலாமா?

இயேசு கிறிஸ்துவை வழிபடுவதாக சொல்லுகிற கூட்டத்தார் தங்களுடைய விசுவாசிகள் நோயுற்றால், மருத்துவமனைகளுக்குச் செல்லக் கூடாது. மருத்துவ ஆலோசனை பெறக் கூடாது; மருந்து சாப்பிடக் கூடாது என்பர். அப்படிச் செய்தால் அவர்களை அற்ப விசுவாசிகள் என்று முத்திரை குத்தி அவர்கள் பரலோக இராஜ்ஜியத்துக்கு அருகதையற்ற வர்கள் என்று கூறுகின்றனர். சகல நோய்களுக்கும் பாவமே காரணம் என்ற தவறான எண்ணத்தில் தான் அவர்கள் அப்படிப் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் அது வேதாகம போதனைக்கு ஏற்ற கட்டுப்பாடல்ல.

ஒரு ஏழை, இந்து மதத்தைச் சேர்ந்தவர், அவருக்கு காச நோய் பிடித்த ஒரு குழந்தை, மூட நம்பிக்கையில் ஊறிப் போன அவர் இவர்களுடைய தவறான போதனைகளால் ஈர்க்கப்பட்டு, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, இவர்களுடைய ஆலோசனையின்படி அக்குழந்தையை ஆலயத்தில் கிடத்தி ஒரு மாத காலமாகக் கத்திக் கூப்பாடு போட்டு ஜெபித்தனர். பாவம்! நோய் தீர்ந்தபாடில்லை, நம்பிக்கை இழந்த அந்த ஏழை மனிதன் குழந்தையின் மேல் உள்ள அன்பினால் மருத்துவமனைக் காவது எடுத்துச் சென்று பார்க்கலாம் என்று போதகரிடம் சொன்னார். போதகர் அவனை மடக்கி "உன் விசுவாசம் சோதிக்கப்படுகிறது; பொறுமையாயிரு" என்று அதட்டி, அவரை மருத்துவமனைக்கு போக விடாமல் தடுத்துவிட்டார். இரண்டொரு தினத்தில் குழந்தை இறந்து விட்டது. நிலைமை என்ன? இப்போது அந்த ஏழை மனிதன் இழந்தது குழந்தையை மட்டும் அல்ல; அவனுடைய விசுவாசத்தையும் தான்.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த போதகர் ஒருவரையும், இந்தக் கூட்டத்தில் முன்னோடியாக இருக்கிற ஒரு நண்பனையும் நான் அறிவேன். அவர்கள் தங்களுக்கும் தங்கள் உறவினர் ஒருவருக்கும் நோய் வந்த சமயங்கலில் வெளியூரில் உள்ள பிரபலமான மருத்துவமனைகளுக்குச் சென்று வைத்தியம் பார்த்து அறுவைச் சிகிச்சையும் செய்து கொண்டு நன்றாக இருக்கிறார்கள். அல்லேலூயா! அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களை இப் படித் தவறான வழியில் நடத்திச் செல்லுவது ஏன் என்று தெரியவில்லை.

ஒரு கிறிஸ்தவனுடைய சரீர வாழ்க்கையில் நோயோ, வேதனையோ ஏமாற்றமோ வருவது தவறல்ல. அது இறைவனின் கோபத்தாலோ, சாபத்தாலோ, அல்லது அவன் அல்லது அவனுடைய பெற்றோர் செய்த பெரும் பாவத்தினாலோ வந்தது என்று தீர்மானிப்பதும் சரி அல்ல. நூற்றுக்கு நூறு அப்படியல்ல. ஆனால் சில பல வியாதிகள் அப்படியும் வருவது உண்டு. யோவான் சுவிசேஷம் ஒன்பதாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களிலும் பதினோறாம் அதிகாரம் நான்காம் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ள பிறவிக் குருட்டுத் தன்மையும், லாசருவின் வியாதியும் தேவ மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கின்றன என்று சொல்லுகிறார் இயேசு. பழைய ஏற்பாட்டில் யோபு நீதிமான் என்றும், என் தாசன் என்றும், தேவன் நற்சான்று வழங்கியிருக்கிறார். அவன் கூட தொழு நோயால் பாதிக்கும்படி சூழ்நிலை ஏற்பட்டது. ஆகையால் எல்லா நோய்களுக்கும் பாவம் தான் காரணம் என்று தவறாக நினைத்துக் கொண்டு அலட்டிக் கொள்ளக் கூடாது.

வியாதியும், துன்பமும் பலவீனமும் ஓர் கிறிஸ்தவனுக்கு பாவத்தினாலும், விசுவாசக் குறைவினாலும் தான் ஏற்படுகிறது என்று நம்பும் இக்கூட்டத்தார் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதின அறிவுரையை ஒரு போதும் வாசித்ததில்லையா? நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றுக்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் "திராட்சை இரசமும் கூட்டிக் கொள்" என்கிறார். I தீமோ. 5 : 23 கர்த்தருடைய ஊழியக்காரன் எப்பாப் பிரோதீத்து மரணத்துக்கு சமீபமாயிருந்தான் என்று குணமாக்கும் வரம் பெற்ற பவுலே கூறுகிறார். (பிலி 2 : 25-27) ஏன் அவரே கூட தனக்கு இருக்கும் முள்ளைப்பற்றியும், பலவீனத்தைப் பற்றியும் குறிப்பிடுகிறார். II கொரி 12:7-10. அப்படியானால் அப்போஸ்தலனாகிய பவுலையும், தீமோத்தேயுவையும் எப்பாப்பிராதீத்துவையும் பாவிகள் என்றும் அற்ப விசுவாசிகள் என்றும் கூறுவார்களா?

இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது, நோய்வாய்ப்படுவதும், அவற்றிலிருந்து நிவாரணம் பெற கிறிஸ்தவர்கள் மருத்துவர்களுடைய உதவியை நாடுவதும் தேவ சித்தத்துக்கோ, விசுவாசத்துக்கோ முரணானது அல்ல. இறைவன் தந்த அறிவைக் கொண்டு மருத்துவம் படித்து நோய் பற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து இறைவன் படைத்த மூலிகைகள், தாவர வர்க்கங்கள் ஆகியவைகளைக் கொண்டும், இரசாயனப் பொருட்களைக் கொண்டும், மருந்து மாத்திரைகளைக் கண்டுபிடித்து மக்களுடைய வியாதிகளைத் தீர்ப்பது தவறு என்றால் விஞ்ஞான வளர்ச்சியில் சகல துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் பலவிதமான

சௌகரியங்களை மனிதர்கள் பயன்படுத்துவது எவ்வாறு நியாயம்? சிந்திப்பீர்!

இப்படி நாம் சொல்லும் போது யாக்கோபு நிருபத்தில் "ஒருவன் வியாதிப்பட்டால் எண்ணெய் பூசி ஜெபம் செய்ய வேண்டும் என்று தானே சொல்லியிருக்கிறது. மருந்து சாப்பிடு என்று சொல்லியிருக்கிறதா? என்று வாதிடுவர், தயவுகூர்ந்து யாக்கோபு 5 : 13, 18 வரை உள்ள வசனப் பகுதிகளை கவனமாய் வாசித்துப் பாருங்கள். 'சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக' வ:14 ஆலயத்துக்கு எடுத்துக் கொண்டு போ, அங்கே வரம் பெற்ற ஊழியரைக் கொண்டு ஜெபி என்று கூறவில்லை. மேலும் எண்ணெய் பூசி என்பதின் பொருள் என்ன? சீசா பாட்டிலில் எண்ணெயைக் கொண்டு போய் அதை (மந்திரித்து) ஜெபித்து என்று பொருள் அல்ல, இது வாய்க்கால் மேட்டில் விஷ கடிக்கும், வேறு சில வியாதிகளுக்கும் தண்ணீர் மந்திரித்துத் தருகிறானே சாலையோர சாமியார், அவனிடத்திலிருந்து காப்பியடித்த செயல்; வேதாகம போதனை அல்ல.

அந் நாட்களில், தற்காலத்தில் இருப்பதைப் போன்று மருத்துவ விஞ்ஞானம் அவ்வளவு வளர்ந்திருக்கவில்லை. நமது ஊர்ப் பாட்டிமார்கள் அந்தக் காலத்தில் ஏதாவது நோய், புண் என்றால் உடனே தேங்காய் எண்ணெய்ப் பத்து ஒன்று போட்டு வைப்பார்கள். அதே போல் இயேசு வாழ்ந்த பாலஸ்தீனா நாட்டிலும் அந்த நாட்களில் ஒலிவ எண்ணெய் சகல நோய் நிவாரணியாகக் கருதப்பட்டது. ஆகவே அப்படிச் செய்து, ஜெபித்து, கர்த்தருடைய சித்தத்துக்கு விட்டு விடுங்கள் என்று பொருள். நல்ல சமாரியன் உவமையில் கூட "அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து . . . . . . ." (லூக் 10 : 34) என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். பழைய ஏற்பாட்டில் எசேக்கியாவின் நோய் குணமாக்கப்படுவதற்கு அத்திப் பழ அடையைக் கொண்டு வந்து பிளவையின் மேல் பற்றுப் போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா தீர்க்கன் சொல்லவில்லையா? ஆகவே ஒருவன் வியாதியிலிருந்து குணமாக்கப்படுவதற்கு மருந்தும் தேவை, தேவ ஒத்தாசையும் அனுக்கிரகமும் தேவை.

ஒரு கிறிஸ்தவ மருத்துமனையில் கீழ்க்கண்ட வாசகம் எழுதப்பட்ட ஒரு அட்டை இருந்தது 'We dress, God heals' எவ்வளவு உண்மை.

# கேடு சூழ்ந்த குடும்பம்

சமுதாயம் என்னும் மாளிகைக்கு குடும்பமே அஸ்திபாரம். அவைகள் கூட்டமாக சமுதாயத்துக்கு வலு சேர்க்கிறது. ஆனால் எல்லாக் குடும்பங்களுமே சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்து விடுவதில்லை. சில குடும்பங்கள் தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குமே அவமானத்தைத் தேடித் தந்து சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கிறது. இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தின் அவல நிலையை மாற்கு தம் நூலில், படம் பிடித்துக் காட்டுகிறார். தயவுசெய்து மாற்கு 6 : 17 -28 வரையுள்ள வசனப்பகுதியை வாசித்து தியானியுங்கள்.

இங்கே குறிக்கப்பட்டிருக்கிற ஏரோது, "ஏரோது அந்திப்பா" என்பவன் ஆகும். இவன், ரோமர் காலத்தில் எப்படியோ ஆட்சியைப் பிடித்து தக்க வைத்துக் கொண்ட பெரிய ஏரோது என்று வர்ணிக்கப்படும் இதுமேயா நாட்டவனின் மகன்களில் ஒருவன். இந்த கொலைகாரக்குடும்பம் கொன்று குவித்த உயிர்களுக்குக் கணக்கேயில்லை. இந்தப் பெரிய ஏரோது என்னும் கொடியவன் தன் சொந்த மனைவி, இரண்டு மகன்கள் ஆகியோருடைய இரத்தத்தைக் குடித்தவன். இயேசுவைக் கொலை செய்யும் முயற்சியில் பெத்லேகேமில் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்தவன் இந்த சண்டாளன்தான் (மத் 2 : 16). இந்த கொடியவனின் வாரிசாகிய அந்திப்பா தன்னுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை அபகரித்துத் தன் மனைவியாக்கிக் கொண்டான், பிலிப்பு மூலமாக இவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அதன் பெயர் சலோமி என்று வரலாறு குறிப்பிடுகிறது. ஒழுக்க கேட்டால் உதயமான இந்தக் குடும்பத்தைப் பற்றி வேதாகமம் கூறுவதை கவனிப்போம்.

**1. இது ஒரு சட்ட விரோதமான திருமணம் :** (வ. *17, 18*) பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி இது ஒரு அசுத்தமான உறவு. (லேவி 20 : 21.) புதிய ஏற்பாடு இதை விபசாரம் என்று கூறுகிறது. (ரோமர் 7 : 3). ஆகவே யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற முறையில் அது சட்ட விரோதமானது என்று சுட்டிக் காட்டினார். (மத் 14 : 4) ஒரு நாட்டை ஆளும் அரசன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகச் செயல் செய்யப்பட்டால் அவன் நீதிபரிபாலனம் செய்வது எப்படி?

இன்றைக்கு சமுதாயமும் நாமும் சீரழிந்து போய்க் கொண்டிருப்பதற்குத் தலைவர்களும், அரசோச்சுபவர்களும் செய்கிற முறைகேடுகளே காரணம். அதனால் மக்கள் ஒழுக்க நெறிகளுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கற்பு நெறி என்பது பழங்கதையாகிவிட்டது. அவர் மற்றவர்களை விட என் உணர்வுகளைச் சிறந்த முறையில் புரிந்து கொள்கிறார். என் முதல் திருமணம் தவறுதலாக நடைபெற்றுவிட்டது என்பதை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன். மகிழ்ச்சி தரும் வகையில் வாழ எங்களுக்கும் உரிமை உண்டு என்றெல்லாம் சமாதானம் கூறி தங்கள் ஒழுக்கக் கேடுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிப் பெரும்பான்மையோர் நடந்து கொண்டாலும் தேவனுடைய நீதி வளைந்து கொடுக்காது.

**2. வக்கிரப் புத்தியுடையவர் : (வ. 19, 20)** சில பேரிடம் அவர்கள் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினால் மனம் வருந்தி திருந்தி நடக்க முயற்சி செய்வார்கள். மற்ற சிலரோ மூர்க்க வெறி கொண்டு புத்தி சொன்னவர்களின் மீது சீறிப் பாய்வார்கள். தாவீது அரசனைப் பற்றி நாம் அறிவோம். அவர் உரியாவின் மனைவி பத்சேபாளிடம் முறை கேடாக நடந்து கொண்டதை நாத்தான் தீர்க்கதரிசி கண்டித்தார். அவர் துக்கப்பட்டு தன் தவறுக்காக எவ்வளவு வருந்தினார் என்பதை சங்கீதம் 51ஐ வாசித்து அறிந்து கொள்ளுங்கள் ஏரோதியாளோ இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவள். தன்னுடைய வாழ்க்கையை விமர்சிக்கிற யோவான் ஸ்நானகனை ஒழித்துக் கட்டத் துடிக்கிறாள். ஏரோது அவளுக்கு இடங்கொடுக்கவில்லை. ஏனெனில் ஸ்நானகனுடைய பரிசுத்தத்தையும், நீதியையும் குறித்து அவனுக்கு பயம் உண்டு (வ.20)

யோவான் ஸ்நானகன் ஏரோதியாளுக்கு ஒரு அநியாயமும் செய்யவில்லை. நியாயத்தைத்தான் எடுத்துச் சொன்னார். அவளுடைய உள்ளத்திலும், இல்லத்திலும் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், நீதிக்கும் கொஞ்சம்கூட இடம் கிடையாது. ஆகையால் அவள் எரிச்சல் அடைந்தாள். ஆம், சகோதரர்களே, இன்றைக்கு அநேகருடைய மனப் போக்கு இதுதான். கர்த்தருடைய ஆலோசனைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது அவசியம் என்ற உணர்வு மங்கி மறைந்து கொண்டிருக்கிறது. அதனால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விட தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதனைகளைப் போதிக்கும் கள்ள போதகருடைய கட்டுக் கதைகளுக்கு செவி மடுத்து அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்; உண்மைக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அநேக குடும்பங்களில் சத்திய வேதத்தை விட ஆபாச நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உலக உல்லாசத்துக்கு

முதலிடம், ஆண்டவருடைய அருளுரைகளுக்கு அலட்சியம் நல்லொழுக்கப் பயிற்சிகளைவிட நடனக் கலைக்கு முக்கியத்துவம் பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஊழியர்கள் பரிகாசத்துக்குள்ளாகிறார்கள், கண்டனத்துக் குள்ளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஓரம் கட்டி ஒழித்துக் கட்ட ஒன்றுபடுகிறார்கள். இத்தகைய இழிந்த வாழ்க்கை நெறிகளின் மீது நாட்டம் கொள்ளும் எந்த சமுதாயமும், எந்த நாடும் உருப்படும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

**2. சிற்றின்ப கேளிக்கைகளில் ஈடுபாடு :** (வ 21, 22) இந்த ஏரோதுவின் பிறந்த நாள் உலக வரலாற்றிலேயே மிகவும் பயங்கரமான விளைவுகளை உண்டாக்கிய விழா என்று சொன்னால் மிகையாகாது. அப்போஸ்தலன் பேதுரு கோடிட்டுக் காட்டியுள்ள சகல தீய காரியங்களும், காம விகாரம், துர்இச்சை, மதுபான வெறி களியாட்டு என்ற அனைத்தும் அங்கே இடம் பெற்றிருந்தன (1 பேது 4 : 3). இதை துன்மார்க்க உளையென்றும், இதிலே சிக்கிக் கொள்ள விரும்பாத கிறிஸ்தவர்களை உலகம் ஏளனம் செய்யும் என்றும் எச்சரிக்கிறார். (1 பேது 4 : 4).

ஏரோதியாளின் மகள் (சலோமி) ஆடிய நடனத்தால் இரண்டு பெரும் புள்ளிகள் தங்கள் தலைகளை இழந்தனர். முதலாவது ஏரோது மன்னனின் தலை, அதாவது சிற்றின்ப கேளிக்கையும், மதுவும் தந்த மயக்கத்தால் புத்தியையும் நிதானத்தையும் இழந்தான். அதன் விளைவு தான் மதித்து நேசித்த யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கொய்து கொண்டு வர உத்தரவு பிறப்பித்தான். ஆம் நண்பர்களே, சிற்றின்பக் களியாட்டுகளும் மதுவும் எத்தகைய தீமையான கேடுகளைக் கொண்டு வரும் என்பதைப் பாருங்கள். சலோமியின் அன்பும் பண்பும் அல்ல அவள் ஆட்டமும் அங்க அசைவுகளுமே அவனை மதியிழக்கச் செய்தன. அந்த நடனத்தை ரசித்து மகிழ்ந்த அத்துணை ஆண்களும் அவனைப் போலவும் அவனை விட அதிகமாகவும் நிதானமிழந்து காமம் தலைக் கேறிய நிலையில் தவித்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டா?

எத்தனை கிறிஸ்தவக் குடும்பங்களில் இவ்விதமான ஆட்டங்களும் கூத்துகளும் வரவேற்கப்படுகின்றன. எத்தனைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் இவைகளை கற்றுத்தர வேண்டும் என்று விரும்பி உற்சாகப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்! பெற்றோர்களே, அவர்கள் உங்களுக்கு மகளாக சிறுமியாக இருக்கலாம். மற்ற ஆண்களுக்கு . . . ? வேண்டாம், இந்த விஷ விளையாட்டு புத்தியைத் தடுமாறச் செய்யும் வழியை அசட்டை செய்ய இடம் கொடுக்காதிருப் போமாக! "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில்

பிதாவின் அன்பில்லை" என்று யோவான் எச்சரித்திருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள். (யோவான் 2:15) சின்னப்பிள்ளை தானே என்று நீங்கள் நினைக்கலாம் அப்பிஞ்சு உள்ளங்களில் நீங்கள் விதைக்கிற விஷ விதை வளர்ந்து மரமாகி நிற்கும்போது நீங்கள் கதறி அழுவீர்கள் ஐயோ, என் மகன் இப்படித் தகாத வழியில் சென்று கொண்டிருக்கிறானே, ஐயோ, என் அருமை மகளுடைய போக்கு என் குடும்ப கௌரவத்தை நாற்றமெடுக்கச் செய்து விட்டதே என்று புலம்புவீர்கள். அது காலம் கடந்த கதறல் - பயன் தராது, ஆகவே பெற்றோர்களே, உஷார்.

## 4. ஒரு நீதிமான் தலையை விலை பேசிய பரிசு (வ. 22 — 28)

இப்படி ஒரு கொலை பாதக ஆசையை நிறைவேற்றும்படி அவள் கேட்பாள் என்று ஏரோது நினைக்கவேயில்லை. அவன் திகிலடைந்தான். ஆனாலும் முடியாது என்று சொல்ல இயலாத சூழ்நிலை. கௌரவப் பிரச்னை. அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. சகோதரிகளே, அவசரப்பட்டு, சிந்திக்காமல் வாக்குறுதி களை அள்ளி வீசுவது எவ்வளவு 'ஆபத்தானது' என்பதைப் பாருங்கள் ஏரோது மன்னனின் சிந்தனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை கொய்யப்பட்டது எவ்வளவு கொடுமை! குழந்தைகளை நேசிப்பது, அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்றுவது என்பதும், அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்து கெடுப்பதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள்.

### தூய்மையற்ற பிணைப்பு :

பெற்றோர் - பிள்ளைகள் உறவு மிகவும் நேர்த்தியான அனுபவம். தாயும் - பிள்ளையும் ஒத்த குணமுடையவர்களாய் இருப்பது சிறந்தது. தங்கள் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாகவும் அந்நியோந்நியமாகவும் இருப்பது நியாயம். பெற்றோர் களும், பிள்ளைகளும் (அது ஆண்மக்களாயிருந்தாலும், பெண்மக்களாக இருந்தாலும்) நெருக்கமாக இருக்க வேண்டும். ஆனால் துர்க்குணத்தில் அல்ல. இங்கே ஏரோதியாளும் அவள் மகள் சலோமியும் கொண்டிருந்த நெருக்கம் விஷத் தன்மையுடையது அது ஒரு பெரிய சதித்திட்டத்தை நிறைவேற்றத் துணைபோன கூட்டு முயற்சி.

ஏரோதியாளின் துன்மார்க்க காரியங்களைக் கண்டித்து உணர்த்த முயன்று ஓர் சான்றோனின் மேல் அவளுக்கு ஏற்பட்டிருந்த குரோத மனப்பான்மையை தீர்த்துக் கொள்ள மகளைப் பயன்படுத்திக் கொண் டாள். இது சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்ட பயங்கரம் அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத்

தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்தி அவர்கள் ஆன்மாவை கஷ்டப்படுத்தி விடுகிறார்கள். என்ன, கொடுமை! தாங்கள் செல்வந்தர்கள் ஆகவேண்டும். "பிரபல்யம் அடைய வேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சிக்கும், மற்றும் காமக் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப்படுத்தும் பெற்றோர்கள் அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அவர்களை அழிவான பாதையில் இட்டுச் செல்லுகின்றனர் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்".

## ஒரு துயரம் தோய்ந்த வாக்குறுதி நிறைவேற்றம் (வ. 26-28)

தான் மதித்து நேசிக்கிற ஒரு தேவ மனுஷனுடைய, ஒரு, நீதிமானுடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் வைத்துத் தர வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் கொடிய வேண்டுகோளை ஏரோது மன்னன் கேட்டபோது அவன் துடிதுடித்துப் போயிருப்பான்! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்து, அந்த வாக்குறுதி நிறைவேறாததால் நன்மையைவிட தீமையே உண்டாகும் என்று தெரிந்தால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தவிர்ப்பது விவேகமே தவறல்ல. ஆனால் ஏரோது மன்னன் தன் வாக்குறுதியிலிருந்து பின் வாங்க முடியாதபடி அவன் வறட்டுக் கௌரவம் குறுக்கிட்டது "கூடப் பந்தியிலிருந்தவர்களினிமித்தம் (வ. 26) அவன் விரும்பாத ஒரு ஆணையை நிறைவேற்ற உத்தரவிட்டான்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் வாக்குக் கொடுக்கும்போது விழிப்போடு இருங்கள். அதையும் மீறி ஒரு சூழ்நிலையில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி எதிர்பார்த்ததற்கு விரோதமான விளைவுகளைக் கொண்டு வருகிறது என்று தெரிய வந்தால் அதை நிறைவேற்றுவதை தவிர்க்கலாம், குற்றமில்லை. பிள்ளைகள், அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தலாம். வாக்குறுதி கொடுத்துவிட்டு இப்பொழுது தயங்குகிறீர்களே, இது நியாயமல்ல. என்று வாதாடலாம் ஒரு பயங்கரமான விளைவுகளைச் சந்திப்பதை விட வாக்குத்தவறுவது அப்படியொன்றும் மோசமில்லை.

**முடிவுரை :** தேவபயமற்ற ஏரோதின் குடும்ப வரலாற்றை உற்றுக் கவனிப்பீர்களானால், யோவான் ஸ்நானகனின் சிரச்சேதத்துக்குப் பிறகு ஏரோது மன்னனின் எஞ்சிய வாழ்க்கை நிம்மதியற்றதும், சமாதானம் குறைந்தும் பயம் சூழ்ந்ததுமாக இருந்ததைக் கவனிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பிரபல்யத்தை ஏரோது கேள்விப்பட்ட பொழுது "யோவான் ஸ்நானகன் மரித்தோரிலிருந்து எழுந்து வந்து

விட்டான் என்று கூறுகிறான் (மாற்கு 6:16) ஏரோது குடும்பத்தில் நடந்த பயங்கரங்களே தேவபயமற்ற எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறும் என்று நாம் செல்லவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் பாவத்தில் வாழ்கிற பாவத்தைக் கண்டு அஞ்சாத வாழ்க்கையை மேற்கொள்ளும் எவரும் சாபத்துக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது. ஆகவே தேவனுக்குப் பயந்து கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள நாடுங்கள்.